# இளங்கலை இரண்டாம் ஆண்டு

## *DJ1H2* : பகுதி I தமிழ் பொதுத்தமிழ்

## பாடத்திட்டம்

### Paper - II செய்யுள், நாடகம், இலக்கிய வரலாறு மொழிப்பயிற்சி

**அலகு I – செய்யுள்** - ஐங்குறுநூறு (341, 342) - குறுந்தொகை (28, 120) - நற்றிணை (155, 156) - அகநானுறு (82) - கலித்தொகை (சுடர் தொடிகேளாய் .... அக்கள்வன் மகன்) - புறநானுறு (4, 86) - பதிற்றுப்புத்து (ஐந்தாம் பத்து, பரணரின் பாடல்) - பரிபாடல் (14) - திருக்குறள் (ஒப்புரவு அறிதல், கள்ளுண்ணாமை, புலவி நுணுக்கம்)

**அலகு II - நாடகம்** - சாப விமோசனம் - மு. ராமசாமி, NCBH, சென்னை.

**அலகு III - இலக்கிய வரலாறு** - சங்க இலக்கியம் - சங்கம் மருவிய காலம் - பல்லவர் காலம் - சோழர் காலம்

**அலகு IV – வளர் தமிழ்** - கிறிஸ்தவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு - இசுலாமியர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு

**அலகு V – மொழிப்பயிற்சி** - பொருள் இலக்கணம் - முதல் பொருள் - கருப்பொருள் - உரிப்பொருள் - அகத்திணைகள் - ஏழ - அன்பின் நைந்திணை கைக்கிளை - பெருந்திணை - வரைவு கற்பு - அற்தோடு நிற்றல் - புறத்திணை - வெட்சி - வஞ்சி - உழிஞை - வாகை - பாடாண் திணைகள்.

# I.செய்யுள்

## 1. ஐங்குறுநூறு

### இளவேனிற் பத்து

இளவேனில் என்பது பின்பனிக் காலத்தைத் தொடர்ந்து வரும் சித்திரையும் வைகாசியுமாகிய காலமாகும். இதன் கண் இயற்கை அனைத்தும் புதுப்பொலிவுடன் பூத்துக் குலுங்கும். உயிரினம் அனைத்தும் புதுப்பொலிவுடன் களியோடு துள்ளியாடித் தத்தம் துணையை விரும்பிப் பெற்று இன்புறும்.

பாலைத் திணைக்கு உரியதான பெரும் பொழுதுகள் பின்பனியும் இளவேனிலும், முதுவேனிலுமாகிய ஆறு திங்கட் பொழுதுகள் ஆகும். எனினும், இளவேனிலே ஏக்கத்தை மிகுவிக்கும் எழுச்சி மிக்கது. எனவே, அது பொருளாக அமைந்த பத்துச் செய்யுள்கள் அமைந்த இப்பகுதியும் இளவேனிற் பத்து என்று விளங்குகிறது.

பருவ வரவும் காதலன் வரவும் இணைந்து அமையின் காதலின் இன்ப வாழ்விலே எக்களிப்பு நிலபும். பருவ வரவு வந்து, அவன் வரவு தடைப்படின், அவள் ஏக்கம் மிகுதியாகிக் கொழுந்துவிட்டு எரிதழலாகித் தகிக்கும்.

இச்செய்யுள்கள் இரண்டும் 'தலைவன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக் கண்ட தலைமகள் சொல்லியது' என்னும் ஒரே துறை பற்றியே அமைந்துள்ளன. 'பொழுதே' என்று பொழுதைக் குறிப்பிட்டு, அதன் காரணமாகத் தான் மேற்கொள்ளும் துயரத்தினைத் தலைவி கூற்றாக அமைத்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

**1. குயிற்பெடை அகவும் பொழுது வந்ததே துறை**

**துறை:** தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

**துறைவிளக்கம்**

தலைவன் தலைவியைப் பிரிந்து வினைமேற் கொண்டவனாகச் சென்றிருக்கின்றான். அவளும் பிரிவைப் பொறுத்துத் தன் நோயை புறத்தே புலப்படாவாறு மறைத்து ஒழுகிய படி இருக்கின்றாள். அவள் திரும்புவதாக் குறித்து

இளவேனிற் பருவமும் வந்தது. ஆனால், அவன் குறித்துச் சென்றபடி, இளவேனிற் பருவம் தொடங்கு முன்னே திரும்பி வந்தானல்லன். அவன் 'சொன்னபடி வந்து சேராத ஏக்கம் பொங்கி எழுந்தது, அவளை வாட்டி வதைக்கின்றது. அவள் தன் தோழிக்குப் பொழுதைக் காட்டிக் கூறுவதாக அமைந்த செய்யுள் இது. அவள், தானே தன் நெஞ்சுக்குச் சொல்வதாகவும் கொள்ளலாம்.

"அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண்ணறல் நுடங்கும் பொழுதே" (341)

குயிலின் பெட்டையானது, தன் இனிதான குரலெடுத்துக் கூவியழைக்க, நிறமுற்ற நுண்மணலானது காற்றாலே எடுத்துத் தூவி அலைக்கப் பெற்றுக் குவியும் பொழுதாகிய, இளவேனிலும் இதோ வந்தது; நம் காதலரோ தாம் சொன்னபடி வந்தாரிலரே!

**2. நுணவம் கமழும் பொழுதும் வந்ததே**

(துறையும் துறை விளக்கமும் முன்னதே கொள்க)

"அவரோ வாரார் தான்வந் தன்றே
கரும்புகளித் தாலும் இருஞ்சினைக்
கருங்கால் நுணவம் கமழும் பொழுதே" (342)

சுரும்பினம் மதுவுண்டு களித்து, வானத்தே பறந்து ஆடியபடியிருக்கும் பெரிய கிளைகளையும், கரிய அடி மரத்தையும் கொண்ட நுணாவின் மலர்கள் நறுமணம் கமழ்ந்த படியிருக்கும், இளவேனிற் பொழுதும் இப்போது வந்தது, அவர்தாம் இன்னும் வந்தனர் இலர்.

## 2. குறுந்தொகை

**அறியாது துஞ்சும் ஊர்**

பாடியவர் : ஔவையார்

திணை : பாலை

துறை : வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது

**துறைவிளக்கம்**

தலைவியை வரைவதற்குரிய பொருளினை ஈட்டி வரக்கருதித் தலைவன் தலைவியைப் பிரிந்து அயல்நாடு சென்றுள்ளான். அவன் வரவு நீட்டிக்கவும் தோழி கவலைப்படுகின்றாள். அவளுக்குத் தலைவி கூறுவது இது.

“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன், யானும்; ஓர் பெற்றி மேலிட்டு,
‘ஆசு! ஒல்’ எனக் கூவுவேன் கொல்?
அலமரல் அசைவளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே” (28)

சுழற்சியுடனே அசைந்து வருகின்ற தென்றற்காற்றானது, என் வருந்துதலையுடைய காமநோயினது. கொடுமையைத் தானறியாதே வந்து என்னை அலைக்கின்றது அதனை அறியாதே இந்த ஊரவரும் உறங்குகின்றனர். இப்படி உறங்கும் ஊருக்கு என் நிலையை எப்படி அறிவிப்பேன்? முட்டுவேனோ? தாக்குவேனோ? யான் எதனையும் அறியேனே! அல்லது ஒரு தலைக்கீட்டை மேற்கொண்டவளாக ஆவென்றும் ஒல்லென்றும் உரத்துக் கூவுவேனோ? யான் யாது செய்வேன்.

**கருத்து :** ஊர் துஞ்சும் வேலையிலும் யான் துயில் பெறாதவளாக வருந்துமாறு அவர் பிரிந்தனர் என்பதாம்.

**அரியன் அவள்**

பாடியவர் : பரணர்

திணை : குறிஞ்சி

துறை
1. அல்ல குறிப்பிட்டு மீளும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது
2. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்தவழிக் கலங்கியதூஉம் ஆம்.

**துறைவிளக்கம்**

1. குறித்த இடத்திற்குச் சென்றும் தலைவியைக் காணப்பெறாத தலைவன் தலைவியின் பெறற்கரிதான தன்மையை நினைந்தவனாக, இப்படிக் கூறுகின்றான்.
2. இயற்கைப் புணர்ச்சி பெற்றுத் தலைவியைப் பிரிந்து செல்பவன், அந்த பிரிவை எண்ணிக் கலங்கியவனாக இப்படிக் கூறுகின்றான்.

“இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு

அரிது வேட்டனையால் - நெஞ்சே! – காதலி

நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு

அரியள் ஆகுதல் அறியா தோயே” (குறுந் 120)

நெஞ்சே! வறுமையாளன் ஒருவன் இவ்வுலகத்து இன்பத்தை அடைய விரும்பினாற்போல், நீயும், அடைதற்கரியதான ஒன்றையே விரும்பினை ஆவாய். நம் காதற்குரியவள், நமக்கு நன்மை தருபவளாதவை அறிந்தாற்போன்று, நாம் விரும்பும் பொழுதெல்லாம் பெறுவதற்கு அரியவள் ஆகுதலையும், நீதான் அறியாது போயினையே.

**கருத்து:** தலைவியைப் பிரியாதிருக்க மணந்து கொள்ளல் வேண்டும் என்பதாம்.

## 3. நற்றினை

**நகைத்தாள், கலங்கினாள்**

பாடியவர் : பராயனார்

திணை : நெய்தல்

துறை : உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைவன் சொற்றது. (அ∴தாவது ஊடல் நீங்காத் தலைவியது நிலைகண்டு தன் நெஞ்சிற்குக் கூறுவான் பொலத் தலைவன் கூறியது)

‘ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்

வள்ளிதழ் நெய்தல் தொடலையும் புனையாய்

விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்

யாரை யோநிற் றொழுதனெம் வினவுதும்

கண்டோர் தண்டா நலத்தை தெண்திரைப்

பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ,

இருங்கழி மருங்கு நிலை பெற்றனையோ?

சொல்லினி, மடந்தை! என்றனென் அதனெதிர்

முள் எயிற்று முறுவல் திறந்தன;

பல்லிதழ் உண்கனும் பரந்தவால் பனியே". (நற். – 155)

ஒளி நிறைந்த அணிகள் அணங்குகளுடன் கூடி ஓரை விளையாட்டையும் நீ ஆடவில்லை. பெரிய இதழால் ஆன நெய்தல் மலர் மாலையும் சூடவில்லை. கடலருகே உள்ள மலர்ந்த மலர்ச் சோலையில் நிற்கும் மாதே, நீ நோக்குவாரால் கெடாத நலத்தை உடையவள். உன்னை வணங்கிக் கேட்கிறேன். நீ தெளிந்த அலைகளை உடைய கடற்பரப்பில் விரும்பி வாழும் தெய்வப் பெண்ணோ? கருத்தகழி அருகில் நிலைத்து வதியும் ஒரு பெண்ணோ? வேறு யாவளோ? இப்போதே சொல் என்று கூறினோம்.

அப்படிக் கூறியவுடன் அள் முட்போன்ற கூரிய பற்களிடத்து நகை தோன்றியது. ஈரிமையுடைய கண்களில் நீர் அரும்பியது ஆதால் இவள் முன்பு என்னால் தழுவப்பட்டவளே, இப்போதும் முயங்கற் குறிப்பையே காட்டினாள்.

**இரவில் வாராதே**

பாடியவர் : கண்ணங்கொற்றனார்

திணை : குறிஞ்சி

துறை : இரவுக்குறி மறுத்தது.

(அ∴தாவது தலைவன் இரவு வரும்போது நேரும் இடுக்கண்ணைக் கூறித் தோழி வரைவு கடாவியது)

"நீயே அடியறிந்து ஒதுங்கா ஆரிருள் வந்தெழ்

கடியுடை வியல்நகர்க் காவல் நீவியும்

பேரன் பினையே பெருங்கல் நாட!

யாமே, நின்னும்நின் மலையும் பாடிப் பல்நாள்

சிறுதிணை காக்குவம் சேறும் அதனால்

பகல்வந் தீமோ பல்படர் அகல!

எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி

அரியல் ஆர்ந்தவர் ஆயினும் பெரியர்

பாடிமிழ் விடர்முகை முழங்க

ஆடுமழை இறுத்ததுஎம் கோடுயர் குன்றே. (நற் 156)

பெரிய மலைநாட்டிற்கு உரியவனே! நீ வரும் வழியை அடி வைத்தறிந்து செல்லுவதற்கு கூடாத நிரம்பியே இரவுப் பொழுது அது அப்பொழுதில் காவல் நிறைந்த எம் மாளிகையின் உள்ளே காவலைக் கடந்து வந்தாய். அதனால் நீ எம்மிடத்துப் பேரன்பு உடையன் ஆனாய். கொறுக்கச்சிச் செடிகள் அடர்ந்துள்ள பெரிய மலைப்பக்கத்தில் உள்ளது எம் சிறுகுடி. அங்குள்ளவர்கள் கள்ளை நிரம்பப் பருகிப் பெரும் கோபம் உடையராய் உளர். ஆங்கு மேகம் முழங்கும் இடியோசை பிளவுபட்ட மலைக்குகைகளில் பட்டு எதிரொலிக்கின்றது. எமது குன்றின் உச்சியில் மேகங்களும் வந்து தங்குகின்றன. அதனால் நீ இரவில் வந்து என்னைக் கூடுவதற்கு வாராதே. யாம் உன்னையும் உன் மலையையும் பாடி கொண்டே பல நாளளவும் திணைப் புனத்தைக் காவல் காக்க நாளையே செல்லுகிறோம். என்னுடைய பல துன்பங்களும் அகல நீ இனிமேல்பகற்கொழுதில் வந்து முயங்குக.

## 4. அகநானூறு

**விறலியின் தோன்றும் மயில்**

பாடியவர் : கபிலர்

திணை : குறிஞ்சி

துறை : தோழிக்குத் தலைவி அறத்தோடு நின்றது.

“தன் கருத்து வெளிப்படாது தன் மெய்க்கட்டோன்றிய புதுமையைத் தலைவி வியந்தாள் போலத் தோழிக்கு அறத்தொழு நின்றது. ‘புலர்குரலேனல்...ளேனே’ என்பது, கண்துயில் மறுத்தல்” என்னும் மெய்ப்பாட்டிற்கு உதாரணமாயிற்று என்பர் பேராசிரியர்.

“அவனை ஆயத்தார் பலரும் கண்டாரென வந்தோன் முட்டியவாறும், அவருள் நெகிழ்தோளோன் யானே எனத்தானே கூறியவாறும்” காண்க என்பர் நச்சினார்க்கினியர்.

(காதல் பிறக்கும் அதிசயத்தை வருணிப்பது இப்பாடல், பல பெண்கள் ஒருவனைக் கண்டபோதும், அவன்பால் ஒருத்திக்கு மட்டுமே உள்ளத்து ஈடுபாடு மிகுதியாகின்ற விசித்திரத்தை விளக்குகிறது இந்த பாடல். இயற்கையின் அமைதி எங்ஙனம் அதற்கு உதவுகிறதென்பது இதன்கண் காணலாம்.)

“ஆடு அமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக,
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசைத்
தோடுஅமை முழவின் துதைகுரல் ஆகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக
இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து,
மந்தி நல்அவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து, இயலி ஆடுமயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்!
உருவவல் விற்பற்றி, அம்பு தெரிந்து
செருச்செய் யாலை செல்நெறி வினாஅய்ப்
புலர்குரல் ஏனற் புழையுடை ஒருசிறை,
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி-தோழி-அவருள்
ஆர்இருட் கங்குல் அணையொடு பொருந்தி,

ஓர்யான் ஆகுவது எவன்கொல்

நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே? (பா. 82)

தோழி! வாழ்வாயாக! அசைகின்ற மூங்கிலின் துளையுள்ள இடங்களிலே, அழகிய மேல்காற்றினால் எழும் ஒலியானது குழலின் இசையாகவும், இன்னொலியுடனே வீழுகின்ற அருவின் இனிய ஓசையே தொகுதியுடைய முழவின் இசையாகவும், கலைமான்களின் கூட்டம் தாழ ஒலிக்கும் கடுங்குரல் பெருவங்கியத்தின் ஒலியாகவும் மலையத்துப் பூஞ்சாரலிலேயுள்ள வண்டுகளின் ரீங்காரமே இனிய யாழிசையாகவும், இங்ஙனம் இனிய பலவாகிய இசைகள் கானத்திலே விளங்கும். அவற்றைக் கேட்டு மந்தியாகிய நல்ல திரள் ஆராவார மிக்கவாயின. வியப்புடனும் அவற்றை நோக்கின.

மூங்கில்கள் வளர்ந்திருக்கும் மலையடுக்குகளிலே உலாவி ஆடுகின்ற மயிலினங்கள், களத்திலே புகுந்து ஆடும் விறலியாரைப் போலத் தோன்றும். அத்தகைய மலைநாட்டையுடையவன் ஒரு தலைவன். புதுமலர்களாலாகிய தாரினை மார்பிலே அணிந்தவன் அவன். அச்சந்தரும் வில்லினைக் கையிலே பற்றியவனாகச், சிறந்த அம்புகளைத் தெரிந்து எடுத்துக்கொண்டு, தன்னால் அம்பு எய்யப் பெற்ற யானையானது சென்ற நெறியினைக் குறித்து வினவியவனாக, முதிர்ந்த கதிரினையுடைய தினைப்புனத்தின் வாயிலிலே, ஒருபுறமாக வந்து நின்றனன் அப்படி நின்ற அவனைக் கண்டோர், குறமகளிர் தம்முள்ளே பலராவர்.

அவர்களுள், அரிய இருள் செறிந்த இரவிலே, அணையோடு முகஞ்சேரப் பொருந்திக் கிடந்து, நீர் சொரியும் கண்ணொடு, மெலிந்த தோள்களை உடையேனாக, யான் ஒருத்தி மட்டுமே வருத்தமுறல் ஆகியதுதான் என்னையோ?

**விளக்கம்**

எங்கும் இன்பம் ஒலிக்கும் நாட்டினையுடைய யான், பலரையும் விடுத்து எனக்கு மட்டுமே துன்பஞ் செய்தனன் என்று சொல்லுதலின் மூலம், தான் அவன்பால் மனம் ஈடுபட்டதனைத் தோழிக்குக் கூறி அறத்தொடு நிற்கின்றாள் தலைவி.

## 5. கலித்தொகை

**நகைக்கூட்டம் செய்தான் கள்வன் மகன்**

“சுடர்த்தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப் பந்து கொண்டு ஓடி
நோ தக்க செய்யும் சிறுபட்டி, மேல் ஓர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, ‘இல்லிரே
உண்ணு நீர் வேட்டேன்’ எனவந்தாற்கு அன்னை
அடர் பொற் சிரகத்தா வாக்கி, சுடரிழாய்
உண்ணு நீர் ஊட்டி வா’ என்றாள், என யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலிய தெருமந்திட்டு
‘அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண் என்றேனோ
அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்
உண்ணு நீர் விக்கினான் என்றேனோ, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்”. (கலித்தொகை 158)

**துறை**

“புகா அக் காலை புக்கெதிர்ப்பட்டுழிப் பகா அ விருந்தின் பகுதிக்கண்” தலைவி தோழிக்குக் கூறியது.

**துறை விளக்கம்**

தலைவன் தலைவியைக் காண வேண்டும் என்று ஆசையுற்றான். அதனால் தான் புகுதற்குத் தகுதியில்லாத பகற்பொழுதில் தலைவன், உணவு நேரத்தில் தலைவியின் வீட்டுள் புகுதல், அவ்வாறு புகுந்தவனைத் தலைவி விலகாமல் ஏற்றுக் கொள்ளுதல்.

**விளக்கம்**

ஒளியுடைய வளையலை அணிந்த தோழியே! நான் சொல்வதைக் கேட்பாயாக! தெருவில் நாம் மணலால் செய்த சிறிய வீட்டைத் தன் காலால் கலைத்தும் நாம் கூந்தலில் சூடிய மலர் மாலையை அறுத்தும், வரியை உடைய பந்தை எடுத்துக் கொண்டு, ஓடியும் நாம் வருந்தத் தக்க செயல்களைச் செய்யும் சிறுவனாக கட்டுக்கடங்காதவன் முன் ஒரு நாளில் தாயும் நானும் வீட்டில் இருந்த போது வந்தான். 'வீட்டில் இருப்பவரே உண்ணும் நீரை உண்ண விரும்பினேன்" என்றான். அவ்வாறு வந்தவனுக்கு, தாய், "விளங்கும் அணியை அணிந்தவளே! உண்ணீரைத் தகட்டுப் பொன்னால் ஆன கலத்தில் எடுத்துக் கொண்டு போய் அவனை உண்ணச் செய்து விட்டு வா! என்றனள். அங்ஙனம் அவள் சொன்னதால் வந்தவன் சிறு பட்டியாய் இருக்கும் தன்மையை அறியாமல் போனேன். சென்றபோது என் வளையல் அணிந்த முன் கையைப் பிடித்து வருத்தினான். அதனால் நான் வருத்தி, "தாயே! இவன் செய்த ஒரு செயலைக் காண்பாய்" என்று உரைத்தேன். தாயும் அலறிக்கொண்டு ஓடி வந்தாள். அவன் செய்த செயலை மறைத்து யான்" இவன் நீர் குடிக்கும்போது விக்கல் எடுக்க அதனால் வருத்தினான்" என்றேன். நான் உரைத்ததை கேட்டுத் தாயும் அவனது முதுகைப் பலமுறை தடவினாள். அப்போது அக்கள்வன் மகன் தன் கடைக்கண்ணால் என்னைக் கொல்பவன் போல் பார்த்துத் தன் மகிழ்ச்சி தரும் புன்முறுவலால் என் உள்ளத்தில் புகுந்தான்.

## 6. புறநானூறு

### தாயில்லாக் குழந்தை

"வாள் வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன!
தாள், களங்கொளக், கழல் பறைந்தன;
கொல்ல ஏற்றின் மருப்புப் போன்றன
தோல், துவத்து அம்பின் துளைதோன்றுவ
நிலைக்கு ஓராஅ இலக்கம் போன்றன

மாவே, எறிபதத்தான் இடங்காட்டக்
கறுழ் பொருத செவ்வாயான்
எறுத்துவவ்விய புலி போன்றன;
களிறே, கதவு எறியாச் சிவந்து உராஅய்
நுதி மழுங்கிய வெண்கோட்டான்
உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன
நீயே, அலங்கு உளைப் பரீஇ இவுளிப்
பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ
அனையை ஆகன் மாறே,
தாயில் தூவாக்குழவி போல
ஓயாது கூஉம் நின் உடற்றியோர் நாடே (புறம் - 4)

**திணை: வஞ்சித்திணை**

அரசன் ஒருவன் பகைவனுடைய நாட்டைக் கைப்பற்ற நினைந்து வஞ்சிப்பூ சூடிப் போருக்குச் செல்லுதல்.

**துறை: கொற்றவள்ளை**

அரசனின் வெற்றியையும் அவன் பகைநாட்டு அழிவையும் சொல்லி வருந்துதல்.

வெற்றியைத் தரும் வாள் குருதிக் கறை பட்டு செவ்வானத்தின் நிறத்தைப் போன்றதாயிற்று. போர்க்களத்தில் தொடர்ந்து போர் செய்தலால் வீரர்களது கால்களில் உள்ள வீரக்கழலின் அரும்பு வேலைப்பாடுகள் மறைந்து காளைகளின் கொம்புகளைப் போலாயின. அம்பு தைத்தலால் கேடகத்தில் துளைகள் நிறைந்து உள்ளன. குருதிக்கறை படிந்த முகக்கருவியை உடைய குதிரை மானைக் கொன்று உதிரம் குடித்த புலியை ஒத்தது. கோட்டை மதில் கதவுகளைக் குத்தி உடைத்து மழுங்கிய தந்தத்தோடு வரும் யானைகள் கூற்றுவன் போல் இருந்தன. குதிரை பூட்டப்பட்ட தேரின் மீது வரும் நீ ஞாயிறு போன்றுள்ளாய். இவ்வளவு படைப்பெருக்கம் உடைய

உன்னைப் பகைத்தவர் நாடு, தாயில்லாக் குழந்தை பசியால் ஓயாது அழுது புலம்புவது போலத் துயருற்றுப் புலம்பும்.

**சூரியனுக்கு ஒப்பு ஆகாதவன்**

“வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்

போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது

இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப

ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்

கடந்தடு தானைச் சேரலாதனை

யாங்கனம் ஒத்தியோ? வீங்கு செலல் மண்டிலம்

பொழுது என வரைதி; புறங்கொடுத்து இறத்தி

மாறி வருதி; மலைமறைந்து ஒளித்தி;

அகல் இரு விசும்பின் ஆனும்

பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே” (புறம் - 86)

**திணை: பாடாண்**

பாடப்படுகின்ற ஆண்மகனின் புகழ், கொடை, வலி, அளி ஆகிய பண்புகளைப் புகழ்ந்து பாடுதல்.

**துறை: இயன்மொழி, பூவைநிலை**

1. அரசனின் பண்புகளை எடுத்துரைத்தல்
2. மனிதரைக் கடவுளோடு உவமித்துக் கூறுதல்

பிற நாடுகளைக் காக்கும் மன்னர்கள் தத்தம் நாடு தமக்குரியது எனும் பொதுச் சொல்லைப் பெறாதாவன். எதிர்ப்பவர்களை வென்று நாட்டை விரிவுபடுத்தி ஆளுபவன். செல்வத்தை வாரி வழங்கும் வள்ளல். ஆற்றல் மிக்க படைகளை உடையவன் கடுங்கோ வாழியாதன். மிக்க செலவினை உடைய கதிரவனாகிய நீ எவ்வாறு சேரமானுக்கு ஒப்பாவாய்? பகற்பொழுது மட்டுமே விளங்குபவன். தீ நிலவு தோன்றும் போது அஞ்சி புறமுதுகிட்டு ஒளிகிறாய். தென்திசையிலும் வடதிசையிலும் மாறி மாறி வருபவன் நீ. மலைக்கு பின்னே மறைந்தும் கொள்வாய். பகலில் மட்டும் தோன்றும் நீ ஒருகாலும் சேரனுக்கு ஒப்பாகமாட்டாய்.

## 7. பதிற்றுப்பத்து

**ஐந்தாம் பத்து**

**நன்னுதல் விறலியர்**

கொடையினையும் அக்கொடைக்கு வருவாயாகிய பகைவரைக் கோறலையும் உடன் கூறுதல்

“அட்டு ஆனோனே, குட்டுவன், அடுதொறும்

பெற்று ஆனாரே, பரிசிலர் களிறே;

வரை மிசை இழிதரும் அருவியின், மாடத்து

வளி முனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்,

சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின்,

பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல,

நன் நுதல் விறலியர் ஆகும்

தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே” பதி:5

**துறை:** செந்துறைப் பாடாண் பாட்டு

**வண்ணமும் தூக்கும் :** ஒழுகு வண்ணம், செந்தூக்கு

**பெயர்:** நன்னுதல் விறலியர்

குட்டுவன் தன் பகைவரைக் கொன்று அது போதும் என்று அமைதியடைய மாட்டான். அவ்வாறு அவன் கொல்லும் தோறும் பரிசிலர் களிறுகளை ஓர் அளவின்றிப் பெற்றனர். மலையின் மேலிருந்து வீழ்கின்ற அருவியைப் போல மாடத்தில் காற்றினிடத்தே விளங்குகின்ற கொடிகள் அசைகின்ற தெருவினையுடைய நகரில் சொரியப்பட்ட நெய்யையுடைய திரிக்குழாயானது தான் ஏற்றுக்கொண்ட அந்நெய் மேலே வழிந்து பரவுதலால் காலையுடைய விளக்கினது பருமையுடைய சுடர் ஒளியை வீசுகிறது. அவ்வொளியில் அழகிய நெற்றியையுடைய விறலியர் ஆடுகின்ற பழைய நகரங்களின் எல்லையில் சேரனைப் பற்றிய புகழ்ச்சியமைந்த வார்த்தைகள் சொல்லில் அடங்கா.

## 8. பரிபாடல்

“கார்மலி கதழ்பெயல் தலைஇ யேற்ற
நீர்மலி நிறைசுனை பூமலர்ந் தனவே
தண்ணறுங் கடம்பின் கமழ்தாது ஊதும்
வண்டு வண்டு இமிர் குரல் பண்ணை போன்றனவே
அடியுறை மகளிர் ஆடும் தோளே
நெடுவரை அடுக்கத்து வேய் போன்றனலே
வாகை ஒண்பூப் புரையும் உச்சிய
தோகை யார்குரல் மணந்து தணந்தோரை
நீடன்மின், வாரும் என்பவர் சொற்போன் றனவே
நாண்மலர்க் கொன்றையும் பொலந்தார் போன்றன
மெல்லிணர் வேங்கை இயலறைத் தாயின
அழுகை மகளிர் குழுவை செப்ப
நீரயற் கலித்த நெரிமுகைக் காந்தள்
நிரைதொறும் வார்குலை அவிழ்ந்த வள்ளிதழ்
விடுகொடிப் பிறந்த மென் தகைத் தோன்றிப்
பவழத் தன்ன செம்பூத் தா அய்க்
கார்மலிந் தன்றுநின் குன்று போர் மலிந்து
சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே
கறையில் கார்மழை பொங்கி யன்ன
நறையின் நறும்புகை நனியமர்ந் தோயே
அறுமுகத்து ஆறிரு தோளால் வென்றி
நறுமலர்ப் வள்ளிப் பூநயந் தோயே
கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே
பிறந்த ஞான்றே நின்னை உட்கிச்
சிறந்தோர் அஞ்சிய சீருடை யோயே

இரு பிறப்பு இருபெயர் ஈரநெஞ்சத்து

ஒரு பெயர் அந்தணர் அறன் அமர்ந்தோயே

அன்னை ஆகலின் அமர்ந்தியா நின்னைத்

துன்னித் துன்னி வழிபடு வதன் பயன்

இன்னும் இன்னும் அவை ஆகுக

தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே" (பரி : வைகை: 14)

என்பது, பருவங்கண்டு அழிந்த தலைமகள் கேட்ப முருகவேளைப் பரவுவாளாய், இப்பருவத்தே தலைமகன் வரும் என்பது பாடத்தோழி வற்புறுத்தியது.

கேவனார் பாட்டு

கேவனார் இசை

பண் நோதிறம்

முருகவேளே! "மிக்க மழையை மேகம் பெய்தலால் நிறைந்த சுனைகளில் பூக்கள் மலர்ந்தன. குளிர்ந்த கடம்பமலர்த் தாதை ஊதுகின்ற வண்டுகளின் குரல்கள் பண்களைப் போல இருந்தன. மலைப்பக்கங்களிலுள்ள மூங்கல்கள் அடியுறை மகளிரின் தோள்களை ஒத்தன. வாகைப் பூவைப் போன்ற கொண்டையுள்ள மயில்கள் கூவுங் குரல்கள் தலைவியரோடு அளவளாவிப் பிரிந்து சென்றவர்களை நோக்கி, "இனித் தாமதம் செய்யமின் மீண்டு வருக" என அழைப்பவர்களுடைய சொற்களைப் போன்றன.

கொன்றை மலர்க் கொத்துகள் பொன்னாலாகிய மாலைகளைப் போன்றன. அழகையுடைய பேதை மகளிர்க்குத் தாய்மார்கள் புலி புலியென்று சொல்லும்படி பாறைகளில் வேங்கை மலர்கள் பரந்தன. நெருங்கிய மொட்களையுடைய காந்தள்கள் மலர்ந்தன. அவற்றிடையே செங்காந்தளின் பூக்கள் பரந்தன. இங்ஙனம் நின் பரங்குன்றம் கார்காலத்தன்மை மிக்கது.

அசுரர்களைக் குலத்தோடு அழித்த வேற்படையையுடையோய்! கார்காலத்து வெண்மேகம் எழுந்தாற் போன்ற அகில் முதலியவற்றால் புகைத்த தூபத்தை விரும்பினோய்.

பிரித்த தலைவர் வந்து சேர்ந்து பின்பு நீங்காமல் இருக்கும் பொருட்டு மகளிர் யாழை வாசித்துப் பாடுகிற பாட்டை விரும்பியோய், திருஅவதாரம் செய்தவுடனே இந்திரன் முதலியோர் அஞ்சிய சிறப்புடையோய்! இரண்டு பிறப்பையும் அப்பிறப்பால் வந்த இரண்டு பெயரையும் அன்பு பொருந்திய நெஞ்சத்தையும் உடைய அந்தணர்களின் அறத்தை விரும்பியோய்!

அத்தன்மைகளை உடையாய் ஆதலின் நாங்கள் விரும்பி நின்பாற் பொருந்திப் பொருந்தி வழிபாடு செய்கின்றோம். அங்ஙனம் செய்வதன் பயனாகப் பின்னும் பின்னும் நின் புகழினும் மேலான பலவாக அவ்வழிபாடுகள் ஆகும்படி அருள் புரிவாயாக.

## 9. திருக்குறள்

**அறத்துப்பால்**

**ஒப்புரவு அறிதல் (22)**

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
 என்ஆற்றுங் கொல்லோ உலகு

உலக மக்கள் தமக்கு மழை வழங்கி உதவி செய்யும் மேகத்திற்கு என்ன கைமாறு செய்யமுடியும்? அந்த மேகம் போன்ற உயர்ந்தோர் செய்கின்ற உதவிகளும் கைம்மாறு எதிர்பார்ப்பது இல்லை.

2. தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
 வேளாண்மை செய்தல் பொருட்டு

நல்ல வழிகள் பலவற்றிலும் முயன்று ஒருவன் சேர்த்த பொருள் எல்லாம், தான் வாழும் இடம், காலம் சூழலின் நடைமுறை அறிந்து, தகுதி உடையோர் எல்லோர்க்கும் உதவி செய்வதற்கே ஆகும்.

3. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
 ஒப்புரவின் நல்ல பிற.

தகுதி உடையவரின் தேவை அறிந்து உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போன்ற உயர்ந்த நன்மைகளை விளைக்கும் வேறு அறச்செயல்களை, எந்தப் புதிய உலகத்திலும் நாம் வாழும் இந்த உலகத்திலும் பெறுதல் இயலாது.

4. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்

செத்தாருள் வைக்கப் படும்.

ஒப்புரவு என்னும் உலக நடைமுறை அறிந்து தகுதி உடைய மற்றவர்க்கும் உதவி செய்து வாழ்வின்றவனை உயிர் வாழ்பவன் ஆவான். அவ்வாறு வாழாத மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.

5. ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகுஅவாம்

பேர்அறி வாளன் திரு.

உலகம் ஒப்புரவினால் வாழ வேண்டும் என்று விரும்பி உதவி செய்கின்ற பெருமைமிக்க அறிவாளியின் செல்வம், ஊரில் வாழ்வோர் நீர் உண்ணும் குளம் நல்ல நீரால் நிறைந்திருப்பதைப் போன்றது.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்துஅற்றால் செல்வம்

நயன்உடை யான்கண் படின்.

உலக நடைமுறை அறிந்து உதவி செய்து வாழும் உயர்ந்த பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்திருந்தால், அது பயன் தரும் மரம் ஒன்று ஊரின் நடுவே நிறை பழுத்த பழங்களைத் தாங்கி நிற்பது போன்றது.

7. மருந்துஆகித் தப்பா மரத்துஅற்றால் செல்வம்

பெரும்தகை யான்கண் படின்.

உலக நடை அறிந்து உதவி செய்யும் பெருமை மிக்க தகுதி உடையவனிடம் செல்வம் சேர்ந்திருந்தால், அது தனது எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவதில் தவறாத மரத்தைப் போன்றது.

8. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்

கடன்அறி காட்சி யவர்.

உலக நடை அறிந்து உதவி செய்யும் கடமை உணர்ந்த அறிவைப் பெற்றவர்கள், தம்மிடம் பொருள் வளம் இல்லாத நேரத்திலும் மற்றவர்க்கு உதவி செய்வதற்குத் தளர்ச்சி அடையமாட்டார்கள்.

9. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர

செய்யாது அமைகலா ஆறு.

உலக நடை அறிந்து உதவி செய்யம் இயல்புடைய பண்பாளன் வருமை அடைதல் என்பது, தவறாமல் செய்ய வேண்டிய உதவிகளை மற்றவர்க்குச் செய்ய முடியாமல் வருந்துகின்ற இயல்பு ஆகும்.

10. ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அ∴துஒருவன்

விற்றுக்கோள் தக்கது உடைத்து.

உலக நடை அறிந்து உதவுவதால் இழப்பு ஏற்படும் என்று சொல்லுபவர் இருந்தாலும், அத்தகைய ஒருவன் தன்னை விற்றாவது பெற்று கொள்ளும் தகுதி உடையது ஆகும்.

**கள் உண்ணாமை (93)**

1. உட்க படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்

கள்காதல் கொண்டுஒழுகு வார்.

அறிவைத் திரிக்கும் கள்ளைப் போன்ற போதைப் பொருள்களை விரும்பி உண்டு மகிழ்பவர் எந்தக் காலத்திலும் எவராலும் மதிக்கப்பட மாட்டார். அதுமட்டும் இல்லாமல், முன்னர் பெற்றிருந்த சிறப்பினையும் இழந்து விடுவர்.

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்

எண்ணப் படவேண்டா தார்

அறிவு உடையவர் எனப்படுவோர் அறிவைத் திரிக்கும் கள்ளைப் போன்ற போதைப் பொருளைப் பயன்படுத்தக்கூடாது. சான்றோராலும் பிறராலும் மதிக்கப்பட வேண்டுவது இல்லை என்போர் வேண்டுமானால் பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதுஆல் என்மற்றுச்

சான்றோர் முகத்துக் களி

போதைப் பொருளால் அறிவு தரிந்த மகனைக் கண்டால் பெற்று வளர்த்த தாயின் முகத்திலேயே பெருந்துன்பத்தை உண்டாக்கும் என்றால், குற்றங்களைக் கடித்தும், தண்டித்தும் திருத்துகின்ற சான்றோர் முகத்தில் எத்துணைத் துன்பத்தைத் தோற்றுவிக்கும்.

4. நாண்என்னும் நல்லாள் புறம்கொடுக்கும் கள்என்னும்

பேணாப் பெரும்குற்றத் தார்க்கு

எல்லோரும் இகழ்கின்ற அற்பமான போதைப் பொருளால் அறிவு திரிந்து அலையும் குற்றம் செய்தவரை, நாணம் என்னும் நல்ல பண்பு விட்டு நீங்கி வெகுதொலைவு சென்று விடும்.

5. கைஅறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து

மெய்அறி யாமை கொளல்

ஒருவன் கொருளை மிகுதியாகச் செலவழித்துப் போதைப் பொருளைப் பயன்படுத்தித் தன்னை அறியாத அளவுக்கு அறிவு திரிந்த நிலையில் அலைதல், நல்லொழுக்கம் பற்றி அறியும் அறியாமை உடையது ஆகும்.

6. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சுஉண்பார் கள்உண் பவர்

தூங்கிக் கொண்டிருப்பவர் அறிவு இல்லாமல் இருப்பதால் செத்தவரை விட வேறானவர் அல்லர். அவ்வாறே, கள் உண்பவரும் எப்போதும் அறிவு இல்லாமல் இருப்பதால் நஞ்சு உண்பவரே ஆவர்.

7. உள் ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்

கள்ஒற்றி கண்சாய் பவர்

போதைப் பொருளை எவரும் அறியாமல் மறைவாகப்ப யன்படுத்தி அறிவு மயங்கிக் கிடப்பவரின் நிலை உணர்ந்து, ஊரில் வாழும் மக்களால், செய்தி பரப்பப்பட்டு எப்போதும் நகைப்புக்கு உரியவராக ஆவார்.

8. களித்துஅறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து

ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்

போதைப் பொருளைப் பயன்படுத்துபவர், நான் போதைப் பொருளை எப்போதும் பயன்படுத்தியதில்லை என்று கூறுவதை நிறுத்த வேண்டும். தன் நெஞ்சு அறிந்து பொய் கூறிய குற்றம் மீண்டும் போதையில் மிகுதியாக வெளிப்படும்.

9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்

குளித்தானைத் தீத்துரீஇ அற்று.

போதையில் மயங்கிக் கிடப்பவனிடம் “குடிகுடியைக் கெடுக்கும்” என விளக்கிக் கூறி தெளிவிக்க முயலுதல், நீரில் மூழ்கிய ஒருவனை மற்றொருவன் தீப்பந்தம் கொண்டு தேடுவதைப் போன்றது ஆகும்.

10. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணும்கால்

உள்ளான்கொள் உண்டதன் சோர்வு.

போதைப் பொருள் பயன்படுத்தும் ஒருவன் அப்பொருளைப் பயன்படுத்தாத நிலையில் போதையில் மயங்கிய வேறு ஒருவனைக் காண நேர்ந்தால் போதையால் ஏற்பட்ட சோர்ந்த நிலையை எண்ணிப் பார்க்க மாட்டானோ?

**புலவி நுணுக்கம் (132)**

1. பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்

நண்ணேன் பரத்தநின் மார்பு.

பரத்தையர் தொடர்பு உடையோய்! உன்னைப் பெண் தன்மை உடைய எல்லோரும் தம் கண்களால் பொதுப் பொருளாகப் பார்த்து நுகர்வர், அதனால், அவர் பார்வை எச்சில் பட்ட உன் மார்பினைத் தழுவமாட்டேன்.

2. ஊடி இருந்ததேமாந் தும்மினார் யாம்தம்மை

நீடுவாழ்க என்பாக்கு அறிந்து

அவரோடு நான் ஊடல் கொண்டு பேசாது இருந்தபோது, நான் அவரை ஊடர் தீர்ந்து ‘நூறாண்டு வாழ்க’ என வாழ்த்திப் பேசுவேன் என நினைத்துத் தும்மினார்.

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்

காட்டிய சூடினீர் என்று

அழக்குக்காப் பூச் சூடினாலும் கூட, ‘வேறு யாரோ ஒரு காதலிக்குக் காட்டுவதற்காகச் சூடி இருக்கின்றீர் என்று சொல்லிக் கோபித்துக் கொள்வாள்.

4. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்

யாரினும் யாரினும் என்று.

'காதலர் எல்லோரினும் மிக்க காதலை உடையவராக உள்ளோம்' எனக் கூறியதும் காதலியர் பலரைவிட உன்னிடம் மிக்க காதல் கொண்டுள்ளேன் என்று கூறியதாகக் கருதி யாரைவிட? எனக் கேட்டு ஊடல் கொண்டாள்.

5. இம்மை பிறப்பில் பிரியலம் என்றேனாக்

   கண்நிறை நீர்கொண் டனள்.

அன்பு மிகுதியால் ' இந்தப் பிறப்பில் யாம் பிரியமாட்டோம்' என்று கூறினேன். அதனால் மறு பிறப்பில் பிரிவேன் எனக் கூறியதாகக் கருதி கண்கள் நிறைய நீர் கொண்டாள்.

6. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றுஎன்னைப்

   புல்லால் பலத்தக் கனள்

'பிரிவின் போது நினைத்தேன்' எனக் கூறினேன் அவ்வாறெனில் நினைப்பதற்கு முன் என்னை மறந்து இருந்தீரோ எனச் சொல்லித் தழுவிக் கொள்ளாமல் ஊடல் கொண்டாள்.

7. வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்துஅழுதாள்

   யார்உள்ளித் தும்மினீர் என்று

நான் தும்மினேன், அவள் வாழ்த்தினாள். உடனே மனம் மாறி, 'யாரை நினைத்து நீர் தும்மினீர்? எனக் கேட்டு அழுது நின்றாள்.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்

   எம்மை மறைத்திரோ என்று

தும்மினால் ஊடல் கொள்கிறாளே என்று தும்மல் வந்தபோது அடக்கிக் கொண்டேன். 'உம் காதலியர் உம்மை நினைப்பதை எனக்குத் தெரியாதவாறு மறைக்கின்றீரோ? என்று சொல்லி அழுதாள்.

9. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்

   இந்நீரர் ஆகுதிர் என்று

ஊடல் தீர்க்க வேண்டிப் பணிவாக வேண்டினாலும், 'பிற பெண்களிடமும் நீர் இவ்வாறு தானே நடந்து கொண்டிருப்பீர்' எனச் சொல்லி சினந்து கொள்வாள்.

10. நினைத்துஇருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்

யார்உள்ளி நோக்கினீர் என்று

பேசுவதையும் பணிவதையும் விட்டு, அவள் ஒப்பற்ற அழகையே நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாலும், 'என் அழகுக்கு இணையாக யாரை நினைத்துப் பார்க்கிறீர்?' எனக் கேட்டுக் கோபித்துக் கொள்வாள்.

# II. நாடகம்

## சாபவிமோசனம் - மு. ராமசாமி

**முன்னுரை**

மு. இராமசுவாமி இயற்றிய சாபம்! விமோசனம்? என்னும் நூல், 1. சாபம்! விமோசனம்? 2. புரட்சிக்கவி 3. ஆபுத்திரன் என்ற மூன்று நாடகங்களை உள்ளடக்கியது. சாபம்! விமோசனம்? என்னும் நாடகக்கருத்தினைக் குறித்து கீழ்க்கண்டவாறு காண்போம்.

**கவிதைக்காதலி**

சாபம்! விமோசனம்? நாடகத்தின் தொடக்கத்தில் ஆடுகளப்பிரம்மன் என்ற கதாப்பாத்திரம் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தன் 'கவிதைக்காதலி' என்னும் கவிதையில் சொல்லிச் செல்லும் ஒரு சின்னக்கதையை மதுரை நிஜநாடக இயக்கத்தின் சார்பில் சாபம்! விமோசனம்? என்ற பெயரில் நாடகமாக நிகழ்த்திக் காட்டுவதாக எடுத்துரைக்கின்றார்.

**கதைக்கரு**

உயர்ந்த ஸ்தானம் என்று தான் கருதுகிற இடத்திலிருந்து, சந்தர்ப்பவசத்தால் தன் கருத்தில் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டாலும், தொடக்கத்தில் அதை ஏற்க மறுக்கிற மனசு, பின் அதனோடு சமரசம் செய்து கொண்டு அந்த இடத்தையே சொர்க்கம் என்று நியாயப்படுத்துகிற போக்கில் இதன் கதை செல்லும்.

**கதை மாந்தர்கள்**

சங்கமுனிவர், துங்கமுனிவர், தேவந்திகை, தயாபரன், சீடர்கள், பூசாரி ஆகியோர் நாடகத்தை நகர்த்திச் செல்லும் கதைமாந்தர்களாக காணப்படுகின்றனர்.

**தேவந்திகையின் ஏக்கம்**

சங்கமுனிவர் 12 ஆண்டுகள் கடந்து தவம் முடிக்க இருக்கும் வேளையில் தேவந்திகை என்னும் முனிபத்தினியானவள் இகலோக உணர்ச்சிகள் மரத்துப் போகும் படிக்கு வாழ்ந்த தன் கணவர் துங்கமுனிவரால் புத்திரபாக்கியம் கிடைக்காதா என்ற தேடலில் பூசாரியைச் சந்தித்தாள்.

**கனி கொடுத்தல்**

பூசாரி ஓர் கனியை தேவந்திகையிடம் கொடுத்து குளித்துப் பூசை செய்து ஈரத்துணியுடன் உன் கணவனிடம் உண்ணக்கொடு என்றார்.

**சீடர்களின் வருகை**

12 ஆண்டுகள் கடுமையான தவம் முடிந்து கண் விழிக்க இருக்கிற தங்கள் குருநாதருக்காக சீடர்கள் உணவைத் தேடிச் சென்றனர். தேவந்திகை மரத்தினடியில் வைத்துச் சென்றிருந்த கனியைக்கண்டு 'இது நம் குருநாதருக்கென்று தெய்வம் தந்திருக்கும் உணவு' என்று கூறி எடுத்துச் சென்றனர்.

**மனதில் மாற்றம்**

சங்கமுனி கனியை ருசித்துச் சாப்பிடுகிறார். பின் மெல்ல மெல்ல அவர் நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதனை,

"பெண்ணாசை பெறுமின்

பேரின்பம் பெரு வெளியை

பெண்ணிடமே பெறுமின்

பெண்ணே இன்பம் அவள் கண்ணே பேரின்பம்

என்கிறார் சங்கமுனி. சீடர்கள் திகைத்து நிற்கின்றனர்.

**தேவந்திகை புலம்பல்**

தேவந்திகை 'வரம் வேண்டி நான் பெற்ற தெய்வக்கனி ஒன்று காணாமல் போய்விட்டது. யாரேனும் கண்டதுண்டோ? என்று வினவுகிறாள். சங்கமுனி அவளிடம் தவறாக நடக்க முயல்கிறார். அதற்கு தேவந்திகை 'மாற்றான் மனைவி நான். மாமுனியின் பத்தினி நான்' என்கிறாள்.

**துங்கமுனியின் சாபம்**

தேவந்திகையின்க ணவர் துங்கமுனி, தவவாழ்வில் சேறு பூசிய மூடனே. நாளை சூரியோதத்தில் எல்லோரும் காணும்படி 'மலம் தின்னும் பன்றியாக நீ போகக்கடவாய், என்று சங்கமுனியை சபிக்கின்றார். தங்கள் குருநாதரைக் காப்பாற்றுமாறு சீடர்கள் துங்கமுனிவரிடம் வேண்டுகின்றனர்.

பௌர்ணமியன்று சந்திரோதயத்தில் உங்கள் குருநாதரை வாளால் வெட்டிக் கொன்றால் பன்றி உரு ஒழிந்து அவர் உங்கள் குருவாகத் திரும்ப வருவார் என்று கூறுகிறார்.

**சங்கமுனி தப்பிச்செல்லல்**

சூரியோதயத்தில் சங்கமுனி பன்றியாக மாறுகிறார். பௌர்ணமி வரை காப்பதற்காக அவரைச் சுற்றிச் சீடர்கள் கோட்டைக்கட்டி காவல் இருக்கின்றனர். பன்றி உருவில் இருக்கும் சங்கமுனி சீடர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கையில் தப்பிச் செல்கிறார்.

**தேடும் முயற்சி**

சீடர்கள் பன்றிமுனியை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். பன்றி முனியைக் கண்டுபிடித்த சீடர்கள் அவரின் சிரத்தை வெட்ட வரும்போது, அதனை தடுத்து பன்றிமுனி தனக்கு பன்றிவாழ்க்கை பிடித்திருப்பதாகக் கூறினார்.

**சாபமே வரம்**

பன்றிமுனி, பன்றிகள் கூட்டத்தில் மெதுமெதுவே கலந்து மகிழ்ச்சியாய் பன்றி வாழ்க்கையுடன் சமரசமாகிப் போனார். சங்கமுனி சாபத்தையே வரமாக்கிக் கொள்ள பழகிக்கொண்டார்.

**முடிவுரை**

இவ்வாறு உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து, கீழான நிலைக்குத் தள்ளப்பட்டதை தொடக்கத்தில் அதை ஏற்க மறுக்கிற மனசு, பின்அதனோடு சமரசஞ் செய்து கொண்டு அந்த இடத்தையே சொர்க்கம் என்று நியாயப்படுத்துகிற போக்கில் கதை செல்கிறது.

## புரட்சிக்கவி

**முன்னுரை**

மு. இராமசுவாமி இயற்றிய சாபம்! விமோசனம்? என்னும் நூலில் அமைந்துள்ள ‘புரட்சிக்கவி’ என்ற நாடகக் கருத்தினைக் குறித்து கீழ்க்கண்டவாறு காண்போம்.

**புரட்சிக்கவி**

பாவேந்தர் பாரதிதாசனின் 'புரட்சிக்கவி' என்னும் காவியத்தை மதுரை நிஜநாடக இயக்கத்தின் சார்பில் ஆடற்குழுவினரும், இசைக்குழுவினரும் இணைந்து நாடகத்தை நிகழ்த்துவதாகக் காட்டப்படுகிறது.

**கதைமாந்தர்கள்**

அரசன், அமைச்சர், மக்கள், உதாரன், அமுதவல்லி ஆகியோர் நாடகத்தை நகர்த்திச் செல்லும் கதைமாந்தர்களாக காணப்படுகின்றனர்.

**உதாரன் தன்மை**

உதாரன் என்பவன், மக்களின் கவிஞனாகக் காணப்படுகின்றான். அவர்கள் தரும் உணவை உண்டு அவர்களுக்காக வேலை செய்கிறான். மக்களிடம் உரையாடலில் சிறந்து சகலகலை வல்லவனாகவும் காணப்படுகின்றான். 'அவனை ஒப்பார் யாருமில்லை' என்று சொல்லும் அளவுக்கு மிக கவித்துவம் பெற்றவனாக காணப்படுகின்றான்.

**அமுதவல்லியின் வருத்தம்**

இளவரசியான அமுதவல்லி தமிழிலக்கியங்கள் அனைத்தும் உணர்ந்தாளாயினும் அவள் கவிதை புனையக் கற்கவில்லை. அகத்தில் எழுந்த கவிதையைப் புறத்தில் பிறர்க்குப் புலப்படுத்துதற்குச் செய்யுள் இலக்கணம் தெரிதல் வேண்டும் என்பதை எண்ணி அரசனும் அமுதவல்லியும் வருத்தத்துடன் இருக்கின்றார்கள்.

**அமைச்சர் வருகை**

அரசரின் நிலையறிந்த அமைச்சர் உதாரனைக் குறித்து சொல்லத் தொடங்கினான். உதாரன் என்பவனின் தொழில் கவிதை. அவன் புதல்விக்குத் தக்க உபாத்தியாயன். உதாரனை அழைத்து அமுதவல்லிக்கு ஆசான் என நியமிப்போம் என்று அமைச்சர் அரசனிடம் கூறுகின்றார்.

**அமைச்சரின் சூழ்ச்சி**

அரசனிடம் குலமகளை உதாரனோடு கற்கவிட்டால் குறைவந்து சேர்ந்தாலும் சேர்தல் கூடும் என்று அமைச்சர் கூறினார். கவிதை கற்கும் காலத்தில்

அமுதவல்லியை அவனும், அவனைப் பெண்ணும் தெரிந்து கொள்ளாதவாறு திரைவிடுக்க வேண்டும். மங்கையிடம் உதாரனுக்குப் பார்வையில்லை குருடு என்றும், உதாரனிடம் அமுதவல்லி குஷ்டரோகி என்றும் எச்சரிக்க வேண்டும். எச்சரித்தால் தான் பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் வராதிருக்கும் என்று சூழ்ச்சி செய்து அரசனிடம் கூறுகின்றார்.

**வகுப்பு எடுத்தல்**

திரையின் ஒருபுறம் அமர்ந்து உதாரன் அமுதவல்லிக்குச் செய்யுள் இலக்கண வகுப்பு எடுப்பதை,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு"

என்று திறம்பட யாப்பு வகுப்பு எடுத்து வருகின்றான்.

**இராப்பள்ளிக்கூடம்**

இராப்பள்ளிக்கூடத்தில் மக்கள் அனைவரும் உதாரனுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுள் ஓர் பெரியவர், உதாரன் ராசா மகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போய் விட்டதால் இங்கே வருவாரா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது உதாரன் வருகின்றான். இராப் பாடவேளையை கிவதை மணம் பொங்க அழைத்து செல்கிறான்.

**உண்மை வெளிப்படல்**

உதாரன் வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கும் போது,

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து

நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை" என்ற கவிதை வாயிலாக அமுதவல்லிக்கு சந்தேகம் எழுந்து திரை விலக்கிப் பார்க்கிறாள். உண்மையானது வெளிப்பட்டு நின்றது.

**அழகில் மயக்கம்**

'வானிலே இருந்திட்ட ஓர் மாமதி மங்கையாய் என்னெதிரே வந்து வாய்த்ததோ' என்று உதாரன் அமுதவல்லியை கண்டு அழகில் மயங்கினான். 'சோதி நிலாவுக்கும்

மாசுண்டு இச்சுந்தரனோ கறை ஒன்றிலான்' என்று அமுதவல்லி உதாரனின் அழகை வர்ணித்தாள். இருவரும் அழகை வர்ணிப்பதை மாறி மாறி பரிமாறிக் கொண்டிருந்தனர்.

**உதாரன் மறுத்தல்**

அமுதவல்லி உதாரனின் அழகில் மயங்கி அவன் மீது காதல் வயப்படுகிறாள். ஆனால் உதாரன், நான் தமழறிந்ததால் மட்டுமே உன் தந்தை என அழைத்தார். தன்மானத்தை சிதைக்கும் வகையில் குருடென்றார், குஷ்டமென்றார். என் மக்கள் விழிப்படைய எனக்கு பெரும்பணிகள் இருக்கிறது. ஆகவே பெண்ணே நினைப்பை அகற்றிவிடு என்று உதாரன் மறுத்துக் கூறுகிறான்.

**அமுதவல்லியின் காதல்**

வாளை உருவி வந்து மன்னன் எனதுடலை வெட்டி நடுக்கடலில் போட்டாலும் இத்தையல் உளம் மாறாது என்று தன் காதலில் அமுதவல்லி உறுதியாய் இருந்தாள்.

**சதித்திட்டம்**

உதாரனும், அமுதவல்லியும் பேசுவதைக் கண்ட அரசர், அமைச்சரும் கோபம் கொள்கின்றனர். நம் சூழ்ச்சி தெரிந்த உதாரனை கைது செய்து இரகசியத்தை வெளியெ தெரியாமல் பாதுகாப்போம் என்று அமைச்சர் கூறுகிறார். உதாரனைக் கைது செய்து இழுத்து வருகின்றனர். அரசரின் ஆஸ்தியைக் கவர நினைத்ததால் உதாரனுக்கு தண்டனை அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அனைவரிடத்திலும் கூறுகின்றான். சிரச்சேதம் செய்க என்று மன்னன் ஆணையிடுகிறான்.

**அமுதவல்லி தடுத்தல்**

அமுதவல்லி சோகத்துடன் வெளியேறுகிறாள். ஊரெங்கும் பறையடிக்கப்படுகிறது. மண்டபத்தில் அனைவரும் அமர்ந்திருக்கின்றனர். 'எழிலுடையான் பிழை இழைக்கவில்லை' என்று கூறி ஓடிச்சென்று காவலர்களைத் தடுக்கிறாள். துஷ்ட சிறுக்கியைக் காவற்சிறையில் அடைப்பீர் என்று கூறியவுடன், சாதல் எனில் இருவருமே சாக வேண்டும். தவிர்வதெனில் இருவருமே தவிர்தல் வேண்டும் என்று தன் காதலின் வலிமையை அமுதவல்லி அனைவரிடத்திலும் வெளிப்படுத்துகிறாள். பின் 'இருவரையும் கொலை செய்க' என்று அரசர் ஆணையிடுகிறான்.

**முடிவுரை**

இவ்வாறு தாங்கள் செய்த தவறை மறைத்து பொய்யை நியாயப்படுத்துகிற போக்கில் கதை அமைந்தாலும் இறுதியில் ஓர் பெண்ணின் காதலின் உறுதியை சிறப்பாக கதை நகர்த்திச் செல்கிறது.

## ஆபுபுத்திரன்

**முன்னுரை**

மு. இராமசுவாமி இயற்றிய சாபம்! விமோசனம்? என்னும் நூலில் அமைந்துள்ள ‘ஆபுத்திரன்’ என்ற நாடகக் கருத்தினைக் குறித்து கீழ்க்கண்டவாறு காண்போம்.

**ஆபுத்திரன்**

உறுமி, குறுங்குழல், குந்தளம் ஆகிய இசைக்கருவிகளை இசைத்தபடி கதைசொல்லிகள் இணைந்து நாடகத்தை நிகழ்த்துவதாகக் காட்டப்படுகிறது.

**தாயின் வேதனை**

சாலி என்ற பெண் நெறிதவறி ஓர் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். ஊர்மக்கள் அவளை பழி தூற்றுகின்றார்கள். மிகுந்த கவலையுடன் கையில் குழந்தையை வைத்து கொண்டு,

‘பச்சை மண்ணைப் பார்த்தவுடன் விட்டுவர மனமில்லையே

தங்கக் குழந்தை இதைத்தள்ள மனம் வரவில்லையே’

என்று சாலி புலம்புகிறாள். பின் குழந்தையை பார்த்து, ‘உன் தாய் உனக்கு தந்து போவது இந்தக் கண்ணீர்க் குளியல்தான்’ என்று சொல்லிக்கொண்டு சாலி குழந்தையை விட்டுப் பிரிகிறாள்.

**மக்களின் அலட்சியம்**

தவறான வழியில் பிறந்த குழந்தையை விட்டுச் செல்ல எங்கள் ஊரில் இடமில்லை. இந்தக் குழந்தை எங்கள் ஊரில் வளர வேண்டாம் பெற்ற தாயே பிரிந்து போனபின்பு நமக்கெதற்கு வீண் தயக்கம் என்று, மக்களில் ஒருவன் அலட்சியமாக பேசுகின்றான்.

**பசுவின் இரக்கம்**

குழந்தையின் அழுகுரல் கேட்டு, ஐந்தறிவு கொண்ட பசு ஒன்று குழந்தையின் அருகில் சென்று நாவால் நக்கி அதன் அழுகையைப் போக்குகிறது. இதனை,

"அப்பன் சரியில்லை

ஆத்தாளுக்கும் துணிவில்லை

தப்பிப் பிறந்தவனே ..... நீ

தாய்ப்பாலுக்கழுகிறியோ

என்று பசு குழந்தையை ஆறுதல் செய்கிறது. இதனைக்கண்ட மக்கள் கூட்டம் பசுவை விரட்ட முயல்கிறார்கள். பசு அவர்களை முட்டிச் சாய்த்து குழந்தையைப் பரிவுடன் அணைத்தபடி படுத்துக் கொள்கிறது.

**குழந்தைபாக்கியம்**

இளம்பூதி, வேதா என்ற தம்பதியினர் யாருமே நெருங்க முடியாத அந்த குழந்தையை எடுத்து கொஞ்சினார்கள். நீ எத்தனை அன்பைப் பொழிந்தாலும் உன்னால் வயிற்றை மட்டும் தான் நிரப்பமுடியும். நாங்கள் அறிவையும் நிரப்புவோம் என்று இளம்பூதி பசுவிடம் கூறுகின்றார். தெய்வம் பசு வடிவில் வந்து, குழந்தை இல்லா எங்கள் குறையைத் தீர்த்தது என்று கண்ணி இருவரும் மகிழ்வுடன் சென்றனர்.

**அந்தணர்களின் கொடுமை**

வேள்வி செய்து உயிர்க்கொலை செய்தவற்காக பார்பனர்கள் சிலர் மாட்டை விரட்டிச் செல்கின்றார்கள். பசுவிற்கு இத்தனைகய கொடுமைகளை அந்தணர்கள் தருகின்றனர். பின்பு அவர்கள் விரட்டி வந்த பசுவை, சாலி விட்டுச்சென்ற குழந்தையான ஆபுத்திரன் பிடித்துக் கொள்கிறான்.

**ஆபுத்திரன் தடுத்தல்**

பிறந்தநாள் தொட்டு உலகிற்கே பால் தந்து வளர்த்து வரும் இந்தப் பசுவோடு உங்களுக்கு பகை வேண்டாம். வேள்வி செய்யுங்கள். வழிபடுங்கள். மனத்தின் மாசு அகற்றுங்கள். ஆனால், உயிர்க்கொலை செய்யாதிருங்கள் என்று அந்தணர்களை ஆபுத்திரன் தடுக்கின்றான்.

**மக்களின் முழக்கம்**

இளம்பூதி பெரிய வைதீகவாதி. ஆபுத்திரன் அந்தணன் இல்லை. இறக்கும் தருவாயில் கூட என் பெரிய தந்தை 'அந்தணன் நடுவில் ஒரு அயலான் வளர்கிறானே' என்று நொந்துக்கொண்டு இருந்ததாக மக்களில் ஒருவன் மிகுந்த கடுமையாக பேசுகிறான். பிறப்பறியா உன்னோடு இனி நாங்கள் உறவு கொள்ளப் போவதில்லை என்று மக்கள் முழக்கம் கொள்கின்றனர்.

**தாய்பாசம்**

பெற்ற குழந்தையை அணைத்து வளர்ப்பதுதான் தாயின் இயல்பு. கண்ணெதிரே வளரும் பிள்ளையைக்கூட தாய் சில நேரம் மறப்பாள். காணாமல் விட்டுப்போன என்னை என் தாய் ஒரு போதும் மறக்கமாட்டாள் என்று அந்தணர்களிடம் தாய் பாசத்தை வெளிக்காட்டி ஆபுத்திரன் பசுவை மீட்டுக் கொண்டு வருகின்றான்.

**புகார் செய்தல்**

மக்கள் அனைவரும் இளம்பூதியிடம் ஆபுத்திரனைக் குறித்து புகார் செய்கிறார்கள். ஆபுத்திரனை ஊரை விட்டு விரட்ட வேண்டும். இல்லையெனில் உங்கள் குடும்பத்தையே ஊரை விட்டு விரட்டி விடுவேன் என்று அந்தணர்கள் கூறுகின்றார்கள்.

**இளம்பூதியின் மாற்றம்**

வேதங்களையும், சாஸ்திரங்களையும் நான் மதிக்கிறேன். அதை எல்லாம் புறக்கணிக்கும் அவன் என் பிள்ளையே ஆனாலும் நான் அனுமதிக்கமாட்டேன். வேதா மிகுந்த மன வருத்தத்தோடு புலம்புகிறாள். 'மனதை கல்லாக்கிக் கொள்' என்று இளம்பூதி வேதாவை தேற்றுகிறாள்.

**பிச்சை எடுத்தல்**

வீட்டை விட்டு வெளியேறிய ஆபுத்திரன் பிச்சை எடுக்கும் நிலைக்கு ஆளாகின்றான். மக்கள் அவனுக்கு கல்லையும் மண்ணையும் போட்டு இழிவுபடுத்துகின்றார்கள். இந்த ஊர் என்னை எப்படி இகழ்ந்தாலும் எனக்குக் கவலையில்லை. நான் உங்களுக்கு உணவளிக்கிறேன் என்று ஆபுத்திரன் வலிமையோடு கூறுகின்றான்.

**மூதாட்டி வாழ்த்தல்**

ஏழைகளுக்கு உணவளிக்க பிறந்திருக்கும் நீ 'நல்லா மகாராசனா இருக்கணும்' என்று மூதாட்டி ஒருவர் ஆபுத்திரனை வாழ்த்துகிறார். துன்பத்திலே என்னை ஈன்ற என் தாய் துன்பம் துடைக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று மூதாட்டியிடம் ஆபுத்திரன் கூறுகின்றான்.

**கனவில் குரல்**

ஆபுத்திரன் கோயில் மண்டபத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் போது, கலத்தில் இன்று ஒரு கவளம் சோறு கூட விழவில்லையே, 'நாளை எப்படி உணவளிப்பாய்' என்று கனவில் ஓர் அசரீரி ஒலித்தது. அப்போது, எத்தனை பேர் வந்தாலும் இல்லை என்று உணவளிக்கும் தெய்வீகப்பாத்திரம் இது. யாரிடமாவது பிச்சைப் பெற்று அள்ள அள்ளக் குறையாத அமுதத்தை அனைவருக்கும் வழங்குவாயாக என்று, இந்திரா தேவி ஆபுத்திரனனிடம் பாத்திரத்தை அளிக்கிறாள்.

**இந்திரனின் செயல்**

முதியவர் வேடத்தில் இந்திரன் வந்து அபுத்திரனின் புகழை நினைத்து, அவனுக்கு வரம் கொடுக்க நினைக்கிறான். என்ன வரம் வேண்டும் என்று இந்திரன் ஆபுத்திரனிடம் கேட்கின்றான்.

**வரத்தை மறுத்தல்**

பசித்தவர் முகம் பார்த்து உணவிட்டு பசி போக்கி எஞ்சியதை உண்ணும் பொழுது ஏற்படும் மகிழ்வுக்கு இணையானது இவ்வுலகில் எதுவுமில்லை என்று வரத்தை ஏற்க ஆபுத்திரன் மறுக்கிறான்.

**இந்திரனின் சாபம்**

எந்த ஆணவத்தால் நீ தேவர்களையெ அவமதிக்கின்றாயோ அந்தப் பெருமை உனக்கு விரைவில் இல்லாமல் போகும் என்று இந்திரன் ஆபுத்திரனுக்கு சாபம் அளிக்கிறான். திடீரென்று மழை பெய்து நாடு வளத்தில் செழித்தது. அதனால் யாரும் அவனிடம் உணவு வாங்க வரவில்லை. மற்றவர்களுக்கு கொடுத்துவிட்டு தான் சாப்பிடவேண்டும் என்ற கொள்கையில் உறுதியாய் இரந்து ஆபுத்திரன் பட்டினி கிடக்கின்றான். இந்திரன் சாபத்தால் ஆபுத்திரன் இந்நிலைக்கு ஆளாகின்றான்.

**உயிர் துறத்தல்**

ஆபுத்திரன் சாவகத் தீவிற்கு செல்கின்றான். ஆள் அரவமே அற்ற இந்தத் தனிமைத் தீவில் நானும் என் பாத்திரமும் இருந்து பயனில்லை. உணவளித்த பின்பு தான் உண்டு உயிர் வாழ்வேன் என்ற குறிக்கோளுடன் வரம் கேட்காமல் இந்திரனை வென்று கோமுகிப் பொய்கையில் பாத்திரத்தை விட்டுவிட்டு உண்ணா நோன்பிருந்து ஆபுத்திரன் உயிர் துறக்கின்றான்.

**முடிவுரை**

இவ்வாறு பெற்றவள், அந்தணர், வளர்த்தவர்கள் ஒதுக்கினாலும், உண்ணா நோன்பெனும் போராட்ட வடிவத்தால் உலகத்தையே தன்பக்கம் திரும்ப வைத்த ஆபுத்திரன் சாவை வென்று எல்லாம் மனங்களிலும் இன்னும் வாழந்து கொண்டிருப்பதாக கதையானது சிறப்புடன் அமைகிறது.

## III. இலக்கிய வரலாறு

## 1. சங்க இலக்கியம்

**முன்னுரை**

சங்க இலக்கிய நூல்கள் பதினெட்டு. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை. இவை மேற்கணக்கு எனப்படும். பத்துப்பாட்டு ஒரே தொகுதியாக இருப்பதால், மொத்தம் ஒன்பது நூல்கள். இவற்றின் வரலாற்றைத் தனித்தனியே பார்க்க வேண்டும். இவற்றை அகம் பற்றியன, புறம் பற்றியன என்று பிரித்தும் படிக்க வேண்டும்.

சங்ககாலத்தைச் சார்ந்த இலக்கணம் தொல்காப்பியம் நீதி இலக்கியம் திருக்குறள். அதனை நீதிநூல் வரிசையில் முதலில் வைத்துப் பார்க்க வேண்டும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் களவழி நாற்பது புறம் பற்றியது. கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது மற்றம் கைந்நிலை என்பன அகம் பற்றியன. இவை சங்க இலக்கியக் கோட்பாடான அகம் பற்றிய பிற்கால வளர்ச்சிப் பாடல்கள். மேலும் முத்தொள்ளாயிரம், கோவை நூல்கள் இதன் தொடர்ச்சிகளேயாம். சிற்றிலக்கிய

வகைகள் பல அகப்புறப் கலப்புப் பிறப்புகள். தனிப்பாடல் திரட்டு என்று பிற்காலப் பாடல்களிலும் அகம், புறம் பற்றிய பாடல்கள் பலவுள.

**சங்கமும் அதன் காலமும்**

சங்க இலக்கியம் என்பது சங்கமிருந்து தமிழாராய்ந்த காலத்தை நினைவிற் கொண்டு வழங்கி வரும் பெயர் புலவர்கள் கூடும் பேரவையம் ஒன்றைப் பாண்டிய மன்னர்கள் தம் தலைநகர்களில் அமைத்துப் போற்றினர். கடல் கோள்களால் தமிழ் இலக்கியம் அழிந்துபடுமோ என்ற அச்சம் தோன்றிய காலை, இவ் அவையப் புலவர்கள் பல்வேறு திணைப் பாடல்களைப் பாடித் தொகுத்தும், முன்னரே பாடப் பெற்றிருந்தவற்றைச் சேர்த்துக் காத்தும் பணிபுரிந்தனர்.

சங்கத் தொகைப் பாடல்கள் அனைத்தும் அகம் புறமாகிய திணைபற்றியனவாதலின் அவற்றைத் திணையிலக்கியம் என்று வகைமை சுட்டுதலே பொருத்தமுடையதாகும். இத்திணைப் பாடல்களே இன்று கிடைத்துள்ள தமிழ் இலக்கியம் அனைத்திலும் தொன்மை மிக்கனவாகும். காலத்தால் முற்பட்ட இத்தமிழ் இலக்கியம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனத் தொகுக்கப்பட்டு ஒரு வரையறைக்குட்பட்டு விளங்கியது.

**சங்கமிருந்த காலம்**

கடைச்சங்கம் கி.பி.250க்கு முற்பட்டதென்பதும் கி.மு.1000 தொடங்கி இச்சங்கங்கள் நடைபெற்றன வென்பதும் இன்று பலராலும் ஏற்கப்பட்ட முடிவாகும்.

சங்கப் பாடல்கள் பல்வேறு மன்னர்களின் செய்திகளைச் சுட்டுகின்றன. அவற்றுள் ஒரு பாடலாவது பல்லவரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. கி.பி.மூன்றாம் நூற்றாண்டினிடையில், இப்பல்லவ மரபினர் தமிழகத்தின் வடபகுதியைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆளத்தலைப்பட்டனர். வடக்கே கிருஸ்ணையாறுவரை ஆட்சி புரிந்த இம்மன்னர் பரம்பரையைச் சுட்டாமல் இருந்திருக்க வியலாது. தமிழக வடக்கெல்லையாகிய வேங்கடமலைத் தொடரின் பகுதிகளையாண்ட மழவர், கள்வர் போல்வாரையும் கோசர், துளுவர், ஓவியர், ஆவியர், திரையர் எனப் பல்வேறு அரச இனத்தவர்களையும் குறிப்பிடும் சங்க இலக்கியம் பல்லவர் என்ற இனத்தாரைச் சுட்டவில்லை. எனவே மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுக்களால்

பல்லவர் எனச் சுட்டப்படும் ஓர் அரச இனத்தாரைச் சுட்டாத சங்கப்பாடல்கள், அந்நூற்றாண்டிற்கு முற்பட்டதாதல் வேண்டும். வடவேந்தரான மௌரியர் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்த செய்தியையும் (அகம் 69, 251, 281. புறம் 175) முடியுடைத் தமிழ் வேந்தர் மூவரும் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு ஆங்காங்கு நிகழ்த்திய போர்களையும் தம் பாடல்களில் குறித்துள்ள கடைச் சங்கப்புலவர்கள், பல்லவர் தமிழ் வேந்தரோடு பரிந்த போர்களுள் ஒன்றையாவது குறிப்பிடாமை ஊன்றி நோக்கற்பால தொன்றாம். அன்றியும் பல்லவர் என்ற பெயரே சங்கத்துச் சான்றார் பாடல்களில் காணப்படவில்லை என்பார். தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.

சிலப்பதிகாரத்தில் இலங்கை மன்னன் கயவாகுவும் கண்ணகிக்குக் கடவுள் மங்கலம் செய்த காலத்தில் வந்திருந்தான் என்று கூறப்பட்டுள்ளது, (வரந்தருகாதை 160-64) இலங்கையில் முதற் கயவாகு கி.பி.171 முதல் கி.பி 193 வரை அரசாண்டவன் இரண்டாம் கயவாகு கி.பி.12 ஆம் நூற்றாண்டிலிருந்தவன் அஃது இரண்டாம் குலோத்துங்க சோழன் காலம் எனப்படும்.

வடநாட்டு வரலாற்றில் நந்தர்களே காலத்தால் முற்பட்ட அரச மரபினர் ஆவர். அவர்கள் சிறப்புற்றிருந்த காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு தொடங்கியாகும். அடுத்த அரச மரபினர் மோரியர் ஆவர். இவர்கள் இருவரையும் பற்றிச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

“நந்தன் வெறுக்கை எய்தினும்” (அகம்.251)

மகாபதும நந்தன் செல்வச் செழிப்பு மிக்கவன் என்ற வரலாற்றுடன் இதை ஒப்பிட்டு நோக்குக.

“பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ” (அகம் 265)

நந்தர்கள் நிலத்தினடியிலும் பெருஞ்செல்வத்தை மறைத்து வைத்திருந்தமை இதனாற் புலப்படும். நந்தர்களின் தலைநகராகிய பாடலிபுத்திரம் சோணையாறு

கங்கையிற் கலக்குமிடத்தில் இருந்ததென்பது இந்திய வரலாறு. அதனைப் படுமரத்து மோசிகீரனார்.

"வெண்கோட்டு யானை சோணைபடியும்

பொன்மலி பாடலி பெறீஇயர்" (குறு.75)

என்று அதன் செல்வ வளத்தோடு கூறுகிறார்.

முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்

தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு" (அகம் 28)

என்று மோரியர் பற்றிய குறிப்புண்டு. மேலும் சில இடங்களிலும் இம் மோரியர் பற்றிய குறிப்புண்டு (புறம்.75) இக்குறிப்புகளெல்லாம் சங்கப் பாடல்களின் பழைமையைச் சுட்டுவன.

யவனர் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. யவனர்கள் தமிழகத்திற் குடியேறி வாழ்ந்த செய்தியும் நாமறிந்ததே. பிளைனி, தாலமி, பெரிபுளுசு நூலாசிரியர் போன்ற கிரேக்கநாட்டுப் பயணிகளின் குறிப்புகள் பல தமிழகத்தைப் பற்றியன. அவை ஒன்றினொன்று பொருந்திவருதலை ஆய்வாளர் பலர் எடுத்தக் காட்டியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தை முறையாகக் கற்போர் அதன் வளர்ச்சியைக் கணித்தறிய முடியும். அத்துடன் சங்க இலக்கியமே காலத்தால் முற்பட்டது என்பதையும் அதன் காலப் பகுதி கிறித்துவுக்கு முற்பட்டதாதல் வேண்டும் என்பதையும் நடுநிலை மனமும் கூர்த்த அறிவு முடையார் எவரும் மறுக்கமாட்டார் என்பது தெளிவு.

**சங்கநூல்கள்**

சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என்று கூறப்படும். பாட்டு என்பது பத்துப்பாட்டு, தொகை என்பது எட்டுத்தொகை. எட்டுத்தொகையில் ஒவ்வொன்றும் பல உதிரிப்பாடல்களின் தொகுப்பு எனலாம். பத்துப்பாட்டு நெடும்பாடல்களின் தொகுப்பாகும்.

**எட்டுத்தொகை**

குறுந்தொகை நற்றிணை, நெடுந்தொகை (அகநானூறு), ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், புறநானூறு, பதிற்றுப்பத்து.

இவற்றை மனத்திய பதியவைத்துக் கொள்ளுமாறு ஒரு தனிப்பாடல் உண்டு.

“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம், புறம் என்று

இத்திறத்த எட்டுத்தொகை”.

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஐந்தும் அகத்தொகைகள், பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்தொகைகள், பரிபாடலில் வையை பற்றியன அகப்பாடல்கள், ஏனைய செவ்வேள், திருமால் பற்றிய கடவுள் வணக்கப்பாடல்கள் புறம் பற்றியன.

கலியும் பரிபாடலும் முறையே கலிப்பாவாலும் பரிபாடலாலும் ஆயினமையால், அப்பெயர்க்கு உரியனவாயின. பிற சங்கப் பாடலனைத்தும் ஆசிரியப்பாவால் ஆனவை. ஐங்குறுநூற்றிலும், பதிற்றுப்பத்திலும் பத்துப்பத்துப் பாடல்கள் என்ற முறையில் அகமும் புறமும் தொகுதி தொகுதியாகப் பாடப்பட்டுள்ளன. பரிபாடலிலும் கலித்தொகையிலும் கூட. ஒரு பொருள் அல்லது திணை பற்றிய பாடல்களின் தொகுதிகளாக அமைந்திருக்கக் காணலாம்.

ஏனைய எட்டுத்தொகை சார்ந்த நான்கு நூல்களும் உதிரிப்பாடல்களின் தொகுப்புப் போன்றவை.

பத்துப்பாட்டில் நெடும்பாடல்கள் பத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

**பத்துப்பாட்டு**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை.

**எட்டுத்தொகை**

| வ. எண் | நூற்பெயர் | பொருள்பாட்டு எண்ணிக்கை கடவுள்வாழ்த்து | பாடிய புலவர்கள் எண்ணிக்கை | தொகுப்பித்தவர் | தொகுத்தவர் |
|---|---|---|---|---|---|
| 1 | குறுந்தொகை | அகம் 401<br>முருகன் 1 | 205 | பூரிக்கோ | தெரியவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பா.பா.பெ | | | |
| 2. | நற்றிணை | அகம் 400 திருமால் 1 பா.பா.பெ | 192 | பன்னாடுதந்த பாண்டியன் | தெரியவில்லை |
| 3. | அகநானூறு | அகம் 400 சிவன் 1 பா.பா.பெ | 142 | மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மான் | பாண்டியன் உக்கிரப்பெரு வழுதி |
| 4. | ஐங்குறுநூறு | அகம் 498 சிவன் 1 பா.பா.பெ | 5 | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை |
| 5. | கலித்தொகை | அகம் 140 சிவன் 1 பா.பா.பெ | 5 | நல்லந்துவனார் என்பர் நச்சினார்க்கினியர் | தெரியவில்லை |
| 6. | பரிபாடல் | அகம் புறம் 22 + உதிரி 10 | 13 | தெரியவில்லை | தெரியவில்லை |
| 7. | பதிற்றுப்பத்து | புறம் 80+ சிவன் 1 (பிற்சேர்க்கை) | 8 | தெரியவில்லை | தெரியவில்லை |
| 8. | புறநானூறு | புறம் 399 சிவன் 1 பா.பா.பெ | 157 | தெரியவில்லை | தெரியவில்லை |
| | பத்துப்பாட்டு 10- சமாசப்பதிப்பின் படி மொத்தப்பாடல்கள் | 2381 | 473 | | |
| | பா.பா.பெ – பாரதம் பாடிய பெருந்தேவனார் | | | | |

**பத்துப்பாட்டு**

| வ. எண் | பாட்டு | பொருள் | அடி யளவு | பாடியவர் | பாடப்பெற்றவர் |
|---|---|---|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | புறம் | 317 | மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் | குமரவேள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | பொருநாரற்றுப்படை | புறம் | 248 | முடத்தாமக் கண்ணியார் | சோழன் கரிகாற் பெருவளத்தான் |
| 3. | சிறுபாணாற்றுப்படை | புறம் | 269 | இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் | ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் |
| 4. | பொரும்பாணாற்றுப்படை | புறம் | 500 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் |
| 5. | முல்லைப்பாட்டு | அகம் | 103 | காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் | |
| 6. | மதுரைக்காஞ்சி | புறம் | 782 | மாங்குடிமருதனார் | தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் |
| 7. | நெடுநல்வாடை | அகம் | 188 | மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் | பாண்டியன் நெடுஞ்செழியன் |
| 8. | குறிஞ்சிப்பாட்டு | அகம் | 261 | கபிலர் | ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்ததற்குப் பாடியது |
| 9. | பட்டினப்பாலை | அகம் | 301 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | சோழன் கரிகாற் பெருவளத்தான் |
| 10. | மலைபடுகடாம் | புறம் | 583 | இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் | பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாந்து வேள்நன்னன் சேய் நன்னன் |

பத்துப்பாட்டைத் தொகுத்தார், தொகுப்பித்தார் விவரம் தெரிந்திலது.

பத்துபாட்டுள் காணப்படும் வரிசை முறைப்படியே இப்பாடலிலும் அவற்றின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன.

“முருகு பொருநாறு பாண்இரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து".

இவற்றுள் ஆற்றுப்படை ஐந்தும் மதுரைக் காஞ்சியும் புறப்பாடல்களாகும். எஞ்சிய நான்கும் அகப்பாடல்கள் நெடுநல்வாடை பற்றி அகமா, புறமா என்ற கருத்து வேறுபாடு உண்டு. பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிப் பெரும்பகுதி கூறுதலால் பாலைப்பாட்டு எனப்படாமல் பட்டினப்பாலை எனப்பட்டது. 103 அடியுள்ள முல்லைப் பாட்டே இவற்றுள் அடி அளவாற் சிறியது. 782 அடியுள்ள மதுரைக் காஞ்சியே மிகப்பெரியது. பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்துப் போலத் திருமுருகாற்றுப்படை அதில் முதற்கண் வைக்கப்பட்டுள்ளது. பட்டினப் பாலையில் வஞ்சியடிகள் மிகுதியாக விரவி வந்துள்ளமையால் அதனை வஞ்சிநெடும்பாட்டு என்பாரும் உளர்.

**எட்டுத்தொகை நூல்கள்**

**குறுந்தொகை**

பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்ட இதில் நான்கடிச் சிற்றெல்லை முதல் எட்டடிப் பேரெல்லை வரை அமைந்த நானூறு பாடல்கள் அடங்கியுள்ளன. இதற்கு உரையெழுதிப் பதிப்பித்த சான்றோர் உ.வே.சாமிநாத அய்யர், 'உரையாசிரியர்கள் குறுந்தொகைப் பாடல்களையே மிகுதியாக எடுத்துக் காட்டுகின்றனர்' என்று தம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இதன் முதற்பதிப்பாசிரியர் திருக்கண்ணபுரம் சௌரிப் பெருமாள் அரங்கன். அடியளவால் குறுகிய இப்பாடல்களில் முதல் கருவைவிட உரிப்பொருட்கே சிறப்பிடம் நல்கப்படுமாற்றைக் காணலாம் என்பர் 'தமிழ்க்காதல்' ஆசிரியர் அறிஞர் வ.சுப. மாணிக்கம் வருணனை குறைந்தும் உணர்வு மிகுந்தும் விளங்கும் இப்பாடல்கள் அகத்திணையின் உயிரோட்டத்தைக் காட்ட வல்லனவாயுள்ளன.

தலைமகள் தோழியிடம் தலைவன் அன்புடைமையை வற்புறுத்தும் சூழல் ஒன்று வருகிறது. அப்போது அவள் அக்காதல் நிலத்தைவிடப் பரந்ததாக வானைவிட உயர்ந்ததாக, நீரைவிட ஆழமானதாக விளங்குவதெனக் கூறுகிறாள்.

‘நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரள வின்றே சாரல்

கருங்கோட்டுக் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.” (3)

பிரிந்த தலைவன் உரிய காலத்தே திரும்பினானில்லை, அதனால் தலைவி சோகமே வடிவாயினாள், உள்ளங்குமைந்தாள். வீட்டினுள்ளிருந்து பலகணி வழியாகப் பறவைகள் மாலை நேரத்தில் கூடுநோக்கிப் பறந்து போவதைப் பார்க்கிறாள். அஃது அவள் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது இதைப்போலத் தன் தலைவனும் வீடுநோக்கிப் பறந்து வரவில்லையே என அவள் நெஞ்சம் நினைத்து அழுகிறது அதை அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை. அவ்வாறு வெளிப்படச் சொல்லாமல் குறிப்பாகச் சொல்வதனாலேயே, படிக்கும் நம் நெஞ்சத்தில் அவ் அவலவுணர்வு இருமடங்காகிப் பெருகுகிறது.

“ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

இறையுற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த

பிள்ளை உள்வாய்ச் செரீஇய

இரைகொண் டமையின் விரையுமாற் செலவே” (9)

திருமணமான புதிதில் தலைவி தலைவனுக்குத் தானே உணவு சமைத்துப் பரிமாறுகிறாள். அனுபவக் குறைவாலும் விரைவாலும் பட்டுச் சேலையில் கையைத் துடைத்துக் கொண்டு, கண்களில் புகைபடிய அவள் சமைக்கும் அழகே அவளுக்கு அதில் அதிகப் பழக்கமில்லை என்பதைக் காட்டுகிறது. இருந்தும் மனைவி மிகமுயன்று சமைத்ததாயிற்றே என்று கணவன் ‘இனிது இனிது’ என உண்ண, அவன் பெருந்தன்மையும் பேரன்பையும் எண்ணி மனைவி புன்னகை பூக்க, அவ்வீட்டு இல்லற மாட்சி இனிதாக நடைபெறுகிறது. ஒரு தாய் தன் மகளின் நல்லற வாழ்வை இங்ஙனம் கண்ணாரக் கண்டு மகிழ்கிறாள்.

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்

குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்

தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்

இனிதெனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே." (167)

திருமணம் முடிக்கும் மணமக்களுக்கு நாம் இதைவிடக் கூறக்கூடிய அறிவுரைகள் எவையெனும் உளவோ? எண்ணிப்பார்மின்.

"காமம் தாங்குமதி என்போர் தாம.்.து

அறியலர்கொல்லோ? அனைமதுகையர்கொல்?

யாமெங் காதலற் காணே மாயின்

செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்

கல்பொரு சிறுநுரை போல

மெல்ல மெல்ல இல்லா குதுமே." (290)

இப்பாடலை எழுதிய புலவர் பெயர் அறியப்படாத பொழுது இதனைத் தொகுத்தவர்கள் "கல்பொரு சிறுநுரையார்' என இப்பாடலாசிரியர் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர். இதிலமைந்துள்ள சிறந்த, தனித்தன்மை வாய்ந்த உவமை கருதி ஆசிரியர்க்குப் பெயரிட்ட திறம் பாராட்டிற்குரியது

இங்ஙனம் பாடலால் பெயர் பெற்றவர்கள் பதினெட்டுப் பேருக்குமேல் இந்நூலில் காணப்படுகின்றனர். இவ்வாறு பாடலால் பெயர் பெற்றவர் தொகை இத்தொகுப்பிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றது. மேலும் அவர்களிற் சிலர் அதே பெயரால் பிற தொகை நூல்களிற் குறிக்கப்படுதலாலும் பிற தொகை நூற்களிற் பாடலால் பெயர் பெற்ற புலவர் பாடலெதுவும் இதிற் காணப்படாமையாலும் குறுந்தொகையே முதலில் தொகுக்கப்பெற்றதென்பர். இத்தொகை பாடிய புலவர் தொகை 205. இந்நூலின் முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும், இறுதி 20 பாட்டுகளுக்கு நச்சினார்க்கினியரும் உரையெழுதினர்.

## நற்றிணை

பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியால் தொகுக்கப்பட்ட இதில் 9 அடிச் சிற்றெல்லை முதல் 12 அடிப்பேரெல்லை வரை அமைந்த 400 பாடல்களைக் காணலாம். பின்னத்தூர் அ.நாராயணசாமி அய்யர் இதற்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார். அளவாயமைந்த பாடல்களைக் கொண்டதாதலின் 'நல்' என்ற அடைமொழி பெற்றது. பாடிய புலவர் தொகை 275 பாடல் தொடரால் பெயர்பெற்ற நற்றிணைப் புலவர்கள் எழுவராவர். அவர்கள் வண்ணப்புறக் கந்தரத்தனார். மலையனார், தனிமகனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார் என்போர் ஆவர்.

தோழி எவ்வளவு கூறியும், தலைவி தலைவன் மேற்கொண்ட சீற்றம் தணிந்திலள். அதனால் மனம் வருந்திய தோழியின் கூற்றாகக் கபிலர் பாடிய பாடல் இது

"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி
அம்மலை கிழவோன் நம்நயந்தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்
நீயுங் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந்து அளவல் வேண்டும் மறுதரற்கு
அரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே."

"திருமாலைப் போன்ற கரிய மலைத்தொடர் பலதேவனைப் போன்ற வெள்ளருவி அம் மலைநாடன் நம்மை விரும்பி வருந்துகிறான் என யான் எவ்வளவு கூறியும் நீ என் பேச்சை ஏற்றுக்கொள்ளவில்லை. நீயாகச் சிந்தித்துப்பார் அல்லது உனக்கு மிக வெண்டியவர்களுடன் கலந்து எண்ணிப்பார். அறியவேண்டியதை அறிந்து அவனை ஏற்றுக் கொள்வதே நலம். மறுப்பது தவறு. பெரியவர்கள் ஆராய்ந்த பின் நட்புக் கொள்வார்களெ தவிர, நட்புக் கொண்டபின் ஆராயமாட்டார்கள். எவ்வளவு நயமாக,

நாவன்மை மிக்க தோழி தலைவியை இடித்துக் கூறுகிறாள் என்பதைப் பாட்டினைப் பல முறை படித்து உணர்தல் வேண்டும். திருவள்ளுவர்

“நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்

வீடில்லை நட்பாள் பவர்க்கு” (791)

எனக்கூறுவது இப்பாடலின் இறுதியில் பொருத்தமுற ஆளப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.

தலைவன் தன் காதலியை அவள் வீட்டுக்கருகிலுள்ள ஒரு புன்னை மரத்தடியில் சந்தித்தான். அவள் “இது நாங்கள் விளையாடுகிற பொழுது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்து வளர்ந்தது. பிறகு நாங்கள் அதனைப் பாலும் தேனும் பெய்து வளர்த்தோம். அப்போதெல்லாம் எங்கள் தாய் உங்களை விட உங்கள் தங்மையான புன்னை மிக நல்லவள், அவள் அடமே செய்வதில்லை, எனப் பாராட்டுவாள் எனவே என் உடன் பிறப்பனைய இப்புன்னை நிழலில் உங்களுடன் அளவளாவ எனக்குக் கூச்சமாக இருக்கிறது. வேறு இடங்களும் அருகிலுள. நாம் அங்கே போய்ப் பேசிக்கொண்டிருப்போம்” என்கிறாள். இயற்கையையும் உயிருள்ளதாகக் கருதி நாணும் இந்நுட்பமான உணர்வு நிலையை நாம் சங்கப்பாடல்களில் கண்டு மகிழலாம்.

“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி

மறந்தனம் துறந்த காழ்முறை அகைய

நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று

அன்னை கூறினள், புன்னையது சிறப்பே

அம்ம நாணுதும் நும்மொடு நகையே.... (172)

**அகநானூறு**

இதனைத் தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெழுவழுதி. தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர். 13 அடிச் சிற்றெல்லை, 31 அடிப்பேரெல்லைக்கு உட்பட்ட

400 பாடல்கள் உள்ளன. முழுமையான அளவில் அகத்திணையை விளக்கும் பாடல்களைக் கொண்டதால் ‘அகம்’ எனவும் முன்னைய இரண்டு தொகைகளையும் விட நீண்ட பாடல்களைப் பெற்றிருப்பதால் நெடுந்தொகை’ எனவும் இரு பெயர் பெறும். முதல், கரு, உரிப்பொருள் மூன்றும் நிறைவுற அமைந்த பாங்கினை உடையவை இவை. வரலாற்றுச் செய்திகளாகிய புறச் செய்தியும் இவற்றில் மிகுதி அகநானூறு என்பதற்கொப்பப் புறநானூறு எனவும் ஒன்று தொகுக்கப் பெற்றுள்ளதை உன்னுக. இவையெல்லாம் சங்கம் போன்ற அமைப்பு ஒன்றிருந்தே நடைபெற்றிருக்க வேண்டும். இவ்வமைப்பை நோக்குகையில் பல புலவர்கள் தனித்தனியே இயற்றிய அகப்பொருட் செய்யுட்களைத் தொகுத்து அவற்றை அடியளவில் வகைப்படுத்தியபின் அவற்றைத் தொகுத்தவர்கள் ஒவ்வொன்றில் நானூறு பாக்கள் இருக்கும்படி தம் காலத்துப் புலவர்கள் இயற்றிய வற்றையும் சேர்த்து அமைத்தார்கள் என்று கருத இடமுண்டாகிறது” என்று உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகை முன்னுரையில் கூறுதலும் காண்க. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை மூன்றிலும் 4 அடி முதல் 31 அடி வரையுள்ள பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ள முறைமையை நோக்கினால் இவை ஒரே சமயத்தில் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டவை என்ற உண்மை விளங்கும்.

அகநானூறு தொகுப்பு முறையில் சில குறிக்கத்தக்க செய்திகள் உள. முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும், அடுத்த 180 பாடல்கள் மணிமிடை பவளம் எனவும், இறுதி 100 பாடல்கள் நித்திலக் கோவை எனவும் அழைக்கப்படுகின்றன. இந்நூலில் ஒற்றைப்பட வருவனவெல்லாம் பாலைத்திணைப் பாடல்கள் இரண்டும் எட்டும் ஆன பாடல்கள் குறிஞ்சி, 4, 14 என வருவன முல்லை, 6, 16 என வருவன மருதம், 10, 20 என வருவன நெய்தல். எனவே அகநானூற்றில் 200 பாலைப்பாடல்கள், 80 குறிஞ்சிப்பாடல்கள், 40 முல்லைப்பாடல்கள், 40 மருதப்பாடல்கள், 40 நெய்தற் பாடல்கள் உள என்பது பெறப்படும். முதற் 90 பாடல்கட்கு மட்டும் காணப்படும் பழைய குறிப்புரை ஒன்று இந்நூலுக்கு உண்டு. அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியர் வே. இராசகோபாலாச்சரியார் ஆவார். அவர் முதல் 70 பாடல்களுக்கு மட்டும் உரையெழுதினார். தஞ்சை நாவலர் ந.மு.

வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு இரா.வெங்கடாசலம் பிள்ளையும் நூல் முழுமைக்கும் உரை விளக்கம் எழுதியுள்ளனர். தலைவியிடம் தோழி பருவ வரவைக் காட்டி, "அதோ உன் கணவரும் திரும்பி விட்டார்" எனக் கூறி மகிழ்விப்பது கீழ்வரும் பாடலில் இலக்கிய நயத்தோடு அமைந்துள்ளது.

"மல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பில்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உதுக்காண் தோன்றும்....."

தேன் குடிக்கும் வண்டுகள் அஞ்சி ஓடக்கூடாதே என்று மணியின் நாவைக் கட்டித் தேரில் வரும் தலைமகனின் மனவுணர்வு குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையில் இதன் நயத்தை மிக நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**ஐங்குறுநூறு**

மூன்றடிச்சிற்றெல்லை முதல் ஆறடிப் பேரெல்லை வரையுள்ள பாடல்களைக் கொண்டது. பத்துக்களாகப் பாடி, திணைக்கு நூறு பாடல்கள் என வகுத்துள்ளமை இதன் தனிச்சிறப்பு. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். மருத நூறு - ஓரம்போகியார், நெய்தல் நூறு – அம்மூவனார், குறிஞ்சிநூறு – கபிலர், பாலை நூறு – ஓதலாந்தையார், முல்லைநூறு – பேயனார்

எனப் பாடியுள்ளனர். ஏதோ பாட்டரங்கத்திற்குப் பாடியதைப் போலத் திட்டமிடும் பாங்கை இது காட்டுகின்றதன்றோ?

“மருதம் ஓரம் போகி நெய்தல் அம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓது ஐங்குறு நூறு”

என்ற தனிப்பாடல் மூலம் இதனைப் பாடியவர்களை நினைவில் வைத்துக் கொள்ளலாம். இதனைத் தொகுத்தவர் புலத்துறை மற்றிய கூடலூர்கிழார். தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை. இதிலிருந்து இத்தொகை சேரநாட்டில் தொகுக்கப்பட்டதாதல் வேண்டும் எனத் தோன்றுகிறது. பதிற்றுப்பத்து முழுமையும் சேர மன்னர்களைப் பற்றிதாதலின் சேரநாட்டில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இவையிரண்டும் பத்துக்களாக இருப்பதனால் தொகை நூல்களில் சேரநாட்டில் புதுமை புகுத்த முயன்றவர் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆசிரியப்பாவின் சிற்றெல்லை மூன்றடிகளாகும். அடிவரையறையாற் குறைந்த சிறிய பாடல்களில் அரிய கருத்துக்களைச் செறிவாககச் கூறும் பாங்கினை இத்தொகையிற் காணலாம்.

நாடும் அரசும் வாழ்க எனத் தாய் வாழ்த்துகிறாள், தோழியோ தலைவன் மார்வு ‘பழனம்’ அகிப் பலர்க்கும் பொதுவாகாது தலைவிக்கே உரித்தாக வேண்டும் என வாழ்த்துகிறாள்.

“வாழி ஆதன் வாழி அவினி
பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
எனவேட்டோளே யாயே: யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்லின்
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க எனவேட் டேமே”

பாணன் தலைவனுக்காகப் பரிந்து பேசிப் பொழிந்து தள்ளுகிறான். அதைக்கேட்ட தோழி ‘நாண் இலை’ எனக் கடிகின்றாள்.

‘நாணிலை மன்ற பாண நீயே
கோணோர் இலங்குவளை நெகிழ்த்த
கானலந் துறைவற்குச் சொல்லுகுப் போயே,” (136)

இவ்வாறு செறிவுமிக்க சிறிய பாடல்களடங்கிய இந்நூலுக்கு ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரையெழுதியுள்ளார். எருமைப்பத்து, அன்னாய்ப்பத்து, இளவேனிற்பத்து, தெய்யோப்பத்து என இவ்வாறு, இதில் பத்துக்கள் சொல்லாட்சியும் பொர்ளாட்சியும் கருதிப் பெயரிடப்பட்டுள்ளன. இதன் அடிக்குறிப்புகள் பொருத்தமும் விளக்கமும் மிக்கன எனவும் தொன்மையானவை எனவும் அறிஞர் கருதுவர். பத்துக்களாகப் பாடும்போதும் உரித்தன்மையுடன் பாடுவதென்றும் ஒரு பொருள் மேல் பலவடுக்கிப் பாடுவதென்றும் இவ்வாறு பலவுத்திகள் இதிலுள்ளன.

**கலித்தொகை**

கலிப்பாவால் ஆன 150 பாடல்களைக் கொண்ட தொகை நூல் இது, பரிபாடலால் ஆனது பிறிதொன்று இவ்விரு பாக்களும் அகப்பொருளைப் பாடுதற்குச் சிறந்த யாப்பு வடிவங்கள் என்பார் தொல்காப்பியர்.

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்.” (தொ.999)

இதிலிருந்து ஆசிரியத்தினும் சிறப்பாக அகம் பாடுதற்குரியவை இவ்விரு பாக்களுமே என்று அறியப்படும். இவையிரண்டும் அமைப்பாலும் ஒரு சில உறுப்புகளாலும் ஒப்புமையுடைய பாக்களாகும். இரண்டும் இசைத்தன்மை மிக்கன, ஆடலுடன் கூடியன, உரையாடல் கொண்டன, உலக வழக்கைத் தழுவியன, நடப்பியல் சார்ந்தன, புராண மரபு கலந்தன.

‘நூற்றைம்பது கலி’ என்பது உரையாசிரியர் கூற்று இதில் கடவுள் வாழ்த்துட்பட நூற்றைம்பது பாடல்களும் இன்றும் கிடைக்கின்றமை நம் தவப்பயனேயாகும். பாலையில் 35, குறிஞ்சிக்கு 29, மருதத்தில் 35, முல்லைக்கு 17, நெய்தலில் 33, கடவுள் வாழ்த்து 1 ஆக 150.

தன் மகள் காதலனுடன் உடன் போக்கிற் சென்று விட்டதால், தேடிச் சென்ற செவிலி வழியிடையே கண்ட முக்கோற் பகவரிடம் “என் மகளும் மற்றொருத்தியின் மகனும் இவ்வழியாகப் போகக் கண்டீர்களா? என்று கேட்கிறாள். அதற்கு அவர்கள் ‘காணேம் அல்லேம், கண்டனம்’ என்று கூறி, ‘சந்தனம் மலையிற் பிறந்தாலும், முத்து கடலிற் பிறந்தாலும், இசை யாழிற் பிறந்தாலும் பயன்படுத்துபவர்க்கே உரியனவாதல்போல் நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே’ என்று அறிவுரை கூறி வழியனுப்பி வைக்கின்றனர்.

“பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாக்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!”

தலைவியின் நலம் நுகர்ந்த தலைவன் ஒருவன், பிற்பாடு அவளை எட்டியும் பாராதிருந்தான். இதனைக்கண்ட தோழி அவனிடம் சென்று அறிவுரை கூறி இடித்துரைத்தாள். “பால் உண்டவர் பிறகு அப்பாத்திரத்தை நீக்கி விடுதல் போல, நீயும் நன்னுதல் நலனுண்டு துறத்தல் தகாது” என அவள் பேசத் தொடங்கும்போது அறவுரைகளை ஒரு மெய்ப் பொருளுணர்ந்த சான்றோர் போலக் கூறுகிறாள்.

“தாழைப்பூ மலர்ந்தவை போலப் புள் அல்கும் துறைவ கேள்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்

அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

செறிவெனப் படுவது கூறியது மறாஅமை

நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை.

முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்

பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்" (133)

கலித்தொகைப் பாடல்கள் உணர்ச்சி கொந்தளிப்பன, உள்ளத்தைத் தொடுவன எனலாம். சங்க இலக்கியத்திலிருந்து நீதி இலக்கியம் கிளைத்ததென்பதற்கு இது போன்ற பகுதிகள் சான்று.

முதலிலுள்ள கடவுள் வாழ்த்தையும் இறுதியிலுள்ள நெற்தற்கலியையும் பாடி இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனாரே என்று நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். நச்சினார்க்கினியர் உரை இந்நூலின் முழுமைக்கும் கிடைப்பது மற்றுமொரு சிறப்பாகும்.

"பெருங் கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி

மருதன் இளநாகன் மருதம் - அருஞ் சோழன்

நல்லுருத்தி ரன்முல்லை நல்லந்து வன்நெய்தல்

கல்விவலார் கண்ட கலி."

என்ற வெண்பா, ஒவ்வொரு திணையையும் பாடியவர்கள் யார்யார் என்பதை விளக்கும் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாலையையும் கபிலன் குறிஞ்சியையும் மருதன் இளநாகனார் மருதத்தையும் சோழன் நல்லுருத்திரன் முல்லையையும் நல்லந்துவனார் நெய்தலையும் பாடியுள்ளனர். ஒருசிலர் நல்லந்துவனாரே நூல் முழுமையும் பாடியிருக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். சி.வை.தாமோதரம் பிள்ளையவர்கள் முதன்முதலில் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டார். தாழிசைகளில் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வரும் பகுதிகள் உள்ளத்தைக்

கவர்வன. "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்பதற்கு முற்றிலும் பொருத்தமுடைய சிறந்த பாடல்களை இதிற் காணலாம்.

**பரிபாடல்**

பாடலால் பெயர் பெற்ற இத்தொகையில் 70 பாட்டுக்கள் இருந்திருக்க வேண்டும்.

திருமாற்கு இருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு காடுகிழாட்கு ஒன்று – மருவினிய
வையைஇரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்.

என்ற பழைய வெண்பாவாலும் இதை அறியலாம். திருமால் - 8, செவ்வேள்-31, காளி – 1, வையை – 26, மதுரை – 4, ஆக 70 ஆனால் இன்று 22 பாடல்களே கிடைக்கின்றன. அவற்றுள் திருமாலுக்குரியவை – 6, முருகனுக்குரியவை 8, வையை பற்றியன 8. பரிபாடல் என நம்புமாறு உரை நூல்களிற் கண்டவை இரண்டு முழுப்பாடல்கள் உள. அவை திருமால் பற்றியது ஒன்று, வையை பற்றியது ஒன்று. பிறவெல்லாம் துணுக்குகள்.

"விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க்கு அருளும் நீ
திறனிலோர்த் திருத்திய தீதுதீர் கொள்கை
மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ
அங்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களும் தெறுகதிர்க் கனலியும் நீ"

என்று திருமாலை வாழ்த்தக் காண்கிறோம். கடுவன் இளவெயினனார் செவ்வேளிடம்,

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல: நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே!

என வேண்டுதல் காணலாம். பக்குவப்பட்ட நன்மனப்பண்பை இது காட்டுகிறது. வையையில் நீராடும் அழகும் காதற்காட்சிகளும் கண் கொள்ளாத் தகையவாகும். ஆற்றில் மெலியவர் துறையோரமாகக் கரையில் நின்று குளிக்க, வலியவர் புனலுள் மூழ்கித் திளைத்து நீராடி மகிழ்கிறார்களாம். வெள்ளத்தைக் கண்டு அந்தணர் மருள்கிறார்களாம்,

"வலியர் அல்லோர் துறைதுறை அயர
மெலியர் அல்லோர் விருந்து புனல் அயர
சாறும் சோறும் நெய்யும் மலரும்
நாறுபு திகழும் யாறு வரலாறு"

ஒரு துணுக்குப் பாடலில் மதுரை மாநகரைத் தாமரைப் பூவிற்கு ஒப்பிடும் அழகு படித்தும், இன்றைய நகர அமைப்பைப் பார்த்தும் ஒப்பிட்டுச் சுவைத்தற் குரியதாகும்.

"மாயோன் கொப்புழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீர்ஊர்: பூவின்
இதழகத்து அனைய தெருவம்: இதழகத்து
அரும் பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்தமிழ்க்குடிகள்,
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்"

இதற்குப் பரிமேலழகர் உரை வகுத்தார். பரிபாடல் காமங் கண்ணிய நிலைமைத்தாகும் எனவும் 'இது பா என்னும் இயல் நெறியின்றிப் பொதுவாய் நிற்கும்' எனவும் தொல்காப்பியர் கூறுவர். 'இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றைப் பற்றி இப்பாட்டு வருமெனப் பேராசிரியரும், 'தெய்வ வாழ்த்து உட்படக் காமப் பொருள் குறித்து உலகியலே பற்றிவரு' மென நச்சினார்க்கினியரும் கூறுவர். இப்பாடல்களின் அடியில் துறை விளக்கம், பாடலை ஈதிய குறிப்புக்கள் உள்ளன. பாலை யாழ், நோதிறம்,

காந்தாரம் முதலிய பண் வகைகளை இதனாலறிகிறோம். இந்நூல் தேவாரம் போலவே பண் முறையால் தொகுக்கப் பட்டதுடன் உரிய பண்ணுடன் பாடப்பட்டும் வந்துளது எனத் தெரிகிறது. மதுரையைச் சுற்றியுள்ள சமய சமூகப் பழக்கவழக்கச் சிறப்புகளை இந்நூலிற் காணலாம். மதுரை, வையை, திருமருதந் துறை, திருப்பரங்குன்றம், திருமாலிஞ் சோலைமலை போல்வன இதில் பாடுபொருளாகின்றன. வையை பற்றிய பாடல்களை அகமென்றும் ஏனைய கடவுள் வாழ்த்துக்களைப் புறமென்றும் கருதுவர்.

**புறநானூறு**

அகநானூறு போல, இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதாதலின் புறநானூறு ஆயிற்று. புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு எனவும் இது அழைக்கப்படுவதுண்டு. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துடன் 400 பாடல்கள் இதில் காணப்படுகின்றன. தமிழர் வரலாற்றுக் களஞ்சியமாக, பழந்தமிழ் வேந்தர்கள், குறுநில மன்னர்களின் வரலாற்றை அறிவிக்கும் ஆவணமாக நாம் இதைக் கருதலாம். இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுளது. அது முதல் 266 பாடல்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இதன் திணைதுறைப் பகுப்புக்கள் பிற்காலத்தன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை காஞ்சி, பாடாண் முதலிய புறத்திணை பலவற்றுக்கும் எடுத்துக்காட்டான பாடல்கள் இதிலுள. மன்னர் புலவர் உறவு, மக்கள் மன்னர் உறவு, புலவர் புலவர் உறவு யாவும் இந்நூலால் றியத்தக்கன. அரசியங் புலவர் கோவூர்கிழார் பற்றியும் இந்நூல் பலசெய்திகளை அறிவிக்கின்றது. பாரி கபிலர் நட்பு, அதியன் ஔவை நட்பு, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையர் நட்பு என்றினையனவும் உலகம் அறியத்தக்க பற்பல அரும்பொருட் செய்திகளும் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களைப் பற்றிய பல உண்மைகளுமாக இந்நூலில் விரவிக் கிடக்கும் சமுதாயச் செய்திகள் கணக்கற்றனவாகும்.

“அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்

பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனைப் பாடுகிறார்.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"

என்பதனால் கரிகாற் பெருவளத்தான் முன்னோர் கப்பற் பயணம் செய்தமை அறியலாம். சங்க காலத்தில் மன்னர்களுக்கும் அறிவுரை சொல்லி வழிநடத்தும் பாங்கில் புலவர்கள் விளங்கினர். அவர்கள் அம்மன்னர்களின் வீரத்தையும் ஈரத்தையும் பாடிபாடிப் புகழை நிலை நிறுத்தினர். 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்: மெய் கூறுவல்' என்றாற் போல என்று உண்மையையே அவர்கள் பாடினர்

"நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ: மிசையா கொன்றோ"

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என ஔவையார், நாட்டின் சிறப்பு ஆங்கு வாழும் மக்களால் ஏற்படுவதே என வற்புறுத்துகிறார்.

பொருள்மொழிக் காஞ்சித் துறையில் நக்கீரனார் பாடிய புறப்பாடல் ஒன்று ஈகையின் சிறப்பைப் புதிய சிந்தனையோடு வற்புறுத்துகிறது. ஒருவர் எவ்வளவு தேடினாலும் அவருடைய அடிப்படைத் தேவைகளுக் கென்று பயன்படுவன ஓரளவே. பிறவெல்லாம் அவருக்கு எவ்வாறு பயன்படும்? செல்வத்தைப் பகிர்ந்து கொடுத்து இன்பம் பெறலே அதனாற் பெறக்கூடிய பயனாகும்.

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி

வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்

உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓரொக்குமமே

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலனே”

இவ்வாறு நிலைத்த உண்மைகளைக் கூறுவனவும் அன்றைய சமுதாயத்தைக் கண்ணாடி போல் காட்டுவனவுமாகிய பாடல்களைக் கொண்ட புறநானூறு தமிழர்க்குக் கிடைத்த பெருங்கருவூலம் எனில் மிகையாகாது.

**பதிற்றுப்பத்து**

புறநானூறு போல மூவேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் பொதுவாகப் பாடாமல் சேர மன்னர்களைப் பற்றியே புகழ்ந்து பாடிய தொகை நூல் இது. ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் பத்துப்பாடல்கள் வீதம் பத்துச் சேர மன்னர்களைப்பற்றி வெவ்வேறு புலவர்கள் பாடியிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். முதற்பத்தும் இறுதிப் பத்தும் இன்று கிடைக்கப்பெற்றில. அவை கறையானுக்கு இரையாகி விட்டன பொதுவாகக் கறையான் மேலிருந்து கீழ் நோக்கியும் கீழிருந்து மேல்நோக்கியும் அரித்துவரும் அதன் மேலிருந்த முதற்பத்தையும் இறுதியிலிருந்த பத்தாம் பத்தையும் தின்றுவிட்ட கறையான்களும் தமிழ்ச்சுவை அறிந்தன போலும் இதற்கும் பழைய உரை ஒன்று உண்டு பாடல்களின் முடிவில் துறை, வண்ணம், தூக்கு (இசை) பாடலின் பெயர் ஆகியவை குறிக்கப்பட்டள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் அதில்வரும் சிறப்புடைய தொடரொன்றால் பெயர் இடுவது குறிப்பிடத்தக்கதாகும். நாலாம்பத்து அந்தாதித் தொடையால் ஆகியுளதும் ஒரு தனிச்சிறப்பாகும். ஐங்குறுநூற்றில் பதினெட்டாம் பத்து இதுபோல அந்தாதித் தொடையிலானது. தொல்காப்பியர் குறிப்பிடாத தொடை நலமாகும் இது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் ஒன்றுண்டு. பத்தின் வரலாற்றைக் கூறுவது பதிகமாயிற்று. அது பாடினோர் பெயர், பத்துச் செய்யுட்களின் பெயர், பாடிய புலவர் பெற்ற பரிசில், அரசர் பெயர், அவர் ஆண்டகால அளவு போல்வனவற்றைத் தெரிவிக்கிறது. பிற்காலத்தில் கல்வெட்டுக்களில் இடம் பெறும் மெய்க்கீர்த்திகளின் போக்கில் இது அமைந்துள்ளது.பத்துக்களும் பாடிய புலவர்களும் பாடப்பெற்ற வேந்தர்களும் பற்றிய விவரம் வருமாறு

இரண்டாம்பத்து – குமட்டூர்கண்ணனார்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

மூன்றாம்பத்து – பாலைக் கௌதமனார்

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

நான்காம்பத்து – காப்பியாற்றுக் காப்பியனார்

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

ஐந்தாம்பத்து – பரணர்

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்

ஆறாம்பத்து – காக்கை பாடினியார்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

ஏழாம்பத்து – கபிலர்

செல்வக்கடுங்கோ வாழியாதன்

எட்டாம்பத்து – அரிசில்கிழார்

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

ஒன்பதாம்பத்து – பெருங்குன்றூர் கிழார்

இளஞ் சேரலிரும்பொறை

மன்னர்களைத் தனித்தனித் பாடலாகப் பாடி மகிழ்விக்காமல், பத்துப் பத்தாகப் பாடும் மரபு தோன்றிய போதே இலக்கிய வகையாக்கம் கிளைக்கத் தொடங்கியது. பத்துப் பாடலுக்கும் செய்தி வேண்டுமே என்ற நிலைவந்துற்ற போது வருணனைகள் மிகுதியாகின.

சேரமன்னன் கடற்பகைவர்களை வென்று, அவர்களை அழித்தவன் என்பதால் அவனுக்கு முருகன் உவமையாகிறான்.

"வரை மருள் புணரி வான் பிசிர் உடைய

வளி பாய்ந்து அட்ட துளங்கிருங் கமஞ்சூல்

நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி

அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்

சூருடை முழுமுதல் தடிந்த பேரிசை

கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு

செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப

அருநிறம் திறந்த புண்ணுமிழ் குருதியின்

மணிநிற இருங்கழி நீர் நிறம் பெயர்ந்து

மனாலக் கலவை போல, அரண்கொன்று”

என்பதனால் இமய வரம்பனின் வீரத்தைக் குமட்டுடூர்க் கண்ணனார் மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றமை போதரும் இதிலுள்ள ‘புண்ணுமிழ் குருதி’ என்ற தொடரின் அருமை கருதி அதனையே பாட்டின் பெயராகக் குறிப்பிட்டுள்ளனர். நூலுக்குப் பெயரிடுதல் போல், நாம் இன்று பாட்டுக்குத் தலைப்பிடுதல் போல் இப்பாட்டுக்கெல்லாம் பெயர் சூட்டப்பட்டள்ளமை அன்றைய தமிழறிஞர்களின் திறனாய்வுத் திறத்தை விளக்குகிறது.

இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் வாழ்த்தும்பொழுது

“நின்நாள் திங்கள் அனைய ஆக! திங்கள்

யாண்டோர் அனைய ஆக! யாண்டே

ஊழி அனைய ஆக! ஊழி

வெள்ள வரம்பின ஆக!

எனக் கற்பனை நயம்படக் கூறுவது புதுமையானது. இங்ஙனம் புறநானூற்றுடன் பதிற்றுப் பத்தும் கிடைத்திருப்பது புறப்பாட்டுக்களை மதிப்பிடப் பெரிதும் உதவுவதாகும். ஐங்குறுநூற்றிற் போலவே பதிற்றுப்பத்திற்கும் வரையப்பட்டுள்ள அடிக்குறிப்புத் தொன்மையுடையதாகத் தோன்றுகிறது.

இதில் சேர நாட்டு வருணனை மிகுதி சேரமன்னர்களின் ஆற்றலையும், வீரத்தையும் இன்பச் சிறப்பையும் புகழ்ந்து வாழ்த்துவதையே நோக்கமாகக் கொண்டெழுந்தவை இவை இவை வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவையே. ஆனாலும் இவை அனைத்துப் பாடல்களும் ஒரு நோக்கும் போக்கும்

உடையவையாகக் காணப்படுகின்றன. மரபு ஆட்சிமிக்க காலத்துப் பாடியவை அவ்வாறு தான் அமையும் என்பர்.

## பத்துப்பாட்டு

### திருமுருகாற்றுப்படை

நக்கீரர் பாடிய ஆசிரியப்பாவானமைந்த 317 அடிகளைக் கொண்ட இந் நெடும்பாட்டு முருகனின் ஆற்றலையும் அருளையும் சிறப்பித்துப் பேசுகிறது. இது ஏனைய ஆற்றுப்படைகளிலிருந்து சிற்சில கூறுகளில் வேறுபட்டுள்ளது. அவற்றுள் முதன்மையானது. பிற ஆற்றுப்படைகள் எல்லாம் ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயரால் அமைந்திருக்க, இது மட்டும் பாட்டுடைத்தலைவர் பெயரால் அமைந்துள்ளது. இதனுள் முறையே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை என்ற முருகனின் ஆறுபடை வீடுகளும், அங்கு முருகன் செயல்களும் அவனது பெருமைகளும் விரித்துக் கூறப்படுகின்றன.

இது சைவத்திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. சைவர்கள் நாள்தோறும் ஓதியுணரும் நூல் இது. இதன் இறுதியில் சேர்க்கப்பட்டள்ள வெண்பாக்களுள் ஒன்று இவ்வுண்மையை உணர்த்தும்.

“நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைந்த எல்லாம் தரும்”

முருகாற்றுப்படை என்ற தொடருக்கு, நச்சினார்க்கினியர் “வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது” என விளக்கம் எழுதியுள்ளார், சங்ககாலத்தில் ஒரு சமுதாய வழக்கு உண்டு. வெறியாட்டெடுப்போர் “முருகாற்றுப்படுத்தல் உண்டு. முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்” (அகம் 22) என அது கூறப்படும். முருகனைத் துன்பப்படுவோரிடத்தே ஆற்றுப்படுத்தி அவரைக் காக்குமாறு வேண்டுதல் அதன் பொருளாகும். அதன்

அடிப்படையில் முகிழ்த்ததே இத் திருமுருகாற்றுப்படை என்ற நெடும்பாட்டு. பெயரளவில்தான் இவ்வொற்றுமை. இந்நூலில் இரவலன்தான் முருகனிடம் ஆற்றுப்படுத்தப்படுகிறான்.

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி"

என்பது, மயில்மீது வரும் முருகனைக் காலைப் பொழுதில் வைத்துக் காட்டுகிறது.

முதற்பகுதியாகிய திருப்பரங்குன்றம் பகுதியில் முருகனின் தீருவுருவச் சிறப்பும் சூராமகளிர் ஆடலும் சூரசம்மாரமும் முருகனிடம் செல்வார் பெறும் பரிசிலும் பரங்குன்றச்சிறப்பும் கூறப்படுகின்றன. திருச்சீரலை வாய்ப்பகுதியில் முருகவேளின் யானையூர்தி, அதில் வலம் வரும் முருகனின் ஆறுமுகம் பன்னிருகைகளின் செயல்கள், திருச்செந்தூர்ச் சிறப்பு ஆகியன பேசப்படுகின்றன. மூன்றாவதான திருவாவினன்குடிப் பகுதியில் முனிவர்களும் தேவர்களும் முருகனைப் பரவுதல் கூறப்படுகிறது. அடுத்த திருவேரகப் பகுதி அந்தணர் முருகனை வழிபடுமாற்றினைச் சுட்டுகிறது. ஐந்தாவதாகிய குன்று தோறாடலில் குன்றக்குரவை இடம் பெறுகிறது. இறுதியான பழமுதிர்சோலைப் பகுதியில் வெறியாட்டிழைத்தல், முருகனை ஏத்தி இசைத்தல், முருகன் அருள்செய்து பரிசில் நல்குதல், அருவியின் இயல்பு போல்வன விவரிக்கப்படுகின்றன.

**பொருநாராற்றுப்படை**

சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடிய இந்நெடும்பாட்டு 248 அடிகளைக் கொண்டது நேரிசையாசிரியமாகிய இதில் வஞ்சியடிகளும் விரவி வந்துள்ளன. பரிசில் பெற விழைந்த பொருநன் ஒருவனைப் பரிசில் பெற்றுவந்த பொருநன் ஆற்றுப்படுத்துவதாக இதன் பொருள் அமைந்துள்ளது. பொருநர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலரென்பர். இது போர்க்களம் பாடும் பொருநரால் பாடப்பட்டதாகும். ஒருவரைப் போல் வேடமிட்டுப் பாடுநரைப் பொருநர் என்பர். இப்பொருநர் கையில் தடாரிப்பறை வைத்திருந்தனர்.

ஓர் ஊரில் விழா முடிந்ததும் பொருநன் வேறோர் ஊருக்குப் புறப்படுகிறான். அவன் கையில் வைத்திருந்த பாலையாழின் ஒன்பது உறுப்புக்கள் சித்திரம் போல் தீட்டிக் காட்டப்படுகின்றன. மணங்கமழ் மாதரை மண்ணி (ஒப்பனை செய்தால்) அன்ன யாழ் என அதன் அழகு கூறப்பட்டள்ளது. அதன் சையைக் கேட்டால் ஆறலை கள்வர்களும், தங்கள் படைக்கலன்களைக் கீழே போட்டு விட்டு மெய்ம் மறந்து நிற்பார்களாம்.

“ஆறலை கள்வர் படைவிட அருளின்

மாறுதலை பெயர்க்கம் மருவின் பாலை”

பொருநனுடன் வரும் பாடியினியின் அழகு தலைமுடி முதுல் பாதம் வரை, பத்தொன்பது உறுப்புக்கள் கேசாதி பாதமாக வருணிக்கப்படுகின்றன. அரசனின் விரும்தோம்பும் பண்பு இந்நூலில் மிகவும் சிறப்பாகக் கூறப்படுகிறது. கரிகால் வளவனின் இளமை, ‘தாய்வயிற்றிலிருந்து தாயம் எய்தியமை’ வெண்ணிப் போர் வெற்றி என்ற வரலாற்றுச் செய்திகள் வரிசையாகக் கூறப்படுகினறன. அவனுடைய வீரச் சிறப்பும் கொடைச்சிறப்பும் மட்டுமின்றி நாட்டுச் சிறப்பும் காவிரியாற்றின் சிறப்பும் நன்கு புனையப்பட்டுள்ளன.

“முதியோர்

அவைபுகு பொழுதில் தம்பகை முரண் செலவும்”

என நரை முடித்து முறை செய்த வரலாறு கூறப்படுகிறது. சோழமன்னனின் நானிலவளம் திணை மயக்கமாக இப்பாடலில் கூறப்பபடும் அழகு கருதத்தக்கது.

**சிறுபாணாற்றுப்படை**

இவ்வாசிரிய நெடும்பாட்டு 269 அடிகளைக் கொண்டது. ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனை இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. நல்லியக்கோடன் குறுநில மன்னனேயாயினும் அவன் மூவேந்தர்களுக்கும் கடையெழு வள்ளல்களுக்கும் நிகரானவன் என்பது இதில் மிக நயமாகக் கூறப்பட்டள்ளது. சிறுபாணர், பெரும்பாணர், மண்டைப்பாணர் எனப் பாணர் பல வகைப்படுவர். அவர்களுள் ‘சீறியாழ் இடவயின் தழுவிய’ (35) இவர் - சீறியாழைப் பயன்படுத்தும்

சிறுபாணர் ஆவார். அதனாலும், ஏனைய பெரும்பாணாற்றுப் படையை விட இது அடி அளவாற் சிறியதாகையாலும் இதற்குச் சிறுபாணாற்றுப்படை எனப் பெயர் ஏற்பட்டது. பெரும் பாணாற்றுப் படையில் 'பேரியாழ் முறையுளிக் கழிப்பி (462) என வருவதால் அவர்கள் பேரியாழைப் பயன்படுத்திய பெரும்பாணர் ஆவர். எனவே பாணராலும் பாட்டு அடி அளவாலும் அப்பாடல் பெரும்பாணாற்றுப்படை எனப்பட்டது.

இப்பாடலில் வரும் விறலியர் பற்றிய கேசாதிபாத வருணனை சங்கிலித் தொடர் போன்ற தொடைநயமுடையதாகம். விறலியரின் பத்து உறுப்புகள் புனையப்படும் அழகுக்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

"ஐதுவீழ் இகுபெயல் அழகு கொண்டருளி

நெய் கனிந்து இரளிய கதுப்பின்: கதுப்பென

மணிவயிற் கலாபம் பரப்பிப் பலருடன்

மயில் மயிற் குளிக்கும் சாயல்: சாஅய்

உயங்கு நாய் நாவின் நல்லெழில் அசைஇ

வயங்கிழை உலறிய அடியின் அடிதொடர்ந்து" (13-18)

மழைமேகம் போல் எண்ணெய் தடவிக் கினந்து இருண்ட கூந்தல்: கூந்தலைப் போன்று கலாபம் விரிக்கும் மயிலினிடத்தே சென்று, ஒளிக்கும் சாயல், ஓடியிளைத்த நாயினது நாப்போன்ற அழகு புலர்ந்து வாடிய அடி, அடியுடன் நிலந்தோயும் யானையது துதிக்கை போன்ற தொடை.

இதில் மூவேந்தர் பெருமையும் அன்னாரின் தலைநகரச் சிறப்பும் பேசப்படுகின்றன.

பேகன், பாரி, காரி, ஆய், அதியன், நள்ளி, ஓரி என 'எழுவர் பூண்ட ஈகைச் செந்துகம்' 113) பற்றி இப்பாடலிற் பேசப்படுவதே 'கடையெழு வள்ளல்கள்' என்ற சிறப்புக் கூற்றுக்கு இடமளித்திருக்க வேண்டும்.

இயற்கை வருணனை எடுத்தோதப்படும் அழகும்இதில் தனிச்சிறப்பானது.

"அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்

தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்

கடுஞ் சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்

நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும் (146-169)

பைந்தலை அவரை பவழம் கோப்பவும்

கருநனைக் காயா கணமயில் அவிழவும்

கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்

செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்” (164-169)

தாழை, செருந்தி, முண்டகம், (கடல்முள்ளி), புன்னை, அவரை, காயா, முசுண்டை, காந்தள் ஆகியன அழகழகாகப் பூத்தன என்று கூற வேண்டும். ஆனால் நத்தத்தனார் தாழை அன்னத்தைப் பூக்கிறது என்கின்றார். தாழம்பூ அன்னப் பறவைபோல் உருக்காட்சி நல்குவது இவ்வாறு உரைக்கப்படுகிறது. அதுபோலவே செருந்தி போன்னை மருட்டுகிறது. முண்டகம், கருமணியைப் பெறுகிறது. புன்னை கொடியில் கோக்கிறது. காயா மயிலை அவிழ்த்து விடுகிறது. முகண்டை கொட்டமாக மாறுகிறது. காந்தள் கைவிரலாகவே பூக்கிறது.

**பெரும்பாணாற்றுப்படை**

இஃது 500 அடிகளைக் கொண்ட ஆசிரிய நெடும்பாட்டு. இதனைத் தொண்டைமான் இளந்திரையன் மீது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியுள்ளார். உருத்திரன் மகன் கண்ணனார் ஐந்து நிலமக்களின் வாழ்வையும் இதில் நன்கு புனைந்துள்ளார். ‘பாணாறு’ என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு.

உப்பு வணிகர் நெடிய வழிகளில் செல்லுதல், வணிகச் சாத்துக்கள் பொதி சுமக்கும் கழுதைக் கூட்டத்துடன் உல்குடைப் பெருவழிகளில் போய் வருதலும் போன்ற பல செய்திகளை நாம் இப்பாடலிற் காணலாம். தொல்காப்பியர் தனி நிலம் இல்லை எனத் தெளிவாகக் கூறிய பாலை நிலத்தில் எயினர்கள் வாழும் இயல்பை இவ்வாசிரியர் விரிவாகக் கூறுகிறார். ஈத்திலையும் ஊகம் புல்லும் வேய்ந்த எயினர் குடியிருப்புகளை ‘ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை (88) என்றும் ‘ஊகம் வேய்ந்த எய்ப்புறக் குரம்பை (88) என்றும் ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின் (122) என்றும் கூறுகிறார். உழவர் தம் குடியிருப்புக்களைக் ‘கருவை வேய்ந்த கவின்குடிச்

சீறூர்' (191) எனவும் 'புதுவை வேய்ந்த கவிக்குடில் முன்றில்' (225) எனவும் வைக்கோல் வேய்ந்த தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார். இங்ஙனம் ஆங்காங்கு நில இயல்பிற்கேற்பக் கிடைக்கும் பொருள்களை வேய்ந்திருப்பதாகக் குடிசைகளைக் கூறும் அழகு நுட்பமான சித்திரமாகும். அந்தணர் வீடு 'செழுங்கன்று யாத்த சிறுதாட்பந்தர், பைஞ்சேறு மெழுகிய படிவ நல்நகர்'(297-98) என்று கூறப்படுகிறது. பட்டினக் கரையிலுள்ள செல்வவள வீடுகள் 'முட்டில் பைங்கொடி நுடங்கும் பலர் புகுவாயில்' (338) எனவும் 'விண்தோய் மாடத்து விளங்கு சுவர் உடுத்த நல்நகர்' (369) எனவும் புகழப்படுகின்றன. குடிசைகளையும் மாடமாளிகைகளையும் காட்டும் ஓவியமாக விளங்குகிறது பெரும்பாணாற்றுப்படை.

மோர்விற்கும் அய்ச்சி, நெய்க்குக் கிடைக்கும் விலையைப் பொன்னாகப் பெறவும் விரும்ப மாட்டாளாம். எருமைக் கன்றுகளை வாங்கவே விரும்புவாளாம்.

'நாள்மோர் மாறும் நல்மா மேனி
சிறுகுழை துயல்வரும் காதின் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்" (160-165)

அந்தணர் வீட்டில் கிடைக்கும் உணவைப்பற்றிப் பெரும்பாண் இவ்வாறு பேசுகிறது, கருடஞ் சம்பா அரிசிச் சோறு, நறுமணமுள்ள மோர், மர்துளங்காயப் பொறியல் (மிளகு, கறிவேப்பிலை சேர்த்தது) மாவடு ஊறுகாய் யாவும் அங்கே கிடைக்குமாம் (அடி: 297-301)

இங்ஙனம் மன்னனுக்குச் சிறிதளவு இடமும் மக்களுக்குப் பேரிடமும் நல்கும் பெரும்பாணாற்றுப் படையைச் 'சமுதாயப் பாட்டு' எனலாம்.

**மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை**

பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் 583 அடிகளாலாகிய, ஆசிரிய

நெடும் பாட்டாற் பாடியது. ஆற்றுப்டைகளுள் இதுவே பெரிய பாட்டு, 'கண்ணுளர் ஒக்கல் தலைவனாகிய கூத்தரைச் சுற்றத்தொடு திரும்பும் கூத்தனொருவன் ஆற்றுப்படுத்தலால் கூத்தராற்றுப் படையான இந்நூல், மலைபடுகடாம் எனக் காரணக் குறியும் பெற்றது. மதங் கொண்ட யானை முழங்குவதுபோல, மலையில்கேட்கும் ஓசைகளையெல்லாம் 56 அடிகளில் தொகுத்துக் கூறி 'மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப' (348) என வருவதால் இப்பாட்டு அப்பெயர்க்கு உரித்தாயிற்று.

கூத்தர் பலவகை வாத்தியங்களுடன் செல்லுதல், பேரியாழின் வருணனை, நன்னனின் பண்புநலன் ஆகியன முதலிற் கூறப்படுகின்றன. கூத்தன் தான் செல்லும் மலைவழி பற்றியும் நன்னன் பற்றியும் முதலில் தொகுத்துச் சொல்லி விட்டுப் பிறகு விரித்துப் பேசுவது ஒரு புதுமையான செய்தியாகும். வழியின் வளம், விருந்து, வழியின் அருமைகள், காரியுண்டிக் கடவுளாகிய சிவனைத் தொழுது செல்லுதல், வழிபற்றிய எச்சரிக்கைகள், மலையில் தோன்றும் பல்வெறு ஓசைகள், அரிய வழியிற் செல்லும் முறை, புதியவர்களுக்காகப் புல்லை முடிந்து கொண்டே போகும் முறை, மலைவாழ் மக்கள் உபசரித்தல், நன்னனது மூதூரை அடைதல், அவனது கொடைச் சிறப்பு ஆகியன நிரலே இப்பாட்டிற் கூறப்படுகின்றன.

**முல்லைப்பாட்டு**

பத்துப்பாட்டுக்களிலும் மிகச்சிறிய பாட்டாகிய முல்லைப்பாட்டும் மிகப்பெரிய பாட்டாகிய மதுரைக் காஞ்சியும் அடுத்தடுத்து இடையில் வைக்கப்பட்டுள்ளன. முன்னது 103 அடிகளாலாகிய ஆசிரியப்பாட்டு, பின்னது 782 அடிகளாலாகி, இடையிடையே வஞ்சியபடி விரவிய ஆசிரியப்பாட்டு,

முல்லைப்பாட்டு அடியளவில் சிறயதே தவிர, சுவையில் மிக நுட்பமானது முதல் 23 அடிகளில் தலைவியின் பூப்போன்ற உண்கண் புலம்பு முத்துறைக்கும் பிரிவுத் துயரைக் காண்கிறோம். பாசறையில் தலைவனிருப்பை அடுத்த 55 அடிகள் சித்திரம் தீட்டுகின்றன.

இம் மன்னவன் ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து இருக்கும் காட்சி அவனுடைய கடமையுணர்ச்சியைச் சுட்டுகிறது.

அடுத்துப் பத்து அடிகளில் தலைவியின் அவலநிலை சுட்டப்படுகிறது.

‘நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு

நீடுநினைந்தாற்றியும் ஓடுவன திருத்தியும்” (81-82)

கிடக்கும் தலைவியின் ‘அஞ்செவி நிறைய ஆலின’ எனக் கூறி எனை ஆலின என்ற கேள்வியை நம் நெஞ்சில் எழுப்புகிறார் ஆசிரியர். மீண்டும் பாட்டு முடியும் வரை 23 அடிகளில் தலைவன் நிலை கூறப்பட்டுக் கார் காலத்திற்குப் பிறகு கூதிர் காலத்தில்அவன் திரும்புவதும் அங்ஙனம் அவன் திரும்பும் போது அவனது தேரில் பூட்டிய குதிரைகளின் கழுத்து மணிகளே அவ்வாறொலித்தன என்பதும் உணர்த்தப் படுகின்றன.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது இப்பாட்டு ‘நெஞ்சாற்றுப்படுத்த’ என்ற தொடரை வைத்துப் போலும், இதனை ‘நெஞ்சாற்றுப் படை என்பாரும் உளர்.

**மதுரைக்காஞ்சி**

புறத்தில் நிலையாமை உணர்த்தும் காஞ்சித் திணை சார்ந்த இப்பாடல் 782 அடிகளைக் கொண்ட, வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாவாகும். அறிஞர் மு.வ. அவர்கள் தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் “இவ்வாறு 354 அடிகளில் மதுரை நகரம் சுற்றிக்காட்டப்படுகிறது. ஒருவர் ஒருநாள் காலையில் தொடங்கி மறுநாள் விடியல் வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்டவற்றை முறைப்படக் கூறுவது போல் வருணனை அமைந்துள்ளது” என்கிறார்.

பாண்டியர் பெருமை, அவர்களது நாட்டுவளம், போர் வெற்றி முதலியன முதலிற் கூறப்படுகின்றன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார், இங்ஙனம் பாராட்டிப்பாடி, அவனுக்கு அறிவுரை கூறத் தொடங்குகிறார். உலகத்தைச் சிறப்புற ஆண்டு, மறைந்த மன்னர்கள் பலர் என்கிறார். “முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பலாவர்” என்னும் பழமொழிப்படி, நிலையாமையை அவனுக்கு உணர்த்துகிறார்.

“படுகண் முரசம் காலை இயம்ப

வெடிபடக் கடந்து வேண்டுபுலத்து இறுத்த

பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொரு திரங்கும் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே" (232-237)

மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலவளமும் மக்கள் வாழ்வும் இதில் விரித்துரைக்கப்படுகின்றன. பிற்பாடு மதுரை மாநகரத்தின் அமைப்பையும் சிறப்பையும் கூறத்தொடங்குகிறார். நாட்டின் நடுவண் விளங்கும் மதுரைமாநகரில் பெரும்பாணர் வாழும் இருக்கை பற்றியும் கோட்டை கொத்தளம் பற்றியும் திருவிழாக்கள் பற்றியும் பல வகைப் பள்ளிகள் பற்றியும் நாற்பெருங்கழு, அந்தி வாணிகம், பரத்தையர் வாழ்க்கை, இரவுக்கால நிலைகள், விடியற்கால நிகழ்ச்சிகள் ஆகியன பற்றியும் கூறப்படுகின்றன. மன்னனது கொடையும் அவனைப் புலவர் வாழ்த்துவதும் முடிவாக இடம் பெறுகின்றன.

"பொற்பு விளங்கும் புகழ் அவை நிற்புகழ்ந்து ஏத்த
இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்தி
மணங் கமழ் தேறல் மடுப்ப, நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூழியையே" (778-782)

மதுரை மாநகரத்தைப் பாட்டின் நடுவண் பகுதியில் வைத்து நீளப்புனையும் இப்பாடலை 'மாநகர்ப்பாட்டு' என்றே சுட்டலாம். பெரும்பாணாற்றுப்படை நாட்டினை மட்டும் புனைகிறது. இப்பாட்டோ, தலைநகரை மிகச் சிறப்பாகப் புனைகிறது. மேலும் நிலையாமையை உணர்த்துவதில் ஒரு வேறுபாடு காண்க. தேறல் உண்டு மகிழ்ந்து வாழ்க என்பதால், துறவையோ காட்டிற் சென்று செய்யும் கடுந்தவத்தையோ வற்புறுத்தாத இப்பாட்டு வைதிக, சமண பௌத்த மதக் கருத்துகளின் தாக்கத்திற்கு உட்படாதது எனலாம்.

**நெடுநல்வாடை**

மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார் முற்கூறிய பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய பாடல்.

இது 188 அடிகள் கொண்ட, அகவற்பாவால் ஆனது. அகத்திணைச் செய்திகளே இதில் இடம்பெறுவன. கூதிர்கால வருணனை, முழுவலிமாக்களாகிய மிலேச்சர் (யவனர்) நகரைச் சுற்றிக் காவல் செய்தல், மாலைக்காலத்தில் மகளிர் வழிபாடு போல்வன இப்பாட்டின் தொடக்கமாகும். இரண்மனை வாயில், முற்றம், அந்தப்புரம், தந்தக்கட்டில் போல்வன சிற்பநுட்பத்துடன் விளக்கப்படுதலால், இதனைச் சிற்பப்பாட்டு என்று கூறலாம். புனையா ஓவியம் அனைய தேமவியின் அவல நிலையும் வேந்தனின் பாசறைத் தொழிலும் குறிப்பிடத்தக்கன.

இப்பாடலில் 'வேம்புதலை யாத்த நோன்காழ் எ.்.கம் என அடையான மாலை கூறப்படுதலால் இது அகப்பாட்டு மரபில் வழுவிப் புறப்பாட்டு ஆயிற்று என்பர். ஆயினும் இக்கால ஆய்வாளர் இதனை அகப்பாட்டு என்றே ஏற்கின்றனர்.

இங்ஙனம் முல்லைத் திணை சார்ந்த இந்நெடும்பாட்டு மிகத் திறம்படப் புனையப்பட்டுள்ளது.

**குறிஞ்சிப்பாட்டு**

ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய இவ்வாசிரிய நெடும்பாட்டு 261 அடிகள் கொண்டது. இங்கு தமிழ் அறிவித்தல் என்பது தமிழர்க்கேயுரிய அகத்திணைப் பண்பாட்டை உணர்த்துவதாகிறது. முழுக்க முழுக்கக் குறிஞ்சிக்குரிய முதல் கரு உரிப் பொருள்களைக் கொண்ட இப்பாட்டு 'அறத்தொடுநிலை'த் துறை சார்ந்தது. இதன் கண் தோழிசெவிலியிடம் அறத்தொடுநிற்கும் திறம் வியக்கத்தக்கது. சுனையில் நீராடல் 99 மலர்களைக் குவித்து மகிழ்தல், தலைவனது அழகைப் புனைதல், தலைவி தலைவனின் காதலுறவு, மாலைக்கால வருணனை, தலைவன் வரும் வழியின் அருமை போல்வன காப்பியத் தன்மையுடன் இதில் விரிவாகப் புனையப்படுவதால் இதனைக் காப்பியப் பாட்டு எனலாம். தோழி சாதுரியமாகப் பேசுந்திறனை வைத்து நோக்கினால் இ.்.து ஓர் உளவியல் பாட்டுமாகும். நச்சினார்க்கினியர் இதனைப் பெருங்குறிஞ்சி என்று சிறப்பிப்பார்.

இதன்கண் 99 மலர்கள் தொகுத்துக் கூறப்படும் இடம் தனிச்சிறப்புடையதாகும்

"ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்

தண்கயக் கவளை, குறிஞ்சி, வெட்சி

செங்கொடுவேரி, தேமா, மணிச்சிகை (62-64)

குருகிலை, மருதம், விரிபூங் கோங்கம்

போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி

செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்" (73-75)

என்றிவ்வாறு மும்மூன்று பூக்களாக மாறி மாறிக் கோக்குமமழகு இப்பாமாலையாகிய பூமாலையைப் பொருள் மணங்கமழச் செய்கிறது.

**பட்டினப்பாலை**

இடையிடையே ஆசிரியவடிகளைப் பெற்ற 301 அடிகளைக் கொண்ட இவ் வஞ்சி நெடும்பாட்டு காவிரிப் பூம்பட்டினத்தை நெடிதாகப் புனைகிறது. நாம் மதுரைக் காஞ்சியில் மதுரையைக் காண்பதுபோல் இதில் காவிரிப்பூம்பட்டினத்தைக் காண்கிறோம். ஏற்றுமதி வணிகம் பற்றியும் மக்கள் பழக்க வழக்கம் பற்றியும், நகர்ப்புற நாகரிகம் பற்றியும் இப்பாட்டில் மிகுந்த குறிப்புக்கள் உள. வாணிகப் பெருமை பேசுமிடத்து,

வான் முகந்தநீர் மலைப்பொழியவும்

மலைப் பொழிந்தநீர் கடல்பரப்பவும்

மாரிபெய்யும் பருவம்போல

நீரினின்று நிலத்தேற்றவும்

நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்

அளந்தறியாப் பலபண்டம்

வரம்பறியாமை வந்தீண்டி

அருங்கடிப் பெருங்காப்பின்

வலியுடை வல்லணங்கினோன்

புலிபொறித்துப் புறம் போக்கி .......... (126-135)

பெரும்பாணாற்றுப் படையில் உள்நாட்டு வாணிகர் சிறப்பைக் காணும் நாம் இதில் உள்நாட்டு. வெளிநாட்டு வாணிக வளத்தைக் காண்கிறோம்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்

தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்

கங்கை வாரியும் காவிரிப் பயனும்

ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்

அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி

வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்" (185-193)

ஏறத்தாழ ஏழே அடிகளில் பாலைத்திணைக்குரிய 'செலவழுங்குதல்' துறை இப்பாடலில் இடம்பெற ஏனையனவெல்லாம் காவிரிப்பூம்பட்டினப் பெருமையாகவும் திருமாவளவன் சிறப்பாகவும் உள்ளன. சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது இப்பாட்டு. இப்பாட்டால் உணரலாகும் தமிழர் வாழ்வுமுறை, பழக்கவழக்கம் பலவாகும்.

"தமவும் பிறவும் ஒப்ப நாடி

கொள்வதூஉம் மிகைகொளாது

கொடுப்பதூஉம் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும்" (208-211)

வாணிக நாகரிகம் போற்றத்தக்கதன்றே? கடியலூரார் இப்பாட்டுக்காச் சோழனிடம் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு பெற்றார் என்று பிற்கால நூல்கள் போற்றுகின்றன.

## 2. சங்கம் மருவிய காலம்

சங்ககாலத்து இறுதியிலிருந்து பல்லவர் காலம் தொடங்கும் வரை தமிழகத்தை ஆட்சி செய்தவர்களிடம் தமிழ்ப்பற்று இல்லாததால் பெருமளவில் தமிழ் இலக்கியம் தோன்றாதது மட்டுமல்ல தமிழகம் எங்ஙனம் இருந்தது என்பது பற்றியும் அறிய இயலாது நிற்கின்றன. சங்காலத்தின் இறுதியில் மக்கள் ஆடம்பரத்தில் ஈடுபட்டதால் ஒழுக்கக்கேடுகள் மலிந்தன. இக்குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு

புறச்சமயங்கள் தங்கள் மதக் கொள்கையைப் பரப்பும் விதமாக அறக்கருத்துக்களைக் கருவாகக் கொண்ட நூல்களை இயற்றினர். பரத்தமை, கல்குடித்தல் ஊன் உண்ணுதல், போர் செய்தல் போன்றவை சங்ககாலத்தில்பெற்றிருந்த சிறப்பை இழந்து அமைதி, கொல்லாமை, கள் உண்ணாமை பிறனில் விழையாமை போன்றவை போற்றப்பட்டன. சங்கமருவியகாலத்தில் எழுந்த இலக்கியங்களைத் தொகுத்தவர் யார் எனத் தெரியவில்லை இந்நூல்கள் வெண்பாவால் அமைந்து அறம், பொருள், இன்பம் எனும் உறுதிப்பொருளைக் கூறுகின்றன.

அடிநிமிர்பில்லாச்செய்யுட் தொகுதி

அறம் பொருள் இன்பம் அடுக்கியவ்வகைத்

திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும். – என்று பன்னிருபாட்டியல் இவ்விலக்கியங்களுக்கு இலக்கணம் இயம்புகிறது. மேலும் இக்காலத்திலே சிலம்புவும் மணிமேகலையும் எழுந்தது.

சங்ககால இலக்கியமாகத்திகழப்படும் பாட்டும் தொகையுமான 18 நூற்களைப் போன்றே சங்க மருவியகாலத்திலும் 18 நூற்கள் தோன்றின. அவற்றில் பெரும்பாலான நூல்கள் அறநூல்களாகத் திகழ்கின்றன. எஞ்சியவையே அகப்புற இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்

பால் கடுங்கோவை பழமொழி – மாமூலம்

இன்னிலை காஞ்சியுடன் ஏலாதி என்பவே

கைந்நிலையாம் கீழ்க்கணக்கு – எனும் பழம்பாடல் பதினென் நூல்களை வரிசைப் படுத்துகின்றன. அவை முறையே 1. நாலடியார் 2. நான்மணிக்கடிகை 3. இனியவை நாற்பது 4. இன்னா நாற்பது 5. கார்நாற்பது 6. களவழிநாற்பது. 7. ஐந்திணை ஐம்பது 8. திணைமொழி ஐம்பது 9. ஐந்தினை எழுபது 10. திணைமாலை நூற்றைம்பது. 11. திருக்குறள் 12. திரிகடுகம், 13.ஆசாரக்கோவை, 14. பழமொழி 15. சிறுபஞ்சமூலம் 16. முதுமொழிக்காஞ்சி, 17. ஏலாதி, 18. கைந்நிலை.

## அறநூல்கள்

இலக்கியலகில் தமிழனுக்குத் தலையாய ஓர் இடத்தைப் பெற்றுத் தருவதில் திருக்குறள் முதலிடத்தில் உள்ளது. நான்கு மறைகளுக்கு இணையாக ஐந்தாம் மறையாகவம், பொது மறையாகவும் இது திகழ்கிறது. மனித வர்க்கத்திற்குத் தேவையான அனைத்துச் செய்திகளையும் கொண்டுள்ளதால் பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலைத் தந்து தமிழும், தமிழனும் தரணியில் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஆவார். இவர் மயிலையில் பிறந்ததாகவும், வாசுகியை மணந்து இல்லறம் நடத்தியதாகவும், தன் குறளை மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார் என்றும் கூறுவர் இவருக்கும் நாயனார், தேவர் தெய்வப்புலவர் முதற்பாவலர், செந்நாப்புலவர் எனப்பல பெயர்கள் உள்ளன.

## திருக்குறளின் சிறப்பு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – என்று தேசியக்கவி பாரதி தமிழுக்குப் பெருமை சேர்த்தவருக்குத் தன் பாடல் வரிகளால் பொன்னாடைப் போர்த்தியுள்ளார். கவிஞன் தான் வாழுகின்ற காலத்திலே மதிக்கப்படுகின்றமை பெருமையுடையதாகும். திருக்குறளுக்கு அக்காலத்திலே பாராட்டு மாலை எழுந்தமை சிறப்புடையதாகும்.

அனுவைத்துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்

குறுகத் தெரித்தக் குறள் - எனும் பாராட்டைப் பெற்றுள்ளது. மனிதன் வாழும் சமூகம், அரசு, நாடு, மன்னன் மக்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதையெல்லாம் குறிப்பிடுவதால்

எல்லாப்பொருளும் இதன்பால் உள இதன்பால்

இல்லாத எப்பொருளும் இல்லையால் - என்ற சிறப்பையும் பெறுகிறது. எல்லா சமயத்தினரும் திருக்குறளைத் தன் சமயத்தைச் சார்ந்ததாகக் கருதி சிறப்புச் செய்கின்றனர். இவ்வுண்மையை உணர்ந்தே கல்லாடரும்

ஒன்றே பொருளெனின் வேறன்ப வேறெனின்

அன்றென்ப ஆறுசமயத்தாரும் நன்றென

எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்

முப்பால் மொழிந்த மொழி – என்று தம் பாடலில் குறிப்பிடுகிறார். ஏழுசீர்களால் எல்லா உலகிற்கும் தேவையானக் கருத்துக்களையும் வழங்குகிறது. முப்பால், பொய்யாமொழி, வாயுரைவாழ்த:து எனப் பலபெயர்கள் பெற்றிருந்தாலும் திருக்குறள் எனும் பெரே நிலைத்து நின்றுவிட்டது.

பாயிரம் இல்லறவியல், துறவறவியல், ஊழியியல் இந்நான்கும் அறத்துப்பாலில் அடங்கியுள்ளன. இவற்றில் அறமானது இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயத்தலால் அவற்றை எங்ஙனம் பின்பற்ற வேண்டும் என எடுத்துச் சொல்கிறது. அகம் புறம் இவற்றின் மூலம் உண்டாகும் ஆசைகளை அகற்றி துறவு உள்ளத்தைப் பெறுதல் போன்றவற்றை முதற்பாலில் குறிப்பிட்டுள்ளார். அரசியல் அங்கவியல் ஒழிபியல் ஆகிய மூன்றும் பொருட்பாலில் பொதிந்துள்ளன.

ஒரு அரசனுக்குரிய கல்வி, கேள்வி, நீதி அறியும் தன்மை, தன்குற்றத்தைக் களைந்து கொள்ளுதல், தனக்கு நன்னெறியை வழிகாட்டும் பெரியோர்களைத் துணைக்கொள்ளுதல், புலன் நுகர்வுக்கு இடம் கொடாதிருத்தல் வலியறிதல், காலம் அறிந்து காரியம் ஆற்றுதல் போன்றவற்றைப் பொருட்பால் பேசுகிறது.

இல்லறத்தின் இன்பத்தை மூன்றாம் பாலில் இழைத்துத் தந்துள்ளார். ஊடலும் கூடலும் இருந்தாலும் அதற்கும் எல்லை வகுத்துள்ளார். வள்ளுவரின் வளமான கற்பனைகள் வார்த்தைகளாய் வரிகளில் உட்கார்ந்திருக்கின்றன. களவு வாழ்வும் கற்பு வாழ்வும் இங்கே சுட்டப்பட்டுள்ளன. உணர்வுகளின் உரைவிடமாய் இவ்வியல் திகழ்கிறது.

**அறத்தின் மேன்மை**

அற இலக்கியத்திற்கெல்லாம் மணிமுடியாகத்திகழ்வது திருக்குறளே ஆகும். அறமே மனிதனைக்காக்கின்ற கவசமாகும். ஆகவே யாரும் அறத்தை உடையாக அணிந்துகொள்ளுங்கள் என வலியுறுத்துகிறார். அறமே ஒருவரின் ஆக்கத்திற்கு வழிகாட்டும். அ·.தல்லால் பிரிதொன்று இவ்வுலகில் இல்லை என்பதை

அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை அதனை

மறத்தலின் ஊங்கு இல்லைகேடு – என்கிறார். இல்லறம் செம்மையுடன் நடந்திட வேண்டுமெனின் கொருளும் அன்பும் மட்டுமன்று அறமும் இணைந்திருந்தாலே

இல்லறம் இனிமைபெறும் ஒழுக்கத்தை எவனொருவன் தவறாமல் கடைபிடிக்கின்றானோ அவனே மேன்மையடைவான். கடைபிடிக்காதவன் இகழ்ச்சியில் வீழ்வான். அறத்தின் வழிநின்று பிறன்பொருளை விரும்பாமல் இருப்பவனின் முகவரியைத்தேடி திருமகள் வருவாள். அறத்தைப்பின்பற்றி நடக்கவில்லையென்றாலும் புறங்கூறாமல் இருப்பதும் இனிதானதுதான். மேலும் தன்னை மறந்தும் மற்றவற்குத் தீங்கு விளைவிக்கக்கூடாது. அவ்வாறு விளைவித்தால் நாம் அத்தீங்கை அனுபவிக்க நேரிடும் என்பதனை

மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்

அறம் சூழும் சூழ்தவன் கெடு – என்கிறார்.

**திருக்குறள் உரை**

திருக்குறளுக்குப் பல அறிஞர்கள் காலந்தோறும் உரை செய்து வருகின்றன. இருப்பினும் உரை செய்தமையில் பதின்மர் சிறப்பிடம் பெறுகின்றன. அவாகள் இன்னார் என்பதை,

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்

பரிதி பரிமேலழகர் - திருமலையர்

மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு

எல்லையுரைசெய்தார் இவர் - எனும் வெண்பா விளக்குகிறது. இவர்களின் உரைகளே தற்போது கிடைக்கின்றன. இதில் யாவற்றிலும் தலைசிறந்து விளங்குவது பரிமேலழகர் உரையேயாகும். இதனை

நூலிற்

பதித்த உரையெல்லாம் பரிமேலழகன்

தெரித்த உரையாமோ தெளி – என்பதிலிருந்து அறியலாம். இதனை ஆங்கிலத்தில் டாக்டர் ஜி.யு.போப், வ.வே.சு.ஐயர், தீட்சிதர் இராஜாஜி ஆகியோர் மொழி பெயர்த்திருக்கின்றனர். வீரமாமுனிவர் இலத்தின் மொழியில் மொழி பெயர்த்திருக்கின்றனர். மேலும் பிற்காலத்தில் மு.வ.பூரணலிங்கம் கா.அப்பாத்துரை, திருக்குறள் முனுசாமி, கலைஞர் கருணாநிதி, ப.முருகன் போன்றோர்கள் உரைசெய்துள்ளனர். வேதப்பொருளை உலகோர் ஓத தமிழ்மொழியில் எழுந்த

திருக்குறளை எவ்வகுப்பிலும் சேர்க்கலாம். அதுவே அறநூல், வேதநூல், ராஜதந்திர சாஸ்திரம், அதுவே இன்பநூல் என்று வ.வே.சு ஐயர் குறிப்பின்றார்.

**நாலடியார்**

அறவிலக்கியங்களில் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்க நூலாக நாலடியார் திகழ்கிறது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பதிலிருந்து இதன் பெருமையை உணரலாம். இந்நூல் நானூறு வெண்பாக்காளை கொண்டுள்ளது. ஒவ்வொரு வெண்பாவும் நாலடியாக இருப்பதால் நாலடி நானூறு என்றும் அழைக்கப்படுகிறது. ஆர்சிறப்பு விகுதி பெற்று நாலடியார் என அழைக்கப்படுகிறது. மேலும் வேளாண்வேதம் என்ற பெயரும் இதற்குண்டு.

வேளாண் மரபுக்கு வேதம் எனச் சான்றோர்
எல்லோரும் கூடி எடுத்துரைத்த சொல்லாகும்
நாலடி நானூறும் நன்கினிதா யென்மனத்தே
சீலமுடன் நிற்கத்தெளிந்து – எனும் தனிப்பாடல் மேற்சொன்ன கருத்தை விளக்குகிறது. தன்நாட்டில் வறட்சி ஏற்பட்டதின் காரணமாகப் பாண்டியநாட்டு மதுரையில் தங்கிய எட்டாயிரம் புலவர்கள் சில காலம் கழித்து தங்கள் பகுதி வளம் பெற்றதறிந்து தன்நாட்டிற்குத் திரும்பிச்செல்ல நினைத்தனர். ஆனால் பாண்டிய மன்னனோ அனுப்ப மனமின்றி காலம் தாழ்த்தி வந்தான். புலவர்கள் அரசனிடம் சொல்லாமல் ஆளுக்கொரு பாடல் எழுதி வைத்துவிட்டு சென்று விட்டனர். கோபமுற்ற மன்னனோ அவ்வேடுகளை ஆற்றில் வீச எதிர்த்து வந்த ஏடுகளை எடுத்து நூலாக்கினான். கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அவை 2 இயல்களாகப் பிரித்துள்ளார். இந்நூலைப் பதுமனார் திருக்குறள் அமைப்புமுறையிலேயே தொகுத்துள்ளார். நாலடியார் அறம் 13, பொருள் 24, இன்பம் 3 ஆக 40 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்குத் தருமரும் பதுமனாரும் உரைசெய்துள்ளனர். பல உரையாசிரியர்கள் இந்நூலை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளனர்.

**நாலடியார் சிறப்பு**

ஒழுக்கத்தில் உயர்ந்துநிற்கும் மேன்மக்களின் தன்மைபற்றியும் கல்வியின் உயர்வுபற்றியும் சிறப்பாக எடுத்தோதுகிறது. மனிதனுக்கு அழகு சேர்ப்பவை புற அடையாளங்கள் அல்ல அழியாப்பொருளாய் விளங்கும் கல்வியே ஆகும். இதனை,

குஞ்சியழகும் கொடுந்தானைக்கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து

நல்லயோம் என்னும் நடுநிலைமையால்

கல்வியழகே அழகு – என்று குறிப்பிடுகிறார். இம்மனிதவாழ்வானது நீர்க்குமிழ்போன்றது. நிலையாமையை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் பாடல் பல உள்ளன. கல்வியைக் கற்கின்ற மனிதர்கள் சில நாளில் அழிந்து போகலாம் ஆனால் கல்வி என்றும் அழியாது இதனை,

கல்விக்கரையில கற்பவர் நாள்சில

மெல்லநினைக்கின் பிணி பல – தெள்ளிதின்

ஆராய்ந்து அமைவடைய கற்பவே நீர்வொழியப்

பால்உண்குருகின் தெரிந்து – என்று குறிப்பின்றார். இனிய சுவையுடைய உணவை அன்புடைய மனைவி அருகிலிருந்து ஊட்டினாலும் வேண்டாமென தட்டிக்கழிக்கும் செல்வந்தர்களும் சில நாளில் ஏழைகளாய் வறுமையில் உணவுக்கு வழியின்றி பிச்சையேற்று உண்ணவரும். ஆதலாலே செல்வம் என்பது நிலையில்லாத ஒன்றாகும். அதனை நினைவில் கொள்ளவேண்டும் என்கிறார். செல்வம் சேர்த்து வைத்திருந்தால் மட்டும் போதுமானதல்ல. அதுயாவற்கும் பயன்படும் விதமாய் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் தானும் நுகராமல் பிறரின் துயரையும் துடைக்காமல் கருமி வைத்திருக்கின்ற பொருளை ஏழையும் தனக்குச் சொந்தம் எனச் சொல்லிக் கொள்ளலாம்.

இதனை

எனது எனது என்று இருக்கும் ஏழை பொருளை

எனது எனது என்று இருப்பன் யானும் தனது ஆயின்

தானும் ஆதனை வழங்கான் பயன்துவ்வான்

யானும் அதனை அது – என்று குறிப்பிடுகிறார். கன்னலின் சுவையை யாவரும் விரும்புவர் சுவைப்பர். அதனிலிருந்து சமுகத்திற்குத் தேவையான பொருளை எடுப்பதாற்காக ஆலையில் இட்டு சாற்றை எடுத்துக் கொண்ட பின்பு சக்கையை எறிந்துவிடுவர். இந்நிகழ்வு யாவரும் அறிந்த ஒன்றாகும். இதற்கு யாரும் வருந்துவதில்லை. அதேபோல் மனிதனும் தான் கொண்டுவந்த வாழ்க்கையில் பயனுள்ள எல்லாச்செயலையும் செய்து முடித்துவிட்டால் இக்கூட்டைக் கூற்றுவன் கொண்டு போகவரும் போது எந்தக்கவலையும் கொள்ளார். இதனை,

கரும்பு ஆட்டி கட்டி சிறுகாலைக்கொண்டார்
துரும்பு எழுந்து வேம்கால் துயரான் குழாவார்
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவது இவர் - என்று குறிப்பிடுகின்றார்

**பழமொழி**

பழமொழியை இயற்றியவர் மூன்றுரையனார் ஆவார். முன்னுறை என்பது ஊரின் பெயர் என்பர். அரையனார் என்பதால் அரசியம் பட்டம் பெற்ற அதிகாரி என்றும் கருதுவர். கடவுள் வாழ்த்துப் பாடலைக் கொண்டு இவரைச் சமண சமயத்தைச் சார்ந்தவராகக் கருதுவர். இந்நூல் 450 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வெண்பாவின் முடிவிலும் பழமொழி இடம்பெற்றுள்ளது. பழமொழியை, முதுசொல், முதுமொழி என்றும் கூறுவர். பழமொழியைப்பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடும் இடத்து,

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்

ஏது நுதலிய முதுமொழி என்ப – என்று குறிப்பிட்டுள்ளார். பழமொழி சங்க இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளமை பல்லோர் கூறிய பழமொழியெல்லாம் வாய்த்தனம் தோழி – என்ற வரிகளின் மூலம் அறியலாம். பழமொழியில் வரலாற்றுச் செய்திகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. கரிகாலன், குட்டுவன், செம்பியன் போன்றவர்களின் செய்திகள் காணப்படுகின்றன. மனுநீதி, பொற்கைப்பாண்டியன், பாரி

முல்லைக்குத் தேர் தந்த காட்சி, மயிலுக்குப் போர்வை போர்த்திய பேகன் ஆகியோரைப் பற்றிய செய்திள் இடம்பெற்றுள்ளன.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்து
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்
பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் போதைகள்
சொல்லாலே தன்னைத் துயர் படுக்கும் - நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும்

போன் அரிய கருத்துக்கள் அடங்கிய பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**முதுமொழிக்காஞ்சி**

மூதுரை, பழமொழி, அறிபுடைச்சொல் எனும் சொற்களை முதுமொழி குறிக்கும். இந்நூலை இயற்றியவர் கூடலூர் கிழார். 100 பாடல்களைக் கொண்டுள்ளது. அதிகாரத்துக்கு 10 விதமாக பத்து அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இந்நூல் குறட்டாழியையால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் காஞ்யெனும் துறையைச் சார்ந்ததாகக் கூறுவர். இங்கு காஞ்சி என்பது பெண்கள் இடையில் அணியும் ஆபரணங்களைக் குறிப்பதாக அமையும். புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறும்.

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்

உலகியல் பொருள் முடிவு உணரக்கூறின்று – எனும் வரிகள் முதுமொழிக்காஞ்சி எனும் இந்நூலுக்கு இலக்கணமாக அமைந்திருக்கிறது. இந்நூலில் அமைந்துள்ள பத்து அதிகாரம் முறையே சிறந்த பத்து. அறிவுப் பத்து, பழியாப் பத்து, செவ்வாய் பத்து, அல்ல பத்து, இல்லைப் பத்து, பொய் பத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப் பத்து என்பனவாகும். அறம், பொருள், இன்பத்தைப் பாட்டுடைப் பொருளாகக் கொண்டுள்ளது.

**சிறந்த கருத்துக்களில் சில**

ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம்உடைமை
தேராமல் கற்றது கல்வியன்று
வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று
துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது
இன்பம் வெய்யோர்க்கு துன்பம் எளிது

**நான்மணிக்கடிகை**

நான்கு மணிகளால் ஆன ஆபரணம் அணிந்து கொள்பவருக்கு ஆனந்தம் தருதல் போன்று. வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய நான்கு உயரிய கருத்துக்களை ஒவ்வொரு பாடலிலும் கொண்டு விளங்குவதால் இந்நூல் நான்மணிக்கடிகை என்றழைக்கப்படுகிறது. இதனை இயற்றிவா் விளம்பிநாகனாா் ஆவாா். விளம்பி என்பது ஊரின் பெயராகும். நாகனாா் என்பது இயற்பெயராக இருக்கும் என்பா். கடவுள் வாழ்த்து உள்ளிட்ட 104 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. மாயனைக் கடவுள் வாழ்த்தில் குறிப்பிட்டுப் பாடியுள்ளதால் இவா் வைணவராக இருக்கலாம். இந்நூலின் நயம் கருதி 7, 100 ஆகிய இரு பாடல்களை ஆங்கிலத்தில் டாக்டா். ஜி.யு.போப் அவா்கள் மொழிபெயா்த்துள்ளாா். உலகிற்குத் தேவையான நல்ல அறிய கருத்துக்கள் ஒவ்வொரு பாடலிலும் இடம்பெற்றுள்ளன. உடலிலுள்ள உறுப்புகளில் கண்ணே சிறந்த உறுப்பாகும். பெண்மைக்குத் தன் கணவனே சிறந்த உறவாகும். மற்றவை எவையும் சிறப்பில்லை என்பதனைக்

கண்ணின் சிறந்த உறுப்பில்லை, கொண்டானின்
துன்னிய கேளீா்பிறரில்லை, மக்களின்
ஒண்மைய வாய்சான்ற பொருள் இல்லை, ஈன்றாரோடு
எண்ணக் கடவுளும் இல் - எனும் பாடல் குறிப்பிடுகிறது. எவையெல்லாம் எவற்றிற்கெல்லாம் அணியாகத் திகழும் என்று நான்கு கருத்துக்களை நயம்பெற நன்கு உரைக்கின்றாா்.

நிலத்திற்கு அணியென்ப நெல்லும் கரும்பும்

குளத்திற்கு அணியென்பர் தாமரை பெண்மை

நலத்திற்கு அணியென்பர் நாணம் தனக்கு அணியாம்

தான் செல் உலகத்து அறம் - இப்பாடலில் மனிதனுக்கு அணியாகத் திகழ்வது அறமே என வலியுறுத்தியுள்ளார்.

நன்மக்கள் இந்த குடியில்தான் பிறப்பார்கள். இக்குடியில் பிறக்கமாட்டார்கள் எனும் எந்த ஒரு விதி விளக்கும் இவ்வுலகில் இல்லை. எக்குலத்திலும் உதிக்கலாம் என்பதை,

கள்ளிவயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில்

ஒள்ளரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள்

பல்விளைய முத்தம் பிறக்கும் அறிவார் யார்

நல்லாள் பிறா்க்கும் குடி – எனும் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் திருக்குறள், சிலம்பு ஆகியவற்றின் கருத்துக்கள் பயின்றுவந்துள்ளன.

**ஆசாரக்கோவை**

மனிதனைக் காக்கும் கவசமாகத் திகழும் ஒழுக்கத்தின் தொகுப்பாகவே இந்நூல் திகழ்கிறது. இதனை இயற்றியவர் பெருவாயில் முள்ளியார். இதில் முதல் வெண்பாவிலும், நூறாவது வெண்பாவிலும் ஆசார வித்து என்ற சொல் இடம்பெற்றிருப்பதாலும், இதற்கு ஆசாரக் கோவை எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்பர். இதில் மொத்தம் 100 வெண்பாக்கள் உள்ளன. மக்கள் எவை எவை ஏற்க வேண்டியவை எவையெவை தள்ள வேண்டியவை என இந்நூல் குறிப்பிட்டுள்ளது. அரசன் உவாத்தியன் தாய் தந்தை, சான்றோர் ஆகிய ஐந்து பேரையும் தேவர்களாகப் பாவித்து வணங்கிட வேண்டும். வைகறைப் பொழுதிலே துயில் எழுதல் வேண்டும். அவ்வாறு எழுந்து செய்யும் நல்லறள் யாவற்றிற்கும் முன் தாய் தந்தையைத் தொழ வேண்டும் போன்ற கருத்துக்களைக் குறிப்பிடுகின்றன.

யாவரும் கண்டமுறை, பேர் அறிவாளர் துணிவு, மிக்கவர் கண்ட நெறி, நல்லறிவாளர் துணிவு என முன்னோர்கள் கூறியமையே பொன்னே போல் போற்றும் திறன் காணப்படுகிறது.

**நெஞ்சில் நின்ற வரிகள்**

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோய் இன்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப – என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்
நகையொடு கொட்டாவி காறிப்பு தும்மல்
இவையும் பெரியோர் முன் செய்யாரே செய்யின்
அசையாது நிற்கும் பழி.

**சிறுபஞ்சமூலம்**

உடலை வளப்படுத்தும் மருந்தாக சிற வழுதுணை, நெருஞ்சி, சிறுமல்லி, பெருமல்லி, கண்டங்கத்திரி ஆகிய ஐந்தின் வேர்களைக் கொண்டு தயாரிக்கப்படும் சிறு பஞ்சமூலம் போன்று, உயரிய ஐந்து கருத்துக்களைக் கொண்டு விளங்கும் இந்நூலைச் சிறுபஞ்சமூலம் என அழைப்பர். இதனை இயற்றியவர் காரியாசான் ஆவார். கடவுள் வாழ்த்துப் பாடலைக் கொண்டு இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பர். பாயிரப் பாடலான இரண்டைத் தவிர்த்து 102 பாடல்களைக் கொண்டது. ஆசிரியருக்குக் கொடைப் பண்பும், ஆயுர்வேதமும், வடமொழிஆற்றலும் உண்டு என்பதை,

மல்லிவேர் நோய் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய் நீக்கும் பாங்கினால் - கல்லா
மறுபஞ்சம் தீர்மழைக்கை மாக்காரியாசன்

சிறுபஞ்சமூலம் செய்தான் - என்ற பாயிரப் பாடலின் மூலம் அறியலாம். அக்காலத்தில் பசுவினுடைய கன்று இறந்து போனால் கன்றின் தோலை எடுத்து பொம்மை செய்து பசுவை ஏமாற்றும் பழக்கம் நிலவி வந்துள்ளது. அதனைக் கண்டிக்கின்றார். உண்மைக் கவிஞனின் சிறப்பினை விளக்குகிறார். சுவர்க்கத்திற்குப் போக மேற்கொள்ளும் வழி வகைகளைக் கூறுகிறார்.

குளம் தொட்டு காவு பதித்து வழிசீத்து
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி வளம்தொட்டு,

பாடுபடும் கிண்றொடு என்றிவை பாற்படுத்தான்

ஏகும் சுவர்க்கம் இனிது

பூத்தாலும் காயாமரமுள நன்றறியார்

மூத்தாலும் மூவார் நூறேற்றாதார் – பாத்திப்

புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்

குரைத்தாலுஞ் செல்லாதுணர்வு

**ஏலாதி**

இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியர் ஆவார். உடலுக்கு வலுவூட்டும் ஆறு பொருட்களால் ஆன சூரணம் போன்று ஆறு கருத்துக்களைக் கொண்ட நூல் ஏலாதியாம். ஏலம் 1, இலவங்கம் 2, நாககோசரம் 3, மிளகு 4, திப்பிலி 5, சுக்கு 6, ஆகியவை சேர்ந்து கலக்கப்பட்ட சூரணத்திற்கும் ஏலாதி என்று பெயர். இம்மருந்தைப் போன்று, உள்ளத்தின் அழுக்கையெல்லாம் அகற்றும் நூலாக ஏலாதி திகழ்கிறது. இந்நூலில் ஆசிரியரான கணிமேதாவியர் தினைமாலை 150 எனும் வேறு ஒரு நூலையும் இயற்றியுள்ளார். இவர் பெயர் கணிமேதாவியார் என்பதில் கணி எனும் சொல்லைக் கொண்டு சோதிடக் கலையைக் கற்றவராக இருக்கலாம் என்பர். கடவுள் வாழ்த்தைச் சேர்த்து 81 பாடல்களைக் கொண்டுள்ளது.

**நயமிக்கப் பாடல்கள் சில**

சாவது எளிது அரிது சான்றாமை நல்லது

மேவல் எளிது அரிது மெய் போற்றல் ஆவதற்கண்

சேறல் எளிது நிலை அரிது தெள்ளிராய்

வேறல் எளிது அரிது சொல்

இவ்வுலகில் யார் யாரெல்லாம் பெரியவர் என்பதைப் பின்வரும் பாடல் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

கொல்லான், கொலைபுரியான், பொய்யான், பிறர் பொருள்மேல்

செல்லான், சிறியார், இனம் சேரான், சொல்லும்

மறையில் செவிஇலன் தீச்சொற்கண் மூங்கை

இறையில் பெரியார்க்கு இவை

**திரிகடுகம்**

உடலுக்கு ஏற்படும் நோயை நீக்க சுக்கு மிளகு, திப்பிலி எனும் 3 பொருள்களால் ஆன மருந்தைப் பயன்படுத்துவது போன்று உள்ளத்திலுள்ள நோய்களையும், இருளையும் போக்க திரிகடுகம் பயன்படுத்துவர். இதனை

உலகில் கடுகம் உடலின் நோய் மாற்றம்

அலகில் அகநோய் அகற்றும் - நிலைகொள்

திரிகடுகம் - என்ற பாயிர வரிகள் குறிப்பிடுகிறது.

இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட 101 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. இதனை நல்லாதனார் இயற்றினார். இவர் கடவுள் வாழ்த்தாகத் திருமாலைப் பாடுவதால் வைணவராவார். ஆதன் என்பதே இயற்பெயராகும். நல் என்ற அடைமொழி சேர்ந்து வந்தமை இவரின் சிறப்பை உணர்த்தும். இவர் திருநெல்வேலி பகுதியைச் சார்ந்த திருத்து எனும் ஊரைச் சார்ந்தவர் என்பது பாயிரத்தின் துணை கொண்டு அறியலாம். இந்நூலில், இவை மூன்றும், இவர் மூவர், இம்மூவர் என்ற ஏதேனும் ஒன்ற இடம்பெற்றிருக்கும்.

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கு அறுக்கும்

மூத்தோரை இல்லா அவைக்களனும் - பார்த்து உண்ணும்

தன்மையிலார் அயர் இருப்பும் இம்மூன்றும்

நன்மை பயத்து இல்.

ஈதற்குச் செய்க பொருளை, அறநெறி

சேர்தற்குச் செய்க பெருநூலை, யாதும்

அருள் புரிந்து சொல்லுக சொல்லை, இம்மூன்றும்

இருள் உலகம் சேராத ஆறு

உழவுத் தொழிலைச் செய்யம் வேளாளன் தன் இல்லத்திற்கு வந்திருக்கும் விருந்தினரை விட்டு உணவருந்தான், கொடுங்கோல் மன்னனால் நாட்டின் மழைபெய்யாமை, நீராடிய பின்னே உணவு உண்ணல், அந்தணரிடம் பழகினும் தீப்போல் பழகவேண்டும் போன்ற கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 100 பாடல்களில் 66 பாடல்கள் நன்மை பயப்பன பற்றியும், 34 பாடல்கள் மனிதனுக்குத்

தீமை பயப்பயவை பற்றியும் கூறுகின்றன. பாயிரத்தில் செரு அடு தோள் நல்லாதன் என வருவதால் இவர் வாளேந்தும்வீரர் என்பர்.

**இனியவை நாற்பது**

வாழ்க்கை இனிமையாக இருக்கவேண்டுமெனின் இனியது எது எனத் தெரிந்து அவற்றை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு இனியவற்றையெல்லாம் தொகுத்து இந்நூலுக்கு இனியவை நாற்பது என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் மதுரைத் தமிழ் ஆசிரியர் மகனார் பூதஞ்சேதனார் ஆவார். இவர் சைவம் வைணவம் எனப் பாகுபாடின்றி கடவுள் வாழ்த்தில் அரி, அரண், அயன் மூவரையும் போற்றியுள்ளார். நாற்பது பாடல்களில் நான்கு பாடல்கள் மட்டுமே நான்கு கருத்துக்களைக் கொண்டுள்ளது. மற்ற 36 பாடல்களும் மூன்று கருத்துக்களைக் கொண்டுள்ளது. இன்னா நாற்பதின் கருத்துக்களுக்கு மறுப்பு சொல்லும் விதமாக இருப்பதால் அந்நூலுக்குப் பின் தோன்றியிருக்கலாம். உடலைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு ஊனை உண்ணாமல் இருப்பது இனியதாகும். தன்னிலை தாழாமை மானமாகும். தாழ்ந்தால் உயிரோடு இல்லாமல் இருப்பது இனிதாகும். இல்லறம் இனிமையுடன் இருக்கவேண்டுமெனின் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்து வாழ்தல் இனிமை தரும் இதுபோன்று மொத்தம் 127 இன்பங்களைக் குறிப்பிடுகிறார்.

**இனியவைகள்**

குழவி தளர்நடை காண்டல் இனிது
அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிதே
வருவாய் அறிந்து வழங்கல் இனிதே
கற்றார்முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
தடமென் படைத்தோள் தளிரிய லாரை
விடமென்று உணர்தல் இனிதே
மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே
தானம் அழியாமைத்தான் அடங்கி வாழ்வு இனிதே
ஊனம் ஒன்று இன்றி உயர்ந்த பொருள் உடைமை
மானிடவர்க்கு எல்லாம் இனிது.

போன்ற இனிய செய்திகளை இந்நூலால் அறியமுடிகிறது.

**இன்னாநாற்பது**

இந்நூலை இயற்றியவர் கபிலர் ஆவார். 41 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. வாழ்க்கைக்கு எவையெவை தேவையில்லாதவை என்பதைக் குறிப்பிடுகிறது. கள், புலால் போன்றவற்றை விலக்கவேண்டும் என்பதால் இக்கருத்தைக் கூறுவர். கபிலர் எனும் பெயர்கொண்டவர் ஐவர் இரந்திருக்கின்றனர். பாரியைப் பாடியவர், இன்னா நாற்பதைப் பாடியவர், பதினோராம் திருமுறையைப் பாடியவர், பன்னிருபாட்டைப் பாடியவர். அகவல் பாடியவர். இ வ்வைவரில் இன்னா நாற்பதைப் பாடியவர் சங்ககாலக் கபிலர் எனும் வேறானவர் என்பதைக் கருத்து முரணிலிருந்து அறியலாம். இவர் சமய சமரச நோக்கு கொண்டவராகத் திகழ்கிறார். கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், முருகன், பலராமன் போன்றோர்களைப் போற்றிப் பாடியுள்ளார். 164 இன்னாத கருத்துக்களை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியம் திருக்குறள் ஆகியவற்றின் கருத்துகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**இன்னாத பொருட்கள்**

தன்னைத்தான் போற்றாது ஒழுகுதல் நன்கு இன்னா
முன்னை உரையார் புறமொழிக் கூற்று இன்னா,
கொடுங்கோல் மற மன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணை இன்றி நீந்துதல் இன்னா

தலைவியைச் சந்திக்க தலைவன் இரவு நேரத்தில் வருகிறான். இரவில் வருவதால் ஏற்படும் தீமையைக் கூறி அவனைத் தவிர்க்கப் பார்க்கிறாள் தலைவி. தலைவனே நீ வரும் வழியில் அருவி மிகுந்த ஓசை எழுப்புவதால் யாரேனும் விழித்திருந்தால் அலர் எழும். ஆகவே இரவுக்குறியைத் தவிர்ப்பாய் என்பதை,

யாழும் குழலும் முழவும் இயைந்தென
வீழும் அருவி வியன்மலை நன்நாட
மழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவுவரின்
ஊர் அறி கௌவை தரும் - எனும் பாடல் சுட்டுகிறது.

**திணைமாலை 150**

இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பர். ஐந்து திணைகளுக்கும் 30 பாடல்கள் வீதம் 150 பாடல்கள் அமைந்துள்ளன. ஆனால் 153 வெண்பாக்கள் உள்ளன. இவர் ஏலாதி என்ற நூலையும் இயற்றியுள்ளார். இந்நூலின் கருத்துக்கள் சிலவற்றைச் சுந்தரரும், மாணிக்கவாசகரும் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளனர். நச்சினார்க்கினியர், இளம்பூரணர் போன்றோர் இந்நூலை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளனர். கார்காலத் தன்மை, அக்கால தலைவன் தலைவி ஆகியோரின் தன்மையும், தான் செய்யும் வினைக்கு அன்றே பயன்கிடைத்தல் போன்றவற்றைப் பற்றியும் குறிப்பிகின்றன.

தலைவன் மீது தலைவி காதல் கொண்டிருந்தமையார் உடன்போக்கு நிகழ்த்திவிட்டாள். தலைவியை வளர்த்த செவிலித் தாயோ, தேடிச் செல்கிறாள். எதிரில் வரும் தம்பதியினரை, இவ்வழியே காதலர்கள் சென்றதைக் கண்டீரோ எனக் கேட்கிறாள். கணவன் ஓர் ஆடவன் சென்றதையும், மனைவி ஓர் பெண்மகள் சென்றதையும் குறிப்பிடுகிறார்கள். வேறொரு பொண்ணை ஏரெடுத்துப் பார்க்காத ஆண்மையும், வேறொரு ஆடவனைப் பார்க்காத பெண்மையும் இங்கே சுட்டப்படுகிறது.

தண்ணி நீர் சென்மின் நமர் அவர் ஆவரேல்
எண்ணிய எண்ணம்எளிது அரோ எண்ணிய
வெஞ்சுடர் அன்னானை யான்கண்டேன் கண்டாளாம்
தண்சுடர் அன்னாளைத் தான் - எனும் பாடல் மேற்கூறிய கருத்தைச் சுட்டுகிறது. தலைவியைப் பிரிந்து சென்ற தலைமகன் இளவேனிற்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாக வாக்குத் தந்தான். ஆயினும் கார்காலம் வந்ததும் வரவில்லை. முல்லை நிலமே ஆடலரங்காக மாறிற்று. மேகம் ஓசை எழுப்பி இன்னிசை தர நாட்டிய மங்கையாய் மயிலாட, அவ்வாட்டத்தைக் கண்டு மகிழ்ந்து கையசைப்பது போன்று வெண்காந்தள் மலர்கள் அசைகின்றன. இக்காலத்திலும் தலைவன் வாராதிருப்பதால் தலைவி துன்புற்றிருக்கிறாள்.

கானம் கடி அரங்கா, கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்ப வண்டு யாழாக வேனல்

வாரா மயில் ஆட, வாள் கண்ணாய் சொல்லாய்

ஊர் ஆகி உய்யும் வகை – எனும் பாடல் மேற்கூறிய கருத்தைக் கூறுகின்றன.

**கார்நாற்பது**

இந்நூலை இயற்றியவர் மதுரைக் கண்ணன் சேந்தனார். 40 பாடல்களைக் கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பாடலைக் கொண்டு இவரை வைணவர் என்பர். இருப்பினும் சிவனைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். காலத்தைச் சிறப்புச் செய்யும் வகையில் எழுந்துள்ளது. இதனை இலக்கணவிளக்கப் பாட்டியரும்,

காலம் இடம் பொருள் கருதி நாற்பான்

சால உரைத்தல் நானாற்பதுவே – என்கிறது. முல்லைத் திணைக்கு உரிய முதற்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை நயம்பட உரைக்கிறது. தலைவியைப் பிரிந்து செல்கிறான் தலைவன். கார்காலத்தில் திரும்பி வருவேன் என்று சொல்லிச் சென்றவன் இன்னும் திரும்பவில்லை. கார்காலம் வந்துவிட்டதற்கு அடையாளமாக கொன்றை மலர்கள் பூத்துவிட்டன. மயில்கள் ஆடுகின்றன. தலைவன் வராததால் பசலை நோய் வந்து விடுகிறது. ஐங்குறுநூற்றின் இளவேனிற்பத்தை ஒத்திருக்கிறது. அனைத்துப் பாடல்களும் ஒவ்வொருவர் கூற்றாகவே அமைந்துள்ளன. தலைவன், தலைவி, தோழன், பாங்கன் இந்நால்வரில் ஒருவரின் கூற்றாகவே அமைந்துள்ளன. இக்காலத்திலே கார்த்திகை மாதத்தில் விளக்கு ஏற்றும் முறை இருந்துள்ளமையைத் தெரிவிக்கிறது.

நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட

காடும் கடுக்கை கவின் பெறப்பூத்தன

பாடுவண்டுஉம் பருவம் பணைத்தோளி

வாடும் பசலை மருந்து

கார்காலம் வந்தமையைப் பருவம் காட்டித் தலைவன் வராததையும் ஆதலால் பசலை வந்தமையையும் சுட்டிக் காட்டும் விதமாக,

ஆடு மகளிர் மஞ்ஞை அணிகொள

காடும் கடுக்கை கவின் பெறப்பூத்தன

பாடுவண்டு ஊதும் பருவம் பணைத்தோளி

வாடும் பசலை மருந்து – எனும் பாடல் அமைந்துள்ளது.

**கைந்நிலை**

இந்நூலை இயற்றியவர் புல்லாங்கடனார் ஆவர். இவர் தந்தை காவிதியார் எனும் பெயர் பெற்றிருப்பதால் அரசன் வழங்கும் பட்டம் பெற்றவராக இருப்பர் என்பர். இந்நூல் ஐந்திணையைப் பற்றிப் பாடுகிறது. ஒவ்வொரு திணைக்கும் 12 பாடல்கள் வீதம் 60 பாடல்களைக் கொண்டுள்ளது. எனவே ஐந்திணை அறுபது என்று அழைத்தாலும் பொருத்தமாகவே இருக்கும். எனினும் ஐந்திணை என பல நூற்களின் பெயர் ஆரம்பிப்பதால் ஆசிரியர் தன் நூலுக்குக் கைந்நிலை எனப் பெயர் சூட்டியிருக்கலாம் என்பர். கை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும். அக ஒழுக்கத்தின் தன்மையைக் குறிப்பிடுவதால் கைந்நிலை என வழங்கியிருக்கலாம் எனப்ர். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் முறை வைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

கடற்கரைச் சோலையில் பரதவர் குலமகள் ஒருவள் தன் அண்ணன்மார் கொண்டுவந்த மீனையெல்லாம் காயவைத்து கொண்டிருக்கிறாள். அவ்வமயம் தலைவன் ஒருவன் அவளிடம் நயமுடன் பேசி நலன் உண்டு சென்றவனைக் காணவில்லை என்று ஏங்கும் ஏக்கத்தை,

என்ஐயர் தந்த இறஉணங்கள் யாம் கடிந்து

புன்னைஅம் கானல் இருந்தேமா, பொய்த்து எம்மைச்

சொல்நலம் கூறி, நலன் உண்ட சேர்ப்பனை

என்னைக் கொல் யாம் காணுமாறு – எனும் பாடல் காட்டுகிறது. தலைவன் வரும் இரவு நேரத்தை எண்ணித் தலைவி தூங்காது கண் விழித்து இரந்தமையைத் தன் தோழிக்குச் சொல்லும் விதமாய்ப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

பொன்னிணர் வேங்கைப் புனஞ்சூழ் மலைநாடன்

மின்னின் அணையாய் வேல்ஏந்தி இரவினில்

இன்னே வருங்கண்டாய் தோழி இடையாமத்து

என்னை இமைபொரு மாறு

அன்பு செலுத்திய தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி உடல் மெலிந்தாள். ஆதலால் கைவளை நெகிழ்ந்து ஓடுகிறது. அதைச் சொல்லுமிடத்தும் தலைவன் நட்பின் சிறப்பையெல்லாம் கூறும் விதமாக,

கல்வரை ஏறி கடுவன் கனிவாழை

அல்உறு போழ்தின் இனிய பழம்கவுள் கொண்டு

ஒல்லென ஒருமலை நாடன் கேண்மை

சொல்ல சொரியும் வளை – எனும் பாடல் அமைந்துள்ளது.

**களவழிநாற்பது**

இந்நூலை இயற்றியவர் பொய்கையார். இவர் சங்ககாலப் புலவரா, ஆழ்வாரில் ஒருவரா எனத் தெரியவில்லை. இந்நூல் போர்பற்றிய செய்திகளைத் தருகிறது. 41 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. களவழி என்பது ஏர்க்களம், போர்க்களம் பற்றிப் பாடுவதாகும்.

ஏரோர்க் களவழி அன்றிக் களவழித்

தேரோர் தோற்றிய வென்றியும் - என்று தொல்காப்பியம் களவழிக்கு விளக்கம் தருகிறது. இந்நூல் போர்க்களம் பற்றிப் பாடியுள்ளது. சோழன் கோச்செங்கணானுக்கும், சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் கழுமலம் எனும் இடத்தில் நடந்த போரில் சோழன் சேரனைச் சிறைபிடித்தான். பொய்கையார் தன் நண்பனான சேரனை மீட்கும் பொருட்டே களவழி நாற்பது பாடினார் என்பர். இச்செய்தியைத் தமிழ் விடுதூது, மூவருலா போன்ற இலக்கியங்களிலும் காட்டப்பட்டுள்ளது.

நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு

வில்லவன் கால்தளை விட்ட கோன் - எனும் வரிகள் மூவருலாவில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை உரையாசிரியர்கள் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் களத்து எனும் சொல் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியர் காட்டும் வனப்பு வகையில் இந்நூல் இடம்பெறுகிறது. ஆசிரியர் நால்வகைப் படையின் சிறப்பையும், போர்க்களக் காட்சியையும் வாசகரின் கண்முன்னே நிறுத்தும் விதமாய் நயம்பட உரைத்துள்ளார். பகைவரைக் கொல்லத்துடிக்கும்

களிற்றின் தும்பிக்கையை ஒருவன் வெட்டிவிடவே அதனிலிருந்து கொட்டும் குருதி பையிலிருந்து பவளம் கொட்டுவது போன்று இருப்பதாக வர்ணிக்கிறார்.

கவளம் கொள் யானையின் கைகள் துணிக்கப்

பவளம் சொரிதரு பைபோல் திவள்ஒளிய

ஒண்செங் குருதி உமிழும் - புனல்நாடன்

கொங்கரை அட்ட களத்து

எனும் பாடலில் யானையின் தன்மையை வெளிப்படுத்துகின்றார். நாற்பது பாடல்களில் யானைப்போர் பற்றியப் பாடல்களே மிகுதியாக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | நாலடியார் | அறம் | சமண முனிவர்கள் |
| 2 | நான்மணிக்கடிகை | அறம் | விளம்பிராகனார் |
| 3 | இன்னாநாற்பது | அறம் | கபிலர் |
| 4 | இனியவை நாற்பது | அறம் | பூதஞ்சேந்தனார் |
| 5 | திரிகடுகம் | அறம் | நல்லாதனார் |
| 6 | ஏலாதி | அறம் | கணிமேதாவியார் |
| 7 | முதுமொழிக்காஞ்சி | அறம் | கூடலூர்கிழார் |
| 8 | திருக்குறள் | அறம் | திருவள்ளுவர் |
| 9 | ஆசாரக்கோவை | அறம் | பெருவாயிள் முள்ளியார் |
| 10 | பழமொழி | அறம் | மூன்றுரையனார் |
| 11 | சிறுபஞ்சமூலம் | அறம் | காரியாசான் |
| 12 | ஐந்திணை ஐம்பது | அகம் | பொறையனார் |
| 13 | ஐந்திணை எழுபது | அகம் | மூவாதையார் |
| 14 | திணைமொழி ஐம்பது | அகம் | கண்ணன்சேந்தனார் |
| 15 | திணைமாலை நூற்றைம்பது | அகம் | கணிமேதாவியார் |
| 16 | கைந்நிலை | அகம் | புல்லாங்கனார் |
| 17 | கார்நாற்பது | அகம் | கண்ணன்கூத்தனார் |
| 18 | களவழி நாற்பது | புறம் | பொய்கையார் |

# 3. பல்லவர் காலம்

## சைவ இலக்கியம்

சைவ சமயம் சிவபெருமானைப் போலவே பழமையானது. சிவமென்றால் செம்மை, நன்மை என்று பொரளாகும். சிவம் அன்பை வளர்த்ததால் அன்பே சிவமாயிற்று. சங்க இலக்கியங்களும் சிவனைப் பல்வேறு பெயர்களில் சுட்டுகின்றது. சோழன் கோச்செங்கணான சிவனுக்கு 78 மாடக் கோவில்கள் கட்டியதாகத் திருநாவுக்கரச நாயனார் குறிப்பிடுகினற்ார். வைணவராகிய திருமங்கையாழ்வாரும் இக்கருத்தினைக் குறிப்பிடுகின்றார். அவர் 70 கோயில்கள் கட்டியதாகக் குறிப்பிடுவார். பழமையும் பெருமையும் பெற்று விளங்கிய சைவம் களப்பிரர் காலத்தில் வீழ்ச்சியுற்றது. முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறும் வரை இந்நிலையே நீடித்தது எனலாம். ஆயின் அப்பர் அருளால் அரசன் சமயம் மாற, சைவம் தழைத்தோங்கத் தொடங்கியது. இருட்குகையில் மறைந்து கிடந்த சைவ விளக்கு திருநாவுக்கரசரால் ஆதவனாய் மாறித் தமிழகத்தைத் தன்வயமாக்கியது.

சைவப் பெரியார் திருநாவுக்கரசரும் முதலில் சமணராகவே இருந்தால். சைவத்திற்கு அருந்தொண்டாற்றிய மன்னர் மகேந்திர வர்மனும் முதலில் சமணரே. சமயம் மாறிய மன்னன் திருப்பாதிரிப் புலியூரிலுள்ள சமணப் பள்ளிகளை இடித்து, சைவ சமயக் கோயிலை உருவாக்கச் சமண சைவப் போருக்கு வித்திட்டான்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் தொடங்கிய இந்தச் சமய மறுமலர்ச்சி சைவத்தையும் வைணவத்தையும் மக்கள் மத்தியில் செல்வாக்கு அடையச் செய்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்வேறு இடங்களை நாடி, தேடி பக்தியை பரப்பினர். சைவ இலக்கியங்களின் வளர்ச்சியை முதற்கண் விரிவாகக் காணலாம்.

**பன்னிரு திருமுறைகள்**

தென்னாடுடைய சிவனை எந்நாட்டவர்க்கும் உரியவராக நாயன்மார்கள் கண்டனர். 27 பெரியார்கள் பாடிய பாடலக்ளின் தொகுப்பே பன்னிரு திருமுறையாகும். முதல் ஏழு திருமுறைகளில் முதல் மூன்று திருஞான சம்பந்தர், அடுத்த மூன்று திருநாவுக்கரசர், ஏழாவது சுந்தரர் பாடியவை. இம்மூவர் பாடியதைத் தேவாரம் என்பர். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும்.

ஒன்பதாம் திருமுறை திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்தி காடவநம்பி, திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, கருவூர்த் தேவர், வேணாட்டடிகள் ஆகிய ஒன்பதின்மர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்.

பத்தாம் திருமுறை திருமந்திரம். பாடியவர் திருமூலர், பதினோராம் திருமுறை திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், இளம் பெருமானடிகள் அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிருவர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்.

பன்னிடரண்டாம் திருமுறை பெரிய புராணம் எனும் திருத்தொண்டர் புராணம் பாடியவர் சேக்கிழார்.

பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டவர் நம்பி ஆவார். இவர் கி.பி. 10ஆம் நுற்றாண்டு. முதலாம் இராசராச சோழனின் உதவியுடன் தில்லையம்பலத்தில் அடைந்து கிடந்த ஏடுகளை எடுத்து முறைப்படுத்தித் தொகுத்தார். இவர் தொகுத்தது 11 ஆம் திருமுறை வரையிலேயே ஆகும். சேக்கிழார் இவருக்குப் பின் வாழ்ந்தவர். எனவே பின் வந்தோர் சேக்கிழாரின் பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாக அமைத்துக் கொண்டனர். இப்பக்திப் பாடல்களுக்குப் பண் அமைத்த பெருமை ஒரு பெண்ணுக்குரியதாகும்.

**சம்பந்தர் தேவாரம்**

முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் பாடியது. இவரது இயற்பெயர் தெரியவில்லை. சீர்காழியில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர்.

தந்தையார் சிவபாத இருதயர், தாயார் பகவதியார். சீர்காழிக் குளக்கரையில் மூன்று வயதில் உமா தேவியார் ஞானப் பால் ஊட்டப்பெற்றதால் ஞானசம்பந்தரானார். இறைவன் உமாதேவியார் ஞானப் பால் ஊட்டப் பெற்றதால் ஞானசம்பந்தரானார். இறைவன் உமா தேவியாருடன் காட்சி தர அக்காட்சியினைக் கண்டு வியந்து 'தோடுடைய செவியன்' எனும் புகழ்பெற்ற முதல் பதிகத்தைப் பாடினார்.

| **திருமுறை எண்** | **நூற்பெயர்** | **ஆசிரியர்-பிறசெய்திகள்** | **பாடல் எண்ணிக்கை, சிறப்புச் செய்திகள்** |
|---|---|---|---|
| 1, 2, 3 | தேவாரம் | திருஞானசம்பந்தர் - (சீர்காழி) அந்தணர் குலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆளுடையபிள்ளை என்பர் | 389 பதிகங்கள், 3840 பாடல்களே கிடைத்துள்ளன. பிற சமயத்தை வெறுக்கிறார். |
| 4, 5, 6 | தேவாரம் | திருநாவுக்கரசர் - (திருவாமூர்) வேறுபெயர்கள் அப்பர், மருள்நீக்கியார், கி.பி.7ஆம் நூற்றாண்டு | 313 பதிகங்கள் பாடல்கள் 3066 சமணத்திலிருந்து தமக்கை திலகவதியாரால் சைவத்திற்கு மாறியவர் சாத்திரம், குலம், கோத்திரம் இவை இறையன்பிற்குத் தேவையில்லை என்றவர். |
| 7 | தேவாரம் | சுந்தரர் (திருநாவலூர்) கி.பி.9ஆம் நூற்றாண்டு சங்கிலியார், பரவையார் என இரு மனைவியர் இவர் பெரிய புராணத்தின் காப்பியத்தலைவன். | 1126 பாடல்கள் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். வன்தொண்டர் எனப்பட்டார். சிவனிடம் தோழமை உணர்வு. நாயன்மார் வரலாறு கூறும் திருத்தொண்டர் தொகை பாடியுள்ளார். |
| 8. | திருவாசகம், திருக்கோவையார் | மாணிக்கவாசகர். (திருவாதவூர்) நூற்றாண்டு கி.பி.9ஆம் அரிமர்த்தன பாண்டியன் அவையில் அமைச்சர். | திருவாசகம் 659 பாடல்கள், திருக்கோவையார் 400 பாடல்கள். திருப்பெருந்துறை சிவனால் ஞான உபதேசம் பெற்றவர். |
| 9 | ஒன்பதாம் திருமுறை | 1. திருமாளிகைத் தேவர் (திருவாவடுதுறை) | 45 பாடல்கள் (4 பதிகங்கள்) |

| | | | |
|---|---|---|---|
| | | 2. கருவூர்த்தேவர் | 103 பாடல்கள் (10பதிகங்கள்) |
| | | 3. கண்டராதித்தர் (சோழ மன்னர்) | 10 பாடல்கள் (ஒரு பதிகம்) |
| | | 4. சேந்தனார் (நாங்கூர்) | 47 பாடல்கள் (4 பதிகங்கள்) |
| | | 5. சேதிராயர் | ஒரு பதிகம்-சிதம்பரம்பற்றியது |
| | | 6. பூந்துருத்தி நம்பி (திருபூந்துருத்தி) | 2 பதிகங்கள்(12 பாடல்கள்) |
| | | 7. காடவநம் பிதிருவாலி அமுதனார் | 42 பாடல்கள் (4 பதிகங்கள்) |
| | | 8. புருடோத்தம நம்பி | 2 பதிகங்கள் (22 பாடல்கள்) |
| | | 9.வேணாட்டடிகள்(திருவிதாங்கூர்) (9ம் திருமுறையின் 9 பெர் பாடல்களும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு எனத் தொகுக்கப்பட்டுள்ளன.) | 10 பாடல்கள் (ஒரே பதிகம் சிதம்பரம் பற்றியது) |
| 10 | திருமந்திரம் | திருமூலர்-பெரியபுராணம் திருமூலர் வரலாறு சுட்டும் ஞானசம்பந்தருக்கு முற்பட்டவர், சைவத்தின் முதற் தத்துவ நூல்) | 3000 பாடல்கள் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. |
| 11 | பதினோராம் திருமுறை | 1. திருவாலவாயுடையார் (மதுரைச் சொக்கநாதர் பாடியது சேரமானுக்கு எழுதிய மடல் 12 வரிகளே உள்ளது | பதினோராம் திருமுறையைப் பிரபந்த மாலை என்றும் கூறுவர். 12 நாயன்மார்கள் பாடியது. 40 நூல்கள் உள்ளன |
| | | 2.காரைக்காலம்மையார் (புனிதவதியார்) பாடியவை 4 நூல்கள் | திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - 2, திருவிரட்டை மணிமாலை-1, அற்புதத் திருவந்தாதி – 1 |

| | | | |
|---|---|---|---|
| | | | (மொத்தம் நான்கு) |
| | | 3. கல்லாட தேவநாயனார் (கேரளாவின் கல்லாடம்) | திருக்கண்ணப்பர் திருமறம் 38 அடிகளில் கண்ணப்பர் வரலாறு |
| | | 4. நக்கீர தேவநாயனார் | பத்துநூல்கள் இயற்றியுள்ளார் இவற்றுள் திருமுறுகாற்றுப்படை சங்ககாலத்தது. அந்நக்கீரர் இவரினும் வேறு |
| | | 5. கபில தேவநாயனார் கி.பி.11ம் நூற்றாண்டு | மூத்த நாயனார் இரட்டைமணிமாலை, சிவபெருமான் இரட்டைமணிமாலை, பெருமான் திருவந்தாதி |
| | | 6. பரணதேவநாயனார் கி.பி.10ஆம் நூற்றாண்டு | சிவபெருமான் திருவந்தாதி 101 வெண்பாக்கள் |
| | | 7. அதிரா அடிகள் கி.பி.7ஆம் நூற்றாண்டு | விநாயகர் பற்றிப் பாடினார் மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை (23 பாடல்கள் உள்ளன) |
| | | 8. ஐயடிகள் காடவர்கோன் (பல்லவர்குலம், கி.பி.8ஆம் நூற்றாண்டு 63 நாயன்மார்களில் ஒருவர் | சேத்திரத் திருவெண்பா – 24 பாடல்கள் |
| | | 9. இளம் பெருமானடிகள் (நம்பியாண்டர் நம்பிக்கு முற்பட்டவர்) | சிவபெருமான் திருமும்மணிக்கோவை, 30 பாடல்கள் |
| | | 10. சேரமான் பெருமாள் சுந்தரர் நண்பர், சுந்தரரோடு கயிலைக்குச் சென்றவர் | திருக்கயிலை ஞான உலா (முதல் உலாநூல்) பொன்வண்ணத்தந்தாதி (பொன் வண்ணத்தில் தொடங்கிப் பொன் வண்ணத்தில் முடியும்) திருவாரூர் மும்மணிக்கோவை |

| | | | |
|---|---|---|---|
| | | 11.பட்டினத்தடிகள் (இயற்பெயர் திருவெண்காடர்) காவிரிப்பூம்பட்டின வணிகர். இவரைத் திருமுறைப்பட்டினத்தடிகள்ள ன்பர். கி.பி. 10ஆம் நூற்றாண்டு | கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒரு பா ஒருப·.து. |
| | | 12.நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூர், திருமுறையைத் தொகுத்தவர் இதனால் தமிழ் வியாசர் என்பர். பதினோராம் திருமுறை வரையில் தொகுத்தவர். | 9 நூல்கள் இயற்றியுள்ளார். இதில் திருத்தொண்டர் திருவந்தாதி நாயன்மார் வரலாறு கூறும். பெரிய புராணம் தோன்ற உறுதுணை ஆனது. |
| | பன்னிரண்டாம் திருமுறை | பெரியபுராணம் சேக்கிழார். திருத்தொண்டர் என்றும் கூறுவர். கி.பி.12ஆம் நூற்றாண்டு. ஊர் குன்றத்தூர் 63 நாயன்மார்கள் வரலாறு கூறும் நூல். குலோத்துங்க சோழனிடம் அமைச்சராக இருந்தவர். | 4286 பாடல்கள். 13 சருக்கங்கள். வரலாற்றுச் செய்திகள் மிகுதி. சாதியைக் கடந்தது இறைஅன்பு என விளக்கும் நூல். சுந்தரர் திருத்தொண்டத்தொகை நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி இவை இந்நூலின் மூல நூல். தழுவல் இன்றி அமையும் தமிழ்க்காப்பியம். பின்வந்தோர் 12 ஆம் திருமுறையாக இந்நூலைச் சேர்த்தனர். |

தந்தையுடன் ஊர் ஊராகச் சென்று இசையோடு சைவத்தைப் பரப்பினர். எனவே ‘நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்’ என்னும் பாராட்டினைச் சுந்தரர் வாயால் பெற்றவர்.

22 திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டார். இறைவன் இவருக்கு முத்துச் சிவிகை வழங்கினார். இவருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உடன் சென்றார். 23 வகையான பண்களில் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள முதல் மூன்று திருமுறைகளுக்குத் தேவாரம் என்னும் பொதுப் பெயரோடு 'திருக்கடைப்காப்பு' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

இவர் பாடியது 16000 பதிகங்கள் என்பர். ஆராய்ச்சியாளர்கள் இக்கூற்று மிகையான கற்பைன என்பர். இன்று கிடைப்பது 383 பதிகங்களே. ஒரு பதிகம் பத்து அல்லது பதினொரு பாடல்கள் கொண்டு அமைகிறது. 4168 பாடல்கள் பாடியுள்ளார். சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடு அனைத்தும் சென்று சிவபெருமானை பாடியுள்ளார்.

சங்கரர் இவரைத் ''திராவிட சிசு என்பர். பெரியபுராணம் 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்று இவர் புகழ் பேசும். சைவத்தோடு தமிழின் பெருமையும் பேசியவர். யாழ்முரிப் பண் பாடிய பெருமை இவருக்கே உரியதாகும்.

சிவன் அருளால் திருக்கோலக்காவில் பொற்றாளமும், பட்டீச் சுவரத்தில் முத்துபந்தரும், திருவாயிலறத்துறையில் முத்துச் சிவிகையும் திருவாவடுதுறையில் பொற்கிழியும், திருவீழிமிழலையில் படிக்காசும் பெற்றார்.

சைவம் தவிர பிற சமயங்களை வெறுத்தார் என்றே கூறலாம். புத்தர் சமணர்களைப் பழிக்கின்றார். அதிலும் சமணர்களை மிகுதியும் இழித்துரைக்கின்றார். அதற்குக் காரணம், அன்று சைவத்திற்குப் போட்டியாக நின்றது சமணமேயாகும். சமயக் காழ்ப்பு இருப்பினும் சாதிக்காழ்ப்பு இவரிடம் இல்லை எனலாம். தான் அந்தணராக இருப்பினும் பிற சாதியரை யாண்டும் இழிவாகப் பேசவில்லை. மாறாகப் பாணர் குலத்தில் பிறந்த திருநீலகண்டரைத் தனக்கு யாழிசைக்க வைத்துக்கொண்டார். சமணர்கள் பலரை அனல்வாதத்திலும் புனல்வாதத்திலும் வென்று கழுவேற்றினார். அப்பர், மகேந்திர வர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றியது போலவே இவரும் சமண சமத்திலிருந்து கூன்பாண்டியனை அவன் மனைவி மங்கையர்க்கரசி வேண்டுகோளுக்கேற்ப மதுரை சென்று சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார்.

மாற்றியதோடு சைவ நெறி மிக்க பாண்டி மாதேவி மங்கையர்க்கரசியாரைத் தம் தீந்தமிழில்

"மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடொறும் பரவ'

(மூன்றாம் திருமுறை -120:பாடல்-1)

எனப் போற்றுகின்றார்.

**பாடல் அமைப்பு**

இவரது பதிகங்களில் ஓர் ஒழுங்கு முறையைக் காண முடிகிறது. ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடல் இராவணனைப் பற்றியும், ஒன்பதாவது பாடல் மும்மூர்த்திகளில் சிவனே மேம்பட்டவன் எனவும், பத்தாவது பாடல் சமண சாக்கியரைத் தாக்கியும், பதினோராவது பாடல் தமது பெருமை நூற்பயன் இரண்டை இணைத்தும் அமைவதைக் காண முடியும்.

**இயற்கையழகு**

காழியர்கோன் எனப் பாராட்டப்பெறும் ஞானசம்பந்தரின் பாடல்களில் பக்தி மட்டுமன்றி இயற்கை அழகும் கற்றாரை மயக்கம் வகையில் அமைந்துள்ளது. திருவையாற்றின் நீர்வளத்தைப் பாடும் ஞானசம்பந்தரின் பாடல் இயற்கையை அப்படியே நம் கண் முன் கொண்டு வந்து விடுகிறது.

"மான்பாய, வயலருகே மரமேறி
மந்திபாய, மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே."

மான் பாய்ந்ததால் பயந்து போய் மரமேறி மந்தி பாய்ந்தது. மரத்தை அசைத்து மந்தி பாய்ந்ததால் குளத்தில் தேன் சொரிந்தது. அதனால் குளத்திலுள்ள மீன் பாய்ந்தது. மீன் தாமரை மொட்டின் மீது பாய அம்மொட்டுக்கள் மலரத் தொடங்கின. இயற்கை வளத்தோடு தமிழ் வளம் காட்டும் இதுபோன்ற பாடல்களே

‘நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞான சம்பந்தன்’ எனும் பட்டத்தை அளித்தது எனலாம்.

சமணம் பெண்களைப் பழித்தபோது ஞானசம்பந்தர்

‘.............

பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.’ என்பர். கிளியைப் பார்த்துப் பேசும் அகத்துறைப்பாடல் அகம் கடந்து பக்தியில் திளைக்கிறது.

‘சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணாத்தருவன், மொய்பவளத் தொடுதரளம்
துறையாளன் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே.”

இனி நேராகவே சிவநாம பக்தியில் ஈடுபடுத்தும் அற்புதப் பாடல்

‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவா யவே.”

இப்பாடலைப் பாராயணம் செய்யாத சைவ அடியார்கள் இல்லை எனலாம்.

நல்ல நம்பிக்கையை ஊட்டுவன இவர்தம் பாடல்கள் உள்ளத்தில் சிவன் இருப்பின் கோளும், நாளும் என்ன செய்ய முடியும்? என வினவிக் கோளறுபதிகம் பாடினார். கோளறுபதிகம் பாடின் தீமைகள் விலகி ஓடும் என்பது சைவர்களின் நம்பிக்கையாகும். அதில் அமையும் ஒருபாடல்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கைமுடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே

ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியார் அவர்க்கு மிகவே.”

சம்பந்தர் பாடல்களில் யாப்பும், சந்தமும் இணைந்து அழகு செய்கின்றன. பண்ணுக்கேற்பவே இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. யமகம், திரிபு, ஏகபாதம் போன்ற சொல்லணிகளைக் கொண்டு அமைகின்றன. மூவர் பாடிய தேவாரத்தில் முதலாவதாக அமைவது. இவரது தேவாரப் பாடல்களுக்கு மந்திரங்களுக்குரிய வலிமையுண்டு என்பது.

ஞானசம்பந்தர் பல்வேறு அற்புதங்களைச் சிவனருளால் நிகழ்த்தியவர். மயிலையில், இறந்து எலும்பு மட்டும் எஞ்சிய பூம்பாவை எனும் பெண்ணை உயிர் பெறச் செய்தார். திருமறைக் காட்டில் கோயில் திருக்கதவைத் தம் பாட்டால் மூடும்படிச் செய்தார். செங்குன்றூரில் குளிரால் வாடியோரின் குளிரைப் போக்கினார், திருவீழிமிழலையில் மக்கள் வறுமையில் வாடச் சிவனை வேண்டிப் பொற்காசு பெற்று வறுமைப் பிணி நீக்கினார். காவிரியில் ஓடம் தானே இயங்கும்படிச் செய்தார். திருமருகலில் பாம்புகடித்து இறந்து கணவனை எண்ணி அழுத மனைவியின் துயர் நீக்கப் பதிகம் பாடிக் கணவனுக்கு உயிர் கொடுத்த அற்புதம் செய்தார். மழவன் மகளுக்கு ஏற்பட்ட கடுமையான முயலகன் எனும் நோயினைப் போக்கினார். கூன் பாண்டியனின் வெப்பு நோயை நீக்கினார். திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண் பனையாக்கி அற்புதம் நிகழ்த்தினார். அனல்வாதம், புனல்வாதங்களில் ஏடு தீக்கிரையாகாதும், ஆற்று நீரை எதிர்த்துச் செல்லும் வண்ணமும் அற்புதம் புரிந்தார். திருநீற்றின் பெருமையைத் தமிழ் உலகிற்கு எடுத்துரைத்து ‘மந்திரமாவது நீறு’ என்று கூறிப் பதிகம் பாடினார்.

இவர் காலம் ஏழாம் நூற்றாண்டு (கி.பி.610-655) சிறுத்தொண்டர் இவர் காலத்தவர் என்பதால் மகேந்திரவர்மனின் இறதிக்காலம், அவர் மகனட நரசிம்மவர்மன் ஆட்சியின் தொடக்கக் காலம் இவர் காலமாகக் கருதலாம். திருநாவுக்கரசர் காலமும் இதனையொட்டி அமையும். ஞானசம்பந்தர் சந்தித்த நாயன்மார்கள் திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், திருநீலகண்டர். இவர் வாழ்ந்த ஆண்டுகள் 16. பதினாறாம் வயதில் திருமணம் செய்யும் நிலையில் நல்லூர்ப் பெருமணம் என்னும் ஊரில் இவரும்

மணப்பெண்ணும் மற்றையோரும் பெருஞ்சோதியில் கலந்து மறைந்தனர் என்பது வரலாறு.

தம்மைத் தமிழ் ஞானசம்பந்தன் என்று பேசும் ஞானசம்பந்தர் தமிழ் இசை உலகிற்கும் பக்தி உலகிற்கும் கிடைத்த பெருங்கருவூலம் எனலாம்.

**திருநாவுக்கரசர்**

4, 5, 6 திருமுறைகள் இவர் பாடியதாகும். இவற்றை முறையே திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்று வழங்குவர். இந்நாயனார் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் புதல்வராய்த் தோன்றினார்? இயற்பெயர் மருள்நீக்கியார். இளமையில் சமணத்தை நாடி, தமக்கை திலகவதியின் அருளால் முதிய வயதில் சைவத்திற்கு மாறியவர். சமணத்திலிருந்த மன்னன் மகேந்திரவர்மனைச் சைவத்திற்கு மாற்றியவர். இவர் காலத்தில் தமிழகத்தில் சைவ சமயம் வேகமாக வளரத் தொடங்கியது. 81 ஆண்டுகள் வாழ்ந்தவர்.

மருள்நீக்கியார் சமணத்தில் இருந்தபோது தருமசேனர் எனும் பட்டப் பெயர் பெற்றார். வாக்குக்கு ஈசர் எனும் பொருளில் வாகீசர், நாவுக்கரசர் என்றும் அழைக்கப்பட்டார். பெருமை கருதி ஞான சம்பந்தரால் ‘அப்பர்’ என்று போற்றப்பட்டார். தாண்டகம் பாடும் திறமையால் ‘தாண்டக வேந்தர்’ எனும் பெயரும் இவருக்குரியது.

ஞானசம்பந்தர் பாடல்கள் தேவாரத்திரல் முதலில் இடம் பெறினும் காலத்தால் திருநாவுக்கரசர் ஞானசம்பந்தருக்கு முந்தியவர். இவர் பாடிய முதற்கதிகம் திருவதிகை வீரட்டானத்து இறைவன் மீது பாடியது. வீரட்டானத்து இறைவனே இவர்தம் சூலை நோயை நீக்கி, தம் அடியாராய் ஏற்றுக் கொண்டார். சமணம் மாறிச் சைவம் சேர்ந்த நிலையில்

‘கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பலசெய்தன நான் அறியேன்’ என்று மனமிரங்கி வேண்டுகிறார். இதுவே இவர் பாடிய முதற்பதிகம்.

இவர் பாடிய பதிகங்கள் 313. பாடல்கள் 3066. ஆயின் சுந்தரர், அப்பர் பாடிய பாடல்கள் 49000 என்பர். ஞானசம்பந்தர் பாடல்களில் 23 பண்கள் உள்ளன. இவரது பாடல்களில் 10 பண்கள் உள்ளன. மகேந்திரவர்மன் காலத்தவர் என்பதால் இவர் காலம் கி.பி ஏழாம் நூற்றாண்டு எனலாம்.

இறைவனை முழுமையாக நம்பிவிடின் எந்தத் துன்பமும் இல்லை எனும் கருத்துடைய பெரியவா் திருநாவுக்கரசா். எனவேதான் திருத்தாண்டகத்தில்

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்

ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்

இன்பமே எந்நாளும் துன்பமில்லை.'

என்கிறாா். மேலும் இறைவன் அருள் இருக்கத் துன்பம் எல்லாம் எப்படி மாறும் என்பதை (சமணா்கள் சுண்ணாம்புக் காளவாயில் இவரை அடைத்த போது எப்படியிருந்தது எனப் பாடுகிறாா்).

'மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்

மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே' என்பா்.

குலம் கோத்திரத்தில் நம்பிக்கையுள்ள காலத்தில் தோன்றிய திருநாவுக்கரசா் அவற்றைப் புறக்கணித்தது வியப்பிற்குரியது. சாத்திரம் பேசுபவா்களை

'சாத்திரம் பேசும் சழக்கா்கள்

கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீா்

பாத்திரம் சிவம் என்று பணிந்தீரேல்

மாத்திரைக்குள் அருளமாற் பேறரே'

எனச் சாடுகின்றாா்.

மெய்மையை உழவாகவும், விருப்பத்தை விதையாகவும், பொய்மையைக் களையாகவும், பொறுமையை நீராகவும், தம்மையே தாம் ஆராய்ந்து, நடுவுநிலைமை வேலியாகவும், சான்றாண்மை எனும் பண்பு கொண்டு நின்றால் சிவகதி விளையும் எனக்கூறும் பாடல் அழகிய உவமை நயமிக்கது.

ஞானசம்பந்தா் போன்று இவரும் அகத்துறைப் பாடல்களை உள்ளம் நெகிழ்ச்சியுறும்படிப் பாடுகின்றாா். காதல் கொண்ட பெண் எல்லாவற்றையும்

மறந்துவிடுவாள். அவள் மறாவதிருப்பது தலைவனை மட்டுமே. இங்குத் தலைவன் சிவனாக, அவனிடத்தில் பக்தி (காதல்) கொண்ட பெண்ணின் மனநிலையைக் காட்டும் இப்பாடல் அற்புதமான அகப்பாடலாகும்.

'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்:
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே'

ஞானசம்பந்தர் போன்றில்லாது இவர்தம் பாடல்கள் பணிவும் குழைவும் கொண்டன. உழவாரப் பணியைப் பெரும் பணியாய் மேற்கொண்டார். எனவே இவர் சரியை மார்க்கத்தவர் என்பர்.

சங்கர் இருந்ததா இல்லையா எனும் ஆய்வு, அறிஞர் பெருமக்களிடையே கருத்து வேறுபாட்டைத் தோற்றுவித்த நிலையில் இலக்கியத்தில் முதன்முதலில் சங்கம் எனும் வார்த்தையை 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனக்கிழி தருமிக் கருளினோன் காண்' எனும் வரிகளில் குறிப்பிடுகின்றார்.

திருப்பாண்டிக் கொடு முடி சிவனாம் நட்டனைத் தொழ நம் வினை நாசமாகும் என்பர். இவருடைய பாடல்களின் அடிப்படை மந்திரம் 'இறைவனை அடையின் அனைத்துத் துன்பமும் நீங்கும்.' அவனை அடையும் வழி 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் கோட்பாடாகும்.

**சுந்தரர்**

சுந்தரர் பாடியவை ஏழாம் திருமுறை. தேவாரத்தில் இவர் பாடியவை மூன்றாவதாக அமையும். இவர் பாடிய ஏழாம் திருமுறைக்குத் 'திருப்பாட்டு' என மற்றொரு பெயருமுண்டு. இவர் திருமுனைப்பாடி நாட்டில் பிறந்தவர். ஊர் திருநாவலூர்.

தந்தை சடையனார். தாய்இசை ஞானியார். மணக் கோலத்தில் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். இச்செய்தியைப் பெரிய புராணத்தின் தடுத்தாட்கொண்ட புராணம் விரிவாகக் கூறும்.

தன்னைத் தடுத்தவன் சிவன் என்று அறிந்ததும், சிவன் கேட்டதற்கேற்ப 'பித்தா பிறைசூடி, பெருமானே அருளாளா' எனும் பதிகத்தைப் பாடினார். இதுவே இவர் பாடிய முதற்பதிகம் எனலாம்.

இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. இவரது பாடலில் 18 பண்கள் உள்ளதாகக் கூறுவர். கலிப்பா வகையில் அடங்கும். இன்று 100 பதிகங்களே கிடைத்துள்ளன. அவற்றில் 1026 பாடல்கள் அமைந்துள்ளன. அனைத்துப் பாடல்களும் இசைப் பாடல்கள் என்பது சிறப்புமிக்கது. திருத்தொண்டத்தொகை இவர் பாடியதே. இதில் அறுபது நாயன்மார்களின் வரலாறு சுட்டப்படுவதால், இதனைப் பெரிய புராணத்திற்கு முதல் நூல் என்பர்.

இறைவன் சுந்தரரின் திருமணத்தைத் தடுத்தாட்கொண்டாலும் திருவாரூரில் பரவையாரையும், திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரையும் மணக்கச் செய்தார். இவ்விருவரையும் இவர் மணந்தமைக்கு முன் பிறப்பே காரணம் என்பர்.

இவர் இறைவனை நோக்கிப் பாடிய பாடல்களில் தோழமை உணர்வு விஞ்சி நிற்கும். இவரை வன்தொண்டர் என்பர். இவர் நெறி யோக நெறி. எனினும் ஞான நெறியிலும் ஈடுபாடு கொண்டவர் என்பதை

'………………. வணங்குவோர்க்கு அறிவினைக் கொடுக்கும்

ஆரூர் அப்பனே'

எனும் வரிகள் விளக்கும்.

சுந்தரர் வாழ்ந்த காலம் பதினெட்டு ஆண்டுகளேயாகும். இவர் பாடிய பாடல்களில் பண்வகைகளும் பதினெட்டாகும். 'வாழ்வாவது மாயம்' என்றவர், அடுத்து 'உடல் மண்ணாவது திண்ணம்' என்கிறார். 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை' என்பது இவர் வாக்காகும்.

மண்ணுலகில் அழகுமிக்கவராகவும், விண்ணுலகில் ஆலால சுந்தரராகவும் இருந்தமையால் இயற்கெயர் மறையச் சுந்தரர் எனும் பெயர் திருமுறையில் நிலைத்தது. இவருடைய பாடல்கள் வாழ்வின் நடைமுறை இயல்புகளை நன்கு எடுத்துரைக்கின்றன. சிவனை நாடி ஊர்ஊராகப் போனபோது மழபாடியுள் இருக்கும் சிவனை மறந்து சுந்தரர் சென்றுவிட, சிவன் ‘என்னை மறந்தனையோ’ என்று கேட்க அதனால் தமிழ் உலகிற்குக் கிடைத்த பாடல் என்றும் மறக்க இயலாது. பாடலைக் கேளுங்கள்

‘பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உனையல்லால் இனியாரை நினைக்கேனே’

மேற்குறிப்பிட்ட மூவரும் (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்) பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆயிற்று. இதனை மூவர் பாடிய தேவாரம் என்பர். தேவார மூவர், மூவர் முதலிகள் என்றெல்லாம் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். தேவாரம் தே= தெய்வம், வாரம் = அன்பு தெய்வத்தின் மேல் கொண்ட அன்பினால் தோன்றிய பாடல்கள் என்பர்.

**மாணிக்கவாசகர்**

இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி என்பர். பல்லவர் காலம் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். இயற்பெயர் திருவாதவூரர். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். அமைச்சராக இருப்பினும் மனம் சிவனையே நாடியது. மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பொன்னை எடுத்துச் செல்லும் வழியில் திருப்பெருந்துறை குருந்த மரத்தடியில் சிவபெருமான் இவருக்கு ஞானாசிரியனாக வெளிப்பட்டு அருள் உபதேசம் செய்ய கொண்டு வந்த பொன்னை இறைப்பணிக்குச் செலவு செய்து பாண்டியனின் தண்டனைக்கு ஆளாகி, இறைவனால் பின்னர் ஆட்கொள்ளப்பட்டவர். இவர் வாழ்ந்த காலம் 32 ஆண்டுகளே.

இறைவன் மாணிக்கவாசகருக்காக நரியைப் பரியாக்கியும், பிட்டுக்கு மண்சுமந்தும் திருவிளையாடல் புரிந்தான்.

தேனூறும் திருவாசகம் சைவத் திருமுறையில் எட்டாவதாக அமைகிறது. திருக்கோவையாரும் இவர் எழுதியதே. இராமலிங்க அடிகள் கூறுவதுபோன்று உவட்டாமல் இனிப்பது திருவாசகம். திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது மூதுரை. கருங்கல் மனமும் கசிந்துருகச் செய்வது.

திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 659 பாடல்களைக் கொண்டது. இவர் வாசகங்கள் மாணிக்கம் போல் சிறப்புப் பெற்றமையால் மாணிக்கவாசகர் எனப் போற்றப்பட்டார்.

திருக்கோவையார் தமிழில் முதற்கோவை நூல் எனும் சிறப்பினைப் பெறுவதாகும். அகத்துறையாக அமையும் இந்நூல் வெறும் சிற்றின்பத்தை நல்காது அதன் வழியாகப் பேரின்பத்தின் சிறப்பினை விளக்கும். சிவனை நாயகியாகவும் மாணிக்கவாசகராகிய ஆன்மாவை நாயகனாகக் காணும் பாவனையில் அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பேராசிரியர் உரை உள்ளது. கட்டளைக் கலித்துறையில் அமைந்த 400 பாடல்களைக் கொண்டது.

மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள் எளிமையானவை. பல நாட்டுப்புறப் பாடல்களின் சந்தம் இடம் பெற்றுள்ளன. பெண்கள் விளையாட்டுகளை எடுத்துரைக்கும் பாடல்கள் நயமானவை.

வானாகவும், மண்ணாகவும், வளியாகவும், ஒளியாகவும், ஊனாகவும், உயிராகவும் பல்வேறு நிலையில் இருக்கும் இறைவனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

‘பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து, நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடாந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே’

என இறைவனை நோக்கி வினவுகின்றார்.

இறைவன் திருவடியை நினைப்பின் எதுவும் வேண்டாம் எனும் நிலையில்

‘உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்

கற்றாரையான் வேண்டேன்

கற்பனவும் இனி அமையும்

குற்றாலத்து அமர்ந்துறைவும்

கூத்தா உன் குரைகழற்கே

கற்றாவின் மனம் போலக்

கசிந்துருக வேண்டுவனே”

என மனமுருகி வேண்டுகிறார்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை சிவத்தொண்டர்கள் பாராயணம் செய்யும் பெருமை பெற்ற நூலாகும். மார்கழி மாதம் கன்னிப் பெண்கள் பாவை நோன்பு நோற்பதைச் சுட்டுகின்றது.

நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க எனத் தொடங்கும் திருவாசகம் படிப்போர் மனவாழ்கை வளமடையச் செய்யும் நூலாகும். மேலை நாட்டறிஞர் ஜி.யு.போப் அவர்கள் இதன் பெருமை கருதித் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

மூவர் பாடியது தேவாரம் என்பது போன்று, சைவ சமயக் குரவர்களாகிய நால்வர் பாடியது (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்) சைவ நான்மறைகள் என்று புகழப்படும். சிவபெருமானோடு அன்பால் பக்தியால் இணைந்த இப்பெரியார்கள் சிவபெருமானோடு பெற்ற உறவுநிலை எவ்வாறு அமைந்தது எனின், ஞானசம்பந்தர் பிள்ளையாகவும் (சத்புத்ரமார்க்கம்), திருநாவுக்கரசர் தொண்டராகவும் (தாசமார்க்கம்), சுந்தரர் தோழனாகவும் (சுகமார்க்கம்), மாணிக்கவாசகர் சீடராகவும் (சன்மார்க்கம்) எண்ணத்தக்க வகையில் அமைந்தது.

**ஒன்பதாம் திருமுறை**

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இவ்விரு நூல்களும் ஒன்பதாம் திருமுறை. ஒன்பதின்மர் பாடிய பாடல்களைத் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என வகைப்படுத்தியுள்ளனர். மொத்தம் 29 பதிகங்கள். இந்தத் திருமுறையில் 301 பாடல்கள் உள்ளன. இவற்றின் காலம் பத்திலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டு என்பர். பதிகங்களில் பெரிதும் சிதம்பரம் பற்றியே உள்ளது.

**1. திருமாளிகைத் தேவர்**

போகமுனிவரின் மாணவர். கருவூர்த்தேவர், சேந்தனார் இவரின் சமகாலத்தவர். நான்கு பதிகங்கள் பாடியுள்ளார். 45 பாடல்கள், சிதம்பரத்தைப் புகழ்ந்து பாடுகிறார். நான்காவது பதிகத்தில் பிற சமயங்களை இழித்துரைக்கின்றார். இவரது பிறந்த ஊராகிய திருவாவடுதுறையில் இவருக்கு மடமுள்ளது. இவர் பிணத்தை நடக்கச் செய்ததாகவும், வெந்த பயறை முளைக்கச் செய்ததாகவும் கூறுவர்.

**2. கருவூர்த்தேவர்**

இவரைக் கருவூர்ச்சித்தர், கருவூர்ப்பிரான் என்றும் வழங்குவர். பத்துப் பதிகங்கள் பாடியுள்ளார். 105 பாடல்கள் இலக்கிய வரலாறு எழுதிய மு.அருணாசலம் அவர்கள் கருவூர்த்தேவர் வேறு, கருவூர்ச்சித்தர் வேறு என்பர்.

**3. சேந்தனார்**

திருவீழிமிழலையில் இருந்தவர். பட்டினத்தடிகளிடம் பணி புரிந்தவர். தில்லையில் விறகு விற்றுக் கிடைக்கும் பணத்தில் அடியாருக்கு உணவளித்து வந்தார். சிவபிரான் இவர் அன்பால் மகிழ்ந்து இவரிடம் கூழினையுண்டு மகிழ்ந்ததாகக் கூறுவர். நான்கு பதிகங்கள் பாடியுள்ளார். 47 பாடல்கள். இதில் திருவிடைக்கழிப் பதிகம் முருகன் சிறப்பினைக் கூறுவது.

**4. கண்டராதித்தர்**

இவர் காலம் பத்தாம் நூற்றாண்டு. தந்தை, முதல் பராந்தகச் சோழன். மனைவி பிற்காலச் சோழ வரலாற்றில் புகழ்பெற்ற செம்பியன் மாதேவியார் எனும் மூத்த பிராட்டியார். முதலாம் இராசராசனின் தாத்தாவும், உத்தமசோழனின் தந்தையுமாவார். இவர் பாடியது பத்துப்பாடல்களே. பத்தும் தில்லையின் புகழ்பாடுவன.

**5. பூந்துருத்தி காடவநம்பி**

இவர் ஊர் திருப்பூந்துருத்தி. சைவ மரபு. சிதம்பரம், திருவாரூர் பற்றி இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். 12 பாடல்கள். பன்னிருதிருமுறைகளில் வேறு நாயன்மார்கள் யாரும் பாடாத சாளர பாணிப்பண்ணைப் பாடியவர் இவராவார்.

**6. வேணாட்டடிகள்**

சேரநாட்டைச் சார்ந்தவர். தென் திருவிதாங்கூர். இவர் சிதம்பரம் பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். வேணாடு என்பது நாஞ்சில் நாட்டையொட்டிய பகுதி என்பர்.

**7. திருவாலியமுதனார்**

சோழநாடு. அமுதனார் இவர் பெயர். திருவாலி சொந்த ஊராக இருக்கலாம். பதிகங்கள் 42 பாடல்கள். சங்க இலக்கிய ஆற்றுப்படைகள் விறலியைக் கேசாதிபாத வருணனை செய்வது போன்று இவர் இறைவனைப் பாதாதி கேச வருணனையில் பாடுகின்றார்.

**8. சேதிராயர்**

இவர் மன்னன் மரபினர். நாடு சேதி நாடு. இது இன்றைய திருக்கோவலூர் பகுதியில் உள்ளது. இவர் சிதம்பரம் பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். இப்பதிகம் அகப்பொருள் பொதிந்ததாக அமைந்துள்ளது.

**9. புருடோத்தம நம்பி**

அந்தணமரபு - 2 பதிகங்கள் பாடியுள்ளார். பாடுபொருள் தில்லை - 22 பாடல்கள். சேதிராயர் போன்று இவர் பாடல்களிலும் அகத்துறைக் கருத்துக்கள் மிகுதி எனலாம்.

**பத்தாம் திருமுறை**

திருமூலருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். திருமூலர் கூடுவிட்டுக் கூடு பாயும் வல்லமை பெற்றவர். இக்கலை பற்றி அவர் தொடர்பாகக் கதையொன்று வழங்கப்படுகிறது. இவர் எழுதிய திருமந்திரம் ஏனைய திருமுறைகளைவிட காலத்தால் முந்தியது. இவர் வடபுலத்து முனிவர் பதஞ்சலி போன்றோரோடு தமிழ்நாட்டிற்கு வந்தவர் என்பர். மூலன் என்ற இடையன் உடம்பில் புகுந்து வாழ்ந்ததால் மூலன் எனும் பெயர் பெற்றுத் திருமூலரானார்.

இவர் காலம் கி.பி ஆறாம் நூற்றாண்டு. திருமந்திரம் 3000 செய்யுட்களையுடையது. ஒவ்வொரு இயலும் தந்திரம் எனும் பெயரைப் பெறும். 9 தந்திரங்களாயும், அவை 232 அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டள்ளன. இந்நூலைத்

தமிழ் மூவாயிரம் என்றும் அழைப்பர். வெண்பாவிற்கும் விருத்தத்திற்கும் இடைப்பட்டு வெண்டளை பயின்று வரும் யாப்பில் அமைந்த நூல் இதுவாகும்.

பாடல்கள் பெரும்பாலும் உருவகங்களாகவே அமைகின்றன. தத்துவக் கருத்துக்களைக் கொண்டு மிளிர்கின்றன. மந்திரம் போல் அமைவதால் திருமந்திரமாயிற்று. சொற்களில் எளிமை, கருத்துக்களில் அருமை என அமையும். இறைவன் இல்லாத இடமில்லை. இக்கருத்தினை

'தேனுக்குள் இன்பம் சிவப்போ? கறுப்போ?

வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்

தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல்

ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே'

என எளிமையாகத் தருவார்.

திருமூலரின் தாரக மந்திரம் அன்பே சிவம் என்பது. இதனை

'அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்

அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்'

என்பர்.

ஞானநெறியும், யோகநெறியும், தத்துவக் கருத்துக்களும், சித்த மருந்தியல் கருத்துக்களும் மிகுதியும் உள்ள நூல் திருமந்திரம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று இன்று அனைவரும் கூறும் இவ்வரி திருமூலர் தந்ததாகும். அதுபோன்று 'நான் பெற்ற இன்பம் பெறும் இவ்வையகம் 'உள்ளம் பெருங்கோயில்' 'நன்றே நினைமின் நமனில்லை'.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

இவையாவும் திருமந்திரவரிகளே. திருமூலரின் தமிழ்ப்பற்றும் இதனால் விளங்கும்.

**பதினோராந் திருமுறை**

பன்னிருவர் பாடிய நாற்பது நூல்கள் 1401 பாடல்கள் பதினோராந் திருமுறையாக வழங்கப்படுகிறது.

1. **திருஆலவாயுடையார்**

சொக்கநாதரின் திருமுகப் பாசுரம் இதுவாகும். பாண பத்திரர் வறுமையைப் போக்கச் சேரமானுக்குச் சொக்கநாதர் எழுதியது. இது பதினோராந்திருமுறையில் முதலாவதாக அமைகிறது. கி.பி ஆறாம் நூற்றாண்டு என்பர்.

2. **காரைக்கால்அம்மையார்**

பன்னிரு திருமுறையில் காலத்தால் முந்தியவர். கி.பி ஆறாம் நூற்றாண்டு என்பர். ஐந்து என்று கூறுதலும் உண்டு. காரைக்காலில் பிறந்தமையால் இவ்வாறு அழைக்கப்பட்டார். இயற்பெயர் புனிதவதி. கணவர் பரமதத்தன். ஊர் நாகப்பட்டினம். இவர் கணவர் காரைக்காலம்மையாரின் தெய்வீகச் சக்தியைக் கண்டு இனி அவரோடு வாழ முடியாது என வணங்கி விடைபெற, கணவன் நீங்கியதால் தன் அழகை வெறுத்துப் பேய் போல் திரிந்து சுடலையில் ஆடும் பேயனாம் சிவனிடம் அன்புகொண்டு அவனைப்பாடி வடதிருவாலங்காட்டில் சிவன் நடனம் கண்டு முத்தி பெற்றார். கயிலைக்குச் சென்று அப்புண்ணிய பூமியில் தன் காலடி படக்கூடாது எனத் தலையால் நடந்தவர். சிவ பெருமானால் 'அம்மையே' என அழைக்கப்பட்ட மாதரசி. 'பிறவாமை வேண்டும்" என வரம் வேண்டிய அம்மையார். இவர் பாடியன நான்கு நூல்கள். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் - 2 திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி, மொத்தம் 148 பாடல்கள். அற்புதத் திருவந்தாதி அந்தாதித் தொடையில் அமைந்த 101 வெண்பாக்களைக் கொண்டது. இவர் காலத்தால் முந்தியவர் என்பதற்கேற்ப இவரது பதிகங்கள் மூத்த திருப்பதிகங்கள் என வழங்கப்படுகின்றன. சம்பந்தருக்கும் முந்தியவர். ஏனெனில் சம்பந்தர் திருவாலங்காட்டிற்க வந்தபொது அங்கும் காரைக்காலம்மையார் பெருமை அறிந்து அந்தப் பகுதியில் தாம் காலால் நடப்பதா என நினைத்து உள்ளே செல்லாது நடையனூரிலேயே தங்கிவிட்டதாகக் கூறுவர். எனவே பன்னிருதிருமுறைகள் பாடியோரில் காலத்தால் முந்தியோர் இவரும் திருமூலரும் எனலாம்.

சைவ ஆலயங்களில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களில் 62 பேர் நின்ற கோலத்தில் இருக்க இவர் மட்டுமே அமர்ந்த கோலத்தில் இருக்கும் சிறப்புப்

பெற்றவர். இவர் பாடல்களில் சிவனின் ஆடற்சிறப்பும், சிவன் ஆடும் சுடலையின் சிறப்பும் இடம்பெறும். சிவன் வேண்டியார்க்கு வேண்டிய வடிவில் வருபவன் என்பதை

'எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்

அக்கோலத்து அவ்வுருவே யாம்'

என அற்புதத் திருவந்தாதியில் சிவன் பெருமையை விளக்குவார்.

எல்லாம் சிவனே என்பதை

'அறிவானும் தானே; அறிவிப்பான்தானே;

அறிவாய் அறிகின்றான்தானே; அறிகின்ற

மெய்ப்பொருளும்தானே; விரிசடர்பார் ஆகாயம்

அப்பொருளுந் தானே அவன்'

எனும் பாடல் உணர்த்தும்.

**3. ஐயடிகள் காடவர்கோன்**

பல்லவ அரச மரபினர். 63 நாயன்மார்களில் ஒருவர். இவர் எழுதிய நூல் சேத்திரத் திருவெண்பாவாகும். மொத்தம் 24 பாடல்கள். பாடல்தோறும் சிவத்தலம் ஒன்றினைக் குறிப்பிடுகின்றார். இரண்டு பாடல்களில் மட்டும் சிவத்தலம் சுட்டப்படவில்லை.

**4. கல்லாட தேவநாயனார்**

கண்ணப்ப நாயனாரின் வரலாற்றைத் திருகண்ணப்பர் திருமறம் எனம் தலைப்பில் 38 அடிகளில் இணைகுறள் ஆசிரியப்பாவில் பாடியுள்ளார். கல்லாடம் எனும் நூல் எழுதியவர் இவரன்று என்பர். சங்ககாலப் பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டார்.

**5. நக்கீர தேவநாயனார்**

ஆறாம் நூற்றாண்டு. இவரைச் சங்க காலத்தில் சேர்த்துத் திருமுருகாற்றுப் படையைப் பதினோராம் திருமுறையில் சேர்த்துள்ளனர். உ.வே.சாமிநாதஜயர் அவர்களும் இவர் சங்க காலத்தவர் என்பர். இவர் எழுதிய 10 நூல்களையும் பார்க்க, திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் வேறு, இவர் வேறு எனலாம். இடைக்காலத்து

வந்தோர் பெருமை கருதிச் சங்க காலப் புலவர்களின் பெயர்களை வைத்துக்கொண்டனர் என்பதே உண்மையாகும். (எ.கா. கல்லாடதேவன், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர்) திருமுருகாற்றுப்படை நீங்கலாக இவர் பாடிய ஏனைய ஒன்பது நூல்கள். 1. கைலை பாதி காளத்தி பாதியந்தாதி 2. திருஈங்கோய்மலை எழுபது 3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, 4. திருவெழு கூற்றிருக்கை, 5. கோபப் பிரசாதம், 6. காரெட்டு (கார்-மேகம்), 7. போற்றிக் கலிவெண்பா, 8. திருக்கண்ணப்பதேவர் திருமறம் 9. பெருந்தேவபாணி

இவர் பாடல்களில் ஒரு கருத்து மாறுபட்டுள்ளது. சிவனின் திருமுடி காணப் பிரமன் அன்னமாய்ச் சென்றதாக அனைத்துப் புராணமும் கூற இவர் கழுகாய்ச் சென்றதாய்க் கூறுகின்றார்.

6. கபிலதேவநாயனார்

இவர் காலம் 11ஆம் நூற்றாண்டு. கபிலர் பெயரை வைத்துக்கொண்டார். அவர் பாடியவை மூன்று நூல்கள்

1. மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை – 200 பாடல்கள் விநாயகர் தொடர்பானது
2. சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை – 37 பாடல்கள்
3. சிவபெருமான் திருவந்தாதி

**7. பரணதேவநாயனார்**

கி.பி. 10ஆம் நூற்றாண்டு சிவபெருமான் பெயரால் இவர் பாடிய அந்தாதி ‘சிவபெருமான் திருவந்தாதி’ யாகும். 101 வெண்பாக்கள். இவர் பாடல்களில் சிவனின் பல்வேறு சிவத் தலங்கள் சுட்டப்படுகின்றன. அடியார்பெருமை பேசும் நூல் இதுவாகம்.

**8. இளம்பெருமானடிகள்**

இவர் பாடியது சிவபெருமான் திருமும்மணிக்கோவை. 30 பாடல்கள். இவரும் துறவியாக இருக்கலாம் என்பர். இவர் காலம் நம்பியாண்டிார் நம்பிக்கு முற்பட்டது என்பர்.

**9. அதிரா அடிகள்**

கி.பி.ஏழாம் நூற்றாண்டு. அடிகள் என்பதால் இவர் துறவியாக இருக்கலாம். இவர் பாடிய நூல் 'மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை'. முப்பது பால்கள் பாடியதாகக் கூறுவர். இன்று கிடைப்பது 23 பாடல்கள்

**10. சேரமான் பெருமாள் நாயனார்**

சேரநாட்டு மன்னர் மரபினர். 63 நாயன்மார்களில் ஒருவர். சுந்தரரின் நண்பர். சுந்தரர் அருளால் குதிரையின் காதில் ஐந்தெழுத்து ஓதி அதன் வலிமையால் சுந்தரரோடு கயிலை செல்லும் பேறு பெற்றவர். திருநீறு அணிந்தார் மாட்டு அன்பு கொண்டவர். இவர் பாடிய நூல்கள் மூன்று.

1. திருக்கயிலாய ஞான உலா (முதல் உலா நூல் ஆகையால் இது ஆதி உலா எனப்படும்)
2. பொன்வண்ணத்தந்தாதி
3. திருவாரூர் மும்மணிக்கோவை

**11. பட்டினத்தடிகள்**

இயற்பெயர் திருவெண்காடர். காலம் 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. காவிரிப் பூம்பட்டினத்து வணிகர். திருவொற்றியூரில் சமாதியானவர். இவர் பாடியன.

1. கோயில் நான்மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக்கோவை
3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
5. திருவொற்றியூர் ஒருபா ஒருப.ஃது

**12. நம்பியாண்டார் நம்பி**

இராசராசனின் வேண்டுகோளை ஏற்று மூவர் தேவாரத்தோடு, பின்தோன்றிய நூல்களையும் சேர்த்து 11 திருமுறைகளைத் தொகுத்தளித்தவர். இவரைத் தமிழ் வியாசர் என்பர். தொகுத்ததின் காரணமாகப் பெற்ற பெயர் இதுவாகும். இவர் ஊர் தில்லையையடுத்த திருநாரையூர். அந்தண மரபு. இவர் இயற்றிய ஒன்பது நூல்கள் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. இவ்வொன்பது நூல்களில் ஒன்று

திருத்தொண்டர் திருவந்தாதி. இந்நூலே பெரியபுராணத்திற்கு முதல் நூலாக அமைந்து அடியார் பெருமை பேசுவது. திருமுறையைத் தொகுப்பித்தவன் முதல் இராசராசன் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

**பன்னிரண்டாம் திருமுறை**

சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் 12 ஆம் திருமுறையாகும். நம்பியாண்டார் நம்பி 11 ஆம் திருமுறை வரையில் தொகுத்தார். பின் வந்தோர் பெரிய புராணத்தையும் இணைத்துத் திருமுறைகள் பன்னிரண்டாகக் கண்டனர். (காப்பியங்கள் பகுதியில் பெரிய புராணம் பற்றி விரிவாகக் காணலாம்.)

**வைணவ இலக்கியங்கள்**

சைவப் பெரியோர்களின் பாடல்கள் பன்னிருதிருமுறை என வழங்கப்படுவது போன்று, வைணவப் பெரியோர்களின் பாடல்கள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் எனப் போற்றப்படுகின்றது. வைதீக சமயம் எனும் பொது நிலையிலிருந்து பிரிந்தவை சைவமும், வைணவமும், திருமாலைத் தெய்வமாகப் போற்றிப் பரவுகிறது வைணவம்.

பக்தி இலக்கிய காலத்தில் ஆழ்வார்களின் பாடல்களால் வைணவம் புகழ் பெற்றுப் பரவிய போதிலும், தொல்காப்பியர் காலத்திலேயே திருமால் மாயோன் என முல்லை நிலக் கடவுளாகப் போற்றப்படுகின்றான். பரிபாடலும் மாயோன் பெருமை பேசும். புறநானூறும் கலித்தொகையும் திருமால் பெருமை சுட்டும்.

பல்லவர் காலத்தில் வைணவமும் சைவமும் போட்டி போட்டு வளர்ந்தன. இரண்டும் சமண பௌத்த சமயங்களின் செல்வாக்கினைக் குறைத்தன. வைணவ இலக்கியங்கள் பக்திப் பாசுரம் என்ற அளவில் அமையாது. காப்பியங்களாகவும், பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்களாகவும் வளர்ந்து தமிழுக்குப் பெருமை சேர்த்தன.

வைணவப் பாசுரங்களைப் பாடிய ஆழ்வார்கள் 12 பேர் கி.பி.700 தொடங்கி 900 வரை இவர்கள் காலம் எனலாம். முதல் மூன்று ஆழ்வார்கள் காலத்தால் முந்தியவர்கள். கோயில் தோறும் சென்று நாயன்மார்கள் போன்று இசையோடு பாடல் பாடித் திருமாலைப் பரவியுள்ளனர். திருமாலுக்குரிய வைணவத் தலங்களுக்குச் சென்று பாடியுள்ளனர். ஆழ்வார் பாடல்களில் காணலாகும் உணர்ச்சிப் பெருக்கை ஏனைய பக்திப் பாடல்களில் காண்பது அரிதேயாகும்.

**நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்**

| எண் | நூற்பெயர் | பாடியோர் – பிறப்பு | பாடல் எண்ணிக்கை | பிற செய்திகள் |
|---|---|---|---|---|
| 1. | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் ஐப்பசி,திருவோணம் | 100 | பொய்கையில் பிறந்தவர், காஞ்சிபுரம் |
| 2. | இரண்டாம் திருவந்தாதி | பூதத்தாழ்வார் ஐப்பசி, அவிட்டம் | 100 | பிறப்பு மாமல்லபுரம் |
| 3. | மூன்றாம் திருவந்தாதி | பேயாழ்வார் ஐப்பசி, சதயம் | 100 | மயிலாப்பூர், மேற்கண்ட மூவரும் முதல் ஆழ்வார்கள் மூவர் என்பர். |
| 4.<br>5. | நான்காம் திருவந்தாதி<br>திருச்சந்த விருத்தம் | திருமழிசையாழ்வார் தை, மகம் | 96<br>120 | சந்தப்பாக்கள் தொடங்கியவர் சித்தர். திருமழிசை ஊர். திருமாலைத் தன் கட்டளைக்கு இசைய வைத்தார். |
| 6. | திருவிருத்தம் | நம்மாழ்வார் வைகாசி | 100 | ஆழ்வார் திருநகரி. மாறன், பராங்குசன் எனப் பலபெயர். இவரது திருவாய்மொழி திராவிட வேதம் எனப்படும். இதற்குரிய உரைகள் வியாக்கியானங்கள் என்பர். |
| 7. | திருவாசிரியம் | | 7 | |
| 8. | பெரியதிருவந்தாதி | | 87 | |
| 9. | திருவாய்மொழி | | 1102 | |
| 10. | திருப்பதிகம் | மதுரகவியாழ்வார் சித்திரை, சித்திரை | 11 | இவர் பாசுரத்தைக் கண்ணி நுண் சிறுதாம்பு என்பர். திருமாலைப் பாடாது நம்மாழ்வாரை மட்டும் பாடியவர். |
| 11. | திருப்பல்லாண்டு | பெரியாழ்வார் ஆனி, சுவாதி | 137 | இயற்பெயர் விஷ்ணுசித்தர். ஸ்ரீவில்லிபுத்தூர். ஆண்டாளின் வளர்ப்புத்தந்தை. பிள்ளைத்தமிழ் இலக்கிய முன்னோடி |
| 12. | பெரியாழ்வர் திருமொழி | | 460 | |
| 13. | நாச்சியார் திருமொழி | ஆண்டாள் (தோட்டத்தில் கண்ணெடுத்த குழந்தை எனவே மாதம் நட்சத்திரம் | 143 | சூடிக்கொடுத்த நாச்சியார். திருமாலைப் பதியாக அடையவிரும்பியவர். இவரது திருப்பாவை பாடாத சிறுமியர் இல்லை நாச்சியார் |
| 14. | திருப்பாவை (சங்கத்தமிழ் மாலை முப்பது) | | 30 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தெரியவில்லை | | திருமொழியில் திருமணச் சடங்குகள் மிகுதியாகத் தருகின்றார். |
| 15. | பெரிய திருமொழி | திருமங்கையாழ்வார் கார்த்திகை | 1084 | திருக்குறையனூர், கள்ளர்மரபு, சிற்றரசர் வழிப்பறி செய்து திருமாலால் திருந்தியவர். இவரது ஆறுநூல்களும் வேதங்களின் ஆறு அங்கம் என்பர். திருவரங்கனிடம் ஈடுபாடு. |
| 16. | திக்குறந்தாண்டகம் | | 20 | |
| 17. | திருநெடுந்தாண்டகம் | | 30 | |
| 18. | திருவெழுகூற்றிருக்கை | | 1 | |
| 19. | சிறிய திருமடல் | | 1 | |
| 20. | பெரிய திருமடல் | | 1 | |
| 21. | திருமாலை | தொண்டரடிப்பொடி ஆழ்வார் மார்கழி, கேட்டை | 145 | திருவரங்கனுக்குச் சேவை செய்தவர். திருவரங்கனை மட்டுமே பாடியவர். இயற்பெயர் விப்ரநாராயணன். திருப்பள்ளியெழுச்சியில் இவர் அரங்கனை வேண்டுவது உள்ளத்தை உருக்கும். |
| 22. | திருப்பள்ளி எழுச்சி | | 10 | |
| 23. | திருப்பதிகம் | திருப்பாணாழ்வார் கார்த்திகை, ரோகிணி பாணர்குலம் | 10 | அமலனாதிபிரான் எனத் தொடங்கும் 10 பாசுரங்கள். சாதி பக்திக்கத் தடை இல்லை எனத் திருமால் இவர் மூலம் உணர்த்தினார். ஊர் உறையூர் |
| 24. | பெருமாள் திருமொழி | குலசேகர ஆழ்வார் மாசி, புனர்பூசம் | 105 | சேரமன்னர் மரபு. இராமபக்தி மிக்கவர் காலம் கி.பி.10ம் நூற்றாண்டு. திருவேங்கடத்தானும் வித்துவக்கோட்டம்மானும் இவர் கவிதைகளில் என்றும் அருளாட்சி செய்வர். |

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் பெருமையை நாம் அறியகாரணமானவர் நாதமுனிகள் ஆவர். நாதமுனிகளின் காலம் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு என்பர். சிற்றிலக்கிய வகைகளில் இடம்பெறும் மாலை, மடல், அந்தாதி, பிள்ளைத்தமிழ், தூது

போன்ற இலக்கியங்களுக்க இவை முன்னோடி எனலாம். பழைய வெண்பா, பத்து ஆழ்வார்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. ஆண்டாளையும், மதுர கவியாழ்வாரையும் விட்டுவிடுகிறது. மதுரகவி ஆழ்வார் திருமாலைப் பாடாத காரணத்தாலும், ஆண்டாள் பெண் என்பதாலும் நீக்கப்பட்டிருக்கலாம் என்பர்.

நாலாயிரம் பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் ஆயிற்று. மொத்தம் 24 நூல்கள் இடம் பெற்றுள்ளன. பாடியோர் 12 பேர். நான்கு பிரிவாக இதனைப் பகுப்பர்.

**பன்னிரு ஆழ்வார்கள்**

**1. பொய்கையாழ்வார்**

பன்னிரு ஆழ்வார்களில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் காலத்தால் முற்பட்டவர்கள் எனக்கருதி முதல் ஆழ்வார்கள் எனப் போற்றுவர். காலம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு. பொய்கையில் ஐப்பசி திங்கள் திருவோண நாளில் திருமாலின் பாஞ்ச சந்நியம் எனும் சங்கின் அம்சமாக பிறந்தவர். ஊர் காஞ்சிபுரம். இவர் பாடியது முதல் திருவந்தாதி. களவழி நாற்பது பாடிய (பதினெண்கீழ்க்கணக்கு நூல்) பொய்கையாரும் இவரும் ஒருவரே என்று மு. இராகவையங்கார் கூறுவர் இக்கருத்து ஏற்புடைத்தன்று.

இவர் திருவரங்கம், திருவிண்ணகரம், திருவேங்கடம், திருவெ.்.கா திருக்கோவலூர் ஆகிய இடங்களில் உறையும் திருமாலின் பெருமையைப் பாடியுள்ளார். அந்நாதித் தொடைக்கு முன்னோடியாக இவர் பாடல்கள் அமைகின்றன. 100 பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று

“வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் -செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று”

திருமாலைச் சுடராழியான் எனப் பரவுகின்றார்.

## 2. பூதத்தாழ்வார்

திருமாலைப் பூதம் எனப் பல இடங்களில் பாடியுள்ளமையால் இப்பெயர் பெற்றார். திருக்கடல் மல்லையூரில் (மாமல்லபுரம்) ஐப்பசி திங்கள் அவிட்ட நாளில் திருமாலின் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றினார். பொய்மையாழ்வார் பிறந்த மறுநாள் இவர் பிறந்ததாகக் கூறுவர். திருவேங்கடம், திருவரங்கம், திருப்பாடகம், திருவத்தியூர், திருக்குடமூக்கு ஆகியன இவர் பாடிய தலங்களாகும். இவர் இயற்கை அழகைப் பக்தியோடு இணைத்துப் பாடுகின்றார். தமிழ் மீது இவர் கொண்ட பற்றினைத் திருமாலை நோக்கிப் பாடும் பாடலில் காணமுடிகிறது.

"இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்

பெருந்தமிழில் நல்வேன்பெரிது"

பாடுவர். மேலும் தன் தமிழை 'ஞானத்தமிழ்' என்பர்.

பொய்கையார் 'வையந் தகளியா' எனத் தொடங்க இவர் தம் பாடலை 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக....' எனத் தொடங்ககின்றார். இவர் பாடியது இரண்டாம் திருவந்தாதி. 100 பாடல்கள் உள்ளன.

## 3. பேயாழ்வார்

பிறந்தது மயிலாப்பூர். திருமால் மீது மயக்கம் வருமளவிற்கு மிகுதியான பக்தி கொண்டு பேய் போல் ஆடிப்பாடித் திரிந்ததால் இப்பெயர் பெற்றார். ஐப்பசி திங்கள் சதய நாளில் பிறந்தார். கி.பி.6ஆம் நூற்றாண்டு என்பர். இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதி. 100 பாடல்கள். திருக்கோவலூரில் இம்மூன்று ஆழ்வார்களும் சந்தித்துத் திருமால் பெருமையைப் பாடியதாகக் கூறுவர். இங்குத் திருமாலின் கோலத்தைப் பாடும் பாடல் நயமிக்கது.

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்

அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்

பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்

என்னாழி வண்ணன்பால் இன்று'

எனப் பாடுகின்றார். ஆழ்வார்களில் வைணவம் சைவம் என்ற வேறுபாடின்றி திருமாலோடு சிவனையும் இணைத்துப் பாடிய பெருமைக்குரியவர். இவர் சிவன் கோலத்தையம் இணைத்துத் திருமாலாயக் காண்கிறார்.

‘தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்

சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்

திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு

இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து’

எனக் காணும் நிலை மகிழ்ச்சிக்குரியது.

**4. திருமழிசையாழ்வார்**

பிறந்த ஊர் தொண்டைநாட்டு திருமழிசை. தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் பிறந்தவர். சக்கரத்தின் அம்சம் என்பர். பெற்றோரின்மையால் தாழ்ந்த குலத்தில் வளர்ந்தார் என்பர். பத்திசாரர் என்றொரு பெயருண்டு. கி.பி.ஆறாம் நூற்றாண்டு. முதல் மூன்று ஆழ்வார்களும் பிற சமயத்தைக் கடிந்துரைக்கவில்லை. ஆயின் இவ்வாழ்வார் பிற சமயத்தாரைச் சாடுகின்றார்.

சித்தர் சிவவாக்கியர் இவர் என்பர். இக்கருத்து ஆய்விற்குரியது. இவர் வீரவைணவர். சமண பௌத்தர்களை மட்டுமின்றிச் சைவர்களையும் இழிவாகப் பேசுகின்றார்.

‘அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர் சிறியார் சிவப்பட்டார்’

என்பது இவரது வாக்காகும். இவர் பாடல்களில் திருமாலின் திருவிளையாடல்களும் அவதாரங்களும் இடம் பெறுகின்றன.

இவரது சீடர் கணிகண்ணன. சீடருக்காத் திருமாலையே காஞ்சிபுரத்திலிருந்து புறப்படும்படிக் கூறி மன்னன் வேண்ட மறுபடியும் காஞ்சிக்கு வரும்படி கூறிய மணிவண்ணனாம் திருமாலைப் பற்றிப் பாடிய பாடல்

“கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி

மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம் - துணிவுடைய

செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் : நீயுமுன்றன்

பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்”

சுருட்டிக்கொள் என்றவுடன் திருமால் புறப்படுகின்றான். பைந்நாகப் பாய் விரித்துக் கொள் என்றவுடன் திருமால் திரும்பி வருகின்றான். அடியாரின் அன்பிற்கு ஆண்டவன் கட்டுப்படுதலை இந்நிகழ்ச்சி விளக்கும்.

**5. நம்மாழ்வார்**

காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. பாண்டிய நாட்டின் திருக்குருகூர் பிறந்த ஊர். இவர் தாயார் உடையநங்கையார் ஊர் குமரி மாவட்டத்தில் நாஞ்சில் நாட்டில் தோவாளை வட்டத்தில் அமைந்துள்ள திருப்பதிசாரம் (திருவெண்பரிசாரம்). இவ்வூர் 108 திருப்பதிகளுள் ஒன்று. அங்குள்ள திருமாலை ‘என்திருவாழ்மார்பன்’ என உரிமையுடன் போற்றுகின்றார். நம்மாழ்வார். திருக்குருகூர் இன்று ஆழ்வார்த்திருநகரி என்ற வழங்கப்படுகிறது. வேளாளர் மரபு. தந்தை காரியார். தாய் உடைய நங்கை. பிரமாதி ஆண்டு வைகாசித்திங்கள் பௌர்ணமியில் உதித்ததாகக் கூறுவர்.

16 ஆண்டுகள் புளிய மரத்தடியில் இருந்ததாகக் குரு பரம்பரைக் கதை கூறும் பிறந்தவுடன் பேசாது ஊமையாக இருந்தவர். இவருக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. ஒவ்வொன்றும் காரணப் பெயராகவே அமைகின்றது. சடம் எனும் வாயுவைச் சினந்தமையால் ‘சடகோபர்’ உரிமை காரணமாக ‘நம்மாழ்வார்’ உலகியலுக்கு மாறாக இருந்தமையின் ‘மாறன்’ இவர் யாத்த நூலின் பெருமை கருதி ‘திராவிட சிசு’ பிற மதங்களாகிய யானைக்கு அங்குசம் போன்று விளங்கியமையால் ‘பராங்குசர்’ என அழைக்கப்பட்டார்.

திரு.வி.க. நம்மாழ்வாரைப் பெரிதும் புகழ்வர். ‘இவர் பிறந்த தமிழ்நாட்டை மனத்தால் நினைத்து, வாயால் வாழ்த்தி, கையால் தொழுகிறேன்’ என்பர். நம்மாழ்வார் குன்றினை நெடுமாலாகவே காண்பர். மழையைத் தன்னை ஆறும் நாராயணன் வருகையாகவே காண்பர்.

நம்மாழ்வார் திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என நான்கு நூல்கள் இயற்றியுள்ளார். இவற்றை வைணவர்கள் சதுர் (நான்கு) வேதமாகப் போற்றுவர். இவற்றுள் திருவாய்மொழி வைணவர்கள் நாளும் ஓதும்

பெருமை பெற்றது. ‘திராவிட வேத சாரம்’ செந்தமிழ் வேதம் ‘ஆன்றதமிழ்மறைகள் ஆயிரம்’ என்றெல்லாம் போற்றப்படும். இதனைத் தந்தமையால் இவா் திராவிட சிசு எனப் போற்றப்படுவா். தென்கலை வைணவா்கள் திருவாய் மொழியை மந்திரமாகக் கருதுவா். பெரியவா்ச்சான்பிள்ளை திருவாய்மொழிக்கு விளக்கமான தத்துவார்த்த உரையெழுதியுள்ளார். எழுத்தெண்ணிக்காக்கப்படும் நூல் இதுவாகும். இதனைச் சாமவேதத்தின் சாரம் என்பா். நம்மாழ்வாா் பாடியவை திருவாய்மொழி எனவும் ஏனையொா் பாடியவை திருமொழி என்றும் அழைக்கப்படுதலே இவா் பெருமையை விளக்கும் தன்மையது.

நம்மாழ்வார்க்குக் காணுமிடமெல்லாம் கண்ணணாகவே காட்சி தருகிறது. அசையும் பொருள் அசையாப்பொருள் அனைத்திலும் அவனையே காண்கிறார். உண்ணும் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம் பெருமான் என்கிறார். இவா் பாடல்களில் திருவாசகம், தேவாரம் போன்ற திருமுறைகளின் தாக்கத்தைக் காண முடிகிறது. அப்பா் போன்று சாதியைச் சாடும் வேளாளா் இவா். (திருவாய்மொழி - 2971) எங்கும் திருமாலைக் காணும் அவா் பாடல்.

“பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவி மலரென்றும் காண்டொறும் - பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான்உருவே’

என்கிறார். பாவியேன் என்று தன்னை அழைப்பது மாணிக்கவாசகரை நினைவூட்டுவது.

அகத்துறைப் போக்கில் அன்னத்தைத் தூதுவிடும் காதல்மிகு பக்திப்பாடலும் திருவாய்மொழியில் அமைந்துள்ளது.

‘.....................

திரியென் இனி உன் சரணம் என் சன்மம் களையே

..... இணைந்தாடும் அன்னங்காள்

கடலின் மேனிப்பிரான் கண்ணனை நெடுமாலைக்கண்டு

உடலம் நைந் தொருத்தியுருகும் என்று உணர்த்துமினே'

எனப்பாடும் பாடல் நயமிக்கது. பன்னிரு ஆழ்வார்களில் பெருமைமிக்க நம்மாழ்வாரின் ஆழ்வார்த்திருநகரியைக் கண்டபோது இராமாநுசர் பெற்ற இன்பம் யாது? அவர் பாடலே பதிலாக அமையும்.

'இதுவோ திருநகரி ஈதோ பொருநை

இதுவோ பரமபதத்து எல்லை - இதுவோதான்

வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை

ஓதும் சடகோபன் ஊர்

ஆழ்வார்த்திருநகரியை அடையும் ஒவ்வொரு வைணவரும் பெறும் இன்பம் இதுவேயாகும்.

**6. மதுரகவியாழ்வார்**

அந்தணர்குலம். ஊர்திருக்கோவலூர். பாடல்களின் இனிமை கருதி மதுரகவி எனப்பட்டார். வடநாட்டுத் தலங்களைக் காணச்சென்ற பொது அயோத்தியில் ஒரு சோதி தெரிய அதைப் பின்பற்றி வந்து நம்மாழ்வாரின் திருக்குருகூர் அடைந்தார். அங்கு யோக நிலையில் இருந்த நம்மாழ்வார்க்கு அடிமையாகி, அவரையே தெய்வமாகக் கண்டு பாடினார். திருமாலைப் பாடாது திருமாலின் தொண்டர் நம்மாழ்வாரை மட்டும் பாடிய ஒரே ஆழ்வார் இவரே. இதனால் இவரை பன்னிரு ஆழ்வார்களில் சேர்க்காது விட்டனர் என்பர்.

இவர் நம்மாழ்வாரைப் பாடிய பாசுரம் கண்ணி நுண் சிறு தாம்பு எனப்படும். பத்துப்பாடல்களே உள்ளன. அப்பாடல்களில்

'........... தென்குருகூர் நம்பியென்றக்கால்

அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே'

எனவும்

'............

தேவுமற் றறியேன் குருகூர் நம்பி

பாவி னின்னிசை பாடித் திரிவனே'

எனவும் பாடுவர். திருமால் உட்பட நம்மாழ்வார் தவிர வேறு தெய்வமில்லை எனும் போக்கில் இவர் பாடல்கள் அமைகின்றன.

வேளாளர், அந்தணர் நோக்கில் அப்பர் சம்பந்தர் போன்று, அதனினும் மேலாக அந்தணர் மதுரகவி, வேளாளர் நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கருதியது இறையன்பு சாதி கடந்தது என்பதை விளக்கும்.

**7. குலசேகராழ்வார்**

ஊர் திருவஞ்சைக்களம். சேர அரச மரபில் தோன்றிவர். மாசிமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர். கௌத்துவமணி அம்சம். இயற்பெயர் குலசேகரர். பெருமாளிடம் கொண்ட ஈடுபாட்டால் குலசேகரப் பெருமாள் என்றும் அழைப்பர். திருவரங்கத்துத் திருமாலிடம் கொண்ட அன்பினால் அரசைத் துறந்து அடியார் சேவையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர். அதற்காக அரசுதுறந்தமையைத் தம்பாடலில் ‘கம்பமதயானைக் கழுத்தகத்தின் மீதமர்ந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்’ எனக் கூறுவதால் உணரலாம்.

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு. வடமொழியிலும் தென் மொழியிலும் சிறந்த புலமை பெற்றவர். அரங்கனைப் போன்று இராமனிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இராமனைப் பற்றிய சமயச் சொற்பொழிவுகளை விரும்பிக் கேட்டு, அதில் ஒன்றிப் போனவர். தமிழில் பெருமாள் திருமொழியும் (105 பாடல்கள்) வடமொழியில் முகுந்தமாலையும் இவர் இயற்றியவை. பாடல்களில் தம்மைக் கோழிக்கோன் கூடல் நாயகன், கொல்லிக் காவலன் என்பர். கொல்லி நாட்டை ஆண்டதாகக் கூறுவர். இவர் வித்துவக் கோட்டம்மானையும், திருவேங்கடத்தானையும் பாடிய பாசுரங்கள் நெஞ்சை நெகிழ்விப்பன. ‘திருவேங்கட மலையின் படியாகக் கிடந்து திருமாலின்ப வள வாய்’ காண விரும்புகிறார். எனவே ஒவ்வொரு வைணவத் திருகோவிலிலும் இறைவனின் கருவறைக்கு முன் உள்ளபடி ‘குலசேகரன் படி’ என்ற பெயரில் வழங்கப்படுகிறது. அதுபோல் ‘வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல்’ வித:துவக் கோட்டம்மானிடம் தான் அன்பு கொண்டு

இருப்பதாகக் கூறுகின்றார். என்னதுயர் தரினும் வித்துவக் கோட்டம்மானே உனையன்றி எனக்குச் சரணில்லை என்கிறார்.

'தருதுயாமி தடாயேலுன் சரணல்லால் சரணில்லை

விரைகுலுவு மலர்ப்பொழில் சூழ்வித்துவக் கோட்டம்மானே

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன்

அருள்நினைந்தேயழும் குழவி அதுவே போன்றிருந்தேனே'

எனத் தன் நிலையைக் கூறுகின்றார்.

இவர் பாடிய தயரதன் புலம்பல் இலக்கிய நயம் மிக்கது. அதில் இராமனைத் தாலாட்டும் பாடல் படிக்கப் படிக்க இன்பம் பயப்பது.

'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே

தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்

கன்னிநன்மா மதில்புடைசூழ் இராகவனே தாலேலோ'

என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ'

என நாமும் சேர்ந்து தாலாட்டும் இன்பம் பயப்பது.

திருவரங்கம், திருக்கண்ணபுரம், தில்லை ஆகிய தலங்களுக்கு மங்களாசாசனம் செய்துள்ளார். திருவரங்கத்தின் மூன்றாம் மதிலை இவர் கட்டியதாகக் கூறுவர்.

**8. பெரியாழ்வார்**

திருவில்லிப்புத்தூரில் பிறந்தவர். ஆனித்திங்கள் சுவாதி நாள் அம்சம் கருடாம்சம். இவருக்கு 'விஷ்ணுசித்தன்' 'பட்டர்பிரான்' என்னும் பெயர்களும் உண்டு. இவர் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு. பாடிய நூல்கள் இரண்டு 1. திருப்பல்லாண்டு 2. பெரியாழ்வார் திருமொழி. கண்ணனைக் குழந்தையாக்கி இவர் பாடிய பாடல்கள் பின்னர் பிள்ளைத் தமிழுக்கு அடியெடுத்துக் கொடுத்தது என்பர்.

கண்ணனைத் தாலாட்டும் போது இவர் யசோதையாகவே மாறி விடுகின்றார். கண்ணன் ஊதும் குழல் கேட்டு 'புவியுள் நான் கண்டதோர் அற்புதம்' எனக் கூறி ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றார். தன்னுடைய பாற்கடலைவிட்டுத் திருமால் தன் நெஞ்சில் இருப்பதாகக் கருதிப் பெரியாழ்வார்

‘தனிக்கடலே! தனிச்சுடரே! தனியுலகே! என்றென்று

உனக்கிடமா யிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே’

எனப் பரவசமாகிப் பரவுகின்றார். கண்ணனின் பாத கமலங்களைக் காண வாரீர் பவள வாயினைக் காண வாரீர் என அழைக்கின்றார். பொழுதிருக்கும் காலத்திலேயே அரங்கனை வணங்கிவிடுங்கள் என்கிறார். கண்ணனைத் தாலாட்டும் பாடல் நம்மையும் தாலாட்டும். அந்தத் தாலாட்டு இதோ

‘மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி

ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுதொட்டில்

பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்

மாணிக்குறளளே! தாலேலோ!

வைய மளந்தானே! தாலேலோ!’

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளே ஆண்டாள்.

**9. ஆண்டாள்.**

திருமாலுக்கு ஆட்பட நினைத்தமையாலும் திருமாலால் ஆட்கொள்ளப் பட்டமையாலும் ஆண்டாள் ஆயினாள் என்பர். காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு துளசிப் பாத்தியில் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டவர். ஆடித்திங்கள் பூர நட்சத்திரத்தில் தோன்றிய இவர் பூமகள் அம்சம் என்பர். கோதை இயற்பெயர். பின்னர்க் கோதை நாச்சியார் எனவும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனவும், பெரியாழ்வார் பெற்றெடுத்த பைங்கொடி எனவும் போற்றப்படுவர்.

திருமாலைக் கணவனாக அடைய விரும்பியவர். இவர் பாடிய நூல்கள் திருப்பாவையும் (30 பாடல்கள்), நாச்சியார் திருமொழியும் (143 பாடல்கள்) இரண்டுமே பத்திச் சுவை மிக்கன. மார்கழி மாதத்தில் திருமாலை அடையும் வகைகளைப் பெண்களுக்கு நீராடும் வழியாக எடுத்துரைக்கும் நூல் திருப்பாவை. மார்கழி முடியப் பெண்களுக்கு வழிதரும் தை பிறக்கும். ஆண்டாள் கண்ணனிடம் கொண்ட காதல் உள்ளத்தைக் கனவு உள்ளத்தை நாச்சியார் திருமொழி எடுத்துரைக்கும். இந்நூல்

அக்காலத் திருமணச் சடங்குகளை நன்கு எடுத்துரைக்கின்றது. திருமணத்தின்போது அம்மி மிதிக்கும் சடங்கை முதன் முதலில் கூறுபவர் ஆண்டாளே.

பார்க்கும் காயும், கனியும் திருமாலாகவே ஆண்டாளுக்குக் காட்சி தருகின்றன. கண்ணன் ஊதும் சங்கைப் பார்த்து ஆண்டாள் காதலால் புலம்பும் பாடல் சங்க இலக்கிய அகப்பாடல்களை விஞ்சி நிற்பது.

'கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?

திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித் திருக்குமோ?

மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே.'

**10. தொண்டரடிப் பொடியாழ்வார்**

இவர் ஊர் சோழநாட்டுத் திருமண்டங்குடி. குலம், முன் குடுமிச் சோழிய அந்தணர் குலம். மார்கழித் திங்கள் கேட்டை நாளில் திருமாலின் வனமாலை அம்சமாக அவதரித்தவர். இயற்பெயர் விப்ரநாராயணன். காலம் 9ஆம் நூற்றாண்டு. திருமங்கையாழ்வார் காலத்தவர்.

திருவரங்கத்தில் நந்தவனம் வைத்து அரங்கனுக்குச் சேவை செய்தார். பெரியாழ்வார் ஸ்ரீவில்லிப்புத்தூரில் செய்த சேவையை இவர் திருவரங்கத்தில் செய்தார். திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த தேவ தேவி எனும் தாசிக்கு அடிமையானார். இறைவன் அருளால் மனம் மாறித் தொண்டரடிப் பொடியாழ்வார் எனப் பக்தி உலகம் போற்றும் பேறு பெற்றார்.

இவர் பாடியவை திருமாலை, திருப்பள்ளி எழுச்சி. திருப்பள்ளி எழுச்சியில் அமைந்த இப்பாடல் சமயம் மறந்தும் போற்றுதற்குரியது. அப்பாடல் வருமாறு.

'பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்கமலச் செங்கண்

அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிய யான்போய் இந்திரலோக மாளும்

அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே'

‘திருமாலை’யிலும் அரங்கனையன்றி யாருமில்லை என்பதைத் தொண்டரடிப் பொடியாழ்வார் உருக்கமாகப் பாடுகின்றார்.

‘ஊரிலேன் காணி இல்லை உறவுமற்று ஒருவர்இல்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனெ கதறு கின்றேன்
ஆருளர்களைகண் அம்மா அரங்கமா நகருளானே.’

குலசேகராழ்வார் இவரை ‘ஆடிப்பாடி அரங்காவோ என்றழைக்கும் தொண்டரடிப் பொடி.’. எனக் குறிப்பிடுகின்றார். அரங்கனை மட்டுமே பாடியவர்.

**11. திருப்பாணாழ்வார்**

சோழ நாட்டு உறையூரில் பிறந்தவர். ஸ்ரீவத்சம் எனும் திருமருவின் அம்சமாய் நெய் வயலில் தோன்றினார். பிறந்த மாதம் கார்த்திகை. நட்சத்திரம் உரோசிணி. பாணர் குடியில் வளர்ந்தமையால் பாணாழ்வார் எனப்பட்டார். இசையில் வல்லவர். திருவரங்கம் செல்லத் தயங்கி, காவிரிக் கரையில் நின்று அரங்கனைப் பாடினார், இழிகுலத்தார் எனக் கருதி இவர்மீது கற்களை வீசினர். அரங்கன் சாரங்க முனிவர் கனவில் தோன்றித் தலையில் இரத்த காயத்துடன் காட்சியளித்து இதற்குக் காரணம் திருபாணாழ்வாரை இழிவுபடுத்தியதே. அப்போது அவர் இதயத்தில் நாமிருந்தோம் என்றார். அவரை உன் தோளில் சுமந்து ஆலயத்திற்கு அழைத்து வருக எனக் கனவில் கூறி அரங்கன் மறைந்தார். சாரங்க முனிவரும் அரங்கன் ஆணையை நிறைவேற்றினார்.

திருவரங்கன் திரு உருவைக் கண்ட திருப்பாணாழ்வார் ‘அமலனாதி பிரான்’ எனும் பாசுரம் பாடினார். இத்திருமொழி பாதாதி கேசமாக அமைகின்றது. அரங்கனைக் கண்ட கண்கள் வேறு எதையும் காணாது என்பதை,

‘அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே’

என்று உணர்ச்சிப் பெருக்கில்பாடி இறைவனோடு இரண்டறக் கலந்து விடுகிறார்.

திருமால் ஏழு உலகையும் உண்டு ஆல்இலையில் துயின்றதை ஆழ்வார்

‘ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்

ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்’

எனப் பரவுகின்றார்.

**12. திருமங்கையாழ்வார்**

பிறந்த ஊர் சோழநாட்டின் திருமங்கையில் திருவாலித் திருநகரின் அருகிலுள்ள திருக்குறையலூர். நள வருடத்தில் கார்த்திகை மாதம் வில்லின் அம்சமாய்த் தோன்றியவர். மரபு - கள்ளர் மரபு. இவர் தந்தை நீலன் படைத்தலைவர். இவரும் சோழ மன்னனின் படைத்தலைவராக இருந்து, பின்னர் மன்னன் அருளால் திருமங்கை நாட்டிற்கு அரசனாகியவர். இவர் மனைவி குமுதவல்லியார் திருமாலிடம் மிகுந்த பக்தி கொண்டவர்.

இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. திருமாலிடத்தில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக மன்னனுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பணத்தை கொடுக்காது சிறைப்பட்டு இறயைருளால் சிறை மீண்டார். கொள்ளையராய் விளங்கிய இவரைத் திருத்தத் திருமாலும் திருமகளும் வழிப்போக்கராய் வந்து நிற்க இவர், அவர்கள் பொருளைக் கொள்யைடிக்க, இறுதியில் திருமகளின் காலிலுள்ள மெட்டியைக் கூட விடமனமின்றி வாயால் கடித்தெடுத்து இறுதியில் உண்மையுணர்ந்து அருள்பெற்றவர்.

நாகப்பட்டினத்தின் புத்தவிகாரத்தைக் கொள்ளையடித்து அந்தப்பொருளால் திருவரங்கத்தன் மூன்றாம் மதில் திருப்பணியை முடித்ததாகக் கூறுவர்.

இவரது பாடல்களில் புத்த சமணர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. சங்க கால காதல் மரபுகளை இவர் பாடல்களில் காண முடிகிறது. தூது அடிப்படையில் திருமாலிடம் அன்பை யாசித்தல் நயமிக்கது. திருமங்கையாழ்வார்க்கு நீலன், பரகாலன், கலியன், கலிகன்றி எனப் பல பெயர்கள் வழங்குகின்றன.

இவர் இயற்றின 1. பெரிய திருமொழி 2. திருக்குறுந் தாண்டகம் 3. திருநெடுந்தாண்டகம் 4. திருஎழுகூற்றிருக்கை 5. சிறிய திருமடல் 6. பெரிய திருமடல் என்பன. திராவிட சிசுவாம் நம்மாழ்வாரின் திராவிட வேதமாம் நான்கு நூல்களுக்கும் ஆறங்கமாய் இந்த ஆறு நூல்களையும் வைணவர் போற்றுவர்.

நாராயணா எனும் நாமம் எவற்றையெல்லாம் தரும் என்கிறார்.

'குலந்தரும், செல்வம் தந்திடும் அடியார்

படுதுய ராயின வெல்லாம்

நிலந்தரஞ் செய்யும், நீள்விசும் பருளும்,

அருளொடு பெருநிலம் அளிக்கும்

வலம்தரும், மற்றும் தந்திடும் பெற்ற

தாயினும் ஆயினசெய்யும்

நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்

நாராயணா வென்னும் நாமம்'

ஆழ்வார் வாக்குப் பொய்க்காதன்றோ.

பெண் இன்பத்தில் திளைத்திருந்தபின் அதை வெறுத்தமையை எதுகை நயத்தோடு சாற்றுகின்றார்.

'காவியை வென்ற கண்ணாரிடம் என்

ஆவியை இழந்த பாவியாய் இருந்தேன்'

என்கிறார். திருமாலை அடையும் வழியாது மிக எளிமை எனக் கூறும் அவர் வழி யாது?

'பொய்வண்ணம் மனத்து அகற்றிப்

புலன் ஐந்தும் செலவைத்து

மெய்வண்ணம் நினைத்தவர்க்கு

மெய்ந்நின்ற வித்தகன் திருமால்'

எனக்கூறும் கூற்று உண்மையன்றோ.

இவர் தம் பாசுரங்களைச் 'சங்கமுகத்தமிழ்மாலை' 'சங்கமலி தமிழ்மாலை' எனக் கூறி தமிழோடு திருமாலை இணைக்கின்றார்.

# 4. சோழர்காலம்

விசயாலனின் உழைப்பாலும் அவன்மகன் பராந்தகனின் ஆற்றலாலும் சிற்றரசாய் விளங்கிய சோழமன்னர்கள் மாமன்னர்களாய் உருப்பெற்றுப் பேரரசைத் தோற்றுவித்தனர். பல்லவர்காலத்தில் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் போன்றோர் பக்தி இலக்கியங்களைப் பரப்பிய போதிலும் அவையாவம் சோழமன்னர்கள் காலத்திலேயே தொகுக்கப்பட்டன. சைவத்ததைப் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கக் காரணமாக இருந்த நம்பியாண்டார் நம்பியும், ஆழ்வார் பாசுரங்கள் யாவும் நாலாயிரத் திவ்யப்பிரபந்தமாக வெளிவரக் காரணமாக இருந்த நாதமுனியும் சோழர்காலத்தவரே ஆவர்.

சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய பெருங்காப்பியங்கள் இக்காலத்தில் தோன்றியவையே. ஐஞ்சிறு காப்பியங்களும், கம்பரின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரியபுராணமும் இக்காலத்திற்கு உட்பட்டவையேயாகும்.

**காப்பியங்கள்**

அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு உறுதிப்பொருளும் அமையப்பாடப் பெறும் நூல்கள் காப்பியங்கள் எனப்பட்டன. மேலைநாட்டார் காப்பியத்தை வீரயுகக் காப்பியம், கலைக்காப்பியம் என இரண்டாகப் பகுப்பர். காப்பியம்ஏ ன்பது காவியம் என்ற வடசொல்லின் திரிபு என்பர். தமிழில் பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள் என்ற பகுப்பு உள்ளது. இதுவும் வடமொழி மரபைப் பின்பற்றியது என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்களை எடுத்துரைப்பர். அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கில் ஒன்றோ அதற்கு மேலோ குறையின் அது சிறு காப்பியம் என அழைக்கப்பட்டது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் தோன்றிய தண்டியலங்காரம் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் ஆகியவற்றிற்கு இலக்கணம் கூறுகின்றது. ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமே்கலைப்பற்றி சங்கம் மருவிய காலத்தில் விரிவாகச் சுட்டப்பட்டது. ஏனைய பெருங்காப்பியங்கள் மூன்றனையும் காண்போம்.

**சிலப்பதிகாரம்**

சிலம்பு தமிழ் மொழியில் முதல் காப்பியமாகத் திகழ்கிறது. தண்டியலங்காரம் காட்டும் காப்பிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்று, இம்மண்ணில் எழுந்த காப்பியமாகும். இது குடிமக்கள் காப்பியம் முத்தமிழ்க்காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. சேரன் செங்குட்டுவனின் தம்பியான இளங்கோவடிகள், தன் அண்ணனின் நன்மைக்காக இளமையிலேயே துறவு பூண்டவர். எனினும் தமிழோடு உறவு கொண்டவர். சிலப்பதிகாரம் எனும் காவியம் தந்தவர்.

சிலப்பதிகாரம் 5001 வரிகளைக் கொண்டுள்ளது இதில் புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று காண்டங்களும் 30 காதைகளும் உள்ளன. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் இதில் காணப்படுகிறது. மேலும் மூன்று அரசு, மூன்றுநாடு, மூன்றுகற்பு என அமைந்துள்ளது. அகவல், கலிப்பா, வெண்பா, சிந்துவரி, கந்துவரி, ஊசல் வரி ஆகிய இசைப்பாக்களாலும் உரைப்பாட்டுகளாலும் எழுந்துள்ளது. ஒவ்வொரு நூலும் ஏதேனும் ஒரு சூழலாலும், காரணத்தாலும் எழுந்துள்ளது சிலம்பு. சேரன் செங்குட்டுவன் மலை வளம் காணச் சென்றவிடத்து அந்நில மக்கள் அங்கு நடந்த அதிசய நிகழ்வைக் கூறினர். ஒற்றை மார்பகமுடைய மங்கையொருவள் வேங்கை மரநிழலில் நின்றிருக்க, விண்ணிலிருந்து இறங்கி வந்த விமானத்தில் தன் கணவனுடன் சென்றாள் என்று கூறினர். அவ்வமயம் உடனிருந்த சாத்தனார் அப்பெண்மணி கண்ணகியே ஆவாள். அவள் வரலாறு எமக்கத் தெரியும். யாம் அதை உரைக்கின்றோம். இளங்கோவடிகளே, நீர் அதைக் காப்பியமாககப் படைக்க வேண்டுமென்றார்.

இளங்கோவடிகள் அவள் வாழ்வை மூவேந்தருக்கும் உரிய வகையிலும் மக்களுக்குப் பயன்படும் வகையிலும் அறன் வலியுறுத்தும் வகையிலும் இயற்றினார். இதனை,

அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்

சிலப்பதிகாரம் எனும் பெயரால்

நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் - என்று குறிப்பிட்டுள்ளார்.

நூல்களின் தொடக்கத்தில் இறைவனை வாழ்த்தி வழிபடுவது மரபாக இருந்துள்ளது. ஆனால் சிலம்பில் இயற்கையை வாழ்த்தியுள்ளார். ஞாயிறு, திங்கள், மழை ஆகியவற்றைப் போற்றிப் பாடியுள்ளார். ஐம்பெருங்காப்பியங்களில் மற்றவை யாவும் கதை மாந்தர்களின் பெயரில் நிலவ சிலம்பு மட்டும் பெண்மையின் அணிகலன் பெயரில் அமைந்துள்ளது. காவியத்தின் திருப்புமுனையை ஏற்படுத்தும் கருவியாக இது செயல்பட்டிருக்கிறது.

**கதைக்கரு**

பொன் கொழிக்கும் புகார் நகரில் கொடுக்கப் பிறந்தவன் எனப் போற்றும் மாநாய்க்கண் மகள் கண்ணகிக்கும், நிகரில்லாச் செல்வன் மாசாத்துவானின் மகனான கோவலனுக்கும் பெற்றோர்கள் திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணத்தின் போது நீல விதானம் அமைத்து அதில் முத்துக்களைக் கோர்த்து பந்தல் போட்டிருந்தனர். மணமக்களை வாழ்த்துகின்ற பெருமக்கள் முரண்பட்ட முறையிலே வாழ்த்துகின்றனர். பின்னாளில் நிகழக்கூடியதை முன்கூட்டியே உரைப்பது போல இளங்கோவடிகள் இவ்வாழ்த்தை,

காதலர் பிரியாமல் கவுக்கை நெகிழாமல்

தீதறுக என்சசின்மலர் கொடுதூவி – எனும் வரிகளால் அமைத்துள்ளார்.

திருமணம் முடிந்த பிற்றை நாளில் ஏழுநிலை மாடத்து நடுவில் கோவலனும் கண்ணகியும் இல்லறததைச் சில நாள் இன்புறவே நடத்தினர். இளங்கோவடிகள் இக்காப்பியத்தை புதுமையும், புரட்சியும் கலந்து பெண்மையைப் போற்றும் விதத்தில் அமைத்துச் சென்றுள்ளார். கண்ணகியை அறிமுகப்படுத்தும்போது போதிலார் திருவினாள் புகழுடைய வடிவு, மாதரார் தொழுதேத்தும் திறம் பெற்றவள் என்னும் காட்டுகிறார். அத்தன்மையுடைய கண்ணகியை மனையறம் படுத்த காதையில் கோவலன் தன் உள்ளம் விரும்பியபடி பலரும் பாராட்டுகிறான். இதனைக் கவிஞர் உலவாக் கட்டுரை என்றே குறிக்கின்றார். இதில் கண்ணகியைப் பற்றிக் கோவலன் கொண்டிருக்கம் எண்ணத்தை அறியமுடிகிறது. இப்பாடல் வரியானது

மாசறு பொன்னே வலம்புரி முத்தே

காசறு விரையே கரும்தே தேனே

மலையிடைப் பிறவா மணியே என்கோ

யாழிடைப் பிறவா இசையே என்கோ - எனும் விதத்தில் அமைந்திருக்கிறது. கோவலன் மாதவியின் மாலையை வாங்கி அம்மாலையே அங்குச் சென்று "விடுதல் அறியா விருப்பினன் ஆயினான்". கண்ணகியோ, கணவனைப் பிரிந்த சோகத்தில் மங்கல அணிதவிர பிறிதணி அணியாது சோகச் சித்திரமாய் விற்றிருந்தாள். புகாரில் இந்திரனுக்கு நடக்கும் விழாவின் போது கோவலனும், மாதவியும் காலாடச் சென்றனர். அங்கே மாதவியிடம் இருந்த யாழை கோவலன் வாங்கி இசை மீட்டி, நடந்தாய் வாழி காவேரி என்று காணல் வரி பாட மாதவியும் வேு குறிப்புடையவள் போலப் பாடினாள். தன் காதலி தன்னிலைத் திரிந்தாள் எனக்கருதி, கோவலன் கண்ணகியிடம் சென்றான்.

கோவலன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு மதுரை மாநகருக்குச் சென்றான். செல்லும் வழியில் கவுந்தியடிகளை வழித்துணையாகப் பெறுகிறான். அவ்வடிகளோ கண்ணகியை,

கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது

பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம் - என்று போற்றுகின்றார். மதுஜரயில் ஆயர்குடியிருப்பில் அடைக்கலமாகின்றனர். கண்ணகி தன் கணவனுக்கு உணவு சமைத்துப் பரிமாறுகிறாள். தான் இல்லாததால் இன்னலுக்கு உள்ளானாயோ என்று கோவலன் கூற, கண்ணகி தான் இழந்தவற்றைப் பட்டியலிடும்போது,

அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிரி கோடலும் இழந்த என்னை

என்று குறிப்பிடுகின்றாள். காற்சிலம்பை விற்று மாறி வருவேன் எனக் கூறிப் புறப்பட்டவன். கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு கொல்லப்படுகிறான். அத்துயரச் செய்தியறிந்த கண்ணகி நீதி கேட்க அவைக்களம் செல்கிறாள். இத்துயரம் நிகழும் என்பதை மதுரை மாநகருக்கு வரும் கோவலன் கண்ணகிக்கு முன்கூட்டியே கொடிகள் உணர்த்துவதை

போருழந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட

என்ற வரிகளைத் தற்குறிப்பேற்ற அணியில் இளங்கோ அமைத்துள்ளார். வாயிலோயே வாயிலோயே அறிவு அற்ற மன்னனின் வாயிற் காப்பவனே ஒற்றைச் சிலம்புடம் ஒருவள் வந்திருக்கிறாள் என்பதை உம் மன்னனிடம் உரை என்கிறாள். தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைத் தன் காற்சிலம்பை உடைத்து நிருபிக்கிறாள். அரசியின் சிலம்பில் இருப்பது முத்துப் பரல்கள் ஆகும். கண்ணகியின் காற்சிலம்பு மாணிக்கத்தால் ஆனது. தவறான தீர்ப்பைச் சொல்லிய வாயைத் தண்டிக்கும் வண்ணம் மாணிக்கப்பரல் மன்னனின் வாயில் பட்டதை மன்னவன் வாய் முதற் தெரித்தது மணியே" என்று இளங்கோ பாடியுள்ளார்.

பாண்டியன் தன் தவறை உணர்ந்து "யானோ அரசன், யானோ கள்வன் கெடுக என் ஆயுள்" எனக்கூறி மரணத்தைத் தழுவி வளைந்த செங்கோலை நிமிர்த்தனான். ஆற்றாச் சினம் கொண்ட கண்ணகி,

பாட்டாங்கி யானுமோர் பத்தினியே யாகில்

ஒட்டேன் அரசரோடு ஒழிப்பேன் - எனக்கூறியமைக்கு மதுராபுரித் தெய்வம் சமாதானம் செய்யும் விதமாய், இம்மாநகருக்கு ஒரு சாபமும் உண்டு ஆகவே, இந்நகர்

வெள்ளி வாரத்து ஒள் எரியுண்ண

உரைசான் மதுரையோடு அரசு கேடுறும்

என்று சுறியது. சிவனம் தனிந்த கண்ணகி தன்னிலை உணர்ந்து பாண்டியனின் நிலையைக் கண்டு அவன் செய்த குற்றம் ஏதுமில்லை என்பதை,

தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன் கோயில்

நல்விருந்து ஆயினான் நான் அவண்தன் மகள் என்று கூறுகிறாள். இந்நூல் ஒற்றுமைக்காப்பியம், தேசியக் காப்பியம், நாடகக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், மூவேந்தர் காப்பியம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. இதன் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு என்பர். கி.பி. 4 அல்லது கி.பி 5 ஆம் நூற்றாண்டு என மு. இராகவையங்கார் குறிப்பிடுகின்றார். எஸ்.வையாபுரிப்பிள்ளையோ கி.பி.8 ஆம்

நூற்றாண்டு என்பர். 5001 அடிகளில் 2146 அடிகள் மட்டுமே கதைப்பகுதி வருகிறது. 30 காதைகளில்

1-10 காதைகள் புகார் காண்டம் (10)

11-23 காதைகள் மதுரைக் காண்டம் (13)

24-30 காதைகள் வஞ்சிக்காண்டம் (7) ஆகும். இக்காப்பியத்தில் 11 வகை ஆடல்கள், 2 வகை கூத்துக்கள், இசையாசிரியன், பாடலாசிரியர், குழலாசிரியன், 3 வகைத் திரைகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. மேலும் சிலம்புவில் நாட்டுப்பாடல் வடிவங்களும் காணப்படுகின்றன. காவிரியை வாழ்த்தும் குபார் மக்கள், குரவைக் கூத்து ஆடும் ஆயர்கள் திருமாலை வழிபடுவது, சேரநாட்டுப் பெண்கள் அம்மாணைப் பாடுவது, ஊசலாடுவது ஆகிய இடங்களில் நாட்டுப்புறப் பாடல்களின் வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆந்திர அறிஞர் சி.ஆர் செட்டியவர்கள் தம்மொழியில் இத்தகைய காப்பியம் எழுவில்லையே என ஏக்கப்படுகிறார். சேக்ஸ்பிரியன் மேக்பத் போன்று சிலம்புவும் “சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு” என பாரதி பாராட்டுகின்றார்.

இளங்கோவடிகள் தம்முடைய காப்பியத்தில் சமயங்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். தான் சமண சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், பிறமதக் காழ்ப்புணர்வு இன்றி எழுதியுள்ளார். புகார் நகரில் உள்ள மக்கள் இந்திர விழாவை முன்னிட்டு அங்குள்ள அனைத்து ஆலயங்களிலும் வழிபாடு செய்தனர்.

பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்

அறுமுகச் செவ்வேன் அணிதிகழ் கோயிலும்

வாள்வனை மேனி வாலியோன் கோயிலும்

நீலமேனி நெடியோன் கோயிலும்

மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் - எனும் கோயிலுக்குச் சென்று மக்கள் வழிபாடு செய்தமையைப் பாடியுள்ளார். இந்திர விழா நடக்கும் தருணம் புறச் சமயக் கடவுளருக்கு வழிபாடு செய்து வணங்கியுள்ளனர் அருகர், புத்தர் ஆகியோரின் ஆலயத்திலும் வழிபாடு நடந்துள்ளது. இவ்விழாவைப் புகார் நகர மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு தேசிய விழாவாகக் கொண்டாடியுள்ளனர். கோவலை அறிமுகப்

படுத்துமிடத்து மாதரார் கண்டேத்தும் செவ்வேள் இவனென்று முருகக் கடவுளோடு ஒப்புமைப்படுத்துகிறார். ஆய்ச்சியர் குரவையில் கண்ணனின் பெருமையினைப் பேசுகிறார். கண்ணகியும், கோவலும் உணவு உண்ணும் காட்சியைக் கண்ணனும் நப்பின்மையும் போன்று காட்சியளிப்பதாகக் காட்டுகிறார்.

மணிமேகலை

தமிழ் மொழியின் இரட்டைக் காப்பியங்களில் ஒன்றாகத் திகழ்வது மணிமேகலையாகும். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவளாவாள். கோவலன் தன் குலதெய்வப் பெயரையே மணிமேகலைக்குச் சூட்டினான். அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் சிலம்பில் தொடங்கி மேகலையில் முடிகிறது. காப்பியத் தலைவியாக விளங்கம் மணிமேகலையின் பெயராலேயே விளங்குகிறது. இதனைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியுள்ளார். இளங்கோவடிகள் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டுள்ளமை,

இளங்கோ வேந்தன் அருளிக்கேட்ப

வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்

மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைத்துறவு

ஆறைம் பாட்டினுள் அறியவைத்தனனென் - என்ற பாயிரத்து வரிகளால் அறியப்படுகிறது. இதனை மணிமேகலைத் துறவு என்றும் அழைக்கின்றனர். விழாவறைகாதை தொடங்கி பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகளைக் கொண்டுள்ளது. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளது. 4286 அடிகளைப் பெற்றுள்ளது.

மதுரை மாநகரில் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு, கோவலன் கொல்லப்பட்டான் என்பதறிந்து மாதவி துறவு வாழ்வை மேற்கொண்டதோடு தன் மகளையும் அவ்வழியையே பின்பற்றச் செய்கிறாள். ஆசைகளையெல்லாம் அறுத்தெறிந்து புத்த பெருமானின் திருவடிகளில் அடைக்கலமாகி காவியுடுத்தியதோடு, மணிமேகலையையும், கூந்தலைக் களையச் செய்து காவியுடுத்தி துறவு வாழ்வை மேற்கொள்ளச் செய்கிறாள். மாதவியால் கிட்டாத பொருள் எல்லாம் மணிமேகலையால் கிட்டும் என எதிர்பார்க்கும் சித்ராபதியிடம் இவள் என் மகள் அன்று

மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்

திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள் - என்று கூறுகிறாள். கணவன் இறந்துவிட்டால் பத்தினி பெண்டிர் அத்துன்பத்தைத் தாங்காது இறப்பர். அங்ஙனம் நேராதாயின் ஈமத்தீயில் மூழ்குவர். இச்செயலுக்கு தடையேதும் நேரின் கைம்மை நோன்பினை நோற்பர். கண்ணகியோ அவ்வாறு இன்றி பாண்டியனைப் பழி வாங்கியுள்ளாள். அவள் மகளே மணிமேகலையாவாள். ஆதலால் தீத்தொழில் புரியாள் என்கிறாள். தந்தையின் மரணத்தை மறக்க மனம் மாற புத்தர் பெருமானின் திருவடிகளில் சரணடைந்தாள். சோழ இளவரசன் மணிமேகலையை விரும்பினான். அவனுக்கு அஞ்சி பளிங்கறையில் மறைந்து கொண்டாள். எங்கும் தேடி தன் மனம் கவர்ந்தவளைக் காணாது கவலையுடன் சென்றான். பளிக்கறையிலிருந்து வெளிவந்த மணிமேகலை புதியவன் ஒருவன் மாட்டு என் நெஞ்சம் செல்கிறது. இதுதான் காமத்தின் இயற்கையோ என தன் தோழி சுதமதியிடம் வினவுவதை,

புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்

இதுவோ அன்னாய் காமத்து இயற்கை

இதுவேயானின் கெடுகதன் திறம் - என்று சாத்தனார் பாடியுள்ளார். மனம் தடுமாறும் மணிமேகலையை, மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திற்கு எடுத்துச் சென்றது. மயக்கம் தெளிந்த மணிமேகலைக்கு யாவும் கூறி தெய்வம் மறைந்தது. அங்கு அட்சய பாத்திரத்தையும், வான் வழிச் செல்லும் மந்திரத்தையும் பெற்றவள் புகார் நகர் சென்று ஆதிரையிடம் உணவு வாங்கி பசியால் வாடிய யாவருக்கும் உணவளித்தாள். பசிப்பிணியின் கொடுமையினைத் தீவதிலகை பின்வருமாறு குறிப்பிடுன்றாள்.

குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்

நாணனி களையும் மாணெழில் சிதைக்கம்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவி

அத்தன்மையுடைய பசி எனும் நோயைக் குணப்படுத்தி வந்தாள். முன்பு மலர்ப்பொய்கையில் காணாமல் போன உதயகுமாரன் பின்தொடர்ந்து வருவதை உணர்ந்து மணிமேகலை தன் உருவத்தை மாற்றிக் காயசண்டிகையின் உருவத்தை எடுத்துக்கொண்டாள்.

இத்தருணத்தில் காயக்கண்டிகையின் கணவன் அங்கு வர உதயகுமாரனைக் கொன்றுவிடுகிறான். தன் மகன் கொல்லப்பட்டதற்கு காரணமாக இருந்த மணிமேகலையை அரசி சிறைப்படுத்துவதோடு மட்டுமல்லாது அவளுக்குத் துன்பம் இழைக்கும் நோக்கத்தோடு கயவனை அனுப்புகிறாள். அவள் சூழ்ச்சி ஏது வெல்லாததால் அரசி மனம் மாறுகிறாள். மணிமேகலை அரசிக்கு அறம் உரைக்கிறாள். அரசியே நீ துன்புறுதற்கு என்ன காரணம், உன் மகன் உடலுக்காக அழுகிறாயோ அல்லது உயிருக்காக அழுகின்றாயா என்பதனை,

உடற்கழுதனையே உயிர்க்கழுதனையோ

உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை

எடுத்துப் புறங்காட்டினர் யாரோ?

உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்

செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது – என்று கூறுகிறாள். அரசி மனம் திருந்தி மணிமேகலையை விடுவிக்கிறாள். பின் அவள் காஞ்சி, சாவகம் வஞ்சி சென்று கண்ணகியை வணங்கினாள். கண்ணகியும் அருட்காட்சி நல்கினாள். பின் மணிமேகலை அறம்பல உரைத்து சமய வாதிகளொடு வாதிட்டு தன் கருத்தில் வென்று வீடு பேறு அடைந்தாள்.

**நூலின் சிறப்பு**

தமிழன்னை தன்னை அலங்கரித்துக்கொள்ள அணிந்து கொண்ட ஆபரணங்களாக ஐம்பெருங்காப்பியங்களைப் பயன்படுத்திக் கொண்டாள் என்று சித்தானந்த பாரதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காதொளிரும் குண்டலமும்கைக்கு வளையாபதியும் கருணை

மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும்

சிலம்பார் இன்பப் போ தொளிரும் திருவடியாம் - இதில் மணிமேகலையையும் இணைத்துக் கூறியுள்ளமை நோக்கத்தகக்து இக்காப்பியம் சிலம்பின் தொடர்ச்சியாகவே திகழ்கிறது. மணிமேகலை மேல் உரைபொருள் முற்றிய சிலப்பதிபாரம் முற்றும் என்று சிலப்பின் இறுதியில் கூறப்பட்டுள்ளது. இதில் பல கிளைக்கதைகள் இடம்பெற்ளுள்ளது. பரத்தமையொழிப்பு, மதுஒழிப்பு, சிறைக்கோட்டம் அறக்கோட்டமாதல், சமூகச் சீர்திருத்தம், பசிப்பிணி களைதல், நிலையாமையை உணர்த்துதல் ஆகியவை பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

சிலம்பின் தொடர்ச்சியாக அமைந்திருப்பினும் புத்தமதக் கருத்துக்களை அதிகம் கையாளுவதால், தமிழின் முதல் சமயக் காப்பியமாகத் திகழ்கிறது. மணிமேகலை பிற சமயக் காப்பியமாகத் திகழினும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

கொந்தார் குழல் மணிமேகலை நூல் நுட்பம்

கொள்வது எங்ஙனம் - என்று சிறப்பித்துக் கூறுகின்றார்.

மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே – என்று அம்பிகாபதிக் கோவையாசிரியரும் சிறப்பித்துக் கூறுகின்றார். மக்களின் மனதை எளிய நடையாலும், அழகிய வருணனைகலாலும் ஈர்த்துள்ளது என டாக்டர் வ.சு.ப.மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். கணிகையர் குலத்தில் பிறந்த மணிமேகலையை அரசன் மகன் விரும்புதும், பின்னர் துறவு வாழ்வை மேற்கொண்ட பின் அரசர்க்கெல்லாம் அறம் உணர்த்தும் வகையில் மணிமேகலைப் பாத்திரம் படைக்கப்பட்டள்ளது. புத்தர் பெருமானின் பெருமையைச் சொல்லும்விதமாய் அமைந்ததால், வடசொற்கள் கலந்து வந்துள்ளன. இலக்கிய வகைச் சுவையை விட சமயக் கருத்துக்கள் மேலோங்கியுள்ளன. தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் இக்காப்பியத்தைப் பாராட்டும் இடத்து சமய சம்பந்தமான பல சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இவர் இடத்திற்கேற்ப மொழி பெயர்த்து அமைத்திருத்தல் மிகப் பாராட்டிற்குரியதாகும் என்கிறார்.

**நூலில் காலம்**

மணிமேகலை ஆசிரியரும் சங்க கால சாத்தனாரும் வேறானவர் என்பர். அகம் 53, 134, 320, நற்றிணை 36,127,336 குறுந்தொகை 154 ஆகிய பாடல்களைச் சாத்தனார் இயற்றியுள்ளார். அவை அகப்பொருள் சார்ந்தவையாகும். மணிமேகலை ஆசிரியரோ இன்பத்தை வெறுத்து புத்தமதக் கொள்கையில் பற்றுடையவராகக் காணப்படுகின்றார். இளங்கோவடிகளின் சமகாலத்தார் என்பது பாயிரத்தின் வழி அறியமுடிகிறது.

**சிறப்பு வரிகள்**

பசியும் பினியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கவென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கு
இளமை நாணி முதுமை எய்தி
உரைமுடிவு காட்டிய உரைவோன்
பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் கூறுவது பெரும்பேரின்பம்
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது.

**முத்தொள்ளாயிரம்**

மூன்று அரசர்களைப்பற்றி 900 பாடல்கள் கொண்டது. ஒவ்வொரு அரசர்களைப்பற்றியும் 900 பாடல்கள் கொண்டது என்றும் கூறுவர். தற்போது 130 பாடல்களெ கிடைக்கின்றன. இந்நூல் அகம், புறம் கலந்த நூலாக அமைந்துள்ளது. சேரன் - 23, சோழன்-46, பாண்டியன்-61 பாடல்களே கிடைக்கின்றன. இரண்டில் 75 பாடல்கள் அகம் பற்றியும், 55 பாடல்கள் புறம் பற்றியும் அமைந்துள்ளன.

தொல்காப்பியர் காட்டும் விருந்து எனும் அமைப்பிலும் இது அடங்கும். மூவேந்தர்களின் சிறப்புப் பெயரால் குறிப்பிடாமல் பொதுப்பெயர் கொண்டே பாடியுள்ளார். முத்தொள்ளாயிரத்தை முதன்முதலாக மு.இராகவையங்கார் அச்சில் வெளியிட்டார். (1905 மதுரைத் தமிழ்ச்சங்கம்) இந்நூலுக்கு உரையுடன், டி.கே.சி. ந.சேது ரகுநாதன், ந.சுப்புரெட்டியார் போன்றோர்கள் உரை செய்துள்ளனர். பாடல்கள் யாவும் நாடகத் தமிழுக்கு உதவி செய்வது போல் காட்சியளிக்கிறது.

சோழன் பிறந்த நாளில் அருமறை அந்தணர்கள் பசுக்கூட்டங்களைத் தானமாகப் பெற்றுச் சென்றனர். புலவர்கள் மலை போன்ற யானைகளைப் பரிசுப் பொருளாகப் பெற்றனர். ஆனால் சிலந்தி தன் கூட்டை இழந்து விட்டது என்ற நூல் மிக்க பாடல் இடம்பெற்றுள்ளது.

“இலங்கிலை வேற்கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு”.

சேர மன்னன் மீது காதல் கொண்ட மங்கை, அவன் வருவதையறிந்து தன் உள்ளக் கிடக்கை வெளிப்படுத்த விதைந்தோடுகிறாள். நாணம் உடன் வரவே கதவைத் தாளிட்டு அடைக்கிறாள். இந்நிலையில் எப்படிச் சொல்ல முடியும் என தவிக்கிறாள்.

“ஆய்மணிப் பைம்பூண் அலங்குதாரர் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
பெருஞ் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு” – எனும் பாடல் மேற்கூறிய கருத்தை விளக்குகிறது. மன்னனைச் சுமந்துவரும் பெண்யானை மெதுவாக நடக்காது வெகமாக செல்வதால் அவன் திருவழகைக் காண முடியாது கோபம் கொள்ளும் தலைவி, யானையெ நீயும் பெண்தானே எனப் பிதற்றுவதை

“எலா மடப்பிடியே எங்கூடல் கோமான்
புலாஅல் நெருநல்வேல் மாறன் - உலாவுங்கால்
பைய நடக்கவும் தேற்றாயார் நின்பெண்மை

ஐயப்படுவதுடைத்து – என்ற பாடல் காட்டுகிறது. சோழ மன்னனின் நீதி நன்றாகத் தான் இருக்கிறது எனக்கூறி நகைத்தாள் ஒரு நங்கை. காரணம் அவளின் கண்கள் மன்னனைக் கண்டு இன்புற்று நெஞ்சம் கலந்தது. ஆனால் தண்டைத் தோளுக்குத் தருவதேன் என்கிறாள்.

கண்ணே உண்கண் கலந்தன நல்நெஞ்சம்
தண்டப்படுவ தடமென்தோள் கண்டாய்
உலாஅ மறுகின் உறையூர் வளவற்(கு)
எலாஅம் முறைகிடந்த ஆறு.

சோழ மன்னனின் தலை நகரில் பூக்களை விற்பனை செய்தபின் தேவையில்லாதப் பூக்களை இறைத்துவிட்டமையால் அந்நகரத்தில் மண்ணில் வானவில் வீழ்ந்திருப்பது போன்றுள்ளது. இதனை

மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்த பூச்
சால மிகுவதோர் தன்மைத் தாய்க் - காலையே
வில்பயில் வானகம் போலுமே வேல் வளவன்
பொறற்போர் உறந்தை சுகம் - என்று குறிப்பிட்டள்ளது.

இதனைப் போன்ற பல நயமிக்க பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**சீவகசிந்தாமணி**

அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு பொருளையும் தருகின்றது. இந்நூலை மணநூல் என்று வழங்குவர். காப்பியத்தலைவன் சீவகன். இவன் காந்தருவதத்தை முதலாக எண்மரை மணம்புரிகின்றான். இதோடு கல்வி பயில்வதை நாமகளை மணப்பதாகவும், வீடுபேறடைவதை முக்திமகளாகவும் மணப்பதாகவும் கூறுவதால் மணநூலாயிற்று.

ஆசிரியர் திருத்தக்கதேவர். சமணசமயத்தைச் சார்ந்தவர். தமிழ்க்காப்பியங்களில் சீவகசிந்தாமணியும், சிலப்பதிகாரமுமே பழைய உரை பெற்றுள்ளன. நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு அழகியதோர் உரைதந்துள்ளமை சிறப்பாகும்.

இக்காப்பியத்தைதத் திருத்தக்கதேவர் எட்டே நாளில் எழுதி முடித்ததாகக் கூறுவர். சோழ மரபைச் சார்ந்தவர் என்பர். நரிவிருத்தம் எனும் நூலை இவர் இயற்றியதாகக் கூறுவர். நாமகள் இலம்பகம் முதுலாக முக்தி இலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டது. மொத்தம் 3145 செய்யுட்களைக் கொண்டது. இவற்றுள் 2700 பாடல்கள் திருத்தக்கதேவர் பாடியவை. ஏனைய பாடல்கள் இடைச் செருகல் எனும் கருத்தளது. ஆயின் இதற்குப் போதுமான சான்றுகளில்லை.

காப்பியத்தலைவன் சீவகன். ஏமாங்கத நாட்டு அரசன் சச்சந்தன், மனைவி விசயை. நாட்டை மறந்து அந்தப்புரத்தில் அடைக்கலமாகம் மன்னன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அமைச்சன் கட்டியங்காரனிடம் ஒப்படைக்கின்றான். அமைச்சன் தக்க நேரம் பார்த்துப் படையுடன் வந்து மன்னனைக் கொல்கிறான். அமைச்சன் சதியறிந்த மன்னன், மனைவி விசயையை மயிற்பொறியில் ஏற்றி வானில் பறக்கும்படிச் செய்கிறான். உயிர் தப்பிய விசயை சுடுகாட்டில் இறங்குகிறாள். அங்கு அவளுக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கிறது. சீவகன் என்று பெயர் மட்டும் சூட்டி மகனோடு வாழ முடியாது தாய் விசயை மறைந்து வாழ்கிறாள். கந்துக்கடன் எனம் வணிகன் சீவகனை எடுத்துச்சென்று, அச்சணந்தி அடிகளிடம் கல்வி பயில அனுப்புகிறான். கல்வி கேள்விகளில் சிறந்தவனாக வளர்கின்றான். இளமைப் பருவம் எய்திய சீவகன் தன் அழகாலும் ஆண்மையாலும் போட்டிகளில் வெற்றி பெற்று, காந்தருவ தத்தை, குணுமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எண்மரை மணக்கிறான். கட்டியங்காரனைப் போரில் கொன்று தன் தந்தையின் நாட்டை மீட்டு அரசாள்கிறான். மனைவியரோடு மகிழ்ச்சியாய், நற்புதல்வர்களைப் பெற்று இருக்குங்காலை தோட்டத்தில் பார்த்த ஒரு காட்சியால் வாழ்க்கையில் விரக்தியுற்றுத் துறவு பூண்டு முக்தி அடைகிறான். இதுவே சீவக சிந்தாமணி தரும் சீவகனின் கதையாகும்.

விருத்தப்பாவில் அமைந்த முதற்காப்பியம் எனும் பெருமை சிந்தாமணிக்கு உண்டு. அதற்கு முன்பு நாயன்மார்களின் பக்தி இலக்கியங்களில் விருத்தப்பா உண்டு. இக்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற பல

காப்பியங்களும் விருத்தப்பாவிலேயே அமைந்தன. இது திருத்தக்க தேவருக்குப் கிடைத்த வெற்றியாகும்.

இயற்கை வருணனைகள் மனதைக் கவரும்படியும் நீதிகளை உணர்த்தும் வகையிலும் அமைந்துள்ளன. (கற்றோர் பணிவுடையராய் இருப்பர்) இக்கருத்தினைத் தேவர் தரும் பாடல்வழிப்பாருங்கள்.

‘சொல்லருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்

மெல்லவே கருஇருந்து ஈன்று, மேல் அலார்

செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்

கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே’

சிந்தாமணி தரும் நாட்டுவளப்பாடல்

‘காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்

பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து

தேமாங் கனிசிதறி வாழைப்பழங்கள் சிந்தும்

ஏமாங்கதமென் றிசையால் திசைபோய துண்டே’

சுடுகாட்டில் மகன் பிறந்தவுடன் (சீவகன்) விசயை அழுது புலம்புகின்ற காட்சியில் தேவர் நம் உள்ளத்தை உருக்கிவிடுகின்றார்.

‘வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக

ஒவ்வாச் சுடுகாட்டு உயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட

எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட

இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கு இயல் வேந்தே’

ஐம்பெருங்காப்பியங்கள் எனும் மரபு வடமொழியில் அமைந்துள்ள ‘பஞ்சமகாகாவியம்’ எனும் அடிப்படையில் அமைந்தது என்பர்.

வடமொழியின் தழுவல் சிந்தாமணி என்பர். வடமொழி நூல்களாகிய சத்திரிய சூளாமணி, கத்திய சிந்தாமணி ஆகியவற்றின் மொழிபெயர்ப்பு என்பர். சிந்தாமணியில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. சிந்தாமணி தொடக்கத்தில் காமச்சுவை மிகுந்த ஒரு காதல்க ாப்பியமாகவே தோன்றும். எனினும் இறுதியில்

நிலையாமைத் தத்துவத்தின் மூலம் அறத்தையே எடுத்துரைக்கின்றது. சீவகன் கூறும் அறிவுரையே சான்றாகும்.

'மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள் தம்மைப்

பொய்வகை யின்றித் தேறல் காட்சி; ஐம்பொறியும் வாட்டி

உய்வகை உயிரைத் தேயா தொழுகுத லொழுக்கம்; மூன்றும்

இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்'

**வளையாபதி**

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக இடம்பெறினும் நூல் கிடைக்கவில்லை. வைசிய புராணத்தில் 35ஆம் சருக்கம் வளையாபதி கதையை எடுத்துரைக்கின்றது. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இது சமண நூல். வளையாபதியில் வரும் 'நிக்கந்த வேடத்து இருடி கணங்களை' எனும் அடி சமண நூல் என்பதற்குச் சான்று எனலாம். மேலும் வளையாபதியில் அருக தேவன் பற்றிய குறிப்புள்ளது.

வளையாபதி கதை

நவகோடி நாராயணன் ஒரு வணிகன். இவன் வேறு சாதிப் பெண்ணை மணந்தான். இதனால் அவன் குலத்தோர் வெறுக்க, வெறுப்பைத் தாங்க இயலாது அவனும் அயல்நாடு சென்று விட, அவன் மனைவிக்குப் பிறக்கும் மகன் வளர்ந்த பின் புகாரில் தன் தந்தையைக் கண்டு இறுதியில் தாய் தந்தையரை இணைத்து வைக்கிறான். வைசிய புராணம் தரும் கதை இதுவேயாகும்.

வளையாபதி செய்யுளாக 72 செய்யுட்கள் கிடைத்துள்ளன. இதில் புறத்திரட்டில் மட்டும் 66 பாடல்கள் கிடைத்துள்ளன. இதன் காலம் கி.பி 10ஆம் நூற்றாண்டு. இந்நூல் செய்யுட்களை அடியார்க்கு நல்லார், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகியோர் தங்கள் உரையில் எடுத்தாண்டுள்ளனர்.

மக்கட்பேறு இல்லாதவன் செல்வம் பற்றி வளையாபதி கூறும் பாடல் சிறப்பானது.

'பொறையிலா அறிவு, போகப்

புணர்விலா இளமை, மேவத்

துறையிலா வனச வாவி

துகிலிலாக் கோலத் தூய்மை,

நறையிலா மாலை, கல்வி

நலமிலாப் புலமை நன்னீர்ச்

சிறையிலா நகரம் போலும்

சேயிலாச் செல்வ மன்றோ.'

**குண்டலகேசி**

காப்பியத் தலைவியால் பெயர் பெற்ற நூல். சுருண்ட கூந்தலையுடையவள் என்பது பொருள். இக்காப்பியம் முழுமையாகக் கிடைக்கவில்லை. தொல்காப்பிய உரை, யாப்பருங் கலவிருத்தியுரை, வீரசோழிய உரை, சிவஞான சித்தியாருக்கு ஞானப் பிரகாசர் உரை, நீலகேசி இவற்றிலிருந்து நமக்குக் கிடைத்துள் பாடல்கள் பத்தொன்பது மட்டுமே. இதனைக் குண்டலகேசி விருத்தம் என்றும் கூறுவர். பௌத்த கதை பேசும் தேரி காதையின் 46ஆம் காதையிலும், நீலகேசி, அங்குத்தரநிகாய, தம்மபதாட்டகதா, வைசிக புராணத்தின் 34ஆம் அத்தியாயம் ஆகியவற்றில் குண்டலகேசி கதை உள்ளது.

குண்டலகேசி சிறந்த தர்க்கநூல். சமண நூலாகிய நீலகேசி, குண்டலகேசிக்கு எதிராகத் தோன்றியது. பொதுவாகச் சமயவாதங்கள் பற்றிப் பேசும் நூல்கள் கேசி என அழைக்கப்பட்டதோ என எண்ண வேண்டியுள்ளது. குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி இவை சமய வாதம் பேசும் நூல்கள் என்பர்.

வணிகன் மகள் பத்தரை. இவள் காளன் என்ற கள்வனை விரும்புகிறாள். மகளின் வற்புறுத்தலால் தந்தையும் கள்வனைச் சிறையிலிருந்து மீட்டு அவளுக்கு மணம் செய்து வைக்கிறார். இன்பமான வாழ்க்கையின் இடையில் ஊடலின்போது சினத்தில் பத்தரை தன் கணவனை நீ கள்வன் தானே? என்று கூறிவிட அதனால் சினங்கொண்ட காளன் (கணவன்) தெய்வத்தை வணங்க என்று பொய் கூறி மலையுச்சிக்கு அவளை அழைத்துச் சென்று கொல்லப் போவதாகக் கூறுகின்றான். கணவனுக்கு அறிவுரை கூறியும் அவன் திருந்தாத நிலையில் அவனை வணங்கி வலம் வருவது போல் வந்து கணவனை மலையுச்சியிலிருந்து தள்ளிக் கொன்று

விடுகின்றாள். தான் செய்த பாவம் நீங்கிடப் பௌத்த சமயத்தில் சேர்ந்து அறக் கருத்துக்களைப் பரப்பி இறுதியில் புத்தபிரானின் திருவடியை அடைகிறாள்.

கிடைத்தவை பத்தொன்பது பாடல்களே எனினும், ஒவ்வொன்றும் ஆழ்ந்த கருத்தொடு மனத்தைத் தெடுபவையாக அமைந்துள்ளன. திவாகரவாமன முனிவர் நீலகேசிக்கு எழுதிய உரையில் குண்டலகேசியின் 99 பாடல்களின் முதற்குறிப்பு மட்டும் காணப்படுகின்றன.

மெய்யான தவம் ஐம்புலனை அடக்குவதே, மனத்தூய்மை பெற்றவரே இன்பமும் புகழும் பெற முடியும் போன்ற அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளது. நீர்க்குமிழி நிலையற்ற வாழ்க்கைக்கு எப்படி நிலையான உவமையானதோ அதுபோன்று யாக்கை நிலையாமைக்குக் குண்டலகேசி தரும் பாடல் இலக்கியத்தில் நிலைத்துவிட்டது.

'பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ்வியல்பும் இன்னே மேல்வரும் மூப்புமாகி
நாளும்நாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாததென்னே'

பாலகன் இளைஞனாகி, இளைஞன் முதியோனாகி ஒவ்வொரு பருவமும் செத்து அடுத்த பருவத்திற்குப் போகிறோம் இவ்வாறு நாளுக்கு நாள் பருவம் கடந்து சாகின்றோம். அப்போதெல்லாம் நாம் அழவாசெய்கிறோம் இறப்பிற்கு மட்டும் ஏன் அழவேண்டும்? எனக்கேட்கிறார்.

இதன் ஆசிரியர் நாதகுத்தனார். காலம் கி.பி.9 அல்லது 10ஆம் நூற்றாண்டு என்பர். புறத்திரட்டில் கிடைத்த 19 பாடல்கள் தவிர பிற நூல்களில் கிடைத்த 6 பாடல்கள் சேர்த்து 25 பாடல்கள் கிடைத்துள்ளன என்பர்.

**ஐஞ்சிறுகாப்பியங்கள்**

ஐஞ்சிறு காப்பியங்கள் எனும் வழக்கு இடைக்காலத்தில் தோன்றியது. முதன்முதலில் மயிலைநாதர் தம் உரையில் ஐஞ்சிறு காப்பியங்கள் எனும் தொடரைப் பயன்படுத்துகின்றார். தெ.பொ.மீ அவர்கள் தம்முடைய இலக்கிய வரலாற்றில்

சமணர்கள் முதன்முதலில் ஐஞ்சிறு காப்பியங்கள் எனும் வழக்கைப் பயன்படுத்தினர் என்பர்.

அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் அமையப்பாடவது பெருங்காப்பியம். இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேல் குறையின் சிறுகாப்பியம் எனத் தண்டியலங்காரம் இலக்கணம் கூறும். சூளாமணி, நீலகேசி, உதயணகுமாரகாவியம், யசோதரகாவியம், நாககுமாரகாவியம் ஆகியவை ஐஞ்சிறு காப்பியங்களாகும். இவை ஐந்தும் சமணக்காப்பியங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சூளாமணி**

அணிகலனால் பெற்ற பெயர் சூளாமணி. தலையில் சூடும் அணி. சமணக் காப்பியம். விருத்தப்பாடலில் அமைந்துது. ஆசிரியர் தோலாமொழித்தேவர். 12 சருக்கங்களுடன், 2131 பாடல்களைக் கொண்டது.

மண்ணையும் விண்ணையும் இணைக்கும் காப்பியம் இது. மண்ணுலக வேந்தன் திவிட்டன் விண்ணுலக மங்கை சுயம்பிரபையை மணந்த வரலாற்றைக் கூறும் நூல். சமணக் கருத்துக்கள் நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் நன்கு வலியுறுத்தப்படுகிறது. சிந்தாமணிபோன்று கற்போர்க்குக் கவிதை இன்பம் தருவது. பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்கள் பெற்ற சூளாமணி சிறுகாப்பிய வரிசையில் இடம் பெறுவது முரண்பாடே எனலாம். எனவேதான் கி.வா.செகந்நாதன் அவர்கள் 'நடையழகில் சிந்தாமணியைவிட சூளாமணி செப்பமுடைத்து' என்பர். தொ.பொ.மீ.யும் 'சூளாமணியின் கவிதை ஓட்டமும் இனிமையும் சிந்தாமணியில் இல்லை' என்பார்.

சூளாமணிப் பாயிரம் 'சேந்தன் என்னும் தூமாண்கிழவன்' அவையில் இந்நூல் அரங்கேறியதாகக் கூறும். எனவே செழியன் சேந்தன் காலம் சூளாமணியின் காலம் என்பர். வரலாற்று ஆசிரியர்கள் செழியன் சேந்தன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பர். சூளாமணி காலமும் ஏழாம் நூற்றாண்டு என்பர். இதில் மாறுபட்ட கருத்து உண்டு.

சூளாமணி சமணக்காப்பியம். சமணர்களின் ஸ்ரீபுராணத்தில் சூளாமணிக்கதை உள்ளது. பாகவதக் கதையும் சூளாமணியோடு ஒத்துள்ளது. அங்கு பலராமன், கண்ணன் இங்கு விசயன், திவிட்டனாக அமைகின்றன.'.

விருத்தப்பாவில் காப்பியத்தைத் தொடங்கி வைத்தவர் திருத்தக்கதேவர். அத்தேவரையும் விஞ்சிவிட்டார் இத்தேவர். 'விருத்தப்பாவைக் கையாள்வதில் இவர் சீவக சிந்தாமணி ஆசிரியரையும் விஞ்சிவிட்டார்' என மு.வ. குறிப்பிடுவதால் இதனை உணரலாம்.

திவிட்டன் கதையைக் கூறினும் திவிட்டனின் தந்தை பயாபதியின் துறவைக் கூறி அவன் உலகிற்கெல்லாம் சூளாமணி ஆயினன் எனக் கூறி முடிகின்றது. இது சமணமரபு எனலாம்.

ஓசை நயமிக்க சூளாமணிப் பாடல்தரும் இன்பத்தை நுகருங்கள்.

'வளர்கொடியன மணம் விரிவன மல்லிகையொடு மௌவல்
தளிர் கொடியன நறுவிரையன நறுமலரனநறவம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகடி
ஒளிர்கொடியன உயர்திரளினோடு ஒழுகிணரனஓடை' (பா.434)

இதுபோன்றே வாழ்க்கையில் துன்பமே மிகுதி, இன்பத்தைத் துன்பத்திற்கிடையில் தேடியே அடையவேண்டும் என்னும் கருத்தில் அமையும் சூளாமணிப்பாடல் நயமிக்கது.

மதயானை துரத்த, அதற்குப்பயந்து ஓடியவன் கிளையொன்றைப் பற்றித் தொங்கக் கீழே பாம்பு படமெடுக்கக் கிளை அசைய, அதனால் தேன் சிந்தத் துன்பத்தை மறந்து தேனைக் குடிக்க முயல்கிறான். மனித வாழ்க்கையில் கிடைக்கும் இன்பம் இத்தேன் போன்றது என்கிறது. பாடல் வருமாறு

'யானைதுரப்ப அரவுஉறை ஆழ்குழி
நால்நவிர் பற்றுபு நாலும் ஒருவன்ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறந்தது
மானுடர் இன்பம் மதித்தனை கொள்நீ' (பா.1989)

**நீலகேசி**

நீலகேசி சமண சமயத் தருக்கநூல். யாப்பருங்கலவிருத்தி இதனை நீலம் எனக் கூறும். இதனை நீலகேசித்தெருட்டு எனவும் கூறுவர். ஆசிரியர் யாரென்று

தெரியவில்லை. பத்துச் சருக்கங்களையும், 894 பாடல்களையும் கொண்டது. குண்டலகேசிக்கு மறுப்பாகத் தோன்றியது.

சமயதிவாகர வாமன முனிவர் சிறந்த உரை எழுதியுள்ளார். சக்ரவர்த்தி நயினார் பதிப்புச் சிறப்பாக உள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் 1984இல் பதிப்பித்து வெளியிட்டள்ளது. இதன் காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்கு முன்பு அல்லது ஆறாம் நூற்றாண்டாக இருக்கலாம். சைவ வைணவ செல்வாக்கு இல்லாத காலம் இதன் காலம் எனவே பௌத்த சமய எதிர்ப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நீலகேசியிலுள்ள குண்டலகேசி வாதச் சருக்கம் குண்டலகேசி பற்றி அறிய உதவுகின்றது.

பாஞ்சால நாட்டின் ஒரு நகரருகே உள்ள பலாலையம் சுடுகாட்டில் காளிக்கு இடப்படும் பலியை முனிச்சந்திரர் எனும் சமணத் துறவி தடுக்கிறார். காளி பழையனூர் நீலியை அனுப்பி முனிவரை விரட்டச் சொல்கிறாள். முனிவரை விரட்ட வந்த நீலி நீலகேசி, வாதத்தில் முனிவரிடம் தோற்றுப் போய்த் துறவிக்கு மாணவியாகித் துறவியின் கட்டளைப்படி பலரையும் வாதத்தில் வென்று, இறுதியில் பௌத்த துறவியான குண்டலகேசியையும் அருக்ககீர்த்தியையும், மொக்கலரையும் புத்தரையும் வாதத்தில் வெல்கிறாள். இதுவே நீலகேசி கதையாகும். பழையனூரில் பேயுருவில் வாழ்ந்தவளே நீலகேசி. சமணத் துறவியால் துறவியாகும் பேறு பெற்றாள்.

நீலகேசி சிறுகாப்பியத்திற்குரிய இலக்கணங்களைப் பெற்றிருக்கவில்லை. எனினும் சமணத்தைத் தருக்க முறையில் பரப்பும் சிறந்தநூல் எனலாம்.

சூளாமணி போன்று இதிலும் ஓசைநயமிக்கப்பாடல் உள்ளது.

'குருவுடையன கொடியிடை ஒரு குலைவிரியன கோடல்
தடுசுடரன தனவயலின தகைமலரன தோன்றி
அருகுடையன அணியுருவின அயவன அலர்காயா
முருகுடையன முகைவிரிவன முறியலர்வன முல்லை'

### 3.உதயணகுமார காவியம்

விருத்தப்பாவில் அமைந்தது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 367 செய்யுட்கள் உள்ளன. சமணக்காப்பியம். சோழர்காலம். பெருங்கதை உதயணன் கதையை விரிவாகக் கூறும். இது அதனைக்சுருக்கி எடுத்துரைக்கும்.

பெருங்கதையில் கிடைக்காத கதைப்பகுதிகளை இந்நூல் கொண்டு நிறைவு செய்யமுடிகிறது. காப்பியத்திற்குரிய சிறப்பினைப் பெறாத நூல் இதுவெனலாம். காப்பியச் சுவை குறைவு. ஆறு காண்டங்களைக் கொண்டது இந்நூல். 1. உஞ்சைக் காண்டம், 2. இலாவாண காண்டம், 3. மகதகாண்டம், 4. வத்தவக் காண்டம், 5. நரவாண காண்டம், 6.துறவுக்காண்டம்.

அவந்தி நாட்டு மன்னன் பிரச்சோதனன். இவன் மாய யானையின் மூலம் வத்தநாட்டு கௌசாம்பி நகரத்து மன்னன் உதயணைச் சிறைப்படுத்துகிறான். உதயணனை அமைச்சன் யூகி சிறையிலிருந்து தப்புவிக்கிறான். பின்னர் உதயணன் நளகிரி எனும் யானையை அடக்கிப் பிரச்சோதனன் மகள் வாசதத்தைக்கு யாழ் கற்றுக் கொடுத்துக் காதல் செய்து அவளை மணக்கிறான். இறுதியில் வாழ்க்கையை வெறுத்துத் துறவு கொள்கிறான். இதுவே உதயணன் கதையாகும்.

### யசோதர காவியம்

இதுவும் வடமொழித் தழுவலேயாகும். வடமொழியில் சோமதேவி சூரியர்யாத்த யஸ்திலகம், வாதராச சூரி எழுதிய யசோதர சரிதம், அரிபத்திரர், புட்பதத்தர் எழுதிய யசோதர காவியம் ஆகிய மூன்று நூல்களும் யசோதரன் கதையைக் கூறுவனவாகும். தமிழில் எழுதிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆயின் இவர் அரிபத்திரரும் புட்பதத்தரும் எழுதிய நூலை அடிப்படையாகக் கொண்டு இந்நூலை எழுதினார் எனலாம்.

ஒரு வெண்பாவை அடிப்படையாக வைத்து யசோதர காவியம் எழுதியவர். வெண்ணாவலூருடையான் வேள் என்பர். ஆயின் போதிய சான்றில்லை. அப்பாடல் வருமாறு.

'புட்பநந்தன் சொன்ன பொருள் சேர் கதை தன்னைத்

திட்பமாய்ச் செந்தமிழில் செப்பினான் - நட்புடையார்

வெண்ணாவலூருடையார்வேள்’

யசோதரன் தந்தை அசோகன் துறவு பூணுகிறான். எனவே யசோதரன் தன் மனைவி அமிழ்தமதியுடன் அரியணை ஏறுகிறான். ஆயின் அமிழ்தமதி யானைப் பாகன் இசையில் மயங்கி அவனோடு கூடாநட்பு கொள்கிறாள். இது யசோதரனுக்குச் தெரியவரும் போது அவன் மனைவி நஞ்சிட்டுக் கணவனையும் அவன் தாயையும் கொன்று விடுகிறாள். பின்னர் யசோதரன் மகன் யசோதமதி அரசனாகிறான். யசோதமதி ஒரு நாள் வேட்டைக்குச் செல்லும் போது சமணமுனிவர் ஒருவர் மூலம் தனக்குப் பிறந்துள்ள மகன் அபயருசியும், மகள் அபயமதியும் தன் தந்தையும் பாட்டியும் என்பதை அறிகிறான். உடன. அவன் துறவு மேற்கொள்கிறான். இந்நிலையில் இராசபுரத்து மன்னன் மாரிதத்தன் சண்டமாதேவிக்கு மனிதர்களைப் பலியிட விரும்புகிறான். உலக வாழ்க்கையை வெறுத்துச் சமணத்தில் இணைந்திருந்த இரட்டையர்களாகிய அபயருசி அபயமதி ஆகிய இருவரையும் காவலர்கள் கைப்பற்றிக் கொண்டு வருகின்றனர். மன்னனும் அவர்களிடம், ‘எங்கள் நாட்டு நலனுக்காக உங்களைப் பலியிடப் போகிறோம். எங்களுக்காக நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறுகின்றார்”. அவர்களும் சாவைப்பற்றி அஞ்சாத உயிர்க்கொலையின் தீமையை மனம் பதிய எடுத்துரைத்தனர். இறப்பிலும் சிரிக்கும் நீங்கள் யார் என்று மன்னன் கேட்கும் போது முற்பிறவி யசோதரன் (இப்பிறவி அபயருசி) தன் கதையையும் மனைவி செய்த துரோகத்தையும் கூறுகிறான். இறுதியில் “எங்களுடைய இந்தத் துன்பத்திற்குக் காரணம் ஏழு பிறவிக்கு முன் மாவினால் செய்த ஒரு கோழியைப் பலியிட்டோம். அந்த வினையே எங்கள் துன்பத்திற்குக் காரணம். மாவுப் பண்டத்தில் செய்த கோழிதானே பாவமா என்பது கொலையைவிடப் பலி கொடுக்கும் ஆசை எங்களுக்கு இருந்ததே. அதுதான் கொடுமை. ஆசையே துன்பத்திற்குக் காரணம். எனவே உங்கள் மூடநம்பிக்கையைக் கண்டே சிரித்தோம்” என்று விவரிக்கிறான். இதைக்கேட்ட இராசபுரத்து மன்னன் மாரிதத்தன் மனம் திருந்தி பலிகொடுப்பதை நிறுத்தினான். இதுவே யசோதர காவியம் தரும் காவியம்.

யானைப்பாகன் பாடிய மாளவபஞ்சமராகம் பற்றிக்கூறும் இக்காப்பியம் அதன்மூலம் இசையை வெறுத்து ஒதுக்குகிறது. சமணநூல்களில் வேறு எங்கும் மாரிதத்தனின் இக்கதை இடம் பெறவில்லை. ஔவை.சு.துரைசாமிபிள்ளை இதற்கு உரை எழுதியுள்ளார். இதன் காலம் 17ஆம் நூற்றாண்டு. தெ.பொ.மீ அவர்களும் இதனை விசயநகர ஆட்சிக்குச் சிறிது முன்னர்த் தோன்றியிருக்கலாம் என்பர். சிற்றின்பத்தின் இழிபும் தவத்தின் மேன்மையும்நன்கு எடுத்துரைக்கப்படுகிறது.

காமத்தின் தீமையை

'எண்ணமது அலாமை பண்ணும் இப்பிறப்பு இடியநூறும்

மண்ணியல் புகழை மாய்த்து, வருவழி வளர்க்கும் மானத்

திண்மையை உடைக்கும் ஆண்மை திருவொடு சிதைக்கும் சிந்தை

கண்ணொடு கலக்கும் மற்று இக்கடைபடு காமம்'

**5.நாக குமாரகாவியம்**

சமணநூல், சோழர்காலம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மகதநாட்டு அரசன் நாக குமாரனின் கதையைக் கூறுவதால் நாககுமார காவியமாயிற்று. இந்நூல் கிடைக்காமலே இருந்தது. 1973ல் சென்னைப் பல்கலைக்கழகம் இந்நூலை வெளியிட்டது. எனவேதான் 1960இல் இலக்கிய வரலாறு எழுதிய அடைக்கலசாமி அவர்கள் இந்நூல் பற்றி விவரம் தெரியவில்லை என்கிறார். 170 பாடல்கள், விருத்தப்பாவில் அமைந்தது. ஐந்து சரக்கங்களைக் கொண்டது. நாக குமாரனின் பிறப்பு, வளர்ப்பு, அவனுடைய வீரச் செயல்கள், காதல்நிலை, முற்பிறப்பு, பஞ்சமி நோன்பின் சிறப்பு, துறவின் மேன்மை ஆகியன சுட்டப்படுகின்றன. சமணக் கோட்பாடுகள் மிகுதியாக உள்ளன. மன்னன் சிரோனிகராசனுக்கு கௌதம முனிவர் கூறும் பஞ்சமிக் கதையாக இக்கதை அமைகிறது. அம்மன்னர் அருகனைத் துதித்துப் பாடும் பாடல் உள்ளம் உருக்கம் தன்மையது.

'அறிவன்நீ அமலன்நீ ஆதி நீயே

ஆரியன் நீ சீரியன் நீ அனந்தன் நீயே

திரிலோக லோகமொடு தேயன் நீயே

தேவாதி தேவனெனும் தீர்த்தன்நீயே

எரிமணிநற் பிறப்புடைய ஈசன்நீயே

இருநான்கு குணமுடைய இறைவன் நீயே

திரிபுவனம் தொழுது இறைஞ்சும் செல்வம் நீயே

சிரிவர்த்த மானன்னெனும் தீர்த்தன் நீயே.”

**பெருங்கதை**

பிருகத்கதா என்பதே பெருங்கதையாயிற்று (பிருகத் - பெரிய: கதா-கதை) சமணக் காப்பியம். உதயணன் கதை, கொங்கு வேளிர் மாக்கதை என்றும் கூறுவர். முதல் நூல் துர்விந்தனின் பிரகத் கதை என்பர். காலம் ஏழாம் நூற்றாண்டு. ஆசிரியப்பாவால் இயன்றது. குணாட்டியார் பைசாசமொழியில் யாத்த ‘பிரகத்கதா’ வின் மொழிபெயர்ப்பே பெருங்கதை.

நூல் முழுமையும் கிடைக்கவில்லை. முதலும் முடிவுமின்றி உள்ளது. உதணயகுமார காவியம் மூலமாகவே கதையை முழுமையாக அறிய முடிகிறது. ஐந்து காண்டங்களை உடையது.

கௌசாம்பிநாட்டு அரசன் சதானிகன் மகன் உதயணன். அரசி மிருகாவதி. இவள் சிம்புட் பறவையால் விபுலகிரி மலைக்குத் தூக்கிச் செல்லப்பட்டு அங்கே உதயணன் பிறக்கிறான். அங்கு மிருகாவதி தன் தந்தை துறவியாய் இருப்பதைக் காண்கிறாள். அவர் உதயணனை ஓர் அந்தணத் துறவியிடம் ஒப்படைக்க, அவர்தன் மகள் யூகியுடன் அவனையும் வளர்க்கிறார். யூகியும், உதயணனும் சிறந்த நண்பராகினர். தன் தாத்தா (தாய் மிருகாவதியின் தந்தை) வின் நாட்டை ஆண்ட மாமன் துறிவயாக விரும்பிக் காட்டிற்கு வந்தபோது தன் தமக்கையின் மகன் உதயணன் என்பதை அறிந்து தன் வைசாலி நாட்டை அவனிடம் ஒப்படைக்கிறான். சிறிது காலத்தில் உதயணன், தந்தை நாடாகிய கௌசாம்பியும் கிடைக்கப்பெற்று இருநாட்டிற்கும் அரசனாகிறான்.

யானையைக் கட்டுப்படுத்தும் மந்திரம் அறிந்தவன் உதயணன். முனிவரிடமிருந்து அவனுக்குக் கிடைத்த யாழ் எப்படிப்பட்ட மதயானையினையும் அடக்கிவிடும் தன்மையது. இவனோடு இரந்த தெய்வயானைக் காணாமல் போய்விட அதைத் தேடி அலைகிறான் உதயணன். அப்போது உச்சயினியை ஆண்ட

பிரச்சோதன மன்னன் ஒரு எந்திர யானையை அனுப்பு அதனுள் வீரர்களை வைத்து உதயணனைச் சிறைப்பிடிக்கிறான். இதையறிந்த யூகி உச்சயினி சென்று தன் வருகையை உதயணனுக்கு இரகசியமாய் அறிவிக்கிறான். பட்டத்து யானை நளகிரிக்கு மதம் பிடிக்கச் செய்கிறான். யாராலும் அடக்க இயலா நிலையில் பிச்சோதனன் உதயணனை அழைத்து யானையை அடக்கினால் விடுதலை செய்வதாகக் கூறுகிறான். யானையை இசையால் அடக்கி, மன்னன் மகளுக்கு இசை கற்றுக் கொடுத்து அவள் காதலைப் பெற்று, ஒரு யானை மீது அவளை அழைத்துச் சென்று விடுகிறான். இதற்கு யூகி பெரிதும் உதவுகிறான். பின்னர் பதுமாவதி மானனீகை, விசிரிகை ஆகிய பெண்களை மணக்கிறான். இறுதியில் நான்கு மனைவியரில் பதுமாவதியின் மகனிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு பிற சமணக் காப்பியங்களைப் போன்று உதயணன் துறவு மேற்கொள்கிறான்.

பெருங்கதை பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களையும், சுவையான கதைப் பகுதியையும் கொண்டது. பெண்ணாகப் பிறந்தோர்க்குப் பொறுமையே பெருமை தரும் எனும் கருத்தைப் பெருங்கதை வலியுறுத்துகிறது. பெருங்கதையின் இலக்கிய நடை படிப்போர்க்கு இன்பம் தரும். பட்டினப் பாலையில் வரும் காவிரிப்பூம்பட்டின வருணனையை நினைவூட்டும் வகையில் நகரில் காணப்படும் பொருள் பற்றிக் கொங்குவேளிர் குறிப்பிடுவது அமைந்துள்ளது.

‘வடதிசை மாமலைச்சுடர்விடு பொன்னும்
குடகடற் பிறந்த படர்கொடிப் பவழமும்
தென்றிசைப் பிறந்த வெண்சுடர் மணியும்
விஞ்சையம் பெருமலை விளங்கொளி வெள்ளியும்
இலங்கை யீழத்துக் கலந்தரு செப்பும்
இமயத்துப் பிறந்த வயிரச் சாதியும்
கடாரத் திரும்பொடு கையகத் தடக்கி
யவனத் தச்சரு மவந்திக் கொல்லரும்..’

என்று பட்டினப் பாலை வரிகளோடு, சிலப்பதிகாரத்தின் தாக்கத்தையும் காணமுடிகிறது. சமணக் கருத்துக்கள் கதைக்கு இடையூறின்றி இக்காப்பியத்தில் அமைந்துள்ளது சிறப்புமிக்கது.

## பிறகாப்பியங்கள்

**விம்பிசாரகதை**

புத்தரின் பெருமை பேசும் காப்பியம். புத்தரின் அருளால் அவர் ஆசிபெற்றுப் பௌத்தராக மாறிய விம்பசாரன் எனும் மகத மன்னனின் வரலாற்றைக் கூறுவது இந்நூல் கிடைக்கவில்லை.

**மேருமந்தர புராணம்**

ஆசிரியர் வாமனாசாரியர். நீலகேசிக்கு உரை வகுத்தவர் இவரே. சமண இலக்கியம். சமணர்கள் இதனைத் தங்கள் 'சமயச் சாரம்' எனக் கருதுவர். 'மேரு' 'மந்திரா' என்ற உடம் பிறந்தோர் இருவரின் வரலாற்றைக்கூறும் நூல் இதுவாகும். இதற்கு முதல் நூல் ஸ்ரீபுராணம். 13 சருக்கங்களும், 1405 பாடல்களும் கொண்டது. காலம் 14 ஆம் நூற்றாண்டு என்பர்.

இலக்கிய நயத்தைவிட அறிவுத் தேடலே மிகுதி. பெண்டிருக்கு வீடுபேறில்லை எனும் சமணக் கருத்தை இந்நூல் வெளிப்படுகின்றது. நவ்வினை தீவினை என்பது பிறவிதோறும் தொடரும். துன்பங்கள் அனைத்திற்கும் ஆசையே காரணம் என ஆசையின் இழிவை உணர்த்துகின்றது. உயிரை முக்தி அடையவிடாமல் தடுப்பதும், உயிருக்குப் பகையும், மனிதனை விலங்கு கதியில் சேர்ப்பதும் ஆசையே. ஆசையை மோகம் என்கிறது, மோகமே பிறவிக்கு நல்வித்து எனக்கூறி நரகத்தில் தள்ளும் என்கிறது. மோகம் இல்லாதவரே நல்ல முனிவர் என்கிறது. ஆசையை அறுத்து ஆன்மா நல்வழியை அடையத் துணை புரியும் நூல் மேருமந்தர புராணம் எனலாம்.

**கம்பராமாயணம்**

கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணத்திற்கு அவரால் இராமவதாரம் என்றே பெயரிடப்பட்டது. கம்பனுக்கு முன்னும் பின்னும் பலர் இராமாயணக் கதையைப் பாடியிருப்பினும் கம்பன் நூலே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்குகிறது.

கம்பரின் இயற்றப்பட்ட இராமாயணத்திற்கு அவரால் இராமவதாரம் என்றே

பெயரிடப்பட்டது. கம்பனுக்கு முன்னும் பின்னும் பலர் இராமாயணக் கதையைப் பாடியிருப்பினும் கம்பன் நூலே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்குகிறது.

கம்பரின் வாழ்க்கை பற்றிய குறிப்புகளில் கற்பனை மிகுந்துள்ளது. சோழநாடு சொந்தநாடு. ஆதரித்தவர் சடையப்ப வள்ளல். இயற்பெயர் தெரியாது. தனிப்பாடல் திரட்டில் கம்பன் பாடியதாக வரும் பாடல்கள் கம்பன் பாடியதா என்னும் ஆராய்ச்சிக்குரியது. வடமொழி, தென்மொழி இரண்டிலும் ஞானம் பெற்றவர். இராமாயணம் தவிர ஏர்எழுபது, திருக்கைவழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி ஆகிய நூல்களை இவர் எழுதினார் என்பர்.

தமிழ்க் காப்பியங்களில் தனக்கெனத் தனியிடம் பிடித்த காப்பியம் கம்பராமாயணம், கர்பர் வைணவராக இருப்பினும் பிற சமயங்களைப் போற்றும் பண்பு உள்ளவர். இராமனை மும் மூர்த்திகளுக்கும் மேலானவனாகக் காண்கிறார். இராமனைப் பற்றிய கம்பரின் சொற் சித்திரம் படித்துப் படித்து மகிழ்தற்குரியது.

கம்பர் தம் நூலிற்கு மூல நூலாக வான்மீகியைக் குறிப்பிடுகிறார். நாட்டுப் படலத்தில் கம்பரின் கூற்றாகவே இது வெளிப்படுகிறது. இந்நூல் காலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் கொண்டது (கம்பன் கழகப் பதிப்பு – சென்னை 1976) வான்மீகத்தை முதல் நூலாக ஏற்ற போதிலும் தமிழ் மரபிற்கேற்பப் பல மாற்றங்களைச் செய்துள்ளார், பெரும்பாலும் கலி விருத்தப்பா வகையினையே மிகுதியாகக் கையாண்டுள்ளார். மொத்தப் பாடல்களில் கிட்த்தட்ட பாதிப் பாடல்கள் கலிவிருத்தமே. இதனையடுத்து அறுசீர்விருத்தம் எடுத்தாளப்பட்டுள்ளது. ஒவ்வொரு உணர்விற்கும் வெவ்வேறு விருத்தங்களைக் கம்பர் அமைத்தள்ளார். சந்தவேறுபாடுகளை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார். 460க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன. 22 பாடல்களுக்கு ஒருமுறை சந்தங்களை மாற்றும் போக்கு கம்பரிடம் உள்ளது. 'ஒரே பாடலுக்காகச் சந்தத்தை மாற்றவும் செய்துள்ளார்' என முனைவர் காக்கும் பெருமாள் குறிப்பிடுவது எண்ணத்தக்கது.

கம்பராமாயணக் காவியம் தமிழரது கவித்துவத்தின் பேரெல்லையாகும். தமிழரின் கவிதா மண்டலத்தை ஆண்ட கவிச்சக்கரவர்த்தி கம்பன். பாத்திரங்கள்

பேசும் முறையும், அமைந்துள்ள பாங்கும் இக்காப்பியம் ஒரு நாடகமோ என எண்ண வைக்கும். கும்பகருணன், வீடணன் உரையாடல், கும்பகருணன், இராவணன் உரையாடல் வீடணன்- இராவணன் உரையாடல், வாலி இராமன் உரையாடல் இவையாவும் நாடகப் பாணியில் அமைந்து நாடக நயம் நல்குகின்றன.

சூர்ப்பணகையின் அழகை வருணிக்கும் பகுதியில் கம்பன் தமிழ்ச் செய்யுளின் அழகைக் கொட்டுகிறான். அன்னநடை பயின்று அசைந்து வருகிறாள் சூர்ப்பணகை. அவள் மட்டுமா அசைகிறாள். அவர் அசைவிற்கேற்ப தமிழ் அசைகிறது. படிக்கும் வாசகரும் அசைகிறார்கள்.

‘பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிகர் சீறடிய ளாகி
அஞ்சொல் இளமஞ்ஞை என அன்னம் எனமின்னும்
வஞ்சி என நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்’

வாலி என்னை ஏன் கொன்றாய்? என்று இராமனிடம் மறைந்திருந்து கேட்கம் கேள்விகள் தர்க்கவாதம் நிறைந்தவை. வான்மீகத்தில் காண முடியாதவையாகும்.

அசோகவனத்தில் சீதையைக் கண்டு திரும்பும் அனுமன் உணர்ச்சிப் பெருக்கோடு இராமனைப் பார்க்கிறான். இராமனைக் கண்டதும்

‘ நங்கையைக் கண்டே னல்லேன்
--------------------------------------------------
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக்கண்டேன்’

என்றுகூறி அனுமன் களி நடம்புரிகின்றான். வார்த்தைகளும் கம்பனிடம் அடங்காது களிநடம்புரிகிறது.

இயற்றை வருணனை அமைப்பதிலும் கம்பன் அனைவரையும் விஞ்சிவிடுகிறான். எளிமையான சந்தத்தைக், கற்பனையோடு அமைக்கிறான். மருத நிலத்தை ஒரு நாடகமேடை ஆக்கிவிடுகின்றான். நாடகமேடை அமைத்துவிட்டால் நாடக மாந்தர் வேண்டும், பார்வையாளர் வேண்டும். இதோ பாடலைப் பாருங்கள்

'தண்டலை மயில்களாட தாமரை விளக்கம் தாங்கக்

கொண்டல்கள் முழவினேங்கக் குவளை கண்விழித்து நோக்கத்

தெண்டிரை எழினிகாட்த் தேம்பிழி மகரயாழின்

வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கு மாதோ'

கம்பனில் தோய்ந்தோர் மது உண்ட வண்டாய் மயங்குவது திண்ணம். எனவேதான் கவிமணியும்,

'வெய்யிற் கேற்ற நிழலுண்டு

வீசும் தென்றற் காற்றுண்டு

கையில் கம்பன் கவியுண்டு'

என்கிறார்.

'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' இது பழமொழி. பாரதியாரும்

'...................................................

கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல்

பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'

என்பர்.

திருத்தக்கதேவர் விருத்தப்பாவைக் காப்பியத்திற்கு அறிமுகப்படுத்தியபோதிலும் விருத்தப்பாவின் எல்லையைத் தொட்டவன் கம்பனே. எனவேதான்,

'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' எனப் புகழப்படுகிறார்.

வான்மீகி மூல நூலாக இருப்பினும் தமிழ் மரபைச் சிதையாமல் காக்கிறான் கம்பன். சீதையை இராமன் கண்டு காதல் கொண்டபிறகு வில்லை உடைப்பதாக அமைக்கிறான். இராவணன் சீதையைத் தீண்டாது பர்ணசாலையோடு தூக்கிச் செல்வதாக அமைத்தல், இராமன் சைவ உணவை உண்பதாக அமைத்தல், அங்கதனைத் தன் மகனாகச் சுக்ரீவன் ஏற்றல், வாலி இறந்ததும் அவன் மனைவி தாரையைச் சுக்ரீவன் தன் தாயாகக் கருதுதல் (வான்மீகத்தில் சுக்ரீவன் தாரையைத் தன் மனைவியாக்கிக் கொள்கிறான்) இராமன் கடவுள் என்று கூடக் கருதாது வாலியின் உரையாடலில் வளம் சேர்த்தல் எனப் பல்வேறு இடங்களில் மூலம் சிதையாமல்

பண்பாட்டுச் சிந்தனையோடு அமைத்துள்ளமை பாராட்டிற்குரியது. எல்லா வண்ணமும் கலந்த கம்பனின் வண்ணத்தை எப்படிப் பாராட்டுவது. அவன் பாடல் வழியே பாராட்டலாம். இராமன் தாடகையைக் கொன்ற போது விசுவாமித்திரர் அவனது கைவலிமை கண்டார். நாம் கம்பனின் கையில் எழுத்தின் வலிமை கண்டோம். இராமன் கால்பட்டுக் கல் பெண்ணாக மாறியதில் அவனது காலின் பெருமை கண்டார்.

'இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகுக்கு எல்லாம்
உய்வண்ணம் அன்றிமற்று ஓர் துயர்வண்ணம் உறுவது உண்டோ?
மைவண்ணத்து அரக்கி போரில் மழை வண்ணத்து அண்ணலேஉன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்'

கம்பர் பிறந்த ஊர் திருவழுந்தூர் என்பர். எம்பரின் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு, 12ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என இரு கருத்துக்கள் நிலவுகின்றன. கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு ச.வே.சுப்பிரமணியன் அவர்கள் (கம்பன் இலக்கிய உத்திகள்) நாற்பதுக்கும் மேற்பட்ட அடைமொழிகள் நல்குகின்றார். கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய ஒரு கவிஞர் இருபதாம் நூற்றாண்டிலும் இலக்கியவாதிகளின் மனத்தில் முதலிடம் பெற்றுள்ளமை எண்ணி மகிழத்தக்கது.

'கம்பராமாயணமானது ஹோமர் எழுதிய இலியட்டையும், வெர்ஜில் எழுதிய ஈனியட்டையும், மில்டனுடைய சுவர்க்க நீக்கத்தையும், வியாச பாரதத்தையும், தனக்கே முதல் நூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையும் கூடப் பெருங்காப்பிய இலட்சணத்தின் அம்சங்களுள் அநேகமாய் அனைத்தையம் வென்றுவிட்டது' என்ற வ.வே.சு ஐயரின் கூற்று மிகையன்று உண்மையே எனலாம்.

**பெரியபுராணம்**

ஆசிரியர் சேக்கிழார். ஊர் தொண்டை நாட்டுக் குன்றத்தூர். காலம் 12ஆம் நூற்றாண்டு. இயற்பெயர் அருண்மொழித்தேவர். கல்வெட்டு, 'இராமதேவர்' எனக் குறிப்பிடும். இவர் குலோத்துங்க சோழ மன்னனிடம் அமைச்சராக இருந்தவர். 'உத்தம சோழப்பல்லவன்' எனும் பட்டம் இவருக்குரியது. பெரிய புராணம் பாடிய அருட்டன்மையால் 'தொண்டர் சீர் பரவுவார்' எனப் போற்றப்பட்டார். சேக்கிழார் குடியில்

பிறந்தமையால் 'சேக்கிழார்' என அழைக்கப்பட்டார். சைவத் திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் நூல். 63 நாயன்மார்களின் பெருமையை எடுத்தோதும் இக்காப்பியத்தைச் சேக்கிழார் 'திருத்தொண்டர் புராணம்' என்றார். அக்காலத்தில் பெரும்பான்மையான தமிழ்க்காப்பியங்கள் மொழிபெயர்ப்பாக இருந்த நிலையில் இக்காப்பியக்கரு தமிழிலேயே அமைந்தமை சிறப்புடையது. சேக்கீார் தம் நூலை 'மாக்கதை' என்றார். மா என்றால் பெரிய, கதை எனின் புராணம் எனவே அவர் பயன்படுத்திய சொற்றொடரால் 'பெரிய புராணம்' எனப்பட்டது எனலாம்.

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியும் சேக்கிழார் இந்நூலை இயற்றப் பின்புலமாக அமைந்தன. இதனைப் பின்வந்தோர் தொகை வகை விரி எனச் சிறப்பிப்பர். (தொகை-திருத்தொண்டத் தொகை வகை-திருத்தொண்டர் திருவந்தாதி, விரி-பெரிய புராணம்) குறிப்பிட்ட தலைவன் இல்லாமல் நாயன்மார்கள் அனைவரும் தலைவராக விளங்குவதால் இது காப்பியமன்று என்பர். ஆயின் பெரியபுராணத்திற்குப் பெரியதோர் உரை கண்ட சி.கே. சுப்பிரமிணய முதலியார் இதனைப் பெருங்காப்பியம் எனக் கூறிச் சான்றுகளுடன் நிறுவுவார். காப்பியத் தலைவராகக் கருதப்படுபவர் சுந்தரர். கதையின் முதல், இடை, இறுதியில் சுந்தரர் வருவதால் அவரே தலைவர் அவரைச் சுற்றியே கதை நிகழ்வுகள் அமைகின்றன என்பர்.

மன்னன் குலோத்துங்கன் சிந்தாமணி இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளமையை அறிந்த சேக்கிழார் அவனுக்குச் சைவப் பற்றினை ஊட்ட நாயன்மார்களின் வரலாற்றைக் கூறினார். பின்னர் அவற்றை மன்னன் வேண்டுகோளுக்கிணங்க நூலாக்கினார் என்பர். ஆயின் இக்கதைக்குப் போதுமான சான்றுகளில்லை.

பெரியபுராணம் சைவ உலகிற்குக் கிடைத்த தனிவிளக்கு. எனவேதான் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும் தம்முடைய சேக்கிழார்பிள்ளைத் தமிழில் 'பத்திச்சவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் பாராட்டுகின்றார். இந்நூல் இரண்டு காண்டங்களாக, பதின்மூன்று சருக்கங்களைக்

கொண்டது. 4281 பாடல்கள் உள்ளன. தனியடியார்கள் அறுபத்து மூவரும் தொகையடியார்கள் ஒன்பது பேரும் இடம்பெற்றுள்ளனர். நாயன்மார்களைப் பற்றி கறபனையாக எழுதாது அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று வரலாற்றுக் காப்பியமாகப் பெரிய புராணத்தை யாத்துள்ளார். இவர் முதலமைச்சராக இருந்தமையால் அதற்குரிய வாய்ப்புகள் மிகுதியாக இருந்தன எனலாம்.

பக்தியைப் பரப்பும் இலக்கியமாயினும் காதல் சுவையை விளக்குவதில் தனியிடம் பெறுகிறது. பரவையாரைப் பார்த்த சுந்தரர் காதல் வயப்பட்டு

'கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ.'.
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்றதிசயத்தார்.'

திருஞான சம்பந்தரைக் கண்முன் காட்டும்போது காதல் மறைகிறது ஆன்மீகஒளியாய் பக்திச்சுவையில் உள்ளம் உருகும்.

'ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைப் கண்குளிரக் கண்டார்கள்'

காதலும், பக்தியும் போல் இயற்கை வருணனையிலும் சேக்கிழார் நம் உள்ளம் கவர்கின்றார். நன்செய் நிலம் கண்முன் வரும் காட்சி

'காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்னம்
நாடெல்லாம் நீர்நாடு தனை ஒவ்வா நலமெல்லாம்'

பெரியபுராணம் இடைக்காலத்துத் தமிழ் மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும் விளக்கும் பக்தி கலந்த வரலாற்றுக் காப்பியம் எனலாம்.

இறைவனின் அடியார்களுக்குச் சாதியில்லை எனப் பாடிய புரட்சிக்காப்பியம் பெரியபுராணம்.

| 63 நாயன்மார்கள் | | | | |
|---|---|---|---|---|
| | அடியார் பெயர் | அவதரித்த மாதம் நட்சத்திரம் | சாதி | பிறசெய்திகள் |
| 1 | சுந்தரர் | ஆடி, சுவாதி | ஆதிசைவர் | ஊர்:திருநாவலூர், சிவனைத் தோழமையுடன் காண்பவர். ஏழாம் திருமுறை பாடியவர் |
| 2 | திருநீலகண்டர் | தை, விசாகம் | குயவர் | ஊர்: திருஎருக்கத்தம் புலியூர். |
| 3 | இயற்பகையார் | மார்கழி, உத்தரம் | வைசியர் | மனைவியையே இறையடியார்க்குக் கொடுத்து இயல்பிற்குப் பகையானவர். |
| 4 | இளையான்குடி மாறனார் | ஆவணி, மகம் | வேளாளர் | வறுமையிலும் விதைத் நெல்லை வாரி வந்து அடியவர்க்கு அமுதளித்தவர் |
| 5 | மெய்ப்பொருள் நாயனார் | கார்த்திகை, உத்திரம் | அரசர் | திருநீற்றிற்காக உயிரையேகொடுத்தவர். பகைவனையும் மன்னித்தவர் |
| 6 | விறன்மிண்டார் | சித்திரை, திருவாதிரை | வேளாளர் | மலையாள்தேசத்துச் செங்குன்றூர். சுந்தரர் சிவனடியாரை வணங்காது போய்விட அதனால் சிவனையெ வெறுத்துப் பின் சுந்தரர் அடியார் பெருமைபேசும் திருத்தொண்டத் தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பாடியதும் சுந்தரரைப் போற்றுவார். |
| 7 | அமர்நீதியார் | ஆனி, பூரம் | வைசியர் | ஊர்: பழையாறை, திருநல்லூரில் மடங்கட்டி அடியவர்க்கு அமுது செய்தவர் |
| 8 | எறிபத்த நாயனார் | மாசி, அத்தம் | கள்இறக்கும் தொழில் | திருக்கருவூர்- சிவனுக்குரிய பூக்கூடையை யானை எறிய யானையையும், பாகனையும் கொன்றவர். |
| 9 | ஏனாதியார் | புரட்டாசி, உத்திராடம் | கள்இறக்கும் தொழில் | எயினனூர். திருநீற்றைக் காட்டி எதிரி இவரைக் கொல்கிறான். |
| 10 | கண்ணப்பர் | தை, மிருகசீரிடம் | வேடர் | திண்ணப்பர் சிவனால் கண்ணப்பர். இவரது முற்பிறவி அர்ச்சுனன் என்பர். ஆறே நாளில் முத்தி பெற்றவர். தன் கண்களைச் சிவனுக்கு வழங்கியவர். |
| 11 | குங்குலியக்கலியர் | ஆவணி, மூலம் | அந்தணர் | ஊர்: திருக்கடவூர் யாராலும் நிமிர்த்த முடியாத சிவலிங்கத்தை நிமிர்த்தியவர். |
| 12 | மானக்கஞ்சாரன் | மார்கழி, சுவாதி | வேளாளர் | கஞ்சனூர். சிவனடியார் மகளின் கூந்தலைக் கேட்க மகிழ்ச்சியோடு அரிந்து கொடுத்தவர். |
| 13 | அரிவாட்டாயர் | தை, திருவாதிரை | வேளாளர் | இயற்பெயர் தாயனார். ஊர்: சோழ நாட்டுகணமங்கலம் |
| 14 | ஆனாயர் | கார்த்திகை, அத்தம் | ஆயர் | ஊர்: மங்கலவூர், இவரது புல்லாங்குழலுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உலகமே கட்டுப்படும் |
| 15 | மூர்த்தி | ஆடி, கார்த்திகை | அரசர் | ஊர்: மதுராபுரி. சிவனுக்குச் சந்தனம் இல்லை என்று தன் முழங்கையை அரைத்தவர். |
| 16 | முருகன் | வைகாசி, மூலம் | அந்தணர் | ஊர். திருப்புகலூர். ஞானசம்பந்தரின் நண்பர் சம்பந்தர் திருமணத்தன்று முக்தி பெற்றவர் |
| 17 | பசுபதியார் | புரட்டாசி, அசுபதி | வீரசைவர் | வெய்யலூர் |
| 18 | நந்தனார் | புரட்டாசி, உரோகிணி | புலையர் | திருநாளைப் போவார் எனும் பெயர். உடலோடு சிதம்பரத்தில் கயிலை சென்றவர். |
| 19 | திருக்குறிப்புத் தொண்டர் | சித்திரை, சுவாதி | வண்ணார் | அடியார் துணியைத் துவைத்துக் குறித்த நேரத்தில் கொடுக்க முடியவில்லையே என வருந்தித் தலையைப் பாறையில் மோதியவர் |
| 20 | சண்டேசுவரர் | தை, உத்திரம் | ஆயர் | இயற்பெயர் விசாரசருமர். சிவனை நிந்தித்ததாகக் கருதித் தம் தந்தையின் காலையெ வெட்டியவர் |
| 21 | திருநாவுக்கரசர் | சித்திரை, சதயம் | வேளாளர் | சமணத்திலிருந்து சைவம் மாறியவர். மன்னனையும் சைவத்திற்கு மாற்றியவர். |
| 22 | குலச்சிறையார் | ஆவணி, அனுசம் | வேளாளர் | பாண்டியநாடு மண்மேற்குடி அமைச்சர், மன்னன் நெடுமாறனைச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சைவனாக்கியவர் |
| 23 | பெருமிழலைக்குறும்பர் | ஆடி, சித்திரை | ---- | பெருமிழலை, சுந்தரரை வணங்குதல் மோட்சம் அடைய வழி என நம்பியவர். |
| 24 | காரைக்காலம்மையார் | பங்குனி, சுவாதி | வைசியர் | மூத்தநாயன்மார். சிவன் அம்மையே என்று அழைக்கும் பேறு பெற்றவர். |
| 25 | அப்பூதியடிகள் | தை, சதயம் | அந்தணர் | திருநாவுக்கரசரிடம் பேரன்பு கொண்டவர். மகன் இறந்து கிடக்க அமுதளித்தவர் |
| 26 | திருநீலநக்கனார் | வைகாசி, மூலம் | அந்தணர் | ஊர்: சாத்தமங்கை. சிவன் மீது சிலந்தி விழ மனைவி ஊதி விலக்க அதனால் சிவன் மீது எச்சில்பட்டதென மனைவியை விலக்கி, பின் சிவன் வேண்ட ஏற்றார் |
| 27 | நமிநந்தியடிகள் | வைகாசி, பூசம் | அந்தணர் | ஏமப்பேரூர் சிவன் கோயில் விளக்கெரிய எண்ணெய் இல்லை. சிவன் திருவாரூர் நீரை எடுத்து எரிக்கச் சொல்ல இரவெல்லாம் எரிந்தது. |
| 28 | திருஞானசம்பந்தர் | வைகாசி, மூலம் | அந்தணர் | தேவாரத்தின் முதல் மூன்று திருமுறைகள் பாடியவர். இசையில் அற்புதம் நிகழ்த்தியவர். மூன்று வயதிலேயே சிவனருள் பெற்றவர். |
| 29 | கலிக்காமர் | ஆனி, ரேவதி | வேளாளர் | ---------- |
| 30 | திருமூலர் | ஐப்பசி, அசுவதி | --- | நந்திதேவர் அருள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெற்ற சித்தர், பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் எழுதியவர் |
| 31 | தண்டியடிகள் | பங்குனி, சதயம் | -- | ஊர்: திருவாவூர். பிறவிக்குருடர். சிவன் அருளால் சமணரைவென்று அவர்கள் குருடாக இவர்கண் பெற்றார். |
| 32 | மூர்க்கனார் | கார்த்திகை, மூலம் | வேளாளர் | ஊர்: திருவேற்காடு, சூதாடிப்பெற்ற பொருளால் சிவத்தொண்டு செய்தவர். |
| 33 | சோமாசிமாறன் | வைகாசி, ஆயில்யம் | அந்தணர் | ஊர்: சோழநாட்டுத் திருவம்பர். சுந்தரரைத் தொழுது சிவபதம் பெற்றார். |
| 34 | சாக்கியர் | மார்கழி, பூராடம் | வேளாளர் | ஊர்: சங்கமங்கை. புறத்தில் பௌத்த சமயம். அகத்தில் சிவன். கல்லால் எறிந்து சிவனைப் பூசித்தவர். |
| 35 | சிராப்புலியார் | கார்த்திகை பூராடம் | அந்தணர் | - |
| 36 | சிறுத்தொண்டர் | சித்திரை, பரணி | -- | பல்லவமன்னர் நரசிம்மவர்மனின் படைத்தலைவர். வாதாபி வெற்றிக்குக் காரணமானவர். இயற்பெயர் பரஞ்சோதி. |
| 37 | சேரமான்பெருமாள் | ஆடி, சுவாதி | அரசர் | ஊர்:மகோதை நகரம். சேர மரபு. சுந்தரர் தோழர். கழறிற்றறிவார் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நாயனார் என்பர். திருமுறையில் இடம்பெறுபவர் |
| 38 | கணநாதனார் | பங்குனி, திருவாதிரை | அந்தணர் | -- |
| 39 | கூற்றுவனார் | ஆடி, திருவாதிரை | அரசர் | களந்தையை ஆண்ட குறுநிலமன்னர். தில்லைநடராசரின் திருவடியே மகுடம் எனக் கருதியவர். |
| 40 | புகழ்ச்சோழன் | ஆடி, கார்த்திகை | அரசர் | சூரியவம்சம். சோழர்குலம். வெட்டிய பகைவர் தலையொன்றில் சடையிருக்கச் சிவத்துரோகம் செய்தேன் எனத் தன் தலையை அரிந்தவர். |
| 41 | நரசிங்க | புரட்டாசி, சதயம் | அரசர் | திருமுனைப்பாடி நாடு. திருவாதிரை முனையரையனார் தோறும் அடியார்க்கு அமுதளித்து நூறு பொன் கொடுத்தார். |
| 42 | அதிபத்தர் | ஆவணி, ஆயில்யம் | மீனவர் | ஊர்: நாகப்பட்டினம். கடற்கரையை அடுத்து சிற்றூர். வலையில் விழும் முதல் மீனைச்சிவனுக்கு அளித்தவர் |
| 43 | கலிகம்பனார் | தை, ரேவதி | வைசியர் | ஊர்:பெண்ணாகடம். தம் வேலையாள் சிவனடியார் வேடம் தரித்து வரக் காலில் விழுந்து வணங்கியவர். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தடுத்த மனைவியின் கையை வெட்டியவர். |
| 44 | கலியனார் | ஆடி, கேட்டை | வைசியர் | எண்ணெய் விளக்கு ஏற்றமுடியாது தன் தலைமுடியை எரித்தவர். |
| 45 | சத்திநாயனார் | ஐப்பசி, பூசம் | வேளாளர் | சோழநாட்டுவிரிஞ்சையூர். சிவ நிந்தனை செய்வோர் நாவினை அறுத்து விடுவார். |
| 46 | ஐயடிகள் காடவர்கோன் | ஐப்பசி, மூலம் | அரசர் | காஞ்சி பல்லவர் குலம். இவர் அரளிய பிரபந்தம் ஷேத்திரத் திருவெண்பா |
| 47 | கணம்புல்லனார் | கார்த்திகை – கார்த்திகை | | இருக்குவேளூர். சிவனுக்கு விளக்கு எரிய எண்ணெய் இல்லாது தன் தலைமுடியை எரித்தவர் |
| 48 | காரியார் | மாசி, பூராடம் | பாணர் | இறைவனே பாடும்படிக்கேட்கம் பெருமை பெற்றவர். |
| 49 | கூன்பாண்டியன் | ஐப்பசி, பரணி | அரசர் | மங்கையர்க்கரசியின் கணவன், பாண்டியன் நெடுமாறன் |
| 50 | வாயிலார் | மார்கழி, ரேவதி | வேளாளர் | |
| 51 | முனையடுவார் | பங்குனி, பூசம் | வேளாளர் | ஊர்:திருநீடூர் |
| 52 | கழற்சிங்கன் | வைகாசி, பரணி | அரசர் | கோயில்மண்டபத்தில் விழுந்த பூவை அரசிநுகர இதைக் கண்ட சத்திநாயனார் அரசி மூக்கை அரிய, தண்டனை போதாது என்று அரசியாகிய தம் மனைவியின் கையையும் அரிந்தவர் |
| 53 | இடங்கலியார் | ஐப்பசி, | அரசர் | கொடும்பாளூர்சிற்றரசர். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கார்த்திகை | | இவ்வம் சத்தரசனேபிற்காலச் சோழராட்சியைத் தோற்றுவித்த விசயாலயன் என்பர். |
| 54 | செருத்துணையார் | ஆவணி, பூசம் | வேளாளர் | ஆவூர். கோயில் மண்டபத்துப் பூவை அரசி நுகர அரசியெனப் பாராது மூக்கை அரிந்தவர். |
| 55 | புகழ்த்துணையார் | ஆவணி, ஆயில்யம் | ஆதிசைவர் | சிவனுக்கு அபிஷேகம் செய்ய வழியின்றி மூர்ச்சித்தபோது சிவன் தினம் ஒரு பொற்காசு தன் பீடத்தில் தோன்றச் செய்தான். |
| 56 | கோட்புலியார் | ஆடி, கேட்டை | வேளாளர் | சோழனிடத்தில் படைத்தலைவனாக இருந்தவர் |
| 57 | பூசலார் | ஐப்பசி, அனுசம் | அந்தணர் | திருநின்றவூர். மனத்தில் சிவனுக்குக் கோயில் கட்டியவர். |
| 58 | மங்கையர்க்கரசி | சித்திரை, ரோகிணி | அரசி | பாண்டியன் நெடுமாறனின் துணைவி. அவனைச் சைவத்திற்கு திருஞான சம்பந்தர் மூலம் மாற்றியவர். |
| 59 | நேசநாயனார் | பங்குனி, ரோகிணி | நெசவாளர் | தொழில்கொண்டு பார்க்கும்பொழுது இவர் பெயர் நெசவுநாயனார் எனக் காரணப்பெயராய் இரக்கலாம் |
| 60 | கோச்செங்கணான் | மாசி, சதயம் | அரசர் | சிவபெருமானுக்கு 77 கோயில் கட்டியவன். திருவானைக்கோவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஜம்புகேஸ்வரா் அருள் பெற்றவா். |
| 61 | நீலகண்டயாழ்ப்பாணா் | வைகாசி, 5லம் | பாணா் | ஞானசம்பந்தருடன் இருந்து யாழ் இசைத்தவா் |
| 62 | சடையனாா் | மாா்கழி, திருவாதிரை | ஆதிசைவா் | சுந்தரமூா்த்தி சுவாமிகளின் தந்தை. நல்ல மகனைப் பெற்றதால் நாயனாா் ஆகினாா். |
| 63 | இசை ஞானியாா் | சித்திரை, சித்திரை | ஆதிசைவா் | சடையனாா் மனைவி, சுந்தரமூா்த்தி சுவாமிகளின் தாய் |
| | நாயன்மாா்களில் வேளாளா்களே மிகுதியாக உள்ளனா் (18) | | | |

**கந்தபுராணம்**

இடைக்காலத் தமிழகத்தில் புராணங்களின் செல்வாக்கு மிகுந்தன. வடமொழிக்காப்பியங்கள் தமிழில் மொழி பெயா்க்கப்பட்டன. அவ்வகையில் வடமொழியில் எழுதப்பட்ட சிவசங்கர சங்கிதை காஞ்சியில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியாரால் தமிழில் கந்தபுராணமாயிற்று. ஆறு காண்டங்களையும், 10436 பாடல்களையும் கொண்டது. காலம் பெரிய புராணத்திற்கு முந்தியது எனக் கூறி 11ஆம் நூற்றாண்டு என்பா். 12ஆம் நூற்றாண்டு எனக் கூறும் கொள்கையும் உள்ளது. கற்பனை நயமிக்க பாடல்களைக் கொண்ட காப்பியம் கந்தபுராணம்.

நாட்டுவளம், நகரவளம் தொடங்கி முருகனின் பிறப்பு, வளா்ப்பு, சூரனுடன் போரிடல், தெய்வானையை மணத்தல், வள்ளியை மணத்தல் ஆகியவை விரிவாக இடம்பெற்றுள்ளன. இலங்கைத் தமிழ் மக்களிடையே கந்தபுராணம் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது.

**திருவிளையாடற் புராணம்**

ஆசிரியா் பரஞ்சோதியாா். சிவபெருமானின் திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறும் நூல். பல்வேறு திருவிளையாடற் புராணங்கள் இருப்பினும் இதுவே சிறப்பாகக்

கருதப்படுகிறது. இந்நூல் வடமொழியில் அமைந்துள்ள 'ஹாலாஸ்ய மகாத்தியத்தை' அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இலக்கிய நயமும் கற்போரை ஈர்க்கும் தன்மையும் கொண்டது. அளவிலும் பெரியது. காப்பிய இலக்கணங்கள் பொருந்தியது. ஆயின் இதில் கூறப்படும் கதைகள் வெறும் புராணங்களே ஏற்புடைத்தன்று.

பரஞ்சோதி முனிவருக்கு முன்பு பெரும்பற்றப் புரியூர்நம்பி திருவிளையாடல் புராணம் எழுதினார். ஆயின் பரஞ்சோதியின் திருவிளையாடல் புராணம் வெளி வந்ததும் அதன் சிறப்பால் முன்னது முடங்கிவிட்டது. மதிப்பற்றுப் போய்விட்டது எனலாம்.

பரஞ்சோதி முனிவர் மதுரைக்காண்டம், கூடல் காண்டம், திருஆலவாய்க் காண்டம் என மூன்று காண்டங்களாகவும், 65 படலங்களாகவும் பகுத்துள்ளார். 3363 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்று காண்டங்களும் மதுரையையே பெயராகக் கொண்டுள்ளன.

காலம் 17 ஆம் நூற்றாண்டு எனக் கருதுவர். இன்று ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவோர் முடிவுரையில் முன் கூறிய பகுதிகளைச் சுருக்கித் தருதல் இயல்பு. இம்முறையைப் பரஞ்சோதி முனிவர் தன் புராணத்தை முடிக்கும்போது அமைத்துள்ளார். இவ் உத்தி வேறு எந்தக் காப்பியத்திலும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அரிச்சந்திரபுராணம்**

ஆசிரியர் பாண்டியநாட்டைச் சார்ந்த வீரகவிராயர். 1225 பாடல்கள் உள்ளன. எத்தனை துன்பம் வரினும் உண்மை பேசுவதிலிருந்து மாறாக அரிச்சந்திரன் கதையைக் கூறும் நூல், நாட்டை இழந்து, மகனை இழந்து, மனைவியை வேலைக்காரியாக விற்று இறுதிவரைப் போராடி வாய்மை வெல்லும் என உணர்த்திய அரிச்சந்திரன கதையை எளிமையோடும், உணர்ச்சியோடும் பாடியுள்ளார்.

**நளவெண்பா**

'வெண்பாவிற் புகழேந்தி' எனப் பாராட்டப்பெறும் புகழேந்திப் புலவர் இயற்றியது நளவெண்பா. மகாபாரதத்தில் வரும் 'நளோபாக்கியானம்' என்ற கதைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்றது.

செவிக்கு நல்லோசை, இனிய பொருள் நயம் கொண்டு அமைந்துள்ளது. நளன், தமயந்தி கதை தமிழ் கூறும் நல்லுலகம் முழுக்க அறியும்படிச் செய்தவர் புகழேந்தியாவார். பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். புகழேந்தியும் ஒட்டக்கூத்தரும் சம காலத்தவர் என்பர். ஆயின் இவர்களைப் பற்றி வழங்கும் கதைகள் ஏற்புடையன அல்ல.

நளவெண்பா சுயம்வரகாண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது. 424 நேரிசை வெண்பாக்கள் உள்ளன. காலம் 12ஆம் நூற்றாண்டு என்பர். ஒட்டக்கூத்தருக்குப் பிந்தியவர் எனக் கருதி 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்பர். இவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கி ஆவார்.

புகழேந்தியின் பெயரில் அல்லி அரசாணிமாலை, பவளக் கொடிமாலை, புலந்திரன் களவு மாலை ஆகிய நூல்கள் உள்ளன. இப்பாடல்களை இயற்றிய புகழேந்தி, நளவெண்பா புகழேந்தியினின்றும் வேறானவர் எனக் கருதுவர். நளவெண்பாவின் சந்தமிக்க பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

“போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் - தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று”

**நைடதம்**

நிஷதநாட்டு மன்னன் நளன் வரலாற்றைக் கூறும் மற்றொரு நூல் நைடதம். ஆசிரியர் அதிவீரராம பாண்டியர். இவர் பிற்காலப் பாண்டிய மன்னர் ஆவார். இந்நூல் 1172 விருத்தப்பாக்களைக் கொண்டது. ஹர்ஷ மன்னனின் வடமொழி நைஷதம் இதன் மூலநூல் ஆகும். காலம் கி.பி.16ஆம் நூற்றாண்டு.

**வில்லிபுத்தூராழ்வார் பாரதம்**

வடமொழியிலமைந்த பாரதத்தைப் பின்பற்றி எழுந்த நூல் வில்லிபுத்தூராரின் பாரதம். பத்துப் பெருவங்களாக அமைந்துள்ளது. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் பாரதமே தமிழில் காலத்தால் முந்திய நூல். அந்நூல் கிடைக்கவில்லை.

உரைமேற்கோளாகச் சில பாடல்கள் கிடைக்கின்றன. தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்தில் தோன்றிய பாரதம் பாரதவெண்பா ஆகும். இவர் பெயரும் பெருந்தேவனார். இந்நூல் உத்தியோக பருவம், வீடும பருவம், துரோண பருவம் எனும் மூன்று பருவங்களைக் கொண்டது. சோழர்காலத்தில் அருணிலை விசாகர் பாரதத்தைத் தமிழ்ப்படுத்தினார். இவ்விவரம் மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டால் அறியமுடிகிறது. அடுத்து நாயக்கர் காலத்தில் தோன்றிய பாரதமே வில்லிபுத்தூரார் பாடிய பாரதம்.

இன்று தமிழில் முழுமையாகவும், சிறப்பாகவும் கிடைக்கும் பாரதம் வில்லிபாரமேயாகம். இவர் ஊர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள சனியூர் ஆகும். இவரை ஆதரித்தவன் வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் ஆவான். தந்தையார் வீரராகவன். சமயம் வைணவம். கி.பி.14ஆம் நூற்றாண்டு.

அகத்தியப்பட்டர் வடமொழியில் எழுதிய பாலபாரதம், வியாசரின் மகாபாரதம், நந்திவர்மன் காலத்துப் பாரதவெண்பா இவற்றை அடிப்படையாகக் கொண்டு வில்லிபுத்தூரார் இயற்றியது வில்லிபாரதம். ஆதிபருவம், சபாபருவம், ஆரண்யபருவம், விராட பருவம், உத்யோக பருவம், வீட்டும பருவம், துரோண பருவம், கன்ன பருவம், சல்லியபருவம், சௌதிகப் பருவம் ஆகிய பத்துப் பருவங்களைக் கொண்டுள்ளது. 4339 விருத்தப்பாக்களால் ஆனது. வடசொற்கள் மிகுதி. கம்பனைப் போன்று தமிழ்ப்படுத்தாமையால் பல வட சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்குப் பாயிரம் எழுதியவர் வரந்தருவார். இவர் வில்லிபுத்தூராரை ஆதரித்த வள்ளல் வரபதி ஆட்கொண்டானின் மகனாவார்.

**இரகுவம்சம்**

காளிதாசனின் இரகுவம்சத்தை முதல் நூலாகக் கொண்டு அரசகேசரி என்பவர் தமிழில் இரகுவம்சம் எழுதினார். திருவாரூர் தியாகராசர் முன்பு அரங்கேற்றப்பட்டது. பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்கள் பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் இலங்கையைச் சார்ந்தவர். ஊர் நல்லூர். அரச குலம் என்பர். வடமொழிப் புலமைமிக்கவர். காலம் 17ஆம் நூற்றாண்டு. இவரது தமிழ் ஆசான் இராமாநுசக் கவிராயர். ஆழ்வார்த் திருநகரியைச் சார்ந்தவர்.

மொத்தப் பாடல்கள் 2500. மக்கள் வழக்கில் அதிகம் இடம்பெறாத நூல் இரகுவம்சம்.

**வசு சரித்திரம்**

ஆசிரியர் தொண்டைமாந்துறை அம்பலத்தாடும் ஐயன். இதன் மூல நூல் இராமராஜ பூஷணகவி தெலுங்கில் எழுதிய வசு சரித்திரமாகும்.

**நல்லாப்பிள்ளை பாரதம்**

வில்லிபுத்தூரார் எழுதிய பாரதம் எப்படி அவர் பெயரால் வில்லிபுத்தூரார் பாரதம் என வழங்கப்படுகிறதோ அதுபோல் நல்லாப்பிள்ளை எழுதிய பாரதம் அவர் பெயரால் வழங்கப்படுகிறது. வில்லிபாரதம் 10 பருவங்களைக் கூற இவர் 18 பருவங்கள் அமைத்துள்ளார். மொத்தப்பாடல் 13953. வில்லிபாரதச் செய்யுட்களை நூற்றுக்கணக்கில் மாறுதலின்றிக் கையாண்டுள்ளார். இவர் ஊர் முதலம்பேடு. காலம் 18ஆம் நூற்றாண்டு.

**அஷ்டப் பிரபந்தம்**

ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இவருக்க அழகிய மணவாளதாசர் என்ற பெயரும் உண்டு. தமிழ் இலக்கண அறிவு மிக்கோரே. இந்நூலைச் சிறப்பாகப் பயிலமுடியும். திருமாலின் பெருமை பேசும் நூல். அஷ்டம் என்பது எட்டு என்ற எண்ணைக் குறிக்கும். இந்த எட்டு நூல்களில் நான்கு திருவரங்கத்தின் பெருமை பேசுகிறது. இரண்டு நூல்கள் திருவேங்கடமலையின் பெருமை பேசும் இவை தவிர ஒருநூல் அழகர் அந்தாதி என்றும் மற்றொன்று நூற்றியெட்டுத் திருப்பதி அந்தாதி என்றும் பெயர் பெற்றுள்ளன.

இந்நூலில் அதிகம் வழக்கில் இல்லாத யமகம், சிலேடை முதலிய அலங்காரங்கள் மிகுதியாக அமைந்துள்ளன. இதற்கு வை.மு.கோ உரை சிறப்பாகக் கிடைத்துள்ளது.

**இராமானுசர் நூற்றந்தாதி**

திருவரங்கத்து அமுதனார் பாடிய நூல் இதுவாகும். இராமானுசரின் பெருமையினை எடுத்துரைக்கும் நூல். ஆசிரியர் திருவரங்கத்தில் வாழ்ந்தவர்.

இராமாநுசருக்கு ஒரு நூற்றாண்டு பிந்தியவர். கி.பி.13ஆம் நூற்றாண்டு. இவர் இராமாநுசரின் சீடர் கூரத்தாழ்வாரால் ஞானச்சுடர் பெறும் பேறு பெற்றவர்.

கட்டளைக் கலித்துறையில் அமைந்தது. 108 பாடல்கள். இராமநுசர் புகழ்பாடும் நூல். மந்திரம் போல் வலிமையாக உச்சரிக்கத் தகுந்த பாடல்களைக் கொண்டது. எனவே இதனைப் பிரபன்ன காயத்ரி என்றும் கூறுவர். ஆழ்வார்கள் வரலாறும் அமைந்தள்ளது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டள்ளது.

**தேசிகப்பிரபந்தம்**

தேசிகப் பிரபந்தம் எழுதியவர் வேதாந்த தேசிகர். இவரது காலமும் இராமாநுசர் காலமும் ஏறக்குறைய ஒன்றாகும். இருவரும் வைணவத் தொண்டு செய் பெரியாரே. வைணவத்தின் அடிப்படைக் கொள்கைகளை இந்நூல் நன்கு விளக்குகிறது. 405 பாடல்கள். பல்வேறு வகையான பாக்கள்.

வேதாந்த தேசிகர் இயற்பெயர் வெங்கடநாதன். தொண்டைமண்டலம் காஞ்சியை அடுத்த துப்புல் இவரது சொந்த ஊராகும். இவரது காலம் 13 ஆம் நூற்றாண்டு. இவரும் இராமாநுசரும் வைணவத்தைப் பரப்பிய போதிலும் இருவர் கோட்பாட்டிலும் வேறுபாடு உள்ளது. முக்தியடையச் சாதி ஒரு பொருட்டல்ல எனக் கருதியவர் இராமாநுசர். அதற்கு நேர்மாறான கருத்தினைக் கொண்டவர் வேதாந்த தேசிகர்.

**பரணி**

'ஆனை ஆயிரம் அமரிமை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி'

என இலக்கண விளக்கம் பரணிக்கு இலக்கணம் கூறுகின்றது. போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொல்லும் வீரனைச் சிறப்பித்துப் பாடுவது. போர்செய்யும் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கப் பாடப்பட்டது எனலாம்.

பரணி நட்சத்திரத்தின்போது கொற்றவைக்குக் கூழ் அட்டு விழாக் கொண்டாடுவர். கொற்றவைக்குரிய நாள் பரணி. மேலும் பேய், யானை, எமன் இவற்றோடு தொடர்புடையது பரணி என்பர்.

பன்னிருபாட்டியல் பரணியின் பண்பை

வஞ்சி மலைந்து உமிஞை முற்றித்

தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை

வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்

குருதிப் பேராறு பெருகும் செங்களத்து

ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே'

என எடுத்துரைக்கும்

நச்சினார்க்கினியர் ஏர்க்களம் பாடு நரும், போர்க்களம் பாடுநரும், பரணி பாடுநரும் எனக் குறிப்பிடுவதால் பொருநர்களில் பரணி பாடுவோர் எனத் தனிப்பிரிவு இருந்தனர் என எண்ண இடம் உள்ளது.

கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடல், பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, வாழ்த்து எனப் பல்வேறு வகை உறுப்புக்கள் பரணியில் அமையும். இவ்வுறுப்புக்கள் முறை மாறி அமைதலும் உண்டு.

நமக்குக் கிடைக்கும் பரணி நூல்களில் காலத்தால் முந்தியது கலிங்கத்துப்பரணி. ஏனைய பரணி நூல்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணி, வைத்திய நாததேசிகரின் பாசவதைப் பரணி, தத்துவராவரின் மோகவதைப் பதரணி, அஞ்ஞவதைப் பரணி, ஆசிரியர் பெயரில்லா இரணியவதைப் பரணி ஆகியன. பொதுவாகப் பரணி தோற்றோன் பெயரில் அமைந்து வெற்றி பெற்றோனின் சிறப்பினைக்கூறும்.

**கலிங்கத்துப்பரணி**

ஆசிரியர் செயங்கொண்டார். பரணிக்கோர் செயங்கொண்டார் எனப் புகழப்படுவர். முதற் குலோத்துங்கன் காலம். (கி.பி.1070 – 1118) கி.பி. 11ஆம் நூற்றாண்டு. தீபங்குடியில் வாழ்ந்தவர். முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் கலிங்க மன்னன் அனந்தவர்ம சோடங்கன் மீது போர் தொடுத்து வென்ற வீரச் செயல்களைப் பாடுவது இப்பரணியாகும்.

கலிங்கத்துப்பரணியின் பாடல்கள் பொருள் நயமும் ஓசை நயமும் மிக்கவை. உணர்ச்சிக் கேற்பப் பாடல்களின் ஓசைகளும் மாறி மாறி அமைந்துள்ளன. இரண்டு இரண்டு அடிகளையுடையதாய்த் தாழிசையில் அமைந்தது. 585 தாழிசைகள் உள்ளன.

குலோத்துங்கன் அநபாயன் என அழைக்கப்படுகிறான். அவனைப் பற்றிய செய்திகளைத் தருகின்றது. நூலின் அமைப்பு என்று காணும்போது பரணிக்குரிய தலைவன் பல்லாண்டு வாழ இறையிடம் வேண்டும் கடவுள் வாழ்த்து. போர்க்களம் சென்ற கணவன் வரவிற்காக ஏங்கும் காதல் மனைவியின் கடைத்திறப்பு. வெற்றித்தாய் கொற்றவையின் கோயிலையும் அவள் உறையும் காட்டையும் பாடும், காடு பாடியது, கோயில் பாடியது. தேவியைப் பாடுதல், பேய்களின் தன்மையைக் கூறும் பேய்பாடியது. இந்திரசாலம், மன்னனின் பரம்பரைப் பெருமையைக் கூறும் இராச பாரம்பரியம். முதற்குலோத்துங்கனின் (அநபாயன்) பிறப்பு, வெற்றிகளை விளக்கும் அவதாரம், கலிங்கத்தில் சோழனுக்கும் கலிங்கனுக்கும் நடைபெற்ற போரினைக் கலிங்கத்துப் பேய் காளிக்குக் கூறும், காளிக்குக் கூளி (பேய்) கூறியது. மேலும் காளிக்குப் போர் நிகழ்ச்சியைப் பேய் விரிவாக எடுத்துரைக்கும் போர் பாடியது. போர்க்களத்தைக் காணப் பேய்கள் காளியை அழைக்கக் காளியும் கண்டு பேய்களுக்குக் கூறும் களம் பாடியது. பின்னர் காளியின் ஆணைக்கேற்பப் பல்துலக்கிக் கூழட்டு உண்டு இவை கிடைப்பதற்குக் காரணமான அநபாயச் சோழனைப் போற்றிப் பாடும்.

ஓசை நயத்திற்குக் கலிங்கத்துப் பரணி சிறந்த எடுத்துக்காட்டாய் அமைகிறது. போர்க்கள ஓசைகள் வருணிக்கும் பாடல்,

‘எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி யிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக் குழாம்
விடும்விடு மெனுமொலி மிகைக்கவே’

அடுத்துக் கடைத்திறப்பு காட்டும் காதல் போர்க்களம் காணீர். போர்க்களத்தில் கலிங்க வீரர்களைச் சாய்த்துக் குன்றென நிமிர்ந்த தேளோடு, மூங்கிலை ஒத்த தோளினைப் பெற்ற தலைவியைக் காண ஒவ்வொரு படைவீரனும் ஓடிவருகிறான். மகளிர் வரவேற்கக் காத்து நிற்கின்றனர். வேல் எடுத்த வீரன் கைகள் பார்வை அம்பால்தாக்க, வாள் விழியில் மயங்கிக்கூறும் கூற்று,

‘செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இளைஞர் ஆருயிரும்

ஒக்கச் செருகுங் குழல்மடவீர்

உம்பொற் கபாடந் திறமினோ.

வருவார் கொழுநர் எனத்திறந்தும்

வாரார் கொழுநர் எனவடைத்தும்

திருகுங் குடுமி விடியளவுந்

தேயுங் கபாடந் திறமினோ.'

பரணி நூல்கள் பல தோன்றினும் காலப் போக்கில் வழக்கொழிந்தன. பரணி பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் ந.வீ.செயராமன் பதினேழு பரணிநூல்கள் பற்றிய குறிப்புகள் கிடைப்பதாகக் கூறுவர்.

**தக்கயாகப் பரணி**

ஆசிரியர் ஒட்டக்கூத்தர். சோழ மன்னன் விக்ரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், அவன் மகன் இரண்டாம் இராசராசன் ஆகியோர் காலத்தவர். எனவேதான் இம்மூவரையும் நாயகர்களாக அமைத்து மூவருலா பாடினார். சோழர் அவையில் செல்வாக்குப் பெற்றவர். இவர் காலத்தவர் புகழேந்தியும், கம்பனும் என்பர். மாறுபட்ட கருத்தும் உள்ளது. இவர் எழுதிய வேறு நூல்கள் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், காங்கேயன் நாலாயிரக்கோவை, மூவருலா, இவர் காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு.

தட்சன் சிவபெருமானை மதிக்காது யாகம் செய்ய அதனால் சினங்கொண்ட சிவனின் மைந்தன் வீரபத்திரன் யாகத்தை அழித்து, உதவிக்கு வந்தோரை வென்று தட்சனின் தலையைத் துண்டித்த புராண வரலாற்றைக் கூறுவது. தோற்ற தக்கனின் பெயரால் மரபுப்படி பெயர் பெற்றது.

அகத்தியரைப் போற்றுகின்றார். தமிழ் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர் ஒட்டக்கூத்தர். மொழி நடை சிறிது கடுமையாகவே உள்ளது. நூலை முடிக்கும்பொது

'வாழி தமிழ்ச் சொற் றெரிந்த நூற்றுறை

வாழ் தமிழ்க் கொத்த தனைத்து மார்க்கமும்'

என வாழ்த்துகின்றார். முருகனை ஞானசம்பந்தனாக வந்து வாதிட்டுச் சமணர்களை வென்றதாகக் குறிப்பிடுகின்றார்.

இரண்டாம் குலோத்துங்கன் தில்லைமன்றிலுள்ள திருமால் மூர்த்தத்தைக் கடலில் எறிந்த வரலாற்றுச் செய்தியை இந்நூல் குறிப்பிடுகிறது. திருமாலைச் சிறுதெய்வம் என்று கூறியிருப்பது இவரது சைவப் பற்றின் மிகுதியைக் காட்டுகிறது.

**உலா**

தலைவன் உலாவரும் போது, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவமகளிரும் அவன் அழகில் மயங்கிக் காதல் கொள்வதாகப் பாடுவது உலா. இது தமிழ் மகளிரை இழிவுபடுத்தும் செயல் எனக் கடிந்து உலாவை ஒதுக்குவர். எனவேதான் நச்சினார்க்கினியர் இதில் வரும் காதல் மகளிர் பரத்தையர், குலமகளிரன்று என்பர். பெருங்கதையும் உலா பற்றிக்கூறுமிடத்தில்

'உத்தம மகளிர் ஒழிய......' எனக் கூறிய குல மகளிரை நீக்கும். 'பேராசிரியர் உரையும் '.............ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாது' எனக்கூறும்.

உலாவரும் தலைவனின் சிறப்புக்கள் விரிவாகச் சுட்டப்படும். அதனையடுத்து அவனைக் கண்டு காதல் நோயுற்ற ஏழுவகைப் பருவ மகளிரின் நிலை எடுத்துரைக்கப்படும். மிகுதியான உலா நூல்களைப் பாடியவர் ஒட்டக்கூத்தர்.

உலா நூல் இரண்டு பகுதிகளாக அமையும். முதனிலையில் குடியின்தன்மை, அரசன்நீதி, மரபு, கொடை, நீராடுதல், அணி அணியும் முறை, நகர வரவேற்பு, களிறு ஊர்தல் ஆகியவை இடம் பெறும். தலைவன் சிறப்புக் கூறுங்கால் பத்துவகைச் சிறப்புக்கள் எடுத்துரைக்கப்படும். இதனைத் தசாங்கம் என்பர். உலாவின் பிற்பகுதியில் எழுவகை மகளிரின் ஆடல் பாடலோடு தலைவன் மீது அவர்கள் கொண்ட காதலும் இடம்பெறும்.

உலா பிற்காலத்துத் தோன்றியது. எனினும் தொல்காப்பியம் குறிப்பிடும்

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிய
வழக்கொடு சிவணிய வகைமையான'

எனும் நூற்பா உலாவின் தோற்ற நிலை என்பர்.

தமிழில் திருக்கைலாய ஞான உலா, திருவாரூர் உலா, திருப்பூவணநாதர் உலா, திருக்காளத்திநாதர் உலா, ஏகாம்பரநாதன் உலா, திருக்கழுக்குன்றத்து உலா, விக்ரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா, திருக்குற்றால நாதருலா, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, சொக்கநாதர் உலா, தற்காலத்தில் வெளிவந்த காமராசர் உலா ஆகிய பல நூல்கள் தோன்றியுள்ளன.

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலா, உலா நூல்களில் முதலில் தோன்றியதாகும். எனவே இந்நூலை 'ஆதி உலா' என்பர். இறைவன் பெருமை பேசும் உலா எனும் முறையில் இதனைத் 'தெய்வீக உலா' என்றும் கூறுவர். சிறந்த ஓசை நயமும் கருத்தாழமும் கொண்டது.

சேரமான் பெருமான் நாயனார் ஏழாம் திருமுறை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பர். பொண்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா ஆகிய சிற்றிலக்கியங்கள் இவர் அருளியவையேயாகும். திருக்கைலாய ஞான உலா பன்னிரு திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. இதன் காலம் கி.பி.8ஆம் நூற்றாண்டு. சிவனின் பெருமையும், இறைவியின் அழகும், வீதிகளின் சிறப்பும் அழகிய வருணனையோடு அமைந்து கற்போரை மகிழ்விக்கின்றது.

நம்பியாண்டவர் நம்பிகள் இயற்றிய 'ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை' அடுத்து அமைவது. திருஞானசம்பந்தரைத் தலைவராகக் கொண்டு அமைவது.

மூவருலா ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டது. விக்ரம் சோழன், குலோத்துங்கன், இராசராசன் ஆகிய மூன்று சோழ மன்னர்களையும் தலைவர்களாகக் கொண்டு தனித்தனியாகப் பாடப்பெற்ற உலா. இம்மூன்றையும் இணைத்து மூவருலா என்பர். இம் மூன்று மன்னர்கள் காலத்திலும் வாழ்ந்தவர் ஒட்டக்கூத்தர். தக்கயாகப் பரணியும் இவர் பாடியதேயாகும்.

தமிழக வரலாற்றை அறிய இந்நூல் பெரிதும் பயன்படுகின்றது, விசயாலயச் சோழனுக்கு 96 விழுப்புண்கள் ஏற்பட்ட செய்தியும், முதலாம் இராசராசனின்

வெற்றியும், கங்கையும் கடாரமும் கொண்ட முதலாம் இரசேந்திரனின் வெற்றியும் பற்றி ஒட்டக்கூத்தர் தம் உலாநூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

பேதைப் பருவத்தை ஒட்டக்கூத்தர் காதல்களமாக்குகின்றார். அறியாப் பருவம் இதுவாகும். ஆயின் இதனையடுத்து அமையம் பருவம் பெதும்பை. பெதும்பைப் பருவத்தையே உலா பாடுவோர் சிறப்பாக எடுத்தாள்கின்றனர். எனவே, ‘பேசும் உலாவிற் பெதும்பைப்புலி’ எனும் வழக்குள்ளது எண்ணத்தக்கது.

# IV. வளர்தமிழ்

## 1. கிறிஸ்தவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு

தமிழ்நாட்டிற்கு வந்த மேனாட்டு அறிஞர்களும் தமிழ்நாட்டில் பிறந்து வாழ்ந்த கிறிஸ்த்தவர்களும், தமிழ் மொழிக்கு ஆற்றிய பணிகளைத் தான் கிறிஸ்த்துவத் தமிழ்த்தொண்டு என்கிறோம்.

**தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள்**

- இலக்கிய இலக்கணங்களை மேலை நாட்டு மொழிகளிலும், மேலைநாட்டு இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழிபெயத்தனர்.
- உரைநடைத் தமிழை உண்டாக்கினர்.
- நாவல், சிறுகதை, நாடகம் போன்ற துறைகளில் தமிழை வளரச் செய்தனர்.
- திறனாய்வுக் கலையையும் மொழி ஆராய்ச்சியையம் தமிழில் புகுத்தினர்.
- நாட்டுப் பாடல்கள், பழமொழிகள், வழக்குச் சொற்கள், கல்வெட்டுகள் முதலியவற்றைத் தொகுத்துக் காப்பாற்றினர்.
- விஞ்ஞான நூல்களைத் தமிழில் இயற்றினர்.
- ஏட்டுச் சுவடியில் இருந்த தமிழை அச்சில் கொண்டு வந்தனர்.
- தமிழில் செய்தித்தாள்கள், இலக்கிய இதழ்கள் வெளிவரத் துணை நின்றனர்.
- தமிழ் எழுத்து வடிவத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்து, சிக்கலைப் போக்கினர்.
- பொருளை உணரத்தக்க வகையில் இடம் விட்டு எழுதுதல், புள்ளிகள் முதலியன வைத்துப் பிரித்தல் ஆகியவற்றைப் புகுத்திக் கற்கும் முறையை எளிமைப்படுத்தினர்.
- இலக்கிய இலக்கணங்களை இயற்றித் தமிழன்னைக்குப் புதிய அணிகலன்களை அணிவித்தனர்.

தமிழ்நாட்டு மக்களிடம் தம் சமயக் கருத்துக்களைப் பரப்பி அவர்களைத் தம் மதத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதற்காக ஐரோப்பியர்கள் தமிழ் மொழியைக் கற்றனர். தமிழ் மொழியைப் பேசினர். தமிழ் மொழியில் நூல்கள் பல எழுதினர்.

இச்செயல்களால் தமிழ் மொழியும், இலக்கியமும் பல நன்மைகளைப் பெற்றுச் செழித்தன. ஐரோப்பியர் தம்மை அறியாமலேயே தமிழ்த் தொண்டு செய்தார்கள். மதமாற்றம் செய்யப்பட்ட தமிழ்க் கிருத்தவர்களும் தமிழ்த் தொண்டு செய்தார்கள்.

**தத்துவப் போதகர்**

தத்துவப் போதக சுவாமியின் இயற்பெயர் இராபர்ட்-டி நொபிலி. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். உயர்குல இந்துக்களைக் கிருத்துவராக்கும் நோக்கத்தோடு வந்தார். அதற்கு ஏற்றாற்போல் தன்னுடைய நடை, உடை பாவனைகளைப் பிராமணர் போல் மாற்றிக்கொண்டார். மதுரையில் சபை நிறுவி நாற்பத்தைந்து ஆண்டுகள் சமயப் பணி புரிந்தார். மதச் சார்புடைய வடமொழி கலந்த பல தமிழ் உரைநடை நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் பல அச்சேறாத காரணத்தால் அழிந்துவிட்டன. மதுரையில் வாழ்ந்து பின்னர் மைலாப்பூரில் 1656-ல் காலமானார். இவர் இயற்றிய நூல்கள் மந்திரமாலை, சகுன நிவாரணம், புனர் ஜென்ம ஆட்சேபம், தத்துவக் கண்ணாடி, ஏசுநாதர் சரித்திரம் ஆகியனவாகும்.

**சீகன் பால்கு ஐயர்**

இவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர். தமிழ் நாட்டில் முதன் முதலாக புரோட்டெஸ்டாண்டு கிருத்துவ மதத்தைப் போதித்த முதல் குரு ஆவார். தரங்கம்பாடியில் தங்கி தமிழ்த்தொண்டு புரிந்தார். முதன்முதலில் தமிழ்ப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டார். தமிழகத்தில் முதன் முதலில் அச்சுக்கூடம் நிறுவியது மட்டுமல்லாமல் காகிதத் தொழிற்சாலையும் நிறுவினார். தமிழ், இலத்தின் ஆகிய இருமொழிகளுக்கும் பொதுவாக வழங்கும் பல சொற்களை விளக்கும், தமிழ் இலத்தீன் ஒப்பிலக்கன ஆய்வு என்னும் ஆய்வு நூலையும், இவர் பைபிளைத் தமிழ்ப்படுத்தியுள்ளார் மற்றும் தமிழ் - இலத்தீன் அகராதி ஆகியவற்றை அச்சிட்டார்.

**போப் ஐயர்**

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். சமயப் பணிக்காக இந்தியா வந்தவர். தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் பள்ளிக் கூடங்களையும், சமயப் பள்ளிகளையும் நிறுவினார். இவர் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்நூலின் பெருமையினை உலகறியச் செய்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்து இருவினை கடந்த செல்வன் இசைத்த வாசகத்தையெல்லாம் வருவிளையாட்டாற் போலும் மறுமொழியதனில் வைத்தீர் என்று பேராசிரியர் சூலியன் வின்சனின் பாராட்டினைப் பெற்றார். கிருத்துவத்தைப் பரப்பப் பாதிரியராக வந்தவர், தமிழைப் பரப்பும் ஞானியாக விளங்கினார். நாலடியார், சிஞான போதம் ஆகியவற்றையும், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களின் சில பகுதிகளையும், மணிமேகலைக் கதையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆங்கில இதழ்களில் தமிழின் பெருமை குறித்தும் பல கட்டுரைகள் வரைந்தார்.

**எல்லீஸ் துரை**

இவர் ஆங்கிலேயர். சென்னை நகரக் கலெக்டராக வேலை பார்த்து வந்த எல்லீசர் தமிழிலும், வடமொழியிலும் வல்லவர். இவர் திரு.முத்துச்சாமிப்பிள்ளையவர் களைக் கொண்டு பழைய ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்தார். அவரைக் கொண்டு வீரமாமுனிவர் வரலாறு வெளிவரச் செய்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் திருக்குறளின் முதல் பதிமூன்று அதிகாரங்களுக்கு முதன் முதலில் ஆங்கிலத்தில் உரை எழுதியுள்ளார்.

**வீரமாமுனிவர்**

இவர் இத்தாலி நாட்டினர். இவர் இயற்பெயர் கான்ஸ்டண்டின் ஜோசப் பெஸ்கி. 1700-ல் தமிழகத்துக்கு வந்த பெஸ்கி, சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார். தனது முப்பதாவது வயதில் தமிழ்நாடு வந்து ஏறக்குறைய 37 ஆண்டு காலம் தமிழகத்தில் தங்கி, மதப்பணி புரிந்த ஏசுசபைக் குரு ஆவார். வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் எனும் நூலில் எ.ஓ எனும் குற்றெழுத்துக்ளின் மேல் சிறு கோடு போன்ற புள்ளியையும் மெய்யெழுத்துக்களின் மேல் சுழித்த புள்ளியையும் வைக்கவேண்டும் என்று புதுவிதி கூறினார். கீழே சுழிக்கப்பட்ட கொம்பைக் (ெ) குற்றெழுத்தாக்கி, இருபுறமும் சுழிக்கப்பட்ட கொம்பை (ே) நெட்டெழுத்தாக்கினார். வீரமாமுனிவர் இவ்வெழுத்துச் சீர்திருத்தம் எளிமையாக இருந்தமையால் தமிழர்கள் ஏற்றுக்கொண்டனர். தமிழ் மொழியின் வரி வடிவைத் திருத்திய வெளிநாட்டார் வீரமாமுனிவர் ஒருவரே. இவர் எழுதிய தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைக் குட்டித்தொல்காப்பியம் என்று அனைவரும் பாராட்டுகின்றனர். இவர் இலக்கியத்திற்கும் தொண்டு செய்துள்ளார்.

திருக்காவலூர்க் கலம்பகம், சித்தேரி அம்மாள் அம்மானை, அன்னையழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை முதலிய சிற்றிலக்கியங்களையும், தேம்பாவணி எனும் காப்பியத்தையும் இவர் இயற்றினார்,

தேம்பாவணி சிறப்பை உணர்ந்தே கவியோகி சுத்தானந்த பாரதியார் சாரமாம் தேம்பாணியினைத் தொடினும், தமிழ் மணம் கமழும் என் கரமே என்று பாராட்டுகின்றார். இந்நூலின் சிறப்பும் பெருமையும் கண்டு மகிழ்ந்த சான்றோர் இவருக்கு வீரமாமுனிவர் என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தனர். தேம்பாவணி கதைப்போக்கில் பல இடங்களில் கம்பரது காவியத்தைத் தழுவிச் செல்கின்றது. திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் இது சீவக சிந்தாமணிக்கு இணையான காவியமாகும் என்று போற்றுகின்றார்.

இவர் வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், வேதகம் மறுத்தல் முதலிய உரைநடை நூல்களையும் வழங்கினார். நிகண்டுகளில் ஒடுங்கிக்கிடந்த தமிழ் சொற்களையும், பொருளையும் சதுரகராதியாக்கித் தமிழின் முதல் அகராதி நூலை அளித்த பெருமையும் பெற்றார். இதில் பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்கு அதிகாரங்களை அமைத்துச் சதுரகாராதி என்று பெயரிட்டழைத்தார்.

இவர் பிரெஞ்சு, இலத்தின் கிரேக்கம், ஹுப்ரு, இத்தாலி, பாரசீகம், ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். தமிழுக்குப் புதிய தான பராமார்த்த குரு கதை என்னும் கதை நூலை வழங்கினார். இதில் நயமும், நகைச்சுவையும் நிரம்பிய இந்நூல் சிறந்த கதை நூலாகும். தமிழில் முதன் முதலாகத் தோன்றிய தலைசிறந்த ஏளன இலக்கியமாக இது திகழ்கின்றது. இந்நூல் தெலுங்கு, கன்னடம் ஆகிய இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை இதன் பெருமையைப் புலப்படுத்தும்.

வேதவிளக்கம் பேதம் மறுத்தல் என்பதும் அவரால் உரைநடையில் இயற்றப்பட்ட கத்தோலிக்க சமய நூல்கள் ஆகும். பேச்சுத் தமிழிலக்கணத்தைக் கொடுத்தமிழ் இலக்கணம் என்ற பெயரில் இலத்தின் மொழியில் நூலொன்று எழுதியுள்ளார். இலக்கணப்பணிக்காகச் செந்தமிழ்த் தேசிகர் எனும் பட்டம் பெற்றார்.

குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இத்தாலி மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

சதுரகாதி முத்தாரமாக மிளிர்கின்றது. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களில் ஒருவராக விளங்குகிறார் என்று சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை இவருக்குப் புகழாரம் சூட்டிப் பூரிக்கின்றார். இவ்வாறு வீரமாமுனிவர், கிருத்தவ மக்களுக்குக் காப்பியத் தந்தையாகவும் தமிழ் மக்களுக்கு உரைநடை இலக்கிய முன்னோடியாகவும் அங்கத இலக்கிய ஆசிரியராகவும், அகராதி நூல்களின் தலைவராகவும், மொழி நூலாராய்ச்சியில் முதல்வராகவும், மொழிபெயர்ப்பு நூல்களின் வழிகாட்டியாகவும் திகழ்கின்றார்.

**ஹெச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை**

திருநெல்வேலி ரெட்டியார் பட்டியில், வைணவ வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். வைணவரான இவர் 1858ஆம் ஆண்டு கிருத்துவராக மதம் மாறினார். ஜான்பன்யன் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் நூலைத் தமிழ் மொழியில் இரட்சண்ய குறள், இரட்சண்ய மனோகரம், இரட்சண்ய சமய நிர்ணயம் எனும் நூற்களையும் இயற்றியுள்ளார். இரட்சண்ய மனோகரம் எனும் நூல் கிருத்துவர்களின் தேவாரம் எனப் போற்றப்படுகிறது. தாயுமானவர், கம்பர் இவர்களின் கவித் தாக்கங்கள் யாவும் கிருட்டிணப்பிள்ளையின் படைப்புகளில் காணப்படுகின்றன.

இவருடைய பெற்றோர் சங்கரநாராயணர், தெய்வ நாயகி அம்மாள் ஆவார். சமயம் மாறியபின் ஹென்றி ஆல்பர்ட் எனும் பெயரை வைத்துக் கொண்டமையால் ஹெச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை எனத் தம் பெயரைக் குறிப்பிட்டுக்கொண்டார். கம்பனின் கவிச்சாயலைப் பெரிதும் விரும்பி அதைத் தம் காவியத்திலும் கையாண்டுள்ளமையால் இவரைக் கிருத்துவக் கம்பன் என அழைக்கின்றனர். இவர் திருவனந்தபுரம் மன்னர் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

**வேதநாயகம்பிள்ளை (1826-1889)**

திருச்சிக்கு அருகில் உள்ள குளத்தூரில் பிறந்தவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றவர். மாயுரம் மாவட்டத்தில் முன்சீப்பாகப் பணியாற்றினார். இசைத்தமிழிலும், ஆங்கில மொழியிலும் நன்கு புலமைப் பெற்றவர்.

நாவல் இலக்கியத்தைத் தமிழுக்கு அறிமுகப் படுத்தினார். இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே தமிழின் முதல் நாவலாகும். இவர் 16 தலபுராணங்களையும், 16 அந்தாதிகளையும், 10 பிள்ளைத்தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளார். மேலும் சர்வசமய சமரமக் கீர்த்தனை, சத்திய வேதக் கீர்த்தனை, திருவருள் மாலை, தேவ தோத்திர மாலை ஆகியவற்றை எழுதியுள்ளார். திருமணக்காலங்களில் மணமகனை மைத்துனர் எள்ளி நகையாடுவதை நாட்டுப்புற வடிவில்

மைத்துனரே இன்றுமுதல்
மகராசர் நீரே
கொத்தார் குழலி எங்கள்
குயிலைக் கொண்டிரே
உழவுத் தொழில் செய்த உமக்கு
உடம்பெல்லாம் வேறு
ஊத்தை கழுவப் பற்றுமோ
ஒன்பது ஆறு - என்று பாடியுள்ளார்

## 2. இசுலாமியர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு.

**முன்னுரை**

கி.பி. 7ம் நூற்றாண்டில் முகம்மது நபி தோன்றினார். அவருடைய தோழர்கள் தமீன் அன்சாரி, உக்காசா சகாபி இருவரும் தமிழகம் வந்தார்கள். இசுலாமியக் கோட்பாடுகளைப் பரப்பினார்கள். கி.பி.14 ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் என்ற தளபதி தென்னாட்டின் மீது படையெடுத்து முகமதிய ஆட்சியை நிலை நிறுத்தினான். அதன் பின்னரே தமிழகத்தில் இசுலாமிய சமயம் செல்வாக்குப் பெற்றது. அரசியல் செல்வாக்கால் தமிழர் பலர் முகமதியராக மாற்றப்பட்டனர். சிலர் தாமாகவும் மாறினர். இவர்கள் இசுலாமியர் என அழைக்கப்பட்டாலும் மொழியால், உணர்வால் தமிழர்களாக வாழ்ந்து வந்தனர். இசுலாமியருள் பலர் தமிழ்ப்புலமை பெற்றுக் கவி பாடும் ஆற்றல்

பெற்றனர். எனவே சமயக் கொள்கைகளை, வரலாறுகளைக் கூறும் இலக்கியங்களைத் தமிழில் இயற்றினர்.

17ஆம் நூற்றாண்டு முதல் இசுலாமிய இலக்கியம் தழைத்து ஓங்கி வளர்ந்துள்ளது. அவர்கள் பதினெட்டிற்கும் மேற்பட்ட காப்பியங்களையும், அம்மானை, அந்தாதி, ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், கோவை முதலிய தமிழ் மரபு வழிச் சிற்றிலக்கியங்களையும், நொண்டி நாடகம், கீர்த்தனை நாடகம் போன்ற இசை நாடகங்களையும், படைப்போர், முனஜாத்து, கிஸ்ஸா, மசலா நாமா போன்ற இசுலாமிய இலக்கிய வகைகளையும், மாலை, ஏசல், சிந்து, கும்மி, தாலாட்டு, திருப்புகழ், கீர்த்தனை, ஆனந்தக் களிப்பு, ஞானப்பனுவல் போன்ற நாட்டுப்புற இலக்கிய வகைகளையும், உரைநடை நூல்களையும், நீதி நூல்களையும் சமய நூல்களையும் தந்து தமிழ் இலக்கியங்கள் பல்கிப் பெருகச் செய்தனர். இவர்கள் இயற்றிய இலக்கியங்களை ஐந்து வகைகளாகப் பிரிப்பர்.

1. பேரிலக்கியம் 2. சிற்றிலக்கியம் 3. பொதுமக்கள் இலக்கியம் 4. புதுவகை இலக்கியம் 5. ஞானப்பாடல்கள் இவ்வாறு நூல் படைத்த புலவர்களைப் போற்றிப் பாதுகாத்த புரவலர் சீதக்காதி வள்ளலார்.

**குணங்குடி மஸ்தான் சாகிபு**

நாற்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த இவரின் பிறப்பிடம் காயல்பட்டினமாகும். இளமையில் இவர் அத்தர் வியாபரியாய் விளங்கினார். இவருடைய இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர். இவர் வாழ்ந்த காலம் 1788-1835 வரை ஆகும். திருமணத்தன்றே மணவாழ்க்கையை வெறுத்து துறவறம் மேற்கொண்டார். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைகளிலும், காடுகளிலும் தனித்து வாழ்ந்து முற்றிய மோனத்தில் ஞானம் பெற்றவர். பின்னர் சென்னை இராயபுரத்தில் துறவியாக வாழ்ந்தார் என்பர். இவர் முகம்மதிய மதத்தில் ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டவர். இயற்பெயர் மறைந்து குணங்குடி மஸ்தான் என்னும் பெயர் பெற்றார்.

'மாதவஞ்சேர் மேலோர் வழுத்துங்குணங்குடியாண்ட என்றும், குருவாய் அடுத்தோர்க்கு அருள் சுரக்கும் சோதிக் குணஞ்சேர் குணங்குடியாண்ட என்றும், மாசிலாமணியே, முனிவர்கள் இறையே வள்ளலாய் வந்த கண்மணியே என்றும்

புலனழுக்கற்ற புலவர் பெருமக்களால் புகழப்பெற்றவர் ஞானி குணங்குடி மஸ்தான் சாகிபு. நாகூர், காரைக்கால், சென்னை ஆகிய இடங்களில் தங்கிப் பல அற்புதங்களை நிகழ்த்தி தன் பாடல்களையும், கீர்த்தனைகளையும் சென்னை நகரத்தெருக்களில் இசையோடு வாய்விட்டுப் பாடிக் கொண்டு திரிந்தார். தாயுமான அடிகளின் பாடல் போன்று இவருடைய பாடல்களும் சமயத் தெளிவினையும் உண்மையினையும் வற்புறுத்தி நிறகின்றன. இவரது பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டுக் குணங்குடிமஸ்தான் சாகிபு மீது திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர் நான்மணி மாலையும் அய்யாசாமி முதலியார் பதிற்றுப்பத்தந்தாதியும் பாடியுள்ளனர்.

இவர் அகத்தீசர் சதகம், நந்தீசர் சதகம், நிராமயக்கண்ணி, ஆனந்தக் களிப்பு என்பவற்றினை இயற்றியுள்ளார்.

**செய்குத் தம்பிப்பாவலர்**

இவர் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த இலங்கடை என்னும் ஊரைச் சோந்தவர். சங்கரநாராயணன் என்பவரிடம் கல்வி கற்றார். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவரான இவர் ஒரு சதாவதானி ஆவர். ஒரு நேரத்தில் நூறு அவதானங்களைச் செய்யும் திறமை பெற்றவர். இவர் 1907-ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் பெரும் புலவர்கள் முன்னிலையில் தனது சதாவதானத் திறமையை நிருபித்துக் காட்டிப் பாராட்டுப் பெற்றார். ‘சீறாப்புராணத்திற்கு’ உரை எழுதியுள்ளார். திருவருட்பா என்னும் புனித நூலை எதிர்த்து யாழ்பாணத்துக் கதிரை வேற்பிள்ளை, ஆறுமுக நாவலர் முதலியோர் பிரச்சாரம் செய்தனர். அவை அருட்பா அல்ல மருட்பா என்றனர். இக்கருத்தை மறுத்து ஏற்பட்ட அருட்பா-மருட்பா பூசலில் மருட்பா கட்சியினர் மருட்பா மறுப்பு என்னும் நூலை வெளியிட்டனர். மருட்பாவை மறுத்தால் அது அருட்பா ஆகிவிடும் என்று கூறி வள்ளலாரின் பெருமையை நிலைநாட்டினார். இவர் இயற்றிய நூல்கள் நாகைக்கோவை, திருநாகூர்திரிபந்தாதி, அழகப்பக்கோவை, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்து, நீதி வெண்பா, இன்னிசைப் பாமாலை, திருகோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் முதலியன ஆகும்.

**காசிம் புலவர்**

காசிம் புலவர் திருவடிக் கவிராயர் என்பவரிடம் கல்வி கற்றார். அவர் கற்றவற்றுள் அருணகிரி நாதரின் திருப்புகழே அவரை மிகவும் ஈர்த்தது. அவர் தானும் அவ்வாறு ஒரு நூல் படைக்க வேண்டும் என்று விரும்பினார். இதன் பொருட்டு நபிகள் நாயகத்தை வேண்டினார். நபிகள் நாயகம் இவர் கனவில் தோன்றி பகரும் என்று சொல்லி மறைந்தார். உடனே காசிம் புலவர் அதையே முதல் அடியாகக் கொண்டு 'பகருமுருவிலி அருவிலி வெருவிலிட' எனத் திருப்புகழ் பாடினார். காசிம் புலவர் சந்தச் சிறப்புள்ள செந்தமிழ்ப்பாக்கள் பலவற்றை நபிநாயகத்தின்மீது பாடியுள்ளார். அவை அருணகிரியாரின் திருப்புகழே என்று கூறுமளவிற்குத் திருப்புகழ் சந்தத்தோடு பாடியுள்ளார். அப்பாடலின் தொகுதி திருப்புகழ் என வழங்கப்படுகின்றது. சவ்வாதுப் புலவரால் மதுரகவி – என்று பாராட்டப்பட்ட பெருமையுடையவர். இவரே தம்மை மதுர கவிராசன் என அழைத்துக்கொண்டார்.

**சேகனாப் புலவர்**

செய்கப்துல் காதிர் நெயினார் லெப்பை என்ற பெயரைச் சுருக்கிச் சேகனாலெப்பை என்றழைத்தனர். இவரைச் சேகனா புலவர் என்றும் அழைத்தனர். இவரும் புகழ்பெற்ற ஞானியான குணங்குடி மஸ்தானும் பள்ளித்தோழர்கள். இவர் காயல்பட்டினத்தைச் சேர்ந்த இரத்தின வணிகரின் மகன். இளமையில் இவர் போதிய அளவில் அறிவு வளர்ச்சி அடையாமல் இருந்தார் என்றும், ஒரு நாள் கருநாகம் இவர் நாவைத் தீண்டியது. அதுமுதல் கவிபடைக்கும் புலமை பெற்றார் என்று கூறுவர். இருப்பினும் தம் பரம்பரைத் தொழிலான இரத்தின வியாபாரத்தைத் தொடர்வதோடு, பாடல் புனைவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவர் ஷாகுல் ஹமீது ஆண்டகையின் வரலாற்றை 2565 பாக்கள் கொண்ட புராணமாக இயற்றினார். முகைதீன் வரலாற்றை 1340 பாக்கள் கொண்ட கத்புநாயகம் என்னும் புராணமாகப் பாடியுள்ளார். நபி இபுராஹிம் அவர்களின் புனித வரலாற்றை 2044 பாக்களில் பாடியுள்ளார். அதற்குத் திருமணிமாலை என்று பெயர் சூட்டினார். இந்நூல் இறைவனின் புகழைக் கூறுவதாகும். இவர் தோத்திரமாலை, சொர்க்க நீதி, புதாஹ் ஷாம் திருக்காரணப் புராணம், நாகையந்தாதி, மக்காக் கலம்பகம் முதலியன

படைத்துள்ளார். அந்தாதி அட்டபந்தம், கமலபந்தம், நாகபந்தம் ஆகிய சித்திய கவிகளும் நபிகள் மேல் பாடினார்.

**சவ்வாதுப்புலவர்**

இவர் எமனீச்சுரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் சர்க்கரைப் புலவரின் மைத்துனர் என்பர். துருவணிகர் முகம்மதுமீர் சவ்வாது சொற்புலமைக் கெதிர் சொல்ல முடியாதென்று குமரக் கடவுள் குறிஞ்சியில் ஏறிக் கொண்டான் என்றும், அருணகிரிநாதர் கிளவடிவம் பெற்றுக் கொண்டார் என்றும் ஒரு புலவர் சிறப்பித்துச் சொல்கின்றனார். சவ்வாதுப்புலவர் செந்தமிழ் வல்லவர். வசை பாடுவதில் காளமேகப் புலவரைப் போன்றவர். வண்டமிழின் எண்ணோ, எழுத்தோ, இசையோ, இயல்புலவர் கண்ணோ, சவ்வாதுக் கவி என்று ஒரு தமிழ்ப்புலவர் முஸ்லீம் கவிஞரான சவ்வாதுப் புலவரைப் போற்றுகின்றார். இவரை வண்டமிழ் சவ்வாது வாயெல்லாம் நஞ்சே என்றார் ஒரு புலவர். அவ்வளவு சக்தி கொண்ட வாக்குப் பெற்றவர். இதற்கு உதாரணமாக சேஷையங்கார் என்பர் இவருக்குப் பணம் தரமறுத்தார். அதற்கு இவர்

வீசம் பணம் கொடுக்காத சேசா

வீரியம் பாம்பு கடித்துச் சாசா என்று சபித்தார். இதை அலட்சியப்படுத்திய சேஷையங்காரை விரியன் பாம்பு தீண்டி அன்றே அங்கேயே மாண்டார். இவர் நாகைக் கலம்பகம் மதீனத் தந்தாதி, முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார்.

**வண்ணக் களஞ்சியப் புலவர்**

இவருடைய இயற்பெயர் ஹமீது இப்ரகீம். இவர் மதுரைக்கு அண்மையில் உள்ள மீசல் என்னும் இடத்தில் பிறந்தார். மதுரையில் ஒரு தம்பிரானைச் சார்ந்து பல மொழிகளையும் கற்றுணர்ந்தார் என்பர். வண்ணப்பாடல்கள்- சந்தப்பாடல்கள் பாடுவதில் இவர் வல்லவர். ஆகையால் இவரை வண்ணக் களஞ்சியப் புலவர் என அழைத்தனர். முகைதீன் புராணம் இவரால் இயற்றப்பட்டது. நாகூரில் அரங்கேற்றம் ஆனது. இந்நூலின் இனிமையில் மகிழ்ந்த அன்பர் ஒருவர் இவர் விரும்பிய தன் மகளை இவருக்கு மணமுடித்து வைத்தார். இவர் இயற்றிய நூல் இராஜநாகம் ஆகும். காவியச் சுவைகள் யாவும் நிறைந்த, 2240 பாக்களால் அமைந்த இனிய நூல். இது

கலைமான் நபியின் கதையைக் கூறுவதாகும். மேலும் தீன் விளக்கம் என்னும் புராணமும், மொகையிதீன் புராணம். அலிபாதுஷா நாடகம், குத்பு நாயகம் ஆகியன இவர் இயற்றியனவாகும்.

**சர்க்கரைப் புலவர்**

இவர் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சவ்வாதுப்புலவரின் மைத்துனர். நகைச்சுவை தோன்ற உரையாடுவதிலும், செய்யுள் இயற்றுவதிலும் வல்லவர். இவர் அரேபியாவிலுள்ள முகம்மதியப் புண்ணியத்தலமான மதீனா நகரைச் சிறப்பித்து மதீனா அந்தாதி எனும் சிற்றிலக்கியம் படைத்துள்ளார்.

**குலாம் காதிறு நாவலர்**

இவர் நாகூரைச் சார்ந்தவர். இவர் புலவர் ஆற்றுப்படை அரபுத்தமிழ் அகராதி, ஆரிபு தாயகம், உமறுபாஷாவின் புத்த சரித்திரம், கன்ஜீல் கறாமாத்து, சமுத்திரமாலை, சீறாப்புராணவசனம் திருமாக்காத் திருவந்தாதி, நபிநாயகத்தின்மீது மும்மணிக்கோவை, நாகூர்க்கலம்பகம், நாகூர்ப்புராணம், பதாயிருக்கலம்பகம், மதீனாக் கலம்பகம், மதுரைக்கோவை ஆகியவை படைத்துள்ளார்.

அலியார் புலவர் இருநூற்று ஐம்பத்தெட்டுக் குறள்களைக் கொண்ட பெண்புத்தி மாலை என்னும் நூலை எழுதியுள்ளார். மதாறுசர்கிபு புலவர் திறுசாநா என்னும் காப்பிய நூலை இயற்றியுள்ளார். நயினா முகம்மது புலவர் முனகிரின் மாலை என்னும் நூலை இயற்றியுள்ளார். கல்விக்களஞ்சியப் புலவர் சின்ன சீறாப்புராணம், சித்திரக் கவித்திரட்டு என்னும் இரு நூல்களை இயற்றியுள்ளார்.

**புதுவகை இலக்கியம்**

அராபிய பாரசீக இலக்கிய அமைப்பினைத் தழுவித் தமிழிலும் பல இலக்கியங்களை முகமதியர்கள் எழுதினர். அவை, இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்னும் முத்திரை பெற்றன. அவை, போரைச் சித்தரிக்கும் படைப்போர் பற்றிய நூல்கள் ஐந்து படைப்போர், சூசைன் படைப்போர், இந்திராயன் படைப்போர் என்பன. அடுத்தது, அல்லாவைத் தொழும் முனஜத்! நூல் முனசாத்து மாலை. அடுத்தது வரலாறு கூறும் கீசா நூல்கள் யூசுபு நபிகிஸ்ஸா, செய்துன் கிஸ்ஸா, நூறு மசாலா, ஆயிர மசாலா முதலியன மற்றும் நாமா வரலாறு கூறுவது நூல். நூறு நாமா, நாமா

என்பது பாரசீகப் பாவைகளுள் ஒன்று. முனஜத், கீஸ்ஸா, மசாலா என்பன அரபுச் சொற்கள் ஆகும்.

**ஞானப்பாடல்கள்**

ஞானக் கருத்துக்கள் அமைந்த பாடல்களையும் முகம்பதியப் புலவர்கள் பாடினர். தாயுமானவரைப் போல ஞான நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர்களில் தலையாயவர் குணங்குடிமஸ்தான் சாய்பு ஆவர். இந்துமதக் கருத்துக்களையும், கடவுளரையும் போற்றி மனோன்மணிக்கண்ணி முகையதீன் சாதகம். ஆனந்தக் களிப்பு போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். மற்றும் மச்சரேகைச் சித்தன், தற்கலை பீர் முகமது சாகிபு ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

# V. மொழிபயிற்சி

## 1. பொருள் இலக்கணம்

தமிழுக்கே சிறப்பு மிக்கதாய் மிளிர்வது வாழ்க்கை இலக்கணத்தை எடுத்து இயம்புவது பொருள் இலக்கணமாகும். நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூற்களின் வழியாக எளிதாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ள முடிகிறது.

நம் முன்னோர் பொருளை அகம், புறம் என இரண்டாகப் பிரித்தனர். அகம் என்பது காதல் வாழ்க்கையையும், புறம் என்பது பொதுவாகச் சமுதாயக் கடமைகளையும், சிறப்பாக வீரவாழ்க்கையையும் விளக்குவதாகும். அகத்திணைகளில் அன்பின் ஐந்திணைக்கு மட்டும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் உண்டு.

“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நுவனுங்காலை முறை சிறந்தனவே

பாடலும் பயின்றவை நாடுங்காலை” (தொல்)

1. **முதற்பொருள்**: ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலமும், பொழுதும் முதற்பொருள்.

| | திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|---|---|
| 1 | குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | குளிர் | யாமம் |
| 2 | முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | கார்காலம் | மாலை |
| 3 | மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | ஆண்டுமுழுவதும் | வைகறை |
| 4 | நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | ஆண்டுமுழுவதும் | ஏற்பாடு |
| 5 | பாலை | பெரும் மணல் சார்ந்த இடம் | வேனிற்காலம் | நண்பகல் |

**2. கருப்பொருள்**

ஒவ்வொரு திணைக்கும் உரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலியன கருப்பொருள்

| | கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | துர்க்கை |
| 2 | உயர்ந்தோர் | வெற்பன் | தோற்றல் | குறும்பறை | சேர்ப்பன் | எயினர் |
| 3. | தாழ்ந்தோர் | குறவன் | இடையர் | உழவர் | பரதர் | மறவர் |
| 4 | விலங்கு | யானை | மான் | எருமை | சுறாமீன் | செந்நாய் |
| 5 | பூ | குறிஞ்சி | முல்லை | தாமரை | நெய்தல் | குரவம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | யாழ் | குறிஞ்சியாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலையாழ் |
| 7 | உணவு | திணை | வரகு | செந்நெல் | மீன் | வழிப்போக்கரிடமிருந்து பறித்த உணவு |
| 8 | மரம் | சந்தனம் | கொன்றை | மருதம் | புன்னை | பாலை |
| 9 | பறவை | மயில் | காட்டுக்கோழி | நாரை | கடற்காகம் | கழுகு |
| 10 | ஊர் | சிறுகுடி | சேரி | பேரூர் | பட்டினம் | குறும்பு |
| 11 | நீர் | அருவி | காட்டாறு | குளம் | மணற்கிணறு | நீர் வற்றிய சுனை |
| 12 | பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா | மீன்கோட்பறை | துடி |
| 13 | பண் | குறிஞ்சிப்பண் | சாதாரிப்பண் | மருதப்பண் | செவ்வரிப்பண் | பஞ்சுரப்பண் |
| | தொழில் | தேன்எடுத்தல் | நிரை மேய்த்தல் | ஏறு தழுவுதல் | மீன்அரிதல் | வழிப்பறி (நிரை கவர்தல்) |

**3. உரிப்பொருள்**

ஒவ்வொரு நிலத்திற்குரிய ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும்.

1. குறிஞ்சி - புணர்த்தலும் புணர்தல் நிமித்தமும்
2. முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
3. மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்
4. நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
5. பாலை - பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

**2. அகத்திணைகள் - ஏழு**

அகமாவது ஒரே அன்புடைய தலைவனும், தலைவியும் காதல் உள்ளத்தாற் கலந்து, களவு வாழ்க்கை மேற்கொண்டு, பின் கற்பியலில் புகுந்து, இல்லறமாகிய நல்லறத்தை ஏற்று இறுதியில் வீடுபேறு அடைவது. இக்காதல் எப்பொழுதும் உள்ளத்து உணர்வாலேயே உணரப்படுவது. பிறர்க்குப் புலப்படுத்துமாறு எடுத்துக்கூற இயலாதது. ஆதலால் இவ்வொழுக்கம் அகம் எனப்பட்டது.

அகப்பொருள் எழு வகைப்படும்
அவை

1.குறிஞ்சி 2.முல்லை 3.மருதம் 4.நெய்தல் 5.பாலை 6.கைக்கிளை 7.பெருந்திணை என்பன.

**அன்பின் ஐந்திணை**

அன்பின் ஐந்திணை என்பது அன்படைக்காமம். குலத்தாலும், குணத்தாலும், நலத்தாலும், வயதாலும் ஒரே தன்மையுடைய தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு ஒழுகும் ஒழுக்கம். இத்தகைய அன்பு ஒழுக்கத்தை அன்பின் ஐந்திணை எனவும் அழைக்கப்பெறும்.

"காதல் இருவர் கருத்து ஒருமித்து

ஆதரவு பட்டதே இன்பம்" என்பது ஔவை வாக்கு.

ஐந்திணை என்பது அன்புடைக்காமம்

**கைக்கிளை**

கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். தலைவன் மட்டும் காதல் கொண்டு தலைவி காதல் கொள்ளாமையும் தலைவி மட்டும் காதல் கொண்டு தலைவன் காதல் கொள்ளாமையும் இதில் அடங்கும்

"கைக்கிளை உடையது ஒருதலைக்காமம்".

**பெருந்திணை**

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம், குணம், குலம், நலம், வயது முதலியவற்றால் பொருத்தமற்றவர், பெற்றோர், உறவினர் முதலியோர் ஏவலால் மணம் புரிந்து வாழ்தலும், விருப்பமற்றோரை வலிந்து கூடுதலும் முதலிய அன்பிற்கு ஒவ்வாதன வெல்லாம் இதன் கண் அடங்கும் "பெருந்திணை உடையது பொருந்தாக் காமம்".

## 3. வரைவு கற்பு

**வரைவு கடாதல்**

தோழி தலைவனை விரைவில் வரைக எனக் கடாவுதல் அதட்டிக் கூறல், வற்புறுத்தல், வினவுதல், வேண்டுதல், தூண்டுதல் எனப் பல பொருள்படும்.

வரைவு கடாதலின் வகை

"பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தல் என்று

ஒருநால் வகைத்தே வரைவு கடாதல்"

பொய்த்தல் (பொய்யானவை கூறி அச்சுறுத்தல்) தலைவன் வேண்டுவதை மறுத்தல், கழறல் (இடித்துக் கூறுதல்) மெய்த்தல் (உண்மையான அறநெறி, உலகியலை எடுத்துரைத்தல்) இவை நான்கும் வரைவு கடாதலின் வகைகளாகும்.

வரைவு கடாதலின் கிளவி வகைகள்

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்
அலர்அறி வுறுத்தலும் தாய்அறி வுணர்த்தலும்
வெறிஅச் சுறுத்தலும் பிறர்வரைவு உணர்த்தலும்
வரைவு எதிர்வுணர்த்தலும் வரையும்நாள் உணர்த்தலும்
அறிவறி வுறுத்தலும் குறிபெயர்த்திடுதலும்
பகல்வரு வானை இரவுவரு கென்றலும்
இரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினும் இரவினும் பயின்று வருகென்றலும்
பகலினும் இரவினும் அகல்இவன் என்றலும்
உரவோன் நாடும் ஊரும் குலனும்
மரபும் புகழும் வாய்மையும் கூறலும்
ஆறுபார்த் துற்ற அச்சம் கூறலும்
ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறலும்
காவல்மிக உரைத்தலும் காமம்மிக உரைத்தலும்
கனவுநலிவு உரைத்தலும் கவினழிவுரைத்தலும்
எனமுறை நாடி இயம்பிய இருபதும்
வரைவு கடாதல் விரிஎனப் படும்மே.

வினவிய செவிலிக்குக் களவை மறைத்தமை பற்றித் தலைவற்குத் தோழி விளம்பல், தலைவனுக்கு ஊரார் அறிந்து அலர் தூற்றுதலை அறிவுறுத்தல், களவைத் தாய் அறிந்தமையை அறிவுறுத்தல், தலைவிக்கு ஏதோ தெய்வக் கோளாறு என்று வெறியாட்டு எடுக்கப் போகின்றனர் எனத் தலைவனை அச்சுறுத்தல், நொது மலர் மணம் பேசி வருவதை உணர்த்தல், வரைவைத் தலைவியின் பெற்றோர் ஏற்பர் எனக் கூறல், வரைவதற்குரிய நல்ல நாள் வருகின்றதென உணர்த்தல், தலைமகள்

பண்பையும் அறிவையும் தலைவனுக்கு அறிவுறுத்தல். குறியிடம் மாற்றி உரைத்தல், பகல் வருவானை இரவு வாஎன்றல், இரவு வருவானைப் பகல்வா என்றல், பகலிலும் இரவிலும் மாறிமாறி வருக என்றல், இருபொழுதும் வராதே எனல் (இவ்வாறு அலக்கழிப்பது, அவனை விரைவில் மணந்து கொள்ளுமாறு தூண்டுவதற்கேயாம்) தலைவனது நாடும் ஊரும் குலமும் குடிவழி மரபும் புகழும் வாய்மையம் கூறி வரையத் தூண்டுதல், வழி பற்றிய ஆறுபார்த்துற்ற அச்சம் கூறல், அவளது அற்றா மையை ஆற்றுவிக்கக் கூறுதல், காவல் மிகுதியை உரைத்தல், காமம் மிகுதியை உரைத்தல், கனவு நல்வதை உரைத்தல், தலைவி அழகு கெடுவதை உரைத்தல் இவை இருபதும் வரைவு கடாதல் கிளவி வகைகளாம்.

**அறத்தொடு நிற்றல்**

தலைவியின் உடல் வேறுபாடு, நடைமுறை முதலியன கண்டு ஐயுற்று தலைமகளை தாய், செவிலி முதலியவர்கள் அவளை 'இற்செறிப்பர்' (வீட்டில் வைத்து, வெளியில் போகாது காப்பர்) அந்நிலையிலும் அல்லது வேறு சூழல்களிலும் தோழியோ, தலைவியோ, தலைவனைப் பற்றிக் குறிப்பாக வெளிப்படுத்தி அவனுக்கே அவளை மணம் செய்து கொடுக்க முயல்வது இது. காதலித்தவனையே மணப்பதுதான் அறமாதலின் இது, "அறத்தொடு நிலை" எனப்பட்டது.

அறத்தொடு நிற்பது என்பது களவை வெளிப்படுத்துவது. பெற்றோர்க்குச் சினத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்தக்கூடியது. இதனைத் தலைவியோ, தோழியோ நேரே பெற்றோரிடம் சொல்வது நாகரிகமாகாது அதனால் தங்கள் 'குற்றத்தை' நயமாக வெளிப்படுத்துவார் போல் நடந்து கொள்வர்.

"தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்.
செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு
நிற்கும் என்ப நெறியுணர்ந்தோரே

(நம்பியகப்பொருள் -48)

தலைவி நேரே பெற்றோரிடம், தன் காதலை வெளிப்படுத்துதல் நாகரீகமாகாது. அதனால் அவள் அக் 'களவினைத்' தன் உயிர்த் தோழியிடமே கூறுவாள். தோழிக்கும் தெரியாத நிலையில், ஏற்படுவது இது என்பதை அறியலாம்.

தோழி அறிந்த பின், தலைவியின் செவிலித்தாயிடம் இதை வெளிப்படுத்துவாள். செவிலித்தாய் நற்றாய்க்கு வெளிப்படுத்துவா். பின்பு நற்றாய் தலைவியின் தந்தை, தமையன்மார்க்கு உணா்த்துவாள். மக்களின் பண்பாடே இது.

## 4. புறத்திணை

### 1. வெட்சித்திணை

பகைவரோடு போரிடக் கருதும் வேந்தன் ஒருவன் அதற்கு அறிகுறியாக அப்பகை நாட்டிலுள்ள ஆநிரைகளைக் கவா்ந்து வருமாறு தன் வீரா்களுக்கு ஆணை இடுவாா். அவ்வாணையை ஏற்று வீரா்கள் வேற்றுப்புல களவில் ஆ தந்து ஓம்பப் புறப்படுவா் இது வெட்சி எனப்படும்.

இவ்வீரா்கள் வெட்சிப்பூவினை சூடுவா். பகை நாட்டு மன்னா் போா் தொடுப்பதற்கு முன்பே பாதுகாக்க வேண்டிய அந்தணா், பெண்டிா், பிள்ளைகளும், பணியுடையோரும், பசுக்களும் அகலுமாறு அந்நாட்டில் பறை அறிவித்து தெரிவிப்பா். அப்போது தாமாக பாதுகாப்புத் தேடிக் கொள்ள இயல்பில்லாத பசுக்கூட்டங்களைக் கவர தன் வீரா்களை ஏவுவான்.

பகைநாட்டு வீரா்கள் ஆநிரைகளைக் கவா்ந்து சென்று விடுவா் இதனையே புறப்பொருள் வெண்பாமாலையில்

"வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றி கண்முனை ஆதந் தன்று"

(புறப்பொருள் வெண்பாமாலை வெட்சி 1)

### 2. வஞ்சித்திணை

வஞ்சி என்பதற்கு பகைநாட்டின் மீது படையெடுத்தல் என்பதாகும். வஞ்சித் திணையின் துறைகள் மொத்தம் இருபது ஆகும். வஞ்சிக் கொடியின் பூக்களைச் சூடி செல்வதால் இது வஞ்சித் திணையாயிற்று.

தனக்கு பணியாத பகை வேந்தனை பணியவைத்து அவனது நாட்டைக் கவருவதற்காக அந்நாட்டின் மேல் படையெடுத்துச் செல்வது வஞ்சித்திணை ஆகும்.

"வாடா வஞ்சி தலைமலைந்து

கூடார் மண்கொளல் குறித்தன்று"

(புறபொருள் வஞ்சி -3)

பகைவரை ஒரு பொருட்டாக மதியாமல் ஆண்மை காட்டுவார்கள். போரின்போது விரைந்து வெள்ளத்தைக் கல்லணை தடுத்து நிறுத்துவது போலப் பகைவர்கள் பலரை வீரன் ஒருவனே தடுத்து நிறுத்துவதுண்டு. தன் வீரர்களுக்கு அரசன் பெருஞ்சொறு நல்குவான். வெற்றியும் தோல்வியும் இருவாலருக் உரியதே. தோற்ற கொற்றவன் வென் வேந்தனுக்கு திறை தருவான்.

**3. உழிஞைத்திணை**

பகையரசனின் மதிலை வளைத்துக் கொண்டு முற்றுகையிடுதல் உழிஞைத் திணையாகும். அப்பொழுது வீரர்கள் உழிஞைப் பூவைச் சூடுவர். இதனுடைய துறைகள் மொத்தம் இருபத்து ஒன்பது ஆகும்.

"முடிமிசை உழிஞைசூடி ஒன்னார்

கொடி நுடங்கல் எயிர் கொளக்கருதின்று

(புற.வெ.உழிஞை.6)

தன் ஆணையை ஏற்காமலும் இருக்கும் வேந்தனின் மதிலை முற்றுகையிடுவது வழக்கம். முதலில், மதிலின் புறத்தே தங்குவான் மன்னன். இவரிடம் தோற்படை பெருகி நிற்கும். மதிலினுள் அரசனும் செல்வப் பெருக்குடையவனாகத் திகழ்வான். அதனால், புறத்தரசன், அம்மதிலைக் கொள்ள முடியாமல் வருந்துவது முண்டு. பகைவர் பலர் முன்னே, உழிஞை வீரன் ஒருவன், தன்னந் தனியாகவே போர்புரிவான்.

**4. வாகைத்திணை**

வாகை என்பது வெற்றி ஆகும். போரில் வெற்றி பெற்ற அரசனும் அவ்வரசனின் வீரர்களும் வெற்றி பெற்றதற்கு அடையாளமாக வாகைப் பூவினைச் சூடி

வெற்றியைக் கொண்டாடுதல் வாகைத்திணை எனப்படும். வாகைத்திணையின் துறைகள் மொத்தம் முப்பத்து மூன்று துறை ஆகும்.

"இலைபுனை வாகைசூடி இகல்மலைந்து

அலைகடல் தானை அரசுஅட்டு ஆர்த்தன்று"

(புற.வெண்.வாகைத்திணை)

போர் மீது கொண்ட விருப்பால் அரசர் கூதிர் காலத்திலும் வேனிற் காலத்திலும் பாசறையில் தங்கியிருப்பர். அரசர் வயல் நிலமாகிய போர்க்களத்தில் தேரையே ஏராக் கொண்டு கணைகளை விதையாக விதைத்துப் பகைவரின் தலைகளாகிய கதிர்மணிகளை அறுத்து வெற்றி பெறுவார்கள். பகைவருடன் போரிட்டு வென்ற ஓர் அரசனது தேர் முன் வீரர்கள் குரவை என்ற கூத்தினை ஆடுவார்கள். அவ்வாறே தேரின் பின்னும் ஆடுவார்கள். தாம் கூறிய வஞ்சினத்துக்கு ஏற்ப, உயிரை அவிப்பலியாக இடுவார்கள். பகைவர் நாட்டினைக் கைப்பற்றிக் கொண்டு மகிழ்வர்.

அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் என்ற நான்கு வகுப்பாரும் அறக்களச் சான்றோர், சோதிடர், மறவர், மறக்குடி மகளிர் ஆகிய இவர்களது இயல்பு மேம்பாடகளை சிறப்பித்துக் கூறுதலும் வாகைத் திணையில் அடங்கும்.

**5. பாடாண்திணை**

அரசனுடைய புகழ், கொடை வலிமை, வீரம் முதலிய பண்புகளைப் புகழ்ந்து பாடுவது இதுவாகும். பாடு + ஆண் + திணை எனப்பிரித்து ஆணின் செயல்திறன்களைப் புகழ்வது எனப் பொருள் கொள்வர்.

ஒளியும் ஆற்றலும் ஒம்பா ஈகையும்

அளியும் இவையும் ஆற்றல் வரைத்தன்

(புறபொருள் - வாகை)

மன்னது கொடியைக் கடவுள் கொடியோடு சார்த்திப் புலவர்கள் புகழ்வார்கள். திருமால் 'சோ' என்ற அரணத்தை அன்று அழித்தது போலவே, இவ்வுழிஞை வேந்தனும் பகையரசர் தம் மதிலை அழிக்க வல்லவன் எனப் பாராட்டுவார்கள்.

***********

**ஆக்கம்**
**முனைவர் சு. அந்தோணி செல்வகுமார்**
இணைப்பேராசிரியர் & தலைவர் தமிழ்த்துறை
நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி, பிள்ளையன்மனை.